16 ஆம் ஆண்டில்

www.uyirmmai.com

# உயிர்மை

செப்டம்பர் 2018 இதழ் 181 ரூ.40



ஒரு மொழி
ஒரு மாநிலம்
ஒரு இயக்கம்
ஒரு தலைவர்

## கலைஞர்

மனுஷ்ய புத்திரன்
துர்கா ஸ்டாலின்
அ. முத்துலிங்கம் **(கனடா)**
இந்திரா **பார்த்தசாரதி**
தங்கம் தென்னரசு
கலாப்ரியா
சா.கந்தசாமி
பேராசிரியர் இரா.முரளி
சுப.குணராஜன்
ந.முருகேசபாண்டியன்
மனுஷ்ய புத்திரன் கவிதைகள்
வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன்
தமிழச்சி தங்கபாண்டியன்
எச்.பீர்முஹம்மது
ராஜன் குறை
இள.சிவபாலன்
ஷான் கருப்பசாமி
புலியூர் முருகேசன்
ராஜா ராஜேந்திரன்
கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்
இமையம்
சி.சரவணகார்த்திகேயன்
பாரதி மணி
பேராசிரியர் பாலசுகுமார் (இலங்கை)
பூவண்ணன் கணபதி
ஆர்.முத்துக்குமார்

# கலைஞர்

# ஒரு மொழி ஒரு மாநிலம் ஒரு இயக்கம் ஒரு தலைவர்

*மனுஷ்ய புத்திரன்*



ஒரு தலைவர் மறைகிறபோது அவரைப் பற்றிச் சொல்வதற்கு முடிவற்ற செய்திகளும் தருணங்களும் இருப்பது ஓர் அபூர்வமான நிகழ்வு. வரலாற்றில் சில தலைவர்களுக்கு மட்டுமே அது நடந்திருக்கிறது. இந்திய வரலாற்றில் அப்படி நினைவுகூரப்பட்ட தலைவர்களாக காந்தியும்

நேருவும் அம்பேத்கரும் பெரியாரும் அண்ணாவும் இருந்தார்கள். அவர்களுக்குப் பின் தன்னைப் பற்றிய ஒரு மிக நீண்ட அரசியல் சமூக வரலாற்றை விட்டுச்சென்ற மகத்தான தலைவர் கலைஞர் மட்டுமே. இன்னொரு விதத்தில் கலைஞரின் பன்முக ஆற்றல் மற்றும் பன்முகப் பங்களிப்போடு ஒப்பிட்டால் இந்திய வரலாற்றில் அவரோடு ஒப்பிடக்கூடிய இன்னொரு தலைவரை நாம் காண இயலாது. கலைஞரைப் பற்றி எந்த உயர்வுநவிற்சி மிக்க வார்த்தையையும் எவரும் தேட வேண்டியதில்லை. அவரைப் பற்றிய நேரடியான வரலாற்றுப் பதிவுகளே அவருடைய மகத்துவத்தையும் தனித்துவத்தையும் சொல்லப் போதுமானவை. கலைஞர் என்பது ஒரு மனிதரின் பெயரல்ல. ஒரு இனத்தின் அரைநூற்றாண்டின் வரலாற்று அடையாளம் அது. எவராலும் மறைக்க முடியாத, திருத்த முடியாத வரலாறு அது. எந்தச் சூழ்நிலையிலும் கடந்து செல்ல முடியாத வரலாறு. தமிழகம் இனி ஒரு நூற்றாண்டு எப்படிச் செல்ல வேண்டுமென தடம் பதித்த வரலாறு அது.

எண்பது ஆண்டு பொதுவாழ்க்கை, ஐம்பதாண்டுகள் ஒரு கட்சியின் தலைவர், ஐந்து முறை ஒரு மாநிலத்தின் முதல்வர். இந்த மூன்று புள்ளிகளின் வழியே தலைவர் கலைஞர் அவர்களின் சரித்திரம் எண்ணற்ற தடங்களாக விரிகிறது. கலைஞரை மதிப்பிடுவது கடினமானது. ஒரு சிந்தனையாளராக, ஒரு சமூகநீதிப் போராளியாக, ஒரு மொழியின் காவலராக, ஒரு இயக்கத்தின் தலைவராக, ஒரு மாநிலத்தின் ஆட்சித் தலைவராக அவர் அடைந்த உயரங்கள் என்பது ஒரு தனி மனிதர் ஒரே ஒரு வாழ்நாளில்

அடையக்கூடிய உயரங்கள் அல்ல. பத்து மகத்தான ஆளுமைகளின் பத்து வாழ்நாளை அவர் தன் ஒரே ஆயுளில் வாழ்ந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். அவரே தம்மளவில் ஓர் இயக்கம். அவரே தம்மளவில் ஒரு காலம். தமிழர்களின் வரலாற்றில் ஏதோ ஒரு விதத்தில் கலைஞரின் தடம் பதியாத எந்த ஒரு வீடும் இல்லை. எந்த ஒரு தனி மனிதரும் இல்லை. கலைஞர் மரணத்தோடு போராடிக்கொண்டிருந்த அந்த நாட்களில் கோடானுகோடி தமிழர்களின் இதயங்களில் அவர் புத்துயிர் பெற்று எழுந்தார். அவதூறுகளாலும் பொய்களாலும் எவ்வளவோ முறை எவ்வளவோ பேர் அவரை சிலுவையில் அறைய முயற்சித்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் அவர் புத்துயிர் பெற்று எழுந்து வந்திருக்கிறார். ஆனால் அவருடைய இறுதி நாட்களில் அவர் முழுமையாகத் தன் வரலாற்றின் மகத்தான வெளிச்சத்துடன் பிறந்து வந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு தமிழனுடைய நெஞ்சிலும் தன்னுடைய சொந்தத் தகப்பனின் மரணப் படுக்கையின் முன் நின்றுகொண்டிருக்கும் பரிதவிப்பை எங்கெங்கும் காண முடிந்தது. எல்லா வேற்றுமைகளும் முரண்பாடுகளும் மறைந்து தலைவர் மீண்டும் வருவார் என்ற ஏக்கமும் நம்பிக்கையும் உலகெங்கும் இருக்கக்கூடிய தமிழர்களின் இதயத்தில் தளும்பியது. ‘எழுந்து வா தலைவா’ என காவேரி மருத்துவமனையின்முன் ராப்பகலாய் கேட்ட முழக்கம் காலத்தின் செவிகளை அறைந்தது. அந்தக் குரல் கேட்கிற எவருடைய இதயத்தையும் பிழியக்கூடிய குரல். சரித்திர நாயகனுக்கு உத்தரவிடுகிற கோடானுகோடி

மக்களின் குரலாக அது இருந்தது. தலைவர் விடைபெற்றுக்கொண்ட நாளில் அரசியல் அற்பத்தனங்களால் மெரீனாவில் இடம் மறுக்கப்பட்டபோது தமிழகத்தின் கூட்டு மனசாட்சி கொந்தளிப்பின் எல்லைக்கே சென்றது. தெருக்களில் மக்கள் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். தடுப்பரண்களை உடைத்தார்கள். 'என் தலைவனுக்கு மெரீனாவில் இடம் இல்லையென்றால் அங்கு வேறு யாருக்குமே இடம் கிடையாது' என்று இளைஞர்கள் ஆவேசமாக முழங்கியதைக் கேட்க முடிந்தது. அது ஒரு எச்சரிக்கை. வாழ்நாளெல்லாம் நீதிக்காகப் போராடிய தலைவர். தனது இறுதி ஊர்வலம் எந்த இடம் நோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்காகவும் போராடினார். மகத்தான தலைவனுக்கு மண்ணில் தலைசாய்க்க இடம் மறுத்தவர்களுக்கெதிராக நீதிமன்றத்தின் கதவுகள் நள்ளிரவில் தட்டப்பட்டன. தமிழக அரசின் அரசியல் அற்பத்தனத்திற்கு நீதிமன்றம் முடிவுரை எழுதியது. அண்ணாவின் அருகில்தான் தான் இறுதியாகத் துயில் கொள்ளவேண்டுமென்பது கலைஞர் எப்போதோ எடுத்த முடிவு. கலைஞர் தன் முடிவுகளில் எப்போதும் சமரசம் செய்துகொள்ளாதவர். விட்டுக் கொடுக்காதவர். இந்த விஷயத்திலும் அவரது முடிவுதான் வென்றது. இப்படித்தான் தன்னைப் பிரிந்து மாபெரும் துயரக்கடலில் ஆழ்ந்திருந்த மக்களுக்கு அடுத்த நாளே ஒரு வெற்றியின் கொண்டாட்டத்தையும் கலைஞர் அளித்தார். அவரால் மட்டுமே அது சாத்தியம். நீதிமன்றத்தின் உத்தரவு கிடைத்த அந்தக் கணத்தில் தளபதி அவர்கள் சிந்திய கண்ணீர் ஒட்டுமொத்த

உலகத்தமிழர்களின் இதயத்தைத் தொட்டது. அது ஒவ்வொரு தமிழனின் கண்ணீராக இருந்தது.

கலைஞரின் அரசியல் சமூக வாழ்வு என்பது எப்போதுமே எதிர்ப்பு அரசியலின் நெருப்பாற்றில் நீந்தியே வந்திருக்கிறது. சாதியத்தின் அதிகாரம் பீடித்த ஒரு சமூகக் கட்டமைப்பில் ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த ஒரு மனிதர் ஒரு மாநிலத்தின், ஒரு இனத்தின் ஒட்டுமொத்தமான பொதுத் தலைவராக ஏற்கப்படுகிற அரிய நிகழ்வே கலைஞர். அவருக்கு பதினான்கு வயதில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் துவங்கிய அரசியல் வரலாறு, கையெழுத்துப் பத்திரிகையாக முரசொலி ஏடு, அதற்குப் பின் அவர் எதையெல்லாம் உருவாக்கினார், சரித்திரத்தின் எந்தத் திசைகளையெல்லாம் மாற்றினார், தமிழகத்தின் தலைவிதியை எப்படியெல்லாம் மாற்றியமைத்தார் என்பதைக் குறித்து பல்லாயிரம் பக்கங்கள் எழுதப்பட்டுவிட்டன. இதோ உயிர்மையின் இந்த இதழும் விரிவாக அதற்கு சாட்சியம் சொல்கிறது. கலைஞருக்குத் தனிப்பட்ட முறையிலும் சரி, அரசியல்ரீதியாகவும் சரி, காலமோ வரலாறோ எந்த சலுகையும் காட்டவில்லை. அவர் தான் விரும்பிய அனைத்தையும் போராட்டத்தினூடாகவே அடைந்தார். தனக்கு மறுத்த ஒவ்வொரு கதவையும் அவர் உதைத்துத் திறந்தார். ஒவ்வொரு இடத்திலும் தனக்குரிய இடத்தை அவர் தயக்கமின்றி உத்தரவாதப்படுத்தினார். விட்டுக்கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக்கொடுத்தார். சமரசம் அற்று வெல்ல வேண்டிய இடத்தில் வென்று காட்டினார்.

கலைஞரின் தனிப்பட்ட ஆளுமையில் முதன்மையானது, தமிழோடும் தமிழைத் தனது அரசியல் கருத்தியலுக்காக ஆயுதமாக மாற்றிக்கொண்டதோடும் தொடர்புடையது. மொழியின் மூலமாக ஒரு இருள்படிந்த சமூகத்தின் சிந்தனைக்கும் உணர்ச்சிகளுக்கும் வெளிச்சம் பாய்ச்ச முடியும் என்பதை அவர் நிகழ்த்திக் காட்டினார். பழமையின் துருப்பிடித்த பூட்டுகளைத் தனது சொற்களின் சுத்தியலால் உடைத்துத் திறந்தார். திரைப்படங்களில், பத்திரிகைகளில், அரசியல் மேடைகளில், இதழ்களில் பற்றியெரிந்த அவரது தமிழின் தணல் புனிதங்களையும் மனித இழிவுகளையும் பொசுக்கியது. ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு சமூகத்திற்கும் அவரது தமிழ் ஆயுதங்களை வழங்கியது. எதிர்ப்பின் வழிமுறைகளை அது கற்பித்தது. மொழி உரிமைக்காகவும் மாநில சுயாட்சிக்காகவும் சமூக நீதிக்காகவும் அவர் மூட்டிய அந்தக் கனல் இந்தியாவில் தமிழகத்தை ஒரு தனித்த அடையாளமாக மாற்றியது. இந்திய மைய நீரோட்டத்தில் தமிழகம் தனது அடையாளத்தையும் தனித்துவத்தையும் ஒருபோதும் கரைத்துக்கொள்ளாது என்ற நிலையை கலைஞரே உருவாக்கினார். பெரியார் தமிழ் நிலம் குறித்த ஒரு மகத்தான கனவைக் கண்டார். அந்தக் கனவை நனவாக்கும் ஆரம்பப் புள்ளிகளை அண்ணா வரைந்தார். காலம் அதை ஒரு முழுச் சித்திரமாக்கும் வாய்ப்பையும் அதிகாரத்தையும் கலைஞருக்கே வழங்கியது. அதை அவர் ஏற்றுக்கொண்டார். மதஅடையாளங்களால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தை திருக்குறளாலும் அய்யன்

திருவள்ளுவரின் திருவுருவாலும் சமயச் சார்பற்ற ஓர் அடையாளத்திற்குள் கொண்டு செலுத்தினார். சமஸ்கிருதத்தின் புதர் மண்டிய மணிப்பிரவாளத் தமிழ் நடையை மீட்பதற்காக நிகழ்ந்த தனித்தமிழ் இயக்கத்தை ஒரு வெகுசன இயக்கமாக மாற்றி பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்குப் பின் பாழ்பட்ட தமிழை மீட்டெடுத்தது திராவிட இயக்கமும் அதில் முதன்மையாக கலைஞருமே.

மொழி உரிமைக்கான, மொழி அடையாளத்திற்கான போராட்டத்தை சமூகநீதிக்கான போராட்டத்தோடு முழுமையாக இணைத்ததும் அதன்மூலமாக அரசியல் அதிகாரத்தை வென்று மொழி உரிமையையும் சமூகநீதியையும் நிலைநாட்டியதுதான் கலைஞரின் இணையற்ற சாதனை.

சமூக வளர்ச்சி-, பொருளாதார வளர்ச்சி இரண்டையும் அவர் இணைகோடுகளாக முன்வைத்தார். அந்தத் தண்டவாளத்தின்மீதுதான் தமிழக வளர்ச்சி என்ற ரயில் வெற்றிகரமாக நெடுந்தொலைவைக் கடந்து வந்தது. அந்த ரயிலின்மீது எத்தனை எத்தனை சமூகப் பிரிவுகள் பெட்டிகளாக இணைந்து முன்னேறின என்பது கடந்தகால, நிகழ்கால வரலாறு. விவசாயிகள், தொழிலாளிகள், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர் என கலைஞரின் சமூகநீதி-சமூகநல அரசியல் எந்தப் பிரிவினரையும் விட்டுவிடவில்லை. நவீன அரசியல் சித்தாந்தமான அனைவருக்குமான ஒருங்கிணைந்த வளர்ச்சி என்பதற்கு ஒரு

மிகச்சிறந்த குறியீடு கலைஞரே. எந்த ஒரு சமூகப் பிரிவினரும் மைய நீரோட்டத்திலிருந்து தனித்துவிடப்பட்டுவிடக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். ஒரு மாநில முதலமைச்சரின் குறைந்தபட்ச அதிகாரம், ஒரு மாநிலத்தின் குறைந்த நிதி ஆதாரம் இரண்டையும் வைத்துக்கொண்டு எவ்வளவு செய்ய முடியுமோ அதைவிடப் பல மடங்கு அதிகமாகச் செய்தார். மத்தியில் திமுக கூட்டணியில் இருந்த காலம் முழுக்க தமிழகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை அவர் நிர்பந்தித்துப் பெற்றார். கூட்டணியில் இல்லாத காலங்களில் எதிர்த்துப் போராடிப் பெற்றார். பொதுவிநியோகத் திட்டத்தின் மூலமாக பசிப்பிணி நீங்கிய சமூகப் பாதுகாப்பை எளிய மக்களுக்கு வழங்கினார். இலவசக் கல்வியின் மூலமாக, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீட்டின் மூலமாக, பல்வேறு சமூக நலத்திட்டங்கள் மூலமாக, இலவச வண்ணத்தொலைக்காட்சி போன்ற புரட்சிகரமான திட்டங்கள் மூலமாக சமநீதி ஒன்றை கலைஞர் இடையறாது படைத்தார். தமிழகம் கடந்த ஏழாண்டுகால அதிமுக ஆட்சியில் பல சீரழிவுகளைச் சந்தித்த பிறகும்கூட கல்வி, பொது சுகாதாரம், அடிப்படைக் கட்டமைப்புகள், பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களைவிட இன்றும் முன்னிலையில் இருப்பதற்குக் காரணம் தமிழ்ச் சமூகத்தை நவீனமயமாக்குவதற்கும் சமூகநீதி காத்து மனிதவளத்தை மேம்படுத்துவதற்கும் அவர் ஆற்றிய அரை நூற்றாண்டு பங்களிப்புகள்தான் அடிப்படைக் காரணம்.

கலைஞரின் சமூகநீதி, சமூக நலன், மாநில சுயாட்சிக் கொள்கைகள் இன்று இந்திய அளவில் அனைத்துக் கட்சிகளும் பின்பற்றக்கூடிய ஒரு கோட்பாடாக மாறிவருகிறது. மத்திய அரசு இன்று பேசுகிற அனைத்துக் கிராமங்களும் மின்வசதி என்கிற திட்டத்தை தலைவர் கலைஞர் என்றோ நிகழ்த்திக்காட்டி விட்டார். மதவாத பாசிசம் இன்று இந்தியாவைக் கருமேகமாகச் சூழ்ந்துவரும் காலத்தில் கலைஞரின் அடையாளம் மதவாதத்திற்கெதிரான மகத்தான போர்க்குரலாக நம் இதயங்களில் ஒலிக்கிறது. அந்தக் கலகக் குரல் நம்மை வழிநடத்துகிறது. கலைஞர் இந்த எதிர்க் குரலின் வழியாக நீதிக்கான குரலின் வழியாக என்றும் நம்மோடு இருப்பார். திமுகவில் கலைஞருக்குப் பின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் தளபதி அவர்கள் கலைஞரின் லட்சியங்களையும் எதிர்க்குரலையும் இன்னும் உக்கிரமாக எடுத்துச் செல்வார்.

உயிர்மை இந்த கலைஞர் சிறப்பிதழின் மூலமாக 16ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. தலைவரின் மகத்தான அன்பின் வழியே சமூகநீதிக்கான தனது பயணத்தை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லும்.

# எல்லோருக்கும் எல்லாமுமாக இருந்த தலைவர்

*துர்கா ஸ்டாலின்*



1973 ஆம் வருஷம். அன்னிக்கு சித்ரா பௌர்ணமி. தலைவர் கலைஞர் பூம்புகார் நகரை, கோவலனும் கண்ணகியும் வாழ்ந்த அந்தச் சரித்திரப் புகழ்பெற்ற ஊரைப் புதுப்பித்து அற்புதமான கலைக்கூடம் கட்டி அதை நாட்டு மக்களுக்காக அர்ப்பணிச்ச விழா பூம்புகார்ல நடந்துட்டு இருந்தது. எங்க வீட்டில அத்தனை பேரும் எங்க பாட்டியோட மாட்டு வண்டி கட்டிட்டு

‘பூம்புகாருக்கு கலைஞர் வர்றாரு... பார்த்துட்டு வரலாம்’னு குடும்பமா கிளம்பிப் போனோம்.

அங்கே கூட்டமான கூட்டம்!... சின்னப் பிள்ளைங்களான எங்களை இடிச்சுத் தள்ளிட்டாங்க. நாங்க நைஸா, அந்த இடிபாடுகள்ல இருந்து தப்பிக்க ஒரு வீட்டோட மாடியில ஏறி நின்னுட்டோம்... தலைவர் கலைஞர் பூம்புகார் கலைக்கூடத்தோட ஒவ்வொரு வளைவா திறந்துட்டே வந்தார். எங்க பக்கம் வர்றப்போ, அவருக்கு சந்தோஷமா டாடா காட்டிட்டே ‘அதோ பாரு... அதோ பாரு!... அவருதான் கலைஞர்’னு அவரை நேர்ல பார்த்த சந்தோஷத்தில் குதிச்சோம்.

பிற்பாடு அவர்தான் எனக்கு மாமனாராகப் போகிறவர் என்ற விஷயத்தை அப்போ நான் நினைச்சுக்கூட பார்த்திருக்க மாட்டேன்... பள்ளிப் பிள்ளைகளுக்கே உரிய உற்சாகத்துடன் வேடிக்கை பார்க்கும் சிறுவர் சிறுமிகளாகிய நாங்கள் அந்த நிகழ்ச்சியைப் பார்த்து ரசித்தோம்.

1975இல்தான் முதலமைச்சர் வீட்டுக்கு மருமகளா போகப்போறோம்னு தெரிஞ்சதும் ரொம்ப சந்தோஷமாகவும் பதற்றமாகவும் இருந்தது.

தலைவர் கலைஞர் அவர்கள் எங்க கல்யாணப் பத்திரிகையையே வித்தியாசமா அவங்க கையெழுத்திலேயே கடிதம் மாதிரி எழுதிப் பத்திரிகையா தந்தாங்க.

மிசாவில இவங்கள கைது செய்யும்போது மாமா (தலைவர் கலைஞர்) என் தோளைத் தட்டிக்கொடுத்துப் பேசினது இன்னும் நல்லா ஞாபகம் இருக்கு... ‘ஒண்ணும் கவலைப்படாதே... நாலஞ்சு நாள்ல திரும்ப வந்துடுவாங்க..

ஊருக்கெல்லாம் போனா நாலஞ்சு நாள் பிரிஞ்சிருக்கிற மாதிரி இதையும் நினைச்சுக்கோ..'ன்னார். மிசா காலகட்டத்துல தினமும் இரவு வீட்ல எங்க எல்லோரையும் ஒண்ணா உக்கார வச்சு ஆறுதலா மாமா பேசுவாங்க. எல்லாச் செய்திகளையும் பகிர்ந்துக்குவாங்க.

2001, ஜூன் 30ஆம் தேதி நள்ளிரவு தலைவர் கலைஞர் அவர்களைக் கைது செய்தபோது நான் ரொம்ப கலங்கிப்போயிட்டேன். அவ்வளவு பெரிய தலைவர கைது செய்து இழுத்துட்டுப் போனதை இப்போ நினைச்சாலும் எனக்கு அழுகை வரும். மிசாவைவிடக் கொடுமையான நாட்கள் அது.

கோவை, சேலம் போன்ற ஊர்களுக்கு மாநாட்டுக்குச் செல்லும்போது மாமாவுடன் நாங்க ட்ரெயின்ல பயணம் செஞ்சு இருக்கோம். இரவு எவ்வளவு நேரமானாலும் முழிச்சு இருந்து ஒவ்வொரு ஊரைக் கடக்கும்போதும் வெளியில காத்து நிற்கிற தொண்டர்களைப் பார்த்து கையசைச்சுட்டுத்தான் தூங்கப் போவாங்க. நமக்காக இவ்ளோ நேரம் காத்து நிக்கிறாங்களேன்னு சொல்வார். ரொம்ப ஆச்சரியமா இருக்கும்.

தலைவர் வசனம் எழுதிய எல்லா படங்களும் எனக்குப் பிடிக்கும். குறிப்பாச் சொல்லணும்னா மனோகரா, பராசக்தி, பூம்புகார். அதிலும் மனோகரா படத்துல மகனைப் பொறுமையாக இருக்கச் சொல்லும் தாய் இறுதியில் மகனிடம் "பொறுத்தது போதும். பொங்கி எழு மனோகரா" என்று பேசும் வசனம் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

பேரக்குழந்தைகளிடம் தலைவர் எப்போதும் மிகுந்த வாஞ்சையுடன் இருப்பார். நாங்க குழந்தைகளைத் திட்டினாலும் அடிச்சாலும் பிடிக்காது. எங்களைக் கண்டிப்பார். குழந்தைங்கள பொறுமையா பாத்துக்கணும்னு சொல்லுவாங்க. குழந்தைகளின் பிறந்தநாளின்போது கேக் வெட்டும்போது சரியான நேரத்துக்கு வந்துடுவாங்க. அதேமாதிரி குழந்தைங்க உடம்பு சரியில்லேன்னா ரொம்ப அக்கறையா விசாரிச்சுட்டே இருப்பாங்க.



அதேபோல தலைவரின் ஒவ்வொரு பிறந்தநாளின் போதும் காலையில் குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் கேக் வெட்டிக் கொண்டாடுவாங்க. எவ்ளோ வேலை இருந்தாலும் பொறுமையா எல்லோருக்கும் கேக் குடுத்துட்டுத்தான் வெளியே கிளம்புவாங்க. திருமணமாகி வந்த இவ்ளோ

வருஷங்கள்ல ஒரு வருடம்கூட நாங்க தலைவர் பிறந்தநாளத் தவறவிட்டது இல்ல.

2008ல் இவங்க (தளபதி) உடல்நிலை சரியில்லாத போது பரிசோதனைக்காக லண்டன் போனோம். கிளம்புற அன்னிக்கு எங்கள வழியனுப்ப அதிகாலை 3.30 மணிக்கெல்லாம் மாமா வீட்டுக்கு வந்துட்டாங்க. வீட்டுக்கு அந்தநேரத்துல வருவாங்கன்னு நாங்க எதிர்பார்க்கவே இல்ல. எப்பவும் தலைவராகவே பார்த்த நான் அன்னிக்குத்தான் அப்பா-மகன் பாசத்தைப் பார்த்தேன். மாமா ரொம்ப கண் கலங்கிட்டாங்க. உனக்கு ஒண்ணும் பெரிய பிரச்சினை இல்லேயேன்னு திரும்பத் திரும்பக் கேட்டுட்டே இருந்தாங்க. என்னை மிகவும் மனம்நெகிழ வைத்த சம்பவம் அது.

தலைவரிடம் ரொம்ப பிடிச்ச குணம், எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் பண்பு. குடும்பத்தினர் மேல் வைத்திருந்த அக்கறை. மத்தவங்கமேல கோபம் இருந்தா அதச் சட்டுனு முகத்துக்குநேரா காட்டிக்க மாட்டாங்க. அமைதியா இருப்பாங்க.

கோபாலபுரம் வீட்ல ஆத்தா (மாமாவின் அம்மா அஞ்சுகத்தம்மாள்), தாத்தா (மாமாவின் அப்பா), அதோடு மாமாவின் முதல் மனைவி பத்மாவதின்னு மூணுபேர் படங்களும் மாட்டி வச்சிருப்பாங்க. வீட்டுக்குள்ளே நுழைஞ்சவுடனே வர்ற 3ஆவது ஹால்ல இந்தப் படங்கள் சுவரில் மாட்டப்பட்டிருக்கும்! எப்பவும் இவங்க படங்களுக்கு பூ போடப்பட்டு விளக்கெரிஞ்சுட்டே இருக்கும். அத்தை இதைக் கவனமா பார்த்துச்

செய்வாங்க... மாமா எங்கே வெளியூர் கிளம்பினாலும் இங்க வந்து நின்னு இந்தப் படங்களைத் தொட்டுக் கும்பிடாமக் கிளம்ப மாட்டார். மாமா வெளியூர் கிளம்பற அந்த நேரத்தில, மாமா மட்டுமில்லே... அந்த வீட்ல இருக்கிற சின்னவங்க, பெரியவங்கன்னு எல்லோருமே அங்க இருக்கணும். மாமா எல்லோரையும் பார்த்துப் போயிட்டு வர்றேன்னு சொல்லிட்டுத்தான் கிளம்புவார். யாராவது ஒருத்தர் அங்க இல்லேன்னாலும்கூட “எங்கே இவங்களைக் காணோம்”னு பேர் குறிப்பிட்டுக் கேப்பார்!...

அதனால அந்தச் சமயத்தில் யாரும் அங்கே இல்லாமல் போயிடக் கூடாதேன்னு அத்தை ‘இத்தனை மணிக்கு மாமா கிளம்பறார்... கீழே ஆத்தா படத்துக்கிட்டே அந்த நேரத்துக்கு எல்லோரும் வந்துடணும்’னு முன்கூட்டியே வீட்ல எல்லோருக்கும் சொல்லி வச்சிடுவாங்க.

வீட்ல எல்லோரும் வாரம் ஒரு தரமாவது குறிப்பிட்ட ஒரு நேரமாவது ஒண்ணா ஒரே இடத்தில் நிக்கணும், ஒண்ணா கலந்து பேசணும்னு எழுதப்படாத (அன்பு) சட்டத்தை ரொம்ப வருஷமா கடைப்பிடிச்சுட்டு வர்றாங்க! வீட்ல நாங்களும் அதுக்கு முழு மனசா கை கொடுப்போம்! கோபாலபுரம் வீட்டுக்கு அரசியல் தலைவர்கள் யார் வந்தாலும் எங்க எல்லோரையும் அவங்ககிட்ட முறைப்படி அறிமுகப்படுத்தி வைப்பாங்க.

தலைவர் வீட்டுப் பெண்கள் நாங்க கோவிலுக்குப் போறதை ஒரு நாளும் தடுத்தது இல்ல. அவங்க வீட்ல இருக்கும்போதுதான் நாங்க கோவிலுக்குப்

போயிட்டு வருவோம். ஒரு முறை காஞ்சிபுரம் கோவிலுக்கு நான் போயிருந்தபோது சங்கராச்சாரியார் நாங்க வந்து இருக்கறதத் தெரிஞ்கிட்டு எங்களப் பார்க்கணும்னு சொன்னாங்க. நாங்க ஒரு மரியாதைக்காகப் பார்த்தோம். ஆனா அடுத்த நாள் பத்திரிகைகள்ல அவரிடம் புத்தாண்டு வாழ்த்துபெற நாங்க போனோம்கிற மாதிரி எழுதிட்டாங்க. தலைவருக்கு இப்படி ஒரு சங்கடத்தக் குடுத்துட்டியேன்னு எல்லோரும் சொன்னாங்க. ‘மாமா என்கிட்ட கேட்டா நான் நடந்தத சொல்றேன். என்மேல எந்தத் தப்பும் இல்லை. மாமா என்னைப் புரிஞ்சுப்பாங்க’ன்னு சொன்னேன். ஆனா மாமா என்கிட்ட அதுபத்தி எதுவும் கேட்கவே இல்ல. அதே மாதிரி நாங்க வேளச்சேரி வீட்டுக்குப் போனபோது ஒரு பூஜை அலமாரி வைத்திருந்தேன். மாமாவுக்குப் பிடிக்காதுன்னு எல்லோரும் சொன்னாங்க. மாமா அப்போகூட என்கிட்ட கேட்கல.

மாமாவுக்கு நான் வைக்குற விரால் மீன் குழம்பு ரொம்பப் பிடிக்கும். அத்தைகிட்ட இருந்துதான் நான் மீன் குழம்பு செய்யக் கத்துக்கிட்டேன். கறி கோலா உருண்டையும் பிடிக்கும். சாயங்கால நேரத்துல இனிப்பு, வெண்ணெய்ப் புட்டு, முறுக்கு விரும்பிச் சாப்பிடுவாங்க. அத்தை என்கிட்ட அடிக்கடி மாமாவுக்கு செஞ்சு தரச் சொல்லுவாங்க.

இவங்க ‘நமக்கு நாமே’ பயணத்தில இருந்தபோது தினமும் மாமா போன் செஞ்சு பேசிடுவாங்க. அப்போ என்கிட்ட பேசும்போது உடம்பைப் பாத்துக்கொள்ளச் சொல்லும்மா என்று சொல்லிட்டே இருப்பாங்க. நமக்கு நாமே

பயணத்தை தினமும் டிவியில பாத்துட்டு ரொம்ப சந்தோஷப்பட்டாங்க. இவங்க பயணத்தை முடிச்சு வந்ததும் முரசொலியில இவங்களுக்குக் கடிதம் எழுதினாங்க.

தலைவரை நாங்க ஜூன் 8, 2018 அன்று சந்திச்சுட்டு லண்டன் பயணம் சென்றோம். அதுதான் அவர நாங்க நல்ல நினைவோட பார்த்த கடைசி நாள். திரும்ப வரும்போது அவருக்கு உடல்நிலை மிகவும் மோசமாகி இருந்தது. தலைவர் ஆஸ்பத்திரியில இருந்தபோது வெளியில தொண்டர்கள் ‘எழுந்து வா தலைவா’ என்று கோஷம் போட்டுக்கொண்டே இருந்ததை கேட்கக் கேட்க எங்களுக்குக் கண்ணீர் வரும். அந்தக் கோஷங்கள ரிகார்ட் செஞ்சு தலைவரின் காதுக்கு அருகில் வைத்துக் கேட்க வைப்போமா என்று நினைத்தோம். மக்களின் அன்புக் கட்டளை நிச்சயம் தலைவருக்குக் கேட்டு இருக்கும். ஆலமரமாக இருந்து எங்கள் குடும்பத்தை, கட்சியை, இயக்கத்தைத் தாங்கிக்கொண்டு இருந்த தலைவரின் இழப்பை, வேதனையைச் சொல்ல வார்த்தைகள் இல்ல. ஈடு செய்ய முடியாத இழப்பு.

தலைவர் விருப்பப்பட்ட மாதிரியே மெரீனாவில் அண்ணாவுக்கு அருகில் அவருக்குப் போராடி இடம் கிடைச்ச நிமிஷம் மறக்க முடியாத நினைவு. மெரீனாவில் இடத்துக்காக நீதிமன்றத்துல வாதாடிட்டு இருக்கிற நேரம் நாங்க ராஜாஜி ஹால்ல அவ்ளோ டென்ஷனா காத்துக்கிட்டு இருந்தோம். திடீர்னு வெளியே இருந்து மக்கள் சத்தம் பெரிசாக் கேட்டது. அப்போதான் தீர்ப்பு சாதகமாக வந்தது தெரியும். இவங்க அவ்ளோ நேரம் அடக்கி வச்சிருந்த அழுகைய அந்த நிமிஷம்

வெளிப்படுத்தினாங்க. தலைவரின் விருப்பத்தை நிறைவேற்றின தருணம் என்றைக்கும் மறக்க முடியாதது.

தொகுப்பு: செல்வி ராமச்சந்திரன்

# தங்கத் தாம்பாளம்

அ.முத்துலிங்கம் (கனடா)



ஐம்பதுகள் என் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டம். இந்த வருடங்கள்தான் என்னை உருவாக்கின. நான் பிற்காலத்தில் என்ன ஆவேன் என்பதைத் தீர்மானித்த வருடங்கள். அப்போதெல்லாம் அது தெரியவில்லை. இப்பொழுது திரும்பிப் பார்க்கும்போதுதான் அவை துல்லியமாகத் தெரியத் தொடங்குகின்றன.

என் அண்ணர் எங்கள் கிராமமான கொக்குவிலுக்கு கொழும்பிலிருந்து வந்தார். அவர் வந்தால் கொண்டாட்டம்தான். ஆனால் கோபம் வந்தால் கடுமையாக நடந்துகொள்வார். ஐந்து சதத்துக்கு வாங்கிய பராசக்தி வசனப் புத்தகத்தைக் கொடுத்துப் பாடமாக்கச் சொன்னார். பாடப் புத்தகங்களைத் தள்ளி வைத்துவிட்டு மனனம் செய்யத் தொடங்கினேன்.

நாலு நாட்கள் கழித்து தன் நண்பர்களுடன் வந்து அமர்ந்துகொண்டு வசனத்தைப் பேசிக்காட்டச் சொன்னார். அவர்கள் கைதட்டி உற்சாகப்படுத்தினார்கள். சில இடங்களில் சிரித்தார்கள். எனக்கு சிவாஜியையும் தெரியாது; கலைஞரையும் தெரியாது. பராசக்தி படம் பார்த்ததும் இல்லை. அந்த வசனங்களில் மயங்கி என்னைப் பறிகொடுத்தது நினைவிலிருக்கிறது. அதுதான் எனக்கு கலைஞரைப் பற்றிய முதல் அறிமுகம். சில மாதங்கள் கழித்து பராசக்தி படத்தை நான் பார்த்தபோது அதன் கதையோ, இசையோ என்னை ஈர்க்கவில்லை. அந்த வசனங்கள்தான் எனக்கு முக்கியமாகப்பட்டன.

அதிலே ஓர் இடத்தில் ‘தங்கத் தாம்பாளம், வைர வைடூரியம்’ என்று வரும். அது எங்கே என்பது இப்போது நினைவில் இல்லை. அதை நான் உச்சரித்தபோது வீட்டிலே சிரித்தார்கள். வகுப்பிலும் நண்பர்கள் கேலி செய்தார்கள். என்னைத் ‘தங்கத் தாம்பாளம்’ என்று கூப்பிட ஆரம்பித்தனர். அது நெடுநாட்கள் நீடித்தது. கால ஓட்டத்தில் அதுவும் ஒருநாள் நின்றுவிட்டது. இன்றைக்கும் யாராவது தங்கத் தாம்பாளம் என்றால் எனக்கு கலைஞரின் ஞாபகம்தான் வரும்.

பராசக்தி திரைப்படம் வருவதற்கு ஒரு வருடம் முன்னர் யாழ்ப்பாணத்தில் மிகப் பிரம்மாண்டமான தமிழ் விழா நடந்தது. இந்தியாவில் இருந்து சிறந்த பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் வந்திருந்தார்கள். ரா.பி. சேதுப்பிள்ளை, கல்கி, பெ.தூரன், கி.ஆ.பெ விசுவநாதம், கி.வா.ஜ. இவர்களுடன் தனிநாயக அடிகளும் கலந்துகொண்டதாக ஞாபகம். அறிஞர்

அண்ணா வருவதாகப் பேச்சு அடிபட்டது, ஆனால் அவர் வரவில்லை. அவருடைய புகழ் வேகமாகப் பரவிய காலம் அது. மேடையில் பேசியவர்கள் எல்லாம் ‘தாய்நாடு - சேய்நாடு’ என்று முழங்கினார்கள். தாய்நாடு என்றால் இந்தியா, சேய்நாடு என்றால் இலங்கை. அந்த வயதில் நான் அதை முற்றிலுமாக நம்பினேன். இந்தியா முழுக்கத் தமிழர்களால் நிரம்பியிருக்கிறது என நான் மட்டுமல்ல, மற்றவர்களும் நினைத்தார்கள். இந்தியா மிகப்பெரிய சனத்தொகை கொண்ட தேசம். அதில் 6 விழுக்காடுதான் தமிழர்கள் என்பது பின்னாளில்  தெரிய வந்தபோது பெரும் ஏமாற்றமாக இருந்தது.

1953ஆம் வருடம் மறுபடியும் அண்ணர் கொழும்பில் இருந்து அவசரமாக கிராமத்துக்கு வந்தார். எங்கள் வீட்டுச் சுவரில் நிரையாக மாட்டியிருந்த சாமி படங்களுக்குப் பக்கத்தில் அறிஞர் அண்ணாவின் படத்தையும்,  கலைஞர் கருணாநிதியின் படத்தையும் மாட்டினார். கல்லக்குடி போராட்டம் முக்கிய கட்டத்தை அடைந்திருந்தது. கருணாநிதி தலைமையில் டால்மியாபுரம் என்ற பெயரை திரும்பவும் கல்லக்குடி என மாற்றவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து நடந்த போராட்டம் அது. அப்பொழுது கருணாநிதிக்கு வயது 29 மட்டுமே. கருணாநிதி ரயில் தண்டவாளத்தில் தலை வைத்து ரயிலை நிறுத்தினார். தமிழ்நாடு முழுக்கப் போராட்டம் பரவியது. இருவர் கொல்லப்பட்டனர். 5000 பேர் கைதாகினர். கருணாநிதி 6 மாதம் சிறையில் கழித்தார்.

கருணாநிதியின் புகழ் உச்சத்தை எட்டியது அப்போதுதான். ஓர் இடத்தில் கருணாநிதியிடம்

கேட்டார்கள் ‘இந்தப் போராட்டத்தில் நீங்கள் ரத்தம் சிந்தி உயிர் இழந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?’ அவர் பதில் கூறினார், ‘அறிஞர் அண்ணா என் ரத்தத்தை எடுத்து பெயர் பலகையில் ‘கல்லக்குடி’ என்று எழுதியிருப்பார்.’ இந்த வாசகம் தமிழ் உலகம் எங்கும் பரவியது. எங்கள் வீட்டில் நடந்ததுபோல இன்னும் பல வீடுகளிலும் கருணாநிதியின் படம் சுவர்களில் ஏறியது. இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள் அவரை ‘தமிழ்க் காவலர்’ என்று அழைத்தன. எல்லோர் உதடுகளிலும் கருணாநிதியின்  பெயர் இருந்த அந்தச் சமயம் அவர் யாழ்ப்பாணத்தில் தேர்தலில் நின்று வென்றிருக்கலாம்.

பராசக்தியின் வெற்றியைத் தொடர்ந்து கலைஞரின் வசனத்தில் மனோகராவும், அதன் பின்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படமும் வெளியாகின. இந்தப் பட வசனங்கள் எனக்கு மட்டுமல்ல, எங்கள் கிராமத்தில் உள்ள பலருக்கும் மனப்பாடம். கோயில் திருவிழாக்களிலும், திருமண வீடுகளிலும் சினிமாப் பாடல்களை ஒலிபெருக்கியில் இரவு பகலாக ஒலிபரப்புவார்கள். முழுக்கிராமமும் அவற்றைக் கேட்டுக் களிக்கும். கலைஞர் வருகைக்குப் பின்னர்தான் வசனங்களை ஒலிபரப்ப ஆரம்பித்தார்கள். கலைஞர் ஒரு புது சகாப்தத்தை உண்டு பண்ணினார். பின்னாட்களில் ஹாம்லெட், ரிச்சார்ட் 3 போன்ற ஆங்கிலப் படங்களில் லோரன்ஸ் ஒலிவியருடைய வசனத்தைக் கேட்பதற்காக சனங்கள் அவர் படங்களை அடித்துப் பிடித்துப் பார்த்தனர். ஆனால் கலைஞரின் வசனங்கள் ஏற்படுத்திய

தாக்கத்தை வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது. இப்பொழுது யோசித்துப் பார்க்கும்போது, உலகத்திலேயே எந்த மொழியிலும் சினிமா மூலம் இப்படியான ஓர் எழுச்சி உண்டாகியிருக்கவில்லை என்பது தெரியவரும்.

கலைஞரின் அடுக்குமொழி அனைவரையும் வெறிகொள்ள வைத்தது. ஒருமுறை பள்ளிக்கூடத்தில் அடுக்குமொழியில் ஒரு கட்டுரை எழுதி ஆசிரியரிடம் சமர்ப்பித்தேன். வாத்தியார் சொன்னார். ‘அடுக்குமொழி உனக்கு நல்லாய்த்தான் வருகிறது. ஆனால் சில வார்த்தைகளை நீ அடுக்கு மொழிக்காகத் தேர்வு செய்வதால் அவை உன் சிந்தனையைத் திருப்பிவிடுகிறது. வார்த்தைகள் உன் சிந்தனையைச் சொல்லப் பயன்படவேண்டும். அவை உன் சிந்தனையைத் தீர்மானிக்கக்கூடாது. நீ அடுக்கு மொழிக்கு இன்னும் தயாராகவில்லை.’ அப்பொழுதுதான் எனக்கு கலைஞரின் சிந்தனைத் தெளிவும், தமிழ் ஆற்றலும் சற்றுப் புரிய ஆரம்பித்தது.

அதன் பின்னர் கலைஞரின் வளர்ச்சி பிரமிக்க வைப்பதாக இருந்தது. 33 வயதில் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றார். பத்து வருடம் கழித்து மந்திரி பதவி கிடைத்தது. 45வது வயதில் முதலமைச்சர் ஆகிறார். 60 வருடங்கள் சட்ட மன்ற உறுப்பினர்; 50 வருட தி.மு.க தலைவர்; 14 வயதில் தொடங்கி 94வது வயது வரைக்கும், 80 வருடங்களாகத் தொடர்ந்த பொதுவாழ்க்கை. எத்தனை மகத்தான சாதனை!!...

கலைஞரின் வாழ்க்கையைத் தொடர்ந்து அவதானிப்பது நான் வெளிநாடு போன பின்னர் கடினமாகிவிட்டது. பல வருடங்களுக்குப் பிறகு நான் மறுபடியும் எழுதத் தொடங்கினேன். 20 வருடங்கள் ஒன்றுமே எழுதவில்லை. என்னுடைய சிறுகதைத் தொகுதியான 'வம்சவிருத்தி' 1996இல் வெளியாகி அதற்குத் தமிழ்நாடு அரசு விருது கிடைத்தது. நான் வேலை விசயமாக அலைந்து கொண்டிருந்த நாட்கள் அவை. பதிப்பாளர் எழுதினார், 'நிச்சயம் வாருங்கள், முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியின் கையால் விருது பெறும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது.' நான் ஆப்கானிஸ்தானில் எங்கோ இருந்தேன். கலைஞரின் எழுத்தாலும், பேச்சாலும், மொழியாலும் கவரப்பட்ட நான் அவரிடம் இருந்து பரிசு பெறும் வாய்ப்பை இழந்தது துயரமானது.

ஈழப் போரின்போது அவர் ஆதரவு ஈழமக்கள் மீதுதான் இருந்தது. ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அத்தனையும் செய்தார். ஆனால் அவை ஈழப் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதாக இல்லை. சென்னையில் தோழர் பத்மநாபா கொலைக்குப் பின்னர் கலைஞரின் ஆட்சி கலைக்கப் பட்டது. அவருக்கு அது தண்டனை என்றுதான் கொள்ளவேண்டும். ஈழ மக்களின் அவலத்துக்குக் கரிசனை காட்டியதற்கு அவர் கொடுத்த விலை அது. இந்திய அமைதிப் படை இலங்கை சென்றதைத் தொடர்ந்து எதிர்த்தார். ராணுவம் சென்னைக்குத் திரும்பியபோது அவர் வரவேற்கவில்லை என நிறையக் கண்டனங்களை

அவர் சந்திக்க வேண்டி நேர்ந்தது. அவர் பொருட்படுத்தவில்லை. கல்லக்குடியில் ஆரம்பித்த அவருடைய போராட்டக் குணம் இறுதிவரை தொடர்ந்தது.

அவர் எழுதி வெளிவந்த 'உளியின் ஓசை' திரைப்படத்தை நான் இருமுறை பார்த்தேன். முதலாவது அவருடைய வசனத்தை ரசிப்பதற்காக. இரண்டாவது, இந்தத் திரைப்படத்தில் ஈழத்துப் பெண்ணான தான்யா முதல் முதலாக இசைஞானி இளையராஜாவின் இசையில் 'கல்லாய் இருந்தேன், சிலையாய் ஏன் வடித்தாய்' என்ற பாடலைப் பாடியிருந்தார். அருமையான இசை, அருமையான பாடல். எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தந்த படம் அது. அந்தப் பெண்ணை நான் நேர்காணல் செய்து எழுதினேன். கலைஞர் கடைசியாக கதை வசனம் எழுதிய திரைப்படம் 'பொன்னர் சங்கர்'. இந்தப் படத்திலும் எனக்கொரு தொடர்பு இருந்தது. பிரெண்டா பெக் என்ற ரொறொன்ரோ பெண்மணி 50வருடங்களுக்கு முன்னர் அவருடைய 19வது வயதில் தமிழ்நாட்டில் ஓலைப்பாளையம் கிராமத்துக்குச் சென்று 500 வருடங்கள் பழமையான 'அண்ணன்மார் கதை' பற்றி ஆராய்ச்சி செய்து மானுடவியலில் முனைவர் பட்டம் பெற்றிருந்தார். கிராமத்தில் 19 நாட்கள் அந்தக் கதை சொல்லப்பட்டது. அதைச் சொன்னவர்களுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. 500 வருடங்கள் வாய் வார்த்தையாக வந்த சரிதத்தை பிரெண்டா முதல் முறையாக ஒலிப்பதிவு செய்தார். கிராம மக்கள் முதன்முதல் பார்த்த டேப் ரிக்கார்டர் அது. அதற்குப் பொட்டு வைத்து, சூடம் காட்டி, பூஜை செய்தனராம். அந்தப் பதிவுதான்

‘அண்ணன்மார் கதைக்கு’ இன்று இருக்கும் ஒரே சாட்சி. கலைஞர் பிரெண்டாவைப் பாராட்டி அவரை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு அழைத்திருந்தார். பிரெண்டாவை நான் நேர்காணல் செய்து உயிர்மை பத்திரிகையில் எழுதியிருந்தேன். அண்ணன்மார் கதை ‘பொன்னர் சங்கர்’ தலைப்பில் கலைஞரின் கதை வசனத்தில் வெளிவந்தது எனக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது. பலதடவை ‘பொன்னர் சங்கர்’ படத்தை பிரெண்டா பார்த்தார். நானும் பார்த்து மகிழ்ந்தேன்.

சமீபத்தில் தமிழ்நாட்டுக்கு சுற்றுலா போன கனடியர் ஒருவர் சுற்றுலா ஏற்பாடு செய்தவரைத் திட்டினார். தஞ்சை பெரிய கோயில், மாமல்லபுரம், மெரீனா, வேளாங்கண்ணி என்று பல இடங்களுக்குக் கூட்டிப் போனவர் கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலைக்குத் தன்னை அழைத்துப் போகாமல் ஏமாற்றிவிட்டதாக ஆதங்கப்பட்டார். அமெரிக்காவில் சுதந்திரச் சிலைபோல, கனடாவில் சி.என். கோபுரம் போல, பிரான்ஸில் ஈபில் கோபுரம் போல தமிழ்நாட்டின் அடையாளமாக வள்ளுவர் சிலை மாறிவிட்டது. வள்ளுவர் சிலை நிறுவவேண்டும் என்ற தீர்மானம் 1975இல் கருணாநிதி அரசால் நிறைவேற்றப்பட்டது. 25 வருடங்களுக்குப் பின்னர்தான் அது கைகூடியது. புத்தாயிரம் ஆண்டுத் தொடக்கத்தில் அய்யன் வள்ளுவர் சிலையை அன்றைய முதல்வரான கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார். திருக்குறளின் 133 அதிகாரத்தை நினைவூட்ட 133 அடி உயரத்தில் சிலை வடிக்கப்பட்டிருப்பது அதன்

பெருமை. கலைஞருடைய  இலக்கிய வாழ்க்கையில் இது முக்கியமான நிகழ்வு. பல நூற்றாண்டுகள் கழித்தும் தமிழின் பெருமையைச் சொல்வதோடு அந்தச் சிலை கருணாநிதியின் புகழையும் பறைசாற்றும். தமிழ் நாட்டின் அடையாளமாக நிலைத்து நிற்கும்.

கலைஞரிடம் எனக்குப் பிடித்த இன்னொரு அம்சம் அவரது சிலேடை, சாதுர்யமான பதிலடி மற்றும் நகைச்சுவை. இவற்றை ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து அவதானித்து வருகிறேன். ஒரு முறை கூட்டமொன்றில் அவருக்கு ஆளுயர மாலை அணிவித்தார்கள். கலைஞர் சொன்னார். 'ஆள் உயர மாலை; ஆளுயர மாலை.' ஈழப்போர் நடைபெற்ற சமயம் புலமைப்பித்தன் உணர்ச்சி வசப்பட்டு 'கலைஞரே, எனக்கொரு துப்பாக்கி கொடுங்கள்' என்று கேட்டார். கலைஞர் 'வேறு ஏதாவது பாக்கி இருந்தால் கேளுங்கள். துப்பாக்கி மட்டும் வேண்டாம்' என்று பதிலிறுத்தார். இன்னொரு சமயம் சட்டமன்றத்தில் ஒருவர் 'கூவம் ஆற்றில் முதலைகள் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன' என்றார். கலைஞர் 'ஏற்கனவே ஒரு கோடிக்கு மேலான முதலை அல்லவா ஆற்றிலே போட்டிருக்கிறோம்' என்று சபையின் ஆரவாரத்துக்கிடையே பதில் கூறினார் என்று சொல்வார்கள்.

கலைஞர் காலை ஐந்து மணிக்கே எழும்பி அன்றன்றைய பத்திரிகைகள் படித்துவிடுவார். ஒரு முறை அதிகாலை ஆனந்த விகடனைப் படித்துவிட்டு கலைஞர் விவேக்கைப் பாராட்டியிருந்ததை  விவேக் ஓர் இடத்தில் சொல்லியிருப்பார். அதுபோல ஹார்வர்ட் தமிழ்

இருக்கை பற்றி நான் ஒருமுறை விகடனில் எழுதியிருந்தேன். அடுத்தநாள் காலையில் சன் தொலைக்காட்சியில் செய்தி வந்தது. ஹார்வார்ட் தமிழ் இருக்கையை கலைஞர் ஆதரிப்பதாக. பின்னர் கட்சி சார்பாக பெரும் நிதி வழங்கப்பட்டதும் சரித்திரம்.

கலைஞரின் பெருமைகளை நிறையச் சொல்லிக்கொண்டே போகலாம். தமிழ் மொழிக்குச் செம்மொழி தகுதி கிடைக்கவேண்டுமென பலர் போராடினார்கள். இறுதியில் கலைஞரின் பெருமுயற்சியால் அது 2004ஆம் ஆண்டு சாத்தியமானது. அதைத் தொடர்ந்து முதன்முறையாக 9ஆவது தமிழ்ச் செம்மொழி மாநாட்டை அறிவித்து அதை கோவையில் 2010இல் சிறப்பாக நடத்தினார். அத்துடன் தமிழ் இணைய மாநாட்டையும் சேர்த்து நடத்த உதவினார். இதற்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை. எனினும் 49 நாடுகளில் இருந்து 536 தமிழறிஞர்கள் உற்சாகமாகக் கலந்துகொண்டார்கள். மாநாட்டின் இலச்சினை ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று இருந்தது உலக மக்களைக் கவர்ந்தது.

பல சாதனைகளைப் பட்டியலிடலாம். மெட்ராஸ் என்ற பெயரை நீக்கி சென்னை என மாற்றியது. 1942இல் துண்டறிக்கையாகத் தொடங்கி பின்னர் அதை முரசொலி பத்திரிகையாக மாற்றி 75 வருடம் நடத்தி பவளவிழா கொண்டாடியது. மனோன்மணியம் சுந்தரனார் பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக அங்கீகரித்தது. திருநங்கை எனப் பெயர்சூட்டி அவர்களுக்குச் சமுதாயத்தில் கௌரவம் வழங்கியது. சர்வதேசத்

தரத்தில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைத்தது. இன்றும் எங்கள் கிராமத்துக்குச் சென்றால் சந்திரசேகரன், ஞானசேகரன், குணசேகரன் என்ற பெயர்களைக் காணலாம். பராசக்தியில் ஆரம்பித்து வைத்த விசை 60 வருடமாகத் தொடர்கிறது. இப்படியான தகைமை சாதாரணமான ஒருவருக்குக் கிடைப்பதில்லை. இன்றைக்கும் 'தங்கத் தாம்பாளம்' என்று யாராவது சொன்னால் என் மனதில் முதலில் தெரிவது கலைஞரின் உருவமே. அவர் புகழ் மங்காது என்றென்றும் ஒளிவீசும்.

amuttu@gmail.com

# கலைஞரின் முத்திரை

*இந்திரா பார்த்தசாரதி*



பள்ளிப் பருவத்திலேயே, சமூகம் சார்ந்த தன்மான உணர்வு வெறியும், தாய்மொழி ஆர்வத்தில் விளைந்த அரசியல் போராட்ட குணமும் உருவாவது என்பது வெகு சிலருக்குத்தான் சாத்தியம். அத்தகைய சிலரில் கலைஞர் கருணாநிதியும் ஒருவர்.

போன நூற்றாண்டின் முப்பதுகளில் மத்திய காலனி ஆட்சியின்கீழ் மாநில சுயாட்சிப் பிரதமர் ராஜாஜி இந்தியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக ஆக்கியபோது, பெரியார் துவக்கிய இந்தி

எதிர்ப்புப் போராட்டத்தில் பள்ளிமாணவராக இருந்த கருணாநிதி அந்த உரிமைப் போரில் தம்மை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டார்.

அந்தக் காலகட்டத்தில், பள்ளிகளில் தாய்மொழியாகிய தமிழ்கூடக் கட்டாயப் பாடமாக இருக்கவில்லை. ஏழாம் வகுப்பில் தமிழ் அல்லது சமஸ்கிருதம் என்று இருந்தது. அப்படியிருந்த நிலையில், இந்தியைக் கட்டாயப் பாடமாக அரசு கொண்டு வந்தது தமிழர்களின் உரிமை சார்ந்த பிரச்சினையாக ஆகியது.

இந்த அரசியல் சார்ந்த மொழிப் போராட்டப் பிரச் சினை ஒரு பள்ளி மாணவரை உசுப்பி விட்டது என்பதுதான் அவரை வருங்காலத்துக்கு அடையாளம் காட்டியது.

கவித்துவ உள்ளமும், மொழி ஆர்வமும், மனித உரிமை பற்றிய தெளிந்த ஞானமும் உடைய எந்த இளைஞனும் தன் கோட்பாடுகளைப் பகிரங்கமாக அறிவிக்கத் தயங்க மாட்டான். கவிஞர் ஷெல்லி தன் பதினெட்டாம் வயதில், ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த போது, ‘நாத்திகத்தின் அவசியம்’ என்ற ஓர் அறிக்கையைப் பிரசுரிக்கத் தயங்கவில்லை. விளைவு: அவர் பல்கலைக்கழகத்தினின்றும் விலக்கப்பட்டார். அவருடைய பரந்த இலக்கிய அறிவு அவர் சுயமாகச் சம்பாதித்துக் கொண்டது. அதுபோல்தான் கலைஞரின் ஆழ்ந்த தமிழ்மொழிப் புலமையும். இறுதி வரை தமிழும் அரசியலும் அவரது இரு கண்களாக இருந்திருக்கின்றன.

இன்று பரவலாகப் பேசப்படும் தமிழுக்கும், எழுதப்படும் தமிழ்நடைக்கும் முக்கியக்

காரணமாக இருந்தவை திராவிட இயக்கங்கள் என்றால், இவற்றுக்கு ஆணிவேர் போன்றவர்கள் அறிஞர் அண்ணாவும், கலைஞரும்தான்.

போன நூற்றாண்டின் நாற்பதுகளில் வெளிவந்திருக்கும் பிரபல தமிழ்ப் பத்திரிகைகளின் சிறப்பு மலர்களைப் பார்த்தால் தெரியும். 'உபயகுசேலபரி' ('வணக்கம்') என்றுதான் தொடங்கும். பொதுக் கூட்டங்களில், தலைவரை விளித்து, 'அக்ராசனாதிபதி அவர்களே' என்றுதான் சொல்வார்கள். போன நூற்றாண்டின் அறுபதுகள் வரை புழங்கிய பல சொற்கள் இன்று வழக்கிழந்து போய்விட்டன.

லத்தீனிலிருந்த 'பைபிள்' இங்கிலாந்தில் முதலாம் ஜேம்ஸ் மன்னர் காலத்தில் ஆங்கிலத்தில் முதன்முதலாக வழங்கியபோது, ஆங்கில நடையே மாறத் தொடங்கியது என்பார்கள். அது போல் தமிழில் இந்த மாற்றத்துக்கு முக்கியக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான கலைஞருக்குத் தமிழ் உலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

புராணக் கதைகளைக் கிண்டல் செய்து எழுதுவது என்பதைத் தமிழில் தொடங்கி வைத்தவர் புதுமைப்பித்தன். ' கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' என்ற கதையில் வரும் கடவுள் (சிவபிரான்) பிள்ளை அவர்களின் மகனைப் பார்ப்பதைக் கண்டு மருளும், கந்தசாமிப் பிள்ளையை நோக்கி அவர் புன்சிரிப்புடன், 'பயப்படாதீர்கள், நான் இப்பொழுது முழு சைவம்' என்பார். இது சிறுத்தொண்டர் புராணக் கதையை நினைவூட்டுகிறது, கிண்டல் செய்கிறது. கலைஞர் தம் திரைப்பட வசனங்களில் இத்தகைய

கிண்டல்களை மூட நம்பிக்கைகளை எதிர்ப்பதற்கான முழு ஆயுதங்களாகப் பயன்படுத்தியது, அக்காலகட்டத்தில் ஒரு  சமூகச் சலனத்தை ஏற்படுத்தியது.

'பராசக்தி'யில் ஒரு வசனம். பசியினால் துடிக்கும் தன் குழந்தைக்கு வறுமையினால் வறண்டு போன நிலையில், பால் கொடுக்க முடியாமல் தவிக்கும் தாய் அக்குழந்தையை ஆற்றில் விட்டெறிகிறாள். அதற்காக அவள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படும்போது அவள் நீதிபதியைப் பார்த்து கேட்கிறாள்: 'என் குழந்தை என்ன திருஞானசம்பந்தரா, பார்வதியம்மை வந்து பால் கொடுக்க?'

இந்த மாதிரியான வசனங்கள் தமிழ்த் திரைப்பட உலகில் ஒரு புது திருப்பமாக அமைந்தது. இதற்காக, 'பராசக்தியை'த் தடை செய்யவேண்டும் என்று ஒரு பிரபல பத்திரிகை தலையங்கம் எழுதியது!

அயரா உழைப்பு, புதியது எதுவாக இருந்தாலும் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அறிவுப் பசி- ஆட்சியிலும், கல்விக் கழகங்களிலும், மக்கள் வழங்கு மொழியிலும் தமிழை அரியாசனம் ஏற்றியது, இவைதான் கலைஞரின் அடையாள முத்திரைகளாகும்.

**parthasarathyindira@gmail.com**

# வழிநடத்திய தலைவர்

*தங்கம் தென்னரசு*



தலைவரைப் பற்றி அவர் இல்லாத ஒரு நாளில் பேசுவது என்பதே மனதை அதிரச் செய்கிறது. எத்தனை எத்தனை தடங்களையும் நினைவுகளையும் நம் ஒவ்வொருவருக்கும் விட்டுச்சென்றிருக்கும் மகத்தான தலைவர் அவர். அவர் இல்லையென்கிற உண்மையை சிந்தை ஏற்க மறுக்கிறது. சொல்லாகவும் செயலாகவும் அவர் வாழ்வு முழுக்க நிறைந்திருக்கிறார். அவருடைய இழப்பு என்பது காலத்தால் நாம் கடக்க முடியாத இடம். மறதியால் நீந்த முடியாத துயரத்தின் நதி அது.

நான் அவரின் தொண்டனாக இருந்தேன் என்பதும் அவருக்குக்கீழ் பணியாற்றும் மகத்தான தருணத்தைப் பெற்றேன் என்பதும் இப்பிறவியில் எனக்குக் கிடைத்த பெரும்பேறு என்றுதான் சொல்ல வேண்டும். அவர் என்னை மட்டுமல்ல, எங்கள் குடும்பத்தையே வழிநடத்தியவர். திராவிட இயக்கக் கொள்கையின் செயலில் எங்கள் தந்தையின் கரத்தைப் பிடித்து நடந்தது தலைவர் போட்டுத் தந்த தடத்தில்தான்.

என்னுடைய சிறுவயதில் அம்மா மதுரை தமுக்கம் மைதானத்தில் நடந்த தி.மு.க. மகளிர் அணி மாநாட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். என் அப்பா தங்கபாண்டியன் அப்போது சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார். தலைவர் அவர்களை முதன்முதலாகக் அருகில் பார்க்கக் கிடைத்த தருணம் அது. என்னுடைய 10ஆம் வயதில் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது மல்லாங்கிணறிலிருந்து ஏராளமான கழகத் தொண்டர்களுடன் விருதுநகர் அம்மன்கோவில் திடலில் நடந்த கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். கூட்டத்தில் என்னைப் பார்த்த மறைந்த சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு பெரியப்பா அவர்கள் என்னை மேடைக்குத் தூக்கிச் சென்றார். தலைவர் அவர்கள் அருகிலிருந்த மறைந்த முன்னாள் அமைச்சர் செ.மாதவன் அவர்களின் மடியில் அமர வைத்தார். தலைவர் அவர்களிடம் ‘இவன் தங்கபாண்டியன் பையன். இவன் என்ன சொல்றான்னு கொஞ்சம் கேளுங்க’ என்றார் தென்னரசு பெரியப்பா. ‘இந்தக் கட்சியில எல்லோரும் ஜெயிலுக்குப் போயிருக்காங்க. எங்க அப்பா ஏன் இன்னும் ஜெயிலுக்குப் போகல. எப்போ

போவார்’னு நான் தலைவர் கலைஞர் அவர்களிடம் கேட்டேன். இதைக் கேட்டதும் தலைவர் கலைஞர் அவர்கள் சிரித்துக்கொண்டே என்னைத் தட்டிக்கொடுத்தார். இதுதான் தலைவருடனான எனது முதல் சந்திப்பு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரிடம் இருந்து வெளியேறி தி.மு.க.வைத் துவக்கும்போது தன்னுடன் இணைந்தவர்களைக் கண்ணீர்த் துளிகள் என்று திராவிட நாடு இதழில் பட்டியலிட்டார். மாணவராக இருந்த என் அப்பாவின் பெயரும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றது. அன்றிலிருந்து மாணவப் பருவத்தில் ஆரம்பித்து ஆசிரியப் பணியிலிருக்கும்போதும் கட்சிப் பணியில் பேரறிஞர் அண்ணா அவர்களுடனும் தலைவர் அவர்களுடனும் அப்பா இறுதிவரை இணைந்து செயல்பட்டார். 1968ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவைக்கு அண்ணா அவர்கள் மருத்துவமனையில் இருந்தபோது அப்பாவைத் தேர்ந்தெடுத்தார். அச்சமயத்தில் தலைவர் அவர்கள் ‘என்னய்யா, யானை உனக்குத் தானாக மாலை போட்டுவிட்டதே’ என்று அன்போடு கேட்டார். அப்பா தலைவர்மீது பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். மிசா கைதியாக மதுரை சிறையில் இருந்தபோது தலைவருக்கு எதிராக எழுதிக்கொடுத்தால் விடுவிப்போம் என்று ஆட்சியாளர்கள் சொன்னபோது மறைந்த வீரபாண்டியார் அவர்கள், தென்னரசு பெரியப்பா ஆகியோருடன் இணைந்து ‘தலைவருக்கு ஒருகாலமும் துரோகம் இழைக்கமாட்டோம்’ என்று முடிவு எடுத்து அதில் இறுதிவரை உறுதியாக இருந்தார். மிசா கைதியாக

ஒரு வருடம் அப்பா சிறையில் இருந்தார். 23 வருடங்கள் அப்பா தலைவர் வழிகாட்டுதலில் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தார். அப்பா தலைவரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். தலைவரை எப்போது சந்தித்தாலும் உடனே கிளம்பி விடுவார். அதற்கு ஒருமுறை தலைவர் கேலியாக, ‘என்னய்யா, உன் பெயர் தங்கபாண்டியனா அல்லது தங்கா பாண்டியனா?’ என்று கேட்டிருக்கிறார். அதேபோல அப்பா தளபதி அவர்களிடமும் மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார். தளபதி அவர்கள் இளைஞரணியில் பொறுப்பேற்க வேண்டும் என்று திருச்சி செயற்குழுவில் முதன்முதலாக வலியுறுத்தியதை எப்போதும் பெருமையுடன் நினைவுகூர்வார். அப்பா தளபதியுடன் எப்போதும் உரையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து தலைவர் அவர்கள் ‘தங்கபாண்டியன், நீ கலைஞரணியா அல்லது இளைஞரணியா?’ என்று கேட்டார். அப்பா ஒருபோதும் தலைவர் அவர்கள் முன் அமர்ந்து பேச மாட்டார். தொலைபேசியில் தலைவர் அழைத்துப் பேசும்போதுகூட நின்றுகொண்டேதான் பேசுவார். ஆனால் வாழ்நாளெல்லாம் தலைவர் முன் அமர்ந்து பேசாதவர், ஒரே ஒரு முறை தலைவர் வந்தபோதுதான் படுத்து இருந்தார். அது, அப்பாவின் மரணத்திற்குத் தலைவர் அவர்கள் வந்தபோது. அதை இப்போது நினைத்தாலும் மனம் கலங்கிவிடும்.

அப்பா காலமானதும் தலைவர் அவர்கள் என்னை இடைத்தேர்தலில் போட்டியிடச் சொன்னார். அப்பா என்னைத் தீவிர அரசியலில் ஈடுபட அனுமதித்தது

இல்லை. கல்லூரியில் படிக்கும்போது கட்சிக் கூட்டங்களில் பங்கெடுத்திருக்கிறேன். தேர்தல் பணியாற்றியிருக்கிறேன். முதன்முறையாக இடைத்தேர்தலில் நான் போட்டியிடும்போது தலைவர் அவர்கள் அப்பாவின் பெயரை என் பெயருடன் சேர்த்து தங்கம் தென்னரசு என்று பெயர் சூட்டினார். தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்த தலைவர் அவர்களை துலுக்கப்பட்டி விருந்தினர் மாளிகையில் சந்தித்தேன். அப்போது என் கன்னத்தைக் கிள்ளி முத்தம் கொடுத்து, ‘வெற்றியோடு எம்.எல்.ஏ.வாக என்னை வந்து பார்’ என்றார். என் வாழ்வில் தலைவர் அவர்களுடனான மிக நெகிழ்ச்சியான தருணம் அது.

தலைவர் அவர்களின்கீழ் அமைச்சராகப் பணியாற்றியபோது நான் மேற்கொண்ட மிக முக்கியமான பணிகள், சமச்சீர் கல்வி மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைத்தல். இரண்டு பணிகளுமே தலைவரின் இதயத்துக்கு மிக நெருக்கமானவை. வெறும் ஏட்டுக்கல்வி மட்டுமே போதாது என்று நினைத்தவர். நூலகமும் அமைக்க வேண்டும் என்று எண்ணினார். முதலாவதாக, கல்வியில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது. அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார். சமச்சீர் கல்வித் திட்டத்தின்போது மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு உரையாடல்களில் பங்கெடுத்து நிறைய அறிவுரைகளை வழங்கினார். சமச்சீர் கல்வித் திட்டத்தை ரத்து செய்து சட்டம் இயற்றியபோது அதன் அறிமுக நிலையிலேயே தளபதி அவர்கள் சட்டசபையில்

எதிர்த்தார். இதுகுறித்து சட்டமன்றத்தில் நான் உரையாற்றினேன். தலைவர் அவர்கள் என்னிடம் ‘இதை நாம் விட்டுவிடக்கூடாது. கல்வி அமைப்பின் அடிப்படையைத் தகர்க்கக்கூடிய முயற்சியாக இது அமைந்துவிடும். இதற்கு எதிராக கண்டிப்பாக வழக்குத் தொடுக்க வேண்டும்’ என்றார். அதன்படி வழக்குத் தொடர்ந்து வெற்றியும் பெற்றோம்.

இரண்டாவதாக, அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைக்கும் பணி. அதில் தலைவர் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. அண்ணா சிலையை நேர்த்தியாக நூலகத்தில் அமைப்பதில் அவ்வளவு அக்கறை காட்டினார். பல்வேறு மாதிரிகளை அவருக்குக் கொண்டு காட்டினேன். அப்போது அண்ணா அவர்கள் எப்படி அமர்ந்து புத்தகம் படிப்பார், எப்படிக் கை வைத்து இருப்பார் என்று அவரே செய்து காட்டினார். அதுபோல அண்ணாவின் சிலையை நேர்த்தியாக அமைத்தோம். அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைக்கும்போது ‘நாம ஆட்சியில இருக்கும்போதே அண்ணா நூற்றாண்டு செப்டம்பர் 15க்குள் நூலகத்தை திறந்திட வேண்டும்’ என்று அதிக ஆர்வம் காட்டினார். நூலகம் அமைக்கும் பணியை மேற்பார்வையிட வந்தபோது துரைமுருகன் அவர்களிடம் தலைவர் அவர்கள் ‘நம் அண்ணாவுக்கு நம்ம காலத்திலேயே என்றும் காலத்தால் அழியாத ஒரு நூலகத்தை உருவாக்கி விட்டோம்’ என்று உணர்ச்சிபூர்வமாகக் கூறினார். அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் பிரம்மாண்டம் சாதாரண மக்கள் வருவதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்று நினைத்தார்.

எல்லோரும் பயன்படுத்தும் விதத்தில் பிரத்யேகமான திட்டத்தை உருவாக்கினார்.

தலைவர் அவர்களுடன் இணைந்து பணியாற்றியதில் செம்மொழி மாநாட்டில் அமைத்த கண்காட்சி, புதிய தலைமைச் செயலகத்தில் சட்டப் பேரவை அமைத்தல், தஞ்சை கோவில் ஆயிரமாவது ஆண்டு விழா கொண்டாட்டம் என எல்லாவற்றையுமே மிக முக்கியமானதாகக் கருதுகிறேன். அவற்றையெல்லாம் தனிப் புத்தகமாக எழுதும் அளவுக்குக் கற்பித்தார். தலைவர் அவர்களிடம் கூர்த்த மதி, வேகம், எதிர்பார்ப்பு, கோபம், தாயுள்ளம் எல்லாமே இருக்கும். அவரைப் புரிந்துகொள்வதற்கும் அவருடைய எண்ணங்களுக்கேற்றபடி செயல்படுவதற்கும் எனக்குப் பயிற்சி கிடைத்ததே மிகப்பெரிய கொடை.

கல்வி வளர்ச்சிக்கு தலைவர் கலைஞர் அவர்களின் பங்களிப்பாகப் பல்கலைக்கழகங்கள், கலைக்கல்லூரிகள், பள்ளிக்கூடங்களின் தரம் உயர்த்தியது ஆகியவற்றைச் சொல்லலாம். பள்ளிக்கூடங்கள் தரம் உயர்த்தக்கூடிய கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியது, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்குக் கல்வியில் இடஒதுக்கீடு, நுழைவுத் தேர்வு முறையை ரத்து செய்தது, நீட் எதிர்ப்பு என அவரது பங்களிப்பு அளப்பரியது.

தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு தீர்க்கதரிசி. ஒற்றைக் கலாச்சார முறையை மாநில சுயாட்சி மூலமாகத்தான் களைய முடியும் என்று நம்பினார்.

இந்தியா போன்ற நாட்டிற்குப் பன்முகக் கலாச்சாரமே வலிமை என்று நினைத்தார். மாநிலங்களின் சுயாட்சியே இந்தியாவை வல்லரசாக்கும். இந்தி பேசும் வடமாநிலங்களால் மாநில சுயாட்சியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் அதைப் பிரிவினை என்று புரிந்துகொண்டார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களும்கூட தலைவர் கலைஞர் அவர்களின் மாநில சுயாட்சிக் கொள்கையின் தேவையை முழுமையாக உணர்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 70களிலேயே மாநில சுயாட்சியை முன்னெடுத்துச் சென்ற முன்னோடி.

தலைவர் கலைஞர் அவர்களின் இலக்கியப் பரிமாணத்தில் எனக்குப் பிடித்தது அவரது சங்கத்தமிழ் மற்றும் குறளோவியம். தலைவர் அவர்கள் சங்கத்தமிழை சாமானியனிடம் கொண்டு சேர்த்த விதம் மிகச் சிறப்பானது. நெஞ்சுக்கு நீதியை நான் பலமுறை வாசித்திருக்கிறேன். கலைஞரை எதிர்ப்பவர்கள்கூட அவரது திருக்குறள் உரையைக் குறிப்பிட மறக்கமாட்டார்கள். அவரது திருக்குறள் உரை எல்லோரிடமும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய நூல்.

தலைவர் கலைஞர் அவர்களுடன் மறக்க முடியாத அனுபவங்கள் பல இருக்கின்றன. ஆனாலும் அவருடனான முன்னிரவுப் பொழுது உரையாடல் மிக அருமையான நினைவுகள். அப்பொழுதுகளில் அவரிடம் இருந்து கற்றுக்கொண்டவை ஏராளம். ஒரு ஞாயிற்றுக் கிழமை அரசு அலுவலர்கள் யாரும் உடன் இல்லை. புதிய சட்டமன்றப் பணியில் இருந்தேன். பின்னிரவு 11.45 மணியளவில் தலைவர்

கலைஞர் அவர்கள் என்னைப் பார்க்க வந்தார். ‘நீ தனியா இருக்கேன்னு சொன்னாங்க. அதான் வந்தேன்’ என்றார். மறக்க முடியாத அனுபவம் அது.

மருத்துவமனையில் தலைவர் அவர்கள் இனி இல்லை என்ற செய்தியைக் கேட்ட நிமிடம் வாய்விட்டுக் கதறி அழுதுவிட்டேன். பெரிய வெறுமை சூழ்ந்தது. தலைவர் அவர்களுக்கு எவ்வளவோ சால்வைகள், மாலைகள் அணிவித்திருக்கிறேன். ஆனால் கடைசியில் அவருக்கு ஒரு பிடி மண் அள்ளிப் போட்டது நெஞ்சை விட்டு என்றும் அகலாது. தலைவர் இல்லையென்றாலும் அடுத்து தளபதி என்ற ஒரு வலுவான தலைமையை அடையாளம் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார். நம்மை ஒரு பாதுகாப்பான கரங்களில் ஒப்படைத்துவிட்டுப் போயிருக்கிறார் என்ற பாதுகாப்பு உணர்வு சற்று ஆசுவாசம் தருகிறது. தளபதி அவர்கள் தலைவரைப் போலவே அனைவரையும் அரவணைத்து வழிநடத்திச் செல்பவர். தலைவரால் முழுமையாகப் பயிற்றுவிக்கப்பட்டவர். தளபதி அவர்களுக்குத் தந்தை, தலைவர் என்ற இரண்டு இழப்புகள். அந்த சமயத்திலும் கலங்கிவிடாமல் தலைமைக்குரிய பொறுப்புணர்வோடு சூழலை மிகவும் நிதானமாகவும் விவேகமாவும் கையாண்டார் தளபதி அவர்கள். தலைவருக்கு மெரீனாவில் இடம் மறுக்கப்பட்ட உடன் வழக்கறிஞர் வில்சன் அவர்களை வரவழைத்து சட்டப்போராட்டத்தைத் தொடங்கி தலைவருக்கான இடத்தைப் பெற்றார். இதுவே தளபதி அவர்களின் தலைமைப் பண்புக்கும் கடமையுணர்ச்சிக்கும் ஒரு பெரிய எடுத்துக்காட்டு.

போராட்டத்தினூடாக வாழ்ந்த தலைவரின் இறுதிப் பயணமும் போராட்டத்தினூடாகவே நிறைவுற்றது. அந்தப் போர்க் குணம் தமிழர் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

# ஞாபகங்களின் குரல்...

*கலாப்ரியா*

“If you don’t want a sarcastic answer;  don’t ask stupid question.”

கலைஞரிடம் வெளிநாடு போகிற சமயத்தில் கண்ணதாசன், கேட்டாராம், “வெளிநாடு போகிறேன்,  உங்களுக்கு என்ன வாங்கி வரட்டும்” என்று.

நல்ல பேர் வாங்கி வா, போதும்’ பட்டென்று வந்ததாம் பதில்.

ஒருவர் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டு, அதே நேரத்தில் ஞாபகங்களின் குரலையும் உற்றுக் கேட்டால் மட்டுமே, இப்படிச் சட்டென்று சாட்டை விளாசலாய் ஒரு பதில் வர முடியும். கல்லூரியில் படிக்கும் காலத்தில் ‘Art of repartee’ என்று ஒரு கட்டுரை ஆங்கிலப் பாடத்திலிருந்தது. அதை நடத்திய ஆசிரியர் முதலில் தட்டையாக விளக்கிக் கொண்டிருந்தார். நாங்களும் வழக்கம் போல சுவாரசியமில்லால் கேட்டுக் கொண்டிருந்தோம்... பாடம் முழுக்க ஒருவர் முட்டாள்தனமாகப் பேசுவதும், எதிராளி கெட்டிக்காரத்தனமாக மூக்கை உடைப்பதுமாக நிறைய நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். பாடத்தில் வந்த பகுதியில் ஒரு அரசியல்வாதி கேட்பார், “இந்தத் தொகுதியில் என்ன செய்தால், நிறைய ஓட்டு வித்தியாசத்தில் நம் கட்சி ஜெயிக்கும்” என்று. கூட்டத்திலிருந்து பதில் வரும், “அப்படி என்றால் வேட்பாளரை மாற்ற வேண்டும்” என்று. இதைச் சொல்லி விட்டு, பெரிய சிரிப்பலையை எதிர்பார்த்தார் போல. ஆனால் வகுப்பு அமைதியாய் இருந்தது. என்ன ஒருத்தருக்குமா புரியவில்லை. இதுபோல நிறைய ஜோக்குகளை உங்கள் கருணாநிதி சட்டமன்றத்திலும் வெளியிலும் சொல்லுகிறாரே. அவர் இதில் சிறந்து விளங்குகிறாரே என்றவர்,

உதாரணமாக கலைஞரின் கவிதை வரி ஒன்றைச் சொன்னார்.

நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றின் போது

பாசமிகு நண்பர் கண்ணதாசன் எனைப் பார்த்துப்

பாண்டிச்சேரியில் நான் நிற்கட்டுமா என்றார்

உம்மால் அங்கே நிற்க முடியாதென்றேன்.

என்று பெரிய சத்தத்திற்கிடையே சொன்னார். அவர் அப்படி யெல்லாம் தி.மு.கவைப் பாராட்டி விடுகிற ஆளில்லை. ஆனால் அதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான், கல்லூரிக்கு அண்ணா வந்திருந்தார். பிரமாதமான ஆங்கில உரை ஒன்றை நிகழ்த்திப் போயிருந்தார். அதிலிருந்து ஆங்கில ஆசிரியர் பார்வை மாறியிருந்தது. அதனால் இருக்குமோ என நான் நினைத்துக் கொண்டிருக்கையில், அவர் பெர்னாட்ஷாவிற்குத் தாவி, ஒரு கதை சொன்னார். பெர்னார்ட்ஷா குறுகலான பாதையில் நடை பழகுகிறார். எதிரே முட்டிக் கொள்பவர் போல ஒருவர் வருகிறார். யாராவது ஒருவர் வழிவிட்டு விலகினால்தான் மற்றவர் செல்ல முடியும். எதிரே வந்தவர், “நான் முட்டாள்களுக்கு வழி விடுவதில்லை” என்றதும், பெர்னார்ட்ஷா, “நான் வழி விடுவதுண்டு” என்று சொல்லி விட்டு ஒதுங்குகிறார். இது அநேகம் பேருக்குத் தெரிந்த பிரபலமான ஜோக் தான். இதற்கு வகுப்பு அவ்வளவு சிரிக்கவில்லை.

ஆனால் இந்தத் திறமை எல்லோருக்கும் வந்து விடுவதில்லை. இதை ஒரு கலையாகவே சீனாவில் காலங்காலமாகக் கொண்டாடுகிறார்கள். குறிப்பாக, 1368-1644இல் பிரபலமாக இருந்தது. Xiangsheng என்று பெயர். அங்கே வீதி நாடகங்களில் கூட இதன் ஆதிக்கம் அதிகம் என்பார்கள். அதனை ஒரு நிகழ்த்துக் கலையாகவே பயில்வார்கள். பயிற்றுவிப்பார்கள். ஆனால் இது கலைஞருக்கு கை வந்த கலை. அவர் எங்கேயும் இதைப் பயின்றதில்லை. அவரிடமிருந்துதான் பலரும் பயின்றிருப்பார்கள். இதற்கு அபூர்வமான

ஞாபகசக்தியும், எதிராளியின் வரலாறும் தெரிந்திருப்பது மிகவும் அவசியம். அவரது கவியரங்கில் இது போல ஆயிரக்கணக்கில் சொல்லுவார்.

“திருப்பதியில் காங்கிரசு மாநாடு

ஆவடியில் மொட்டாக வெடித்த சோஷலிசம்

ஆண்டவன் சந்நிதியில் மொட்டையாக நின்றது”

இது 1992இல் திருப்பதியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டின் போது முரசொலியில் வந்த கவிதை. 1955 ஜனவரியில் ஆவடியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டின் போதுதான் நேரு, பிரபலமான தனது சோஷலிஸக் கொள்கை பற்றிப் பிரகடனங்கள் செய்தார். ஆனால் 1992இல் தாராளமயவாதம் பற்றி திருப்பதி காங்கிரஸ் மாநாட்டில் பேசுகிறார்கள். இதைத்தான் கலைஞர் ஆவடியில் மொட்டாக வெடித்தது, திருப்பதியில் மொட்டையாக நிற்கிறது காங்கிரஸ் சோஷலிஸம் என்கிறார். 1950களில் நாங்களெல்லாம் மேடைதோறும் கேட்ட அண்ணாவின் வாசகம் நினைவுக்கு வருகிறது, “காகிதப்பூ மணக்காது காங்கிரஸ் சோசலிசம் நிலைக்காது / இனிக்காது”. என்று அடிக்கடி முழங்குவார்.. இதை வைத்துத்தான் கலைஞர் காகிதப் பூ எனத் தன் நாடகத்துக்குப் பெயர் வைத்தார்.

கலைஞருடைய இந்த சமத்காரமான (Witicism) பேச்சுக்காகவே அவரது கூட்டங்களுக்குச் செல்லுவோம். ஒரு முறை ஏ.எல்.எஸ். என்கிற பழைய, திருநெல்வேலி எம்.எல்.ஏ, (அவருடைய வெற்றிக்காகத்தான் 1967இல் நாங்கள் அப்படிப் பணி செய்தோம்.) இடையில் கட்சியை விட்டுப்

போய் விட்டு மறுபடி தி.மு.கவில் 1976இல் சேர்ந்தார்.. அந்தக் கூட்டத்தில் கலைஞர் பேசுகையில், “ஏலேலசிங்கனின் பொருள் ஏழுகடல் போனாலும் திரும்பும் என்று சொல்லுவார்கள், நம்முடைய ஏஎல்லெஸ்ஸும் எங்கெங்கோ போய் நம்மிடமே திரும்பி விட்டார்” என்றார். கேட்க வேண்டுமா கூட்டத்தில் கலகலப்பிற்கு.

1972-73 வாக்கில் திருநெல்வேலியில் கட்டப்பட்டிருந்த ஈரடுக்கு மேம்பாலத்தைத் திறந்து வைக்க வந்திருந்தார். அப்போது விருந்தினர் விடுதியில் (சங்கர் சிமெண்ட் ஆலை விடுதி என்று நினைவு) தங்கியிருந்த கலைஞரைச் சந்திக்கப்போன ஒரு அதிகாரியுடன் நானும் சென்றிருந்தேன். அறையில் நல்ல கூட்டம். ஒருவர் மேம்பாலத்தின் கட்டுமானப் பெருமைகளை விளக்கிக் கொண்டிருந்தார். இதுபோல மேலே பெரியதாகவும், கீழே சற்றே சிறியதாகவும் உள்ள ஈரடுக்கு மேம்பாலம் இந்தியாவிலேயே இதுதான் முதல் என்று சொன்னதும், கலைஞர் உடனே, “மேலே நான்கு சீர்களும், கீழே மூன்று சீர்களும் கொண்ட இரண்டு அடிக் குறள் போல” என்றார். கூட்டத்தில் ஓரமாக நின்ற நானும், அவரருகே நின்ற இன்னொருவரும் பலமாகச் சிரித்தோம். மற்றவர்கள் மரியாதை கருதியோ என்னவோ அடக்கி வாசித்தார்கள். எங்களுக்கே பயமாகப் போய் விட்டது. ஆனால் கலைஞர், அவர் பக்கத்தில் நின்று சிரித்தவரிடம், ‘உங்க பெயர் என்ன?’ என்றார். அவர் பயத்துடனும் தயக்கத்துடனும் ‘நல்லதம்பி’என்றார். ‘கலைவாணரின் நல்லதம்பியா அதுதான் நல்லாச் சிரிக்கீங்க’ என்றார் கலைஞர். அவருக்கும் எனக்கும் ஒரு

நிம்மதிப் பெருமூச்சு. மற்றவர்களும் அப்போது சிரித்தார்கள். அன்று மாலை நடந்த மேம்பாலத் திறப்பு விழாக் கூட்டத்தில், வள்ளுவரின் இரண்டு அடிக் குறள் போல அமைந்து பேர் வாங்கித் தரப் போவதால் அதற்கு “திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலம்” எனப் பெயர் சூட்டுவதாகச் சொன்னதும், மக்களிடமிருந்து வந்த கரவொலி வரவேற்பைப் பார்க்க வேண்டுமே! 1968இல் தென்காசி இடைத்தேர்தலின் போது நாங்கள் பணியாற்றிக் கொண்டிருந்த தெருவோரத்து மன்றம் ஒன்றின் நடைபாதை ஓரத்துக்கு இரவு பதினோரு மணிக்கு ஜீப்பில் வந்து இறங்கி அங்கிருந்த நகரச் செயலாளர் மூலமாக எல்லோருக்கும் டீ வாங்கி வரச் சொல்லிப் பேசிக் கொண்டிருந்தார். அதுதான் அவரை நான் மிக அருகாகப் பார்த்த முதல் நிகழ்வு.

அதன் பிறகு நிறைய வாய்ப்புகள் கிடைத்தன. அப்போதெல்லாம் நான் எழுத்துக்காரனாகி இருந்தேன். இளைய பாரதி பதிப்பித்த “கலைஞர் முதல் கலாப்ரியா”வரை நேர்காணல் தொகுப்பின் மூலமாக அவர் என்னை நன்கு அறிந்து கொண்டிருந்தார். இளையபாரதியின் பதினோரு நூல்கள் வெளியீட்டு விழா, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற போது, நான் மேடையில் இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தேன். அதனால் புகைப்படங்கள் எதிலும் நான் வந்திருக்க வாய்ப்பில்லை என்று உணர்ந்ததால், கவிஞர் கனிமொழியிடம் சொன்னேன், தலைவருடன் ஒரு படம் எடுத்துக் கொள்ள முடியுமா என்று. அவருடன் ஒரே மேடையில் அமர்ந்திருக்க வாய்த்த கணத்தைக்

காலம் பூராவும் காப்பாற்றி வைப்பது கட்டாயம் என்று தோன்றியது. கனிமொழி  தலைவர் இடம் சொன்னதும், மேடையில் மூன்று மணி நேரத்திற்கும் அதிகமாக உட்கார்ந்தே இருந்த களைப்பையும் மீறி அவர் எழுந்து கிளம்பி விட்ட நிலையிலும் தாராளமாகச் சம்மதித்தார். அவரருகே வரவழைத்து என் கைகளைப் பற்றியபடியே நின்று கொண்டார். எனக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி என்ன பேசுவது என்று தெரியவில்லை. அமைதியாக உம்மென்று இருந்தோம். கலைஞர் திடீரென்று, கலாப்ரியா காமிராப் பிரியாவாகி விட்டார் என்றதும், எல்லோரும் வாய் விட்டுச் சிரிக்க, புகைப்படக்காரர் வடகரா பாஸ்கரதஸ் பட்படவென்று, கிளிக்கித் தள்ளி விட்டார். அவர் விரும்பியிருந்தால் கலாப்ரியா கலைஞர் பிரியாவாகி விட்டார் என்று சொல்லி இருக்கலாம். ஆனால், என் ஞாபகங்களில் என்றும் நிலைத்திருக்கும்படி, அவரது கரகரத்த குரலில் கலாப்ரியா காமிராப்பிரியாவாகி விட்டார் என்றதுதான் அவரது சமயோசிதத்திற்கு எடுத்துக்காட்டு.

அவரைச் சந்திக்கிற நேரங்களில் எல்லாம், என்னிடம் சொல்லும் முதல் வார்த்தை, “அமருங்கள்” என்பதுதான். நான் அண்ணன், ஐயா, சார் என்று தடுமாற்றத்துடன் பேசினாலும், அவர் அமருங்கள், உங்களுக்கு ஊரே தென்காசிதானா என்றெல்லாம் ஒரே குரலில் அதே மரியாதையுடன்தான் பேசுவார். கலைமாமணி விருது பெறும்போதும் நல்லாயிருக்கீங்களா ஐயா என்று நான் கேட்டபோது மென்மையாக

எழுதிக்கிட்டு இருக்கீங்களா என்று பதிலுக்குக் கேட்ட அன்பான குரல் என்றென்றும் என் ஞாபகத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

**kalapria@gmail.com**

# அறியப்படாத கலைஞர் கருணாநிதி

*சா. கந்தசாமி*



தமிழில் எழுபதாண்டு காலத்திற்கு மேலாக அரசியல் விமர்சனக் கட்டுரைகள், கேள்வி-பதில், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், திரைப்பட கதை, வசனம் என்று பல துறைகளில் சலிப்படையாமல் எழுதி வந்தவர் கலைஞர் மு.கருணாநிதி. இத்தனை துறைகளில் அவர் எழுதினாலும் அடிப்படையில் அரசியல்வாதி. திராவிடர் கழகத்தில் ஒரு தொண்டனாகச் சேர்ந்து 1949ஆம் ஆண்டில் அண்ணா தோற்றுவித்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு தலைவராகி

சமூக நீதிக்காகப் பாடுபட்டவர். அவரின் பன்முக ஆளுமை வியப்பளிக்கக்கூடியது.

அறிவே ஆங்கில மொழியில்தான் இருக்கிறது என்று பலரும் இருக்கும் காலத்தில், அவர் தமிழ் மட்டுமே படித்தவர். அதுவும் கல்லூரிப் படிப்பில்லை. மொழியில் அறிவில்லை என்பதுபோல, ஒருவர் கல்லூரியில் படிப்பதால் அறிவாளியாகிவிட முடியாது.  மொழிக்கும் அறிவிற்கும் சம்பந்தம் கிடையாது. உலகத்தில் ஏழாயிரம் மொழிகள் இருக்கின்றன. எல்லா மொழிகளும் மனிதர்கள் அறிவால் கண்டுபிடிக்கப்பட்டவைதான். மனிதர்களின் ஞானம், படைப்பாற்றல் மொழி வழியாகச் சொல்லப்படுகிறது என்பதைச் சொல்லியும் பேசியும் நிலைநாட்டியவர் கலைஞர்.

பதினான்கு வயதில் எழுதவும் பேசவும் ஆரம்பித்த அவர் தொண்ணூறு வயது வரையில் எழுதிக் கொண்டும் பேசிக் கொண்டும் இருந்தார். அவர் சமூகத்திற்காக எழுதினார். அவர் காலத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் ஏற்படுத்தி வைத்திருந்த பாணியில் அவர் எழுதவில்லை. அவற்றை அவர் நிராகரித்தார். அதனை அவர் இன்னொருவரிடம் இருந்து பெற்றார் என்று சொல்லிவிட முடியாது. சமூகத்தில் இருந்து பெற்றதை தன் கோட்பாட்டு அடிப்படையில் எழுதினார்.

கலைஞர் கருத்துலக இலக்கியவாதி. சமூகம் கதைகள் படித்து ஓரடியாவது முன்னே எடுத்து வைக்கவேண்டும் என்று கருதியவர். அவர் எழுத்துப் பாணி என்பது பிரச்சாரந்தான். அதனைத் திறமையாக அரசியல் கட்டுரைகளுக்கு

அடிப்படையாகக் கொண்டார். திராவிடச் சித்தாந்தம் அவர் பேச்சுக்கும் எழுத்திற்கும் அடிப்படையாக இருந்தது. அதனை அவர் அறிந்து கொண்டுதான் எழுதினார்.

ஒரே நேரத்தில் அவர் பல வேலைகள் செய்யக்கூடியவராக இருந்தார். நாடகங்கள் எழுதி நடித்தார். அரசியல் கூட்டங்கள், மாநாடுகளில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். முரசொலி பத்திரிகையை நடத்தினார். தன் எழுத்துக்களின் அடிநாதம் அவருக்குத் தெரிந்தது. எனவே இன்னொரு பத்திரிகையை நாடி அவர் போகவில்லை.

அவர் நாடகங்கள் எழுதி மேடையேற்றினார், நடிக்கவும் செய்தார். பின்னர் சினிமாவிற்கு வந்து ராஜகுமாரிக்கு திரைக்கதை, வசனம் எழுதினார். 1952ஆம் ஆண்டில் அவரின் ‘பராசக்தி’ சினிமா வெளிவந்தது. தமிழ்ச் சினிமாவை அவர் வசனம் பேசும் படமாக்கிவிட்டார் என்று சிலர் தொடர்ந்து எழுதி வருகிறார்கள். ஆனால் அவரின் ‘பராசக்தி’, ‘மனோகரா’ படங்களின் மூலந்தான் இனிய தமிழை உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் கேட்டார்கள். பிராமணர்கள் பேச்சு மொழியையும், சுருதி சுத்தமான பாடல்களையும் சினிமாவில் இருந்து அவர் வசனம் வெளியேற்றியது.

கலைஞர் தேசியக் கட்சியான காங்கிரஸ் கட்சியில் இருந்தோ- காந்திய சிந்தனையில் இருந்தோ உருவானவர் இல்லை. அவர் சமூகத்தில் இருந்து உருவானவர். எனவேதான் அவர் படைப்புகளில் சமூகத்தின் உயிர்த் துடிப்பும், பேச்சும், வர்ணனையும் கூடியிருக்கிறது. அவர் பெரியார்,

காரல் மார்க்ஸ், சாக்ரடீஸ் மாணவரான பிளேட்டோ, ரூசோ, வால்டேர், இங்கர்சால், கரிபால்டி போன்ற சுய சிந்தனையாளர்களை வெ.சாமிநாத சர்மா மொழிபெயர்ப்பின் வழியாகப் படித்த, தன்னைத் தனியாளுமை கொண்ட கலைஞராக நிலைநிறுத்திக் கொண்டார்.



அவர் சமூகம் உருவாக்கிய ஜனநாயகவாதி. ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பொது நியாயம் என்பதை ஓர் இலட்சியமாகக் கொண்டிருந்தார். அதுவே அவரைக் கட்சித் தலைவராக்கியது. எல்லோர்க்கும் இனியவராக இருந்தார். குறிப்பாக, எதிர்க்கட்சியினரிடம்

நட்போடு இருந்தார். ஆனால் தன் கட்சி, தன் கொள்கை என்று வருகிறபோது சமரசமற்றவராக இருந்தார்.

கலைஞர் ராஜதந்திரம், சூழ்ச்சி என்பதை ஓர் ஆயுதமாகக் கொண்டு கட்சியில் முதலிடம் பிடித்தார் என்றோ, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு சர்வாதிகாரியாக நடந்தார் என்றோ சொல்ல முடியாது. அவர் தந்திரசாலியோ, வேடதாரியோ இல்லை. கடினமான உழைப்பாளி. எந்தத் துறையாக இருந்தாலும் அத்துறையில் எவ்வளவு தூரம் போகமுடியுமோ, அவ்வளவு தூரம் போகக்கூடியவராக இருந்தார். அவர் பேச்சை நம்பிய பெரும் பேச்சாளர்! எழுத்தை நம்பிய எழுத்தாளர். அவருக்குச் சொந்த விமர்சனமே முக்கியம். இன்னொருவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனத்தில் கொள்வதில்லை. அதுவே அவரை நிறைய எழுத வைத்தது.

1985ஆம் ஆண்டு அவருக்கு அறுபத்தொரு வயதாகிவிட்டது. கழகத்தில் இருந்த தோழர்களில் சிலர் சோர்ந்து போய்விட்டார்கள். எதிர்க்கட்சியினர் அவருக்கு நல்ல ஆலோசனை சொல்வதுபோல ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கிண்டலாகச் சொல்லிவிட்டார்கள். கலைஞர் விமர்சனத்தைப் பொறுத்துக் கொள்வார். அதனைச் சவாலாக ஏற்றுக்கொண்டு பதிலும் கொடுப்பார். பதில்கள் மனதைத் தைக்கக்கூடியதாக இருக்கும். அதுதான் அவர் பாணி.

தன்னை ஓய்வெடுத்துக்கொள்ள ஆலோசனை கூறியவர்களைப் பார்த்து, தான் இறந்துபோன

பின்னர், நல்லடக்கக் கல்லறையின் மீது, “ஒய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஒய்வு எடுத்துக் கொண்டிருக்கிறான்!” என்று எழுதவேண்டுமென்றார். தான் எவ்வாறு அறியப்படவேண்டும் என்பதை தன் அறுபத்தொன்றாவது வயதில் அறிந்து கொண்டுவிட்டார்.

அவர் நிறைய எழுதினார். கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் எழுதினார். ஆனால், அவரின் சமூக, பொருளாதார, அரசியல் கருத்துக்கள் காரணமாக அவரின் இலக்கியப் பங்களிப்பு, சமூக நீதிக்கான பங்களிப்பு மறைக்கப்பட்டுவிட்டது. அதுவே அவருக்குச் சாகித்ய அகாதமி விருது கிடைக்காமல் அடித்துவிட்டது. அது வட இந்திய இந்திக்காரர்கள் செய்த சதி இல்லை. சாகித்ய அகாதமி டில்லியில் இருந்தாலும், மாநிலங்களில்தான் அது அதிகாரம் கொண்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு மாநில மொழியிலும், பத்துப் பேர் கொண்ட குழு அமைக்கப்படுகிறது. அதற்கு தமிழகப் பல்கலைக் கழகங்கள், தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டு இலக்கிய அமைப்புகள் வழியாக உறுப்பினர்கள் வருகிறார்கள். ஒரு உறுப்பினர் மத்திய அரசால் நியமிக்கப்படுகிறார். அவர்கள் ஆளுக்கொரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒரு கன்வீனர். இவர்களில் யாருக்கும் சாகித்ய அகாதமி விருது வழங்கும் அதிகாரம் இல்லை. பத்துப் பன்னிரெண்டு பேர்களிடம் கேட்டு அடிப்படைப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கிறார்கள். அதனை ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் பத்துப் பேருக்கும் அனுப்பி

அடிப்படைப் பட்டியலில் இருந்தோ, தனியாகவோ இரண்டு புத்தகங்களைப் பரிந்துரைக்கக் கேட்கிறார்கள். பின்னர் அதில் இருந்து பத்து அல்லது பன்னிரெண்டு புத்தகங்கள் கொண்ட ஒரு பட்டியல் உருவாக்கப்படுகிறது. அது மூன்று நீதிபதிகள் முன்னே வைக்கப்படுகிறது. பெரும்பான்மை அடிப்படையில் விருதுக்குரிய புத்தகம் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

அது டில்லியில் கூடும் செயற்குழு கூட்டத்தில் செயலாளரால் வாசிக்கப்படுகிறது. சாகித்ய அகாதமி விருது ஆண்டுதோறும் இருபத்து நான்கு மொழிகளுக்கு வழங்கப்படுகிறது. விருதின் மதிப்பு ஒரு லட்சம் ரூபாய்.

கலைஞர் சாதிக்ய அகாதமி விருது பெற முற்றிலும் தகுதியானவர்தான். சாகித்ய அகாதமி பொதுக்குழு, செயற்குழுவில் இடம் பெற்ற யாரும் அவர் புத்தகத்தைப் பரிசுக்குப் பரிந்துரை செய்யவில்லை. பரிந்துரைக்கப்பட்ட சில நேரங்களில் மேலே இருந்த நீதிபதிகள் கீழே தள்ளிவிட்டார்கள். கலைஞர் போன்ற படைப்பாளிகளுக்கு சாகித்ய அகாதமி விருது கிடைக்காமல் போனதற்குக் காரணம் டில்லி இல்லை. கலைஞர் தன் பணி அங்கீகாரம் பெறவேண்டும் என்று கருதுகிறவர்தான். அது தவறு என்று சொல்ல முடியாது. மனித இயல்பு. ஆனால் அவரை அண்டி இருந்த கவிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் பன்முகங்கள் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களில் சிலர் தமிழக அரசின் விருதுகளையும், சாகித்ய அகாதமி விருதையும் சாதுரியத்தால் வாங்கிக் கொண்டார்கள். அதனை அவர் அறிந்து

கொண்டிருந்தார். அவர் மதிநுட்பமும், நுண்ணறிவும் கொண்டவர். சொல்லப்படுவதில் இருந்து சொல்லப்படுவதையும், சொல்லப்படுவதில் சொல்லப்படுவதையும் அறியக்கூடியவர்தான் என்றாலும், தமிழ் என்று சொல்லி முடிந்தவரையில் காரியங்கள் செய்து கொண்டார்கள்.

அவர் அடிப்படையில் தமிழ்மீது ஈடுபாடு கொண்டவர். தமிழ் இலக்கியம், இலக்கணம், உலகப் பரப்பில் தனக்கென்ற இடத்தைப் பெறவேண்டுமென்று விரும்பினார். அதற்கு அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அதில் குறையேதும் சொல்ல முடியாது. ஓர் அரசு மாநில மொழியின் வளர்ச்சி, மேம்பாட்டிற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வது தவிர்க்க முடியாததுதான்.

சிலப்பதிகாரம் இளம் பருவத்தில் இருந்து அவரைக் கவர்ந்தது. சிலப்பதிகாரத் தலைவியும், மாபெரும் பத்தினி என்று மாதவியால் சொல்லப்பட்டவளுமாகிய கண்ணகிக்கு இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது சென்னை கடற்கரையில் சிலை திறந்து வைத்தார். தமிழின் அடையாளமாக அவர் திறந்து வைத்த கண்ணகி சிலை போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று பின்னால் வந்த ஜெயலலிதா அகற்றி அரும்பொருட்காட்சியகத்தில் இருண்ட அறையில் படுக்க வைத்தார். கலைஞர் வருத்தமுற்றார். ஏனென்றால் அது தமிழ்நாட்டிற்கும் மக்களுக்கும் செய்த நல்ல காரியங்கள் அழிக்கப்பட்டது கண்டுதான். அவர் எழுப்பிய புதிய தலைமைச் செயலகம் பல்நோக்கு

மருத்துவமனையாக மாற்றப்பட்டது. ஒன்பது அடுக்குகள் கொண்ட நவீன அண்ணா நூற்றாண்டு விழா நூலகத்தை குழந்தைகள் நல சிறப்பு மருத்துவமனையாக்கப் போவதாக ஜெயலலிதா அறிவித்தார். தமிழ்நாட்டில் மக்கள் வரிப்பணத்தில் அவர்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட கலைஞர் பெயர் சொல்லும் எதுவும் இருக்கக்கூடாது என்று செயல்பட்டார் ஜெயலலிதா.

முதலமைச்சரின் அராஜகச் செயல்பாடுகளை எதிர்த்து மக்கள் போராடவில்லை என்பதுதான் கலைஞருக்கு வருத்தமளிப்பதாக இருந்தது. ஆனாலும் எழுத்தாளர்கள், நீதிபதிகளால் அண்ணா நூலகம் காப்பற்றப்பட்டது ஓரளவுக்கு அவருக்கு நம்பிக்கையைத் தந்தது. அவர் எப்பொழுதும் மக்கள் மீது நம்பிக்கை கொண்டவர். மக்கள் எல்லோரும் அடிமைகள் இல்லை என்று இறுதிவரையில் தைரியத்தோடு இருந்தார்.

அவர் செயற்பாட்டிற்கு ஏற்ற அங்கீகாரம் தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும் கிடைக்கவில்லை. அவர் திராவிடம் பேசிய தமிழரான இந்தியர். அது பலருக்குப் பிடிக்காமலும் ஒவ்வாததாகவும் இருந்தது. அவரின் செயற்பாடுகள் பலவும் இந்தியாவை ஒரு நாடாக இருக்கப் பயன் அளிப்பதாகத்தான் இருந்தது. அவர் இந்தி மொழி ஆட்சி மொழி என்பதை எதிர்த்தார். இந்தியை ஒரு மொழியென்பதற்காக எதிர்க்கவில்லை. பன்மொழிகள் பேசப்படும், எழுதப்படும் 120 கோடி மக்களுக்கு மேல் வாழும் ஒரு நாட்டில் ஒற்றை மொழி எப்படி ஆட்சி மொழியாக இருக்க முடியும்? என்று பெரியார்

கேட்டதைத் தொடர்ந்து, உரத்த குரலில் கேட்டுக் கொண்டே இருந்தார். அது இந்திமொழி எதிர்ப்பு இல்லை. இந்திய அரசாங்கம் அரசியல் சாசனச் சட்டப்படி அங்கீகாரம் செய்துள்ள 22 மொழிகளை ஆதரிக்கும் போராட்டம். அதனை இந்தி எதிர்ப்பு என்று குறுக்கிவிட்டார்கள். ராஸ்ட்ர பாஷா எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து விட்டார்கள். கலைஞர் மாநில சுயாட்சி கோரினார். இந்தியா இயற்கையில் ஒரு நாடில்லை. ஒரு மன்னரால் ஆளப்பட்ட நாடு கிடையாது. ஒரு மொழி, ஒரு மதம் கொண்ட நாடும் இல்லை. பன்முகக் கலாச்சாரம் கொண்ட நாடு. ஆங்கிலேயர்கள் காலத்தில் ஒரு நாடாக்கப்பட்டது. அது காக்கப்பட வேண்டுமானால் மாநிலங்கள் சுயாட்சி அதிகாரம் பெற்று இருக்கவேண்டும் என்றார்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இடையறாமல் பேசப்படும் மொழியாகவும், எழுதப்படும் மொழியாகவும் உள்ள தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றார். அதில் உள்ள நியாயம் பலருக்குப் பிடிக்காமல் போய்விட்டது. அவரைப் பிரிவினைவாதி, இந்தியாவை உடைக்கப் பார்க்கிறவர் என்று அவதூறு பேசினார்கள். அதுவே அவரை ஓர் இந்தியராக ஏற்க வைத்தது.

1954ஆம் ஆண்டில் இருந்து, பாரத தேசத்தின் மகத்தான குடிமகன் என்று சிலரைத் தேர்ந்தெடுத்து பாரத ரத்னா விருது அரசால் வழங்கப்படுகிறது. இதுவரையில் 45 பேர் பாரத ரத்னா விருது பெற்றிருக்கிறார்கள்.

# கலைஞரின் தத்துவ முகம்

*பேராசிரியர் இரா.முரளி*



தத்துவம் என்றாலே அது விண்ணைத் தாண்டிய உண்மைகளைத் தேடுவது என்ற கருத்து பொதுப் புத்தியில் விதைக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் மரபில் தத்துவம் என்பது மக்களைச் சார்ந்தது, மண்ணைச் சார்ந்தது, இயற்கையைச் சார்ந்தது. தமிழ்ப் பண்பாட்டில் வீடுபேறு வலியுறுத்தப்படுவதில்லை. வேத மரபைச் சார்ந்த புருஷார்த்தங்கள் என்று கூறப்படும் வாழ்வியல்

அறக்கோட்பாடுகள், அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றுடன் வீடுபேறு பற்றி வலியுறுத்திய வேளையில், திருவள்ளுவர் வீடு பேறு பற்றி எழுதாமல், முப்பாலுடன் நிறுத்திக் கொண்டார். இவ்வுலகம் உண்மை என்பதும், அதில் அர்த்தமுடன் வாழ்வது என்பதும்தான் அதன் முக்கிய அம்சங்களாகும். தமிழ்த் தத்துவ மரபுகள், இலக்கியப் படைப்புகள் மூலம்தான் நமக்குக் கிட்டுகின்றன. தர்க்க விவாதங்கள் கொண்ட முழு நீளக்  கருத்துக் கோவைகள் இங்கு காண்பது அரிது. இந்த மரபு சங்க இலக்கியங்கள் முதல் சமீப காலப் படைப்புகள் வரை நீண்டு கிடப்பதைக் காண முடிகிறது. அவ்வுலக மீட்சி பற்றிய அக்கறையை விட, பூவுலகின் உண்மையை உணர்வதே வாழ்க்கையை மேன்மையாக்கும் என்ற தமிழ்ச் சமூகத்தின் பண்டைய நிலைப்பாட்டைத் தன்னுடைய பேச்சின் மூலமும், எழுத்துக்களின் மற்றும் செயல்பாடுகளின் மூலமும் தமிழருக்குப் பலமாக நினைவூட்டியவர்தான் கலைஞர். இந்த நிலையில் கலைஞரை ஒரு தத்துவவாதியாக எப்படி அவதானிப்பது என்பதைக் காணலாம்.

மொழி, கால வெளிகளைக் கடந்து பயணித்து மனிதருக்கும் இயற்கைக்கும், மனிதருக்கும், சக மனிதருக்கும் உள்ள உறவுகளையும், வரலாற்றுக் கூறுகளையும், நம்பிக்கைகளையும், வாழ்வியல் மதிப்பீடுகளையும், உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் உணர்த்தவும், புரியவைக்கவும் வல்லது. மொழிதான் வரலாற்றைச் சுமக்கும் ஊடகம். மொழிதான் மானுட விடுதலைக்கான பாதையைக் காட்டும்

என்று மேற்கத்திய மொழியியலாளர்கள் கருதுகின்றனர். விட்கென்ஸ்டேய்ன் எனும் ஐரோப்பியத் தத்துவ அறிஞர் இதுவரை இவ்வுலகம் மற்றும் அவ்வுலகம் பற்றி ஆராய்ந்தது போதும், இனி மொழி சார்ந்த பிரச்சினைகளைத் தத்துவம் ஆராய வேண்டும் என்று கூறினார். அது மேற்கத்திய தத்துவ உலகில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தத்துவத்தின் ‘மொழியியல் திருப்பம்’(Linguistic Turn) என்று அதைக் கூறுகிறார்கள். அதே போன்று இந்தியத் தத்துவப் பரப்பை அவதானித்தால் அது எல்லாம் முடிந்துவிட்ட நிலை போன்று பல நூற்றாண்டுகளாக இறுகிப்போய் நிற்கிறது. விண்ணைத் தாண்டிய வேதாந்தங்களை மண்ணுக்கு உகந்ததாக ஆக்க சில பல முயற்சிகளை விவேகானந்தர், டாக்டர் ராதாகிருஷ்ணன் போன்ற பலர் மேற்கொண்டனர். அவர்களின் அடியொட்டியே பல்கலைக்கழகங்களில் தத்துவம் வளர்க்கப்பட்டது. ஆனால், மக்களுடன் அவை இன்றுவரை உறவாடவில்லை. இச்சூழலில், அம்பேத்கர் வடக்கிலும். பெரியார் தமிழகத்திலும் புதிய ஒளியை மானுடத்தின் மீது பாய்ச்சினார்கள். தத்துவத் தேடல்களை விண்ணிலிருந்து மண்ணுக்குக் கொண்டுவந்தனர். வேதாந்த மாய விநோதக் கருத்துகளை, தங்களின் தர்க்க அறிவினாலும், பண்பாட்டுப் புரிதலினாலும், பகுத்தறிவுச் செயல்பாட்டினாலும் உடைத்து யதார்த்த வாழ்வியலை அணுகினர். தத்துவங்கள் மக்களுக்கானவைதான் என்பதை உணர்த்தினர்.

தமிழகத்தில் பெரியாரைத் தொடர்ந்து அறிஞர் அண்ணாதுரையும், கலைஞர் கருணாநிதி அவர்களும் மண் சார்ந்த மானுட விடுதலைத் தத்துவத்தைப் பிரகடனப்படுத்தினார்கள். இதில் கலைஞர் முக்கியத்துவம் கொடுத்தது மொழிக்குத்தான். தமிழை அவர் விடுதலைக்கான ஆயுதமாகக் கண்டார். தமிழை அவர் அடையாளமாகக் கண்டார். இது புதிய வடிவத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. பழைய விவாத மரபில் ஒன்றன்பின் ஒன்றாக விவாதித்து அவர் ஒரு கோட்பாட்டைக் கட்டவில்லை. அவர் முன்வைத்த வாழ்வியல் விழுமியங்கள்தான் அவருடைய தத்துவம். தத்துவம் என்றாலே அது கட்டமைக்கப்படும் அல்லது கட்டமைக்கப்பட்ட சித்தாந்தம் என்ற அளவிலேதான் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. ஹேபர்மாஸ் எனும் ஜெர்மானியத் தத்துவவியலாளர் தத்துவத்திற்கும், நடைமுறைச் செயல்பாடுகளுக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதுதான் ஒரு தத்துவத்தை அர்த்தமுள்ளதாக ஆக்கும் என்கிறார். அதைச் செய்தவர் கலைஞர். தத்துவம் கருத்தாக மட்டுமல்ல, செயல்பாடாகவும் இருக்கலாம். செயல்பாடுகள் புதிய தத்துவப் புரிதல்களை உருவாக்கும். அவ்வகையில் கலைஞரின் செயல்கள், அவர் வாழ்வில் எதிர்கொண்ட சவால்கள், அதை அவர் எதிர்கொண்ட விதம் போன்றவை அவர் எந்த வகைத் தத்துவத்தை முன்னெடுக்கிறார் என்பதை வெளிப்படுத்துகின்றன எனலாம். எனவே தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியத் தத்துவப் பரப்பில், கலைஞரின் பங்களிப்பு இடம் பெறவேண்டும்.

சமூக நெருக்கடிகளால் இந்தியாவில் தத்துவத் தேடல்கள் புதிய பாதைகளில் பயணிக்கத் தொடங்கியுள்ளன. ஆன்மா, தேடல், கடவுள், புலன் கடந்த அறிவியல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு மனிதஉரிமை, பெண்கள் சமத்துவம், பண்பாட்டு முரண்கள், நுகர்வியம், சூழலியல், மொழிசார் அடையாளங்கள், இன விடுதலை, அடையாள அரசியல் என மக்கள் வாழ்வியல் சார்ந்த பல பிரச்சினைகள் பற்றித் தத்துவ விசாரங்கள் பரவத் தொடங்கி, அவை செயல்பாடுகளாகவும் பரிணமித்து வருகின்றன.  இந்தப் புதிய தத்துவப் பரப்பில் கலைஞர் முன்னோடியாக இருப்பார் என நான் நம்புகிறேன். அவரின் தத்துவங்கள் கற்பனை மற்றும் தர்க்கம் சார்ந்தவை அல்ல. அவை நடைமுறைச் செயல்பாடுகள் மூலம் சோதித்துப் பார்க்கப்பட்டவை. நசுக்கப்பட்ட இனத்தின் விடுதலைக்கு அறைகூவல் விடுத்தது மட்டுமல்ல, அதற்கான செயல் திட்டங்களையும் தீட்டியவர் அவர். அந்த வகையில் அவர் ஒரு பகுத்தறிவுச் செயல் முறைத் தத்துவவியலாளர் (Rationalist Pragmatist).

## சுயமரியாதைக்கு மொழியே அடிப்படை

சுயமரியாதை என்பது மனித உரிமைக் கோட்பாட்டின் அடிநாதமாகும். சுயமரியாதை ஒரு மனிதனுக்கு எவ்வளவு அடிப்படை என்பதை வலியுறுத்திய அதே வேளையில் மனித உரிமையின் அடிப்படை மொழி என்பதையும் கருணாநிதி தமிழரை உணரவைத்தார். மொழியின் மூலமாகத்தான் மனிதனின் மாண்பு தீர்மானிக்கப்படுகிறது. ஒட்டுமொத்த

தமிழகத்தின் மாண்பின் உறைவிடமாகத் தமிழ் மொழியைக் கண்டது மட்டுமல்ல, அதைத் தமிழரை உணரவைத்துதான் அவரது சாதனை. பெரியாரிடமிருந்து சுயமரியாதைக் கோட்பாட்டை உள்வாங்கிய கலைஞர், அதை மொழியின் மூலமாகத்தான் இருத்த முடியும் என்று கருதினார். பெரியாருக்கு மொழி ஒரு தொடர்புச் சாதனம் மட்டுமே. ஆனால் கலைஞருக்கு அது சமூக, பண்பாட்டு அடையாளம். அதுவும் தமிழ் மொழி தமிழக மக்களின் கௌரவம். பக்திப் பாடல்களிலும், வழிபாட்டுத் தலங்களிலும், புராணக் கதைகளிலும் பெரும்பாலும் வசித்து வந்த தமிழ் மொழியைச் சமூகப் பரப்பிற்கு தன் எழுத்துக்கள் மற்றும்  பேச்சுக்கள் மூலம் கொண்டு வந்தவர் என்பதை யாரும் மறுக்க இயலாது. சாதி, இனப் பாகுபாடுகளை அகற்றி சமூக நீதி தழைக்க அவர் எடுத்த ஆயுதம் தமிழ். தமிழை அலங்காரமாக அவர்பேசுவது உலகறிந்தது. ஆனால் அதே தமிழின் சக்தியை ஒரு சமூக மாற்றத்திற்கான கருவியாக அவர் கண்டறிந்து பயன்படுத்தியது உலகில் எந்த ஒரு தலைவரும் பயன்படுத்தாத யுக்தி ஆகும். தமிழ் மண் சார்ந்தது. விண் சார்ந்தது அல்ல என்பதை மிகவும் இலாவகமாக, ஆனால் உறுதியாக தன் படைப்புக்கள் மூலமாக மட்டுமின்றி, செயல் பாட்டின் மூலமாகவும் நிரூபித்தவர் கலைஞர் கருணாநிதி.

சமூக நீதியும், சமத்துவமும்தான் கலைஞரின் தத்துவநிலைப்பாடுகள். கலைஞரின் தத்துவக் கோட்பாடுகளை நான் பெரும்பாலும் அவரது செயல் திட்டங்களிலிருந்துதான் புரிந்து

கொள்கிறேன். தத்துவம் என்பதை வெறும் வெற்றுச் சித்தந்தமாக நான் கருதுவது இல்லை. அது செயல்பாடு. செயல்பாட்டையும், கோட்பாட்டையும் பிரிக்க இயலாது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் அவை. அதை நிரூபிப்பவர் கலைஞர்.

இடதுசாரிகள் தேசவரம்பற்ற உலகத் தொழிலாளர் கள் ஒற்றுமை பற்றிப் பிரகடனப்படுத்திய வேளையில், தமிழ்நாட்டின் உழைக்கும் வர்க்கத்தை, மொழியின் அடிப்படையில் ஒன்றிணைத்தவர் கலைஞர். சாதியின் பிடியில் தமிழர்கள் சிக்கிக் கிடப்பதையும், சாதி அதிகாரத்தால் அடக்கப்பட்டு இருக்கும் அவலநிலையையும் ஊருக்கே உரக்கச்சொல்லி அறைகூவல் விடுத்தவர் பெரியார். பெரியாரின் திராவிடம் அண்ணாவினால் அலங்கரிக்கப்பட்டு கலைஞரால் செழுமைப்படுத்தப்பட்டது. கலைஞரின் செயல் திட்டங்கள் அதற்குச் சாட்சியம் கூறுகின்றன. சமூகநீதியைக் காக்க இடஒதுக்கீட்டில் ஒவ்வொரு தரப்பினருக்கும் ஒதுக்கீட்டைச் சற்று அதிகரித்தது மட்டுமல்ல. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்ற ஒன்றை இந்தியாவிலேயே முதன் முறையாக உருவாக்கினார் கலைஞர்.

## இட ஒதுக்கீட்டின் வழியாக சமூக நீதி

பிறப்பால் ஏற்றத்தாழ்வு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு அதிகமாக உருவாக்கப்பட்ட இந்நாட்டில், இந்த ஏற்றத்தாழ்வினால் காலம் காலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை

வழங்கவேண்டுமானால் அது இடஒதுக்கீட்டின் மூலம்தான் இங்கு சாத்தியப்படும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தும் வகையிலே அவரின் திட்டங்கள் இருந்தன. மனிதரின் மாண்பு காத்தல் என்பதுதான் ஜனநாயகத்தின் ஆணி வேர். குடி மக்களின் கண்ணியம் என்பது ஒரு தனி நபரால் மட்டும் பாதுகாக்கப்படுவதல்ல. அது அரசினால் பாதுகாக்கப்படுவது. தமிழகத்தில் பெருவாரியான மக்களுக்கு இக்கண்ணியம் காக்கப்படாததால் எழுந்த எழுச்சிதான் திராவிட இயக்கம். கண்ணியமான வாழ்வு என்பது அர்த்தமுள்ள வாழ்வு என்பதே கலைஞரின் மனித நேயத் தத்துவம் ஆகும். சாதியின் கேடுகளை ஒழிக்க இடதுசாரிகள் வர்க்கப் போராட்டத்தை முன்வைத்து வருகையில், சாதி ஒழிப்புதான் முக்கியமானது. அதற்கு முதற்கட்டமாக உயர் சாதியினரின் அடக்குமுறை களிலிருந்து சூத்திரர்களும், ஆதி திராவிடர்களும் சுதந்திரம் அடையவேண்டியது முக்கியமானது என்ற அரசியல் சிந்தாந்தத்தைக் கலைஞர் பிரகடனப்படுத்தினார்.

1977இல் எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு வந்த போது, பொருளாதார அடிப்படையில் இனி இடஒதுக்கீடு வழங்கப்படும் என்ற ஆணையைப் பிறப்பித்தார். வருட வருமானம் 9000ரூபாய்க்குக் கீழ் உள்ளவர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க அந்த ஆணை வழி செய்தது. அந்த ஆணை இடஒதுக்கீட்டுத் தத்துவத்திற்கு முரணானது என்ற கலைஞர், அது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று குரலெழுப்பினார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து

தமிழகம் முழுவதும் தி.மு.க.வும், தி.க.வும் போராட்டங்கள் நடந்தன. அரசாணை எரிப்புப் போராட்டங்கள் நடை பெற்றன. சமூக நீதியை இவ்வாணை குழி தோண்டிப் புதைத்துவிட்டதாக கலைஞர் கருதியதும் அதை எதிர்த்து தீவிரமாகப் போராடியதும் அவர் சமூக நீதி குறித்துக் கொண்டிருந்த தெளிவைக் காட்டுகின்றன. கலைஞரின் விடாமுயற்சி எம்.ஜி.ஆரை அந்த அரசாணையைத் திரும்பப் பெற வைத்தது.

இது பெரும்பாலான பிராமணர்களிடையே கலைஞர் பிராமணர் எதிரி என்ற எண்ணத்தை உருவாக்கியது. கலைஞரின் சமூகநீதி என்பது ஒரு இனத்திற்கு எதிரான நிலைப்பாடு என்பதை விட, அது நீதி மறுக்கப்பட்ட, வாய்ப்புகள் மறுக்கப்பட்ட தமிழ் இனத்தின் உரிமை மீட்புப் பற்றியது என்பதை அவர்கள் புரிந்திருந்தால் அந்த எண்ணம் தோன்றியிருக்காது.

சாதி ஏற்றத்தாழ்வு உள்ள சமுதாயத்தில் சமவாய்ப்புகளைப் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கு வதன் மூலம்தான் சமத்துவத்தை உருவாக்கமுடியும் என்பது பெரியாரின் நிலைப்பாடு. இதை மிகச் சரியான அர்த்தத்தில் நடைமுறை படுத்தியவர்தான் கலைஞர். பிராமணர் அல்லாதவரும் அர்ச்சகராக வழி செய்யும் சட்டத்தை 1970இல் கலைஞர் நிறைவேற்றினாலும், பல சட்டச் சிக்கல்களைக் கடந்து, 48 ஆண்டுகளுக்குப் பின் 2018 பிப்ரவரி மாதம் முதல் தான் அது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் உருவாக்கிய பயிற்சி மையத்தில் முறையாகப் பயிற்சி பெற்ற ஒரு பிராமணர் அல்லாத இளைஞர் மதுரையில் அர்ச்சகராகியுள்ளார். இந்தச் செய்தி கலைஞர் மருத்துவமணையில் இருந்தபோது தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது சமத்துவக் கோட்பாட்டிற்கும், சுயமரியாதைக் கொள்கைக்கும் கிடைத்த வெற்றி. கலைஞரின் சமத்துவபுரம் அவர் அரசியல் வரலாற்றில் ஒரு மைல்கல். இத்திட்டத்தை முடக்கியது எதிர்க்கட்சி என்பதை விட, சமத்துவத்திற்கு எதிரான தத்துவம் எனலாம்.

மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த தி.மு.க.வும், தி.க.வும் எடுத்த போராட்டங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. மறுபடியும் 1989இல் ஆட்சிக்கு வந்தபோது, கலைஞர் பிற்படுத்தப்பட்டோருக்கான ஐம்பது சதவிகிதத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை உருவாக்கி அவர்களுக்கு இருபது

சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கினார். கிறித்துவ தலித்துகளை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துக் கடிதம் எழுதியுள்ளார். முஸ்லிம்களுக்கும், அருந்ததியர்களுக்கும் அவர்கள் ஒப்புதல் பெற்று 2008இல் உள் ஒதுக்கீடு வழங்கியது அவர் எந்த அளவிற்கு சமூக நீதி என்ற ஒரு தத்துவத்தை கள யதார்த்தங்களைக்கொண்டு புரிந்து கொண்டிருந்தார் என்பதற்கு இது உதாரணம் ஆகும்.

## சூத்திரர் ஆட்சி

சுவாமி விவேகானந்தர் ஒரு முறை கூறும்போது "இனி இந்தியாவிற்கு தேவை சூத்திரர்கள் ஆட்சியென்றார். காரணம், இந்தியாவில் வாழும் பெரும்பான்மை எண்ணிக்கை கொண்ட, ஒடுக்கப்பட்ட இனமான சூத்திரர்கள் ஆட்சிக்கு வருவதுதான் நீதி என அவர் கருதினார். ஒரு முறை சட்டசபையில், எதிர்க் கட்சித்தலைவர் ஹண்டே அவர்கள் திமுகவின் ஆட்சியை மூன்றாம் தர ஆட்சி என்று கடுமையாக விமர்சித்தபோது, கலைஞர் அவர்கள் "ஆம். இது மூன்றாம் தர ஆட்சி கூடக் கிடையாது. இது நான்காம் தர ஆட்சி. வர்ணாசிரமதர்மத்தில் நான்காம் நிலையில் உள்ள சூத்திரர்களின் ஆட்சி. சூத்திரர்கள் நலன் பேணும் ஆட்சி" என்றார்.

இதன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அவருடைய கண்ணொளி வழங்கும் திட்டம், தொழு நோயாளிகள் மறு வாழ்வு இல்லங்கள் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம், உழவர் சந்தை போன்ற பல நல திட்டங்கள்

பல்லாயிரக் கணக்கான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல பலனை அளித்தன.

## பெண்ணியப் பார்வை

1989இல் கலைஞர் ஆட்சியில், பெண்களுக்குச் சொத்தில் உரிமை என்ற தனிச் சட்டத்தினை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நடைமுறைக்குக் கொண்டுவந்தது தமிழகம். பெரியார் 1929 செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இச்சட்டம் இயற்றப்பட்டதாகக் கலைஞர் கூறுகிறார். இச்சட்டம் பெண்ணுரிமை பற்றிய கலைஞரின் நிலைப்பாட்டைத் தெளிவாக்குகிறது. இதைத் தொடர்ந்து, கலப்பு மணம் புரிபவர்களுக்கான உதவித்திட்டங்கள், விதவை மறுமணத் திட்டம் என்று பெண்கள் உரிமைகளைப் போற்றும் வகையில் அவர் உருவாக்கிய திட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும், உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு அவர் ஆட்சியில் வழங்கியது  பெண்கள் ஆட்சியதிகாரத்தில் இருக்கவேண்டும் என்ற தத்துவத்தைச் செயலில் காட்டியதாகவே புரிந்து கொள்ளமுடியும். திருநங்கைகளின் மேம்பாட்டிற்கான அவரின் திட்டங்கள் அவர் விளிம்பு நிலை மக்கள் மீது கொண்டிருந்த புரிதலை நமக்கு உணர்த்தும்

கலை, இலக்கியத்தளத்தில் கலைஞரின் பங்களிப்பு சமதர்மச் சமுதாயம் அமைப்பது குறித்தும், தமிழ்ப் பண்பாட்டின் பெருமை பற்றி

யும், கடவுள் மறுப்புக் கொள்கையை வலியுறுத்துவதாகவும், தமிழனின் காதல், அன்பு, வீரம், தியாகம் ஆகியவற்றை முன்னிறுத்துவதாகவும் இருந்தது என்பது ஊரறிந்த விஷயம். நாத்திக சமுதாயத்தில் உயர்ந்த விழுமியங்கள் சாத்தியம், அதற்கு அவ்வுலகம் பற்றிய கற்பனைகளும் அச்சுறுத்தல்களும் தேவையில்லை என்ற பொருள் முதல்வாதச் சிந்தனையினை கலைஞர் நிலைநாட்டியிருகிறார். அதற்காகத்தான் அவர் தொல்காப்பியத்தையும், திருக்குறளை யும் கொண்டாடினார். தமிழ் பண்பாட்டு மரபில் புதைந்தும், மறைந்தும் கிடந்த பகுத்தறிவுப் பாதையைத் தன் இலக்கியப்படைப்புகள் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டியது மட்டுமல்ல, பூம்புகார் நகரம், வள்ளுவர் கோட்டம், 133 அடி திருவள்ளுவர் சிலை, ஔவைக்குச் சிலை என தமிழ் இலக்கியக் கர்த்தாக்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பியது தமிழரின் உணர்வு நிலையை தமிழ்ப் பண்பாட்டின் மீது மையல் கொள்ளச் செய்யும் யுக்தியாக அதை மேற்கொண்டார்.

தமிழ்க் கலாச்சாரத்திற்கு மகுடம் வைத்துக் கொண்டாடிய கலைஞரின் பண்பாட்டியல் தமிழ் இலக்கிய மரபிலிருந்து கட்டப்பட்டது. கிரம்சி கூறுவது போல் அவர் ஒரு ஆர்கானிக் புத்திஜீவி. கலைஞரின் தத்துவ முகம் பட்டை தீட்டப்படவேண்டும். அது தமிழ் தத்துவ மரபில் புதைந்து கிடக்கும் செயலுக்கான ஆற்றலையும், வீரத்திற்கான திடத்தையும், புதுமைக்கான சிந்தனையையும், அறத்திற்கான அன்பினையும்

நம் மண்ணின் வேர்களிலிருந்து நமக்களிக்கும். அவரது கட்சியைப் பற்றியும், அவரை சார்ந்தவர்கள் பற்றியும் பல விமர்சனங்கள் இருக்கின்றன. ஆனால் அவையல்ல கலைஞரின் சாரம். அவை வேறுதளத்தில் விவாதிக்கப்படலாம். அவை விவாதிக்கப்பட மட்டுமே உதவும். வரலாற்றில் சாதனைகளும் சாரங்களும் மட்டுமே எழுதப்படும்.

**murali_phil@hotmail.com**

# கலைஞர் : பெரியார், அண்ணா சிந்தனைகளின் “செயற்களம்”

*சுப. குணராஜன்*



சிந்தனைகளின், அதிலும் குறிப்பாக அரசத்துவம் தொடர்பான அரசியல் சிந்தனைகளின், பயன்விளைவு அவற்றை வெற்றிகரமாகக் களப்படுத்தும் போதுதான் நிறைவடைகிறது என்பது ஏற்கப்பட்ட ஒன்றுதான். அதேவேளையில் பெரியாரது போன்ற சீர்திருத்தச் சிந்தனைகள், பண்பாட்டுத் தள இடையீடு மற்றும் இயக்கம் என்ற அளவில் விளைவுகளை ஏற்படுத்த வல்லவை. அந்தச் சிந்தனைகள் உருவாக்கப்படும் போது, சிந்தனையாளர்கள் நிகழ்த்துவதெல்லாம், அந்தச் சிந்தனையை வளப்படுத்துவதும், அதன் நியாயப்பாடுகளை வெகுமக்கள் தளத்திடையே உணர்த்துவதும்தான். ஆனால் ஒன்றைத் தெளிவாக நினைவிலிருத்திக் கொள்வது இந்தக் கருத்துநிலையைப் புரிந்துகொள்ள உதவலாம். சிந்தனைகள் அவை உருப்பெறும், களப்படும் காலமத்தனையிலும், எந்த விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை, அவை திரண்டு, அரசத்துவத்திலும், அரசியக்கத்திலும் இடம் கொண்டபோதுதான் நிறைவுற்றது என்பதான புரிதலை, இந்தக் கட்டுரை தவறியும் முன்மொழியவில்லை.தவறி அப்படியான கருத்தமைவுகள் இதன் வெளியில் புலப்பட்டால், பிழை என்னுடையது. ஏனெனில், பெரியாரியச் சிந்தனைகளின், அண்ணாவின் சிந்தனைகளின் வழிப்பட்டவன் என்ற நிலையில், அதிகாரத்திற்குள் அவை ஏற்படுத்திய “விளைவுகளில்” எள் முனையளவும் குறையாதது, அவை களப்பட்ட காலங்களில், அந்தச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட தனிநபர்களில்/சமூகத் தொகுதிகளில் அவை ஏற்படுத்திய விளைவுகள். இன்னும் தெளிவாக்கிக் கொள்ள, அவை இலக்கை அடையும் போக்கில்

வெகுமக்கள் வெளியில் அவை உருவாக்கிய செயல்பாட்டாளர் தொகுதியும், அதன் தொடர்ச்சியும் அதி முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், கலைஞர் அவர்களே அப்படியான ஒரு செயல்பாட்டாளராய்த் துவங்கியவர்தான். ஆனாலும் சமூகமாற்றத்திற்கான சிந்தனைகளின் வீச்சு அவை அரசத்துவத்தின் சட்டரீதியான அங்கீகாரம் அல்லது சட்டரீதியான ஏற்பு என்பதன் வழியாகவே வெகுமக்கள் வெளியில் பயன்விளைவை ஏற்படுத்துகின்றன என்பதும் மறுக்க முடியாதது. பண்பாட்டுத் தளத்தில் அவை சமூகத் தொகுதிகளில் உருவாக்கிய 'மனவிளைவுகள்' அந்தத்தள மாற்றத்திற்கு அடிகோலியபோதும், அவற்றின் அடிப்படை நோக்கம் முழுமை பெறுவது, அந்தச் சிந்தனைகள் அரசியல் தளத்தில் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றின் செயல்களத்திற்கு வெளியே வாழும் பெருந்தொகுதியான வெகுமக்களை எட்டும் போதுதான்.

பல்வேறு தேசிய இனங்களின் வாழ்வுவெளியான, இந்தியத் துணைக் கண்டம், இந்தியா எனும் நாடாக உருப்பெற்ற போதே அல்லது கருக்கொண்ட போதே, அந்தக் கருத்தாக்கத்தின் கர்த்தாக்கள் பார்ப்பனீய மேலாதிக்கத்தை நிறுவும் நோக்கில் செயல்பட்டவர்கள் என்பதை உணர்ந்தவர் பெரியார். காங்கிரஸ் இயக்கத்தின் தலைமை தன் கைவசமிருந்த போதே, அதன் சனாதன நோக்கமே, அதனை இயக்கும் அடிப்படை என்பதை அறிந்தே அங்கிருந்து வெளியேறியவர் அவர். பலகாலமாக பல்தள எதிர்ப்புநிலைகளால் கட்டமைக்கப்பட்டு,

பார்ப்பன மேலாதிக்கத்தை ஆட்சியதிகாரத்தில், ஓரளவில் பண்பாட்டுத்தளத்திலும் எதிர்கொண்ட பார்ப்பனரல்லாதோர் இயக்கத்தின் நீதிக்கட்சியை மட்டுப்படுத்த மதறாஸ் பிரசிடென்சி காங்கிரஸுக்கு உதவ வந்தவர் பெரியார். ஆனால் 1925 ஆம் ஆண்டு அளவில் முற்றிலுமாக, பண்பாட்டுத்தள மாற்றமே பார்ப்பனீயத்தை வீழ்த்தும் வகை எனக் கண்டுணர்ந்து, அதைத் தனது செயற்களமாக்கிக் கொண்டவர். அவரது சுயமரியாதை இயக்கம், பின்னர் உருவான சுயமரியாதை சமதர்மம், அதைத் தொடர்ந்த நீதிக்கட்சி நடவடிக்கைகள் என அனைத்தும் அந்த நோக்கத்தை முனைப்பாகக் கொண்டவையே.

பிரிட்டிஷ் இந்தியா இனித் தொடரமுடியாது என்ற புறச்சூழலும், அகச்சூழலும் உருவான போது, ஆங்கில ஆட்சியாளர்கள் முன் இருந்த திறப்பு, அவர்களது ஆட்சியதிகாரத்தால் ஒற்றை ஆங்கில அரசின் கீழ் கட்டுப்பட்டிருந்த பெருநிலப்பரப்பிற்கு எந்தவகையான சுதந்திரம் வழங்குவது என்பது மட்டுமே. ஏற்கனவே கண்டதுபோல பல்வேறு தேசிய இனங்களின் தொட்டிலான இந்தியத் துணைக்கண்டம், ஒற்றை இந்தியாவாகத் தொடர்வதற்கான சாத்தியத்தை முறியடிப்பதாக நின்றது இந்து பார்ப்பனிய அதிகார வெறி. அரசத்துவத்தை தம் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதன்வழி இதை இலகுவாகக் கையாண்ட பார்ப்பனீயத்திற்குச் சவாலானது மக்களாட்சி. இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளிலிருந்தே, இந்தப் பெருநிலப்பரப்பை, பல்வேறு ஆட்சி வடிவங்களால் கையாளும் நுட்பம் ஆங்கில அரசால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

அந்த வடிவங்களில் உருப்பெற்ற பிரதிநிதிகள் தேர்வுமுறை கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்தவரை பார்ப்பன அதிகாரம் பதற்றம் கொள்வதற்கான காரணங்கள் உருவாகவில்லை. ஆனால் பொருள்வளம் (நிலப் பட்டா, வருமான வரி), கல்வித் தகுதி ஆகியவை அதன் வாக்காளர் தொகுதியைத் தீர்மானிக்கும் அடிப்படையாக ஆனபோதே மோதல் வலுத்தது. பெருவாரியான பார்ப்பனரல்லாதோர் சமூகம், தமக்கான அதிகாரத்தைக் கோரிக் களமிறங்கியது. இந்த எதிர்முகாம் காங்கிரஸ் இயக்கத்திலும் தாக்கம் செலுத்தியது. ஆனாலும் காந்தியார் முன்னெடுத்த இந்திய தேசியமும், இந்து ராமராஜ்யமும் பார்ப்பனீயத்தின் புகலிடமானது. பார்ப்பனீயம் தன் அதிகாரத் தொடர்ச்சியைத் தொடர இரண்டு தளங்களைத் தேர்ந்தது. முதலாவது அகண்ட பாரதம் என்கிற நிலப்பரப்பு, இரண்டாவது அதன் ஆட்சியதிகாரம் இந்து இந்தியா என்பதன் அடிப்படையில். இந்த ஆவலும் நேரு, பட்டேல், ஜின்னா ஆகியோரின் ஆட்சியதிகாரக் கனவும் இந்தியா, பாகிஸ்தான் என்பதனை நிதர்சனமாக்கியது. இப்போது பார்ப்பனீயம் இந்திய அரசமைப்புச் சட்ட உருவாக்கத்தில் தனது கைவரிசையைக் காட்டியது. அந்தத் தளத்தில் பாபா சாகேப் அம்பேத்கர் தன் பங்களிப்பின் மூலம் பெரும் இடையீட்டைச் செய்தார்.

நம் சூழலில், இந்திய சுதந்திரம் என்பது நிதர்சனமான போது, அதற்கான எதிர்வினையை திராவிடர் இயக்கம் இரண்டு வகையில் முன் வைத்தது. 1925களிலிருந்தே தேசம், ஜனநாயகம் என்ற கருத்துநிலைகள் பற்றிய படுதீவிரமான

எதிர்நிலைகளைக் கொண்டிருந்த பெரியார் அதையே தொடர்ந்தார். அவரளவில் ஆட்சிமாற்றம் எந்த அடிப்படை மாற்றங்களையும் கொணர்ந்து விடப்போவதில்லை. வெள்ளை அதிகாரத்திடம் சேவகம் செய்த பார்ப்பன அதிகாரத்தின் கைக்கு நேரடியாக "அதிகாரம்" சென்றடைந்துவிடும். எனவே தனது செயலை பண்பாட்டுத் தளத்தில் தொடர்வதுதான் சனாதனத்தை வீழ்த்தும் வழி என அறிவித்து விட்டு, இந்திய சுதந்திர நாளை "கருப்பு நாள்" என அறிவித்தார். அண்ணா இந்தப் புள்ளியில் முற்றிலுமாக மாறுபட்டார். இன்னும் தெளிவான புரிதலுக்குச் சற்று விளக்கிப் பேசுவது உதவும். அடிப்படையில் பார்ப்பன அதிகாரம், சனாதனம் ஆகியவை தொடர்பில் பொதுப்பார்வை இருந்தபோதும், அண்ணா, பெரியாரைப் போல் 'தேசம்' என்ற கருத்தாக்கத்தை முற்றிலுமாக நிராகரிப்பவர் எவரும் இல்லை. அதிலும் "இந்தியா" என்ற புதிய தேசமொன்று உருப்பெறும்போது, அதனை இடையீடு செய்து, அமைப்பு ரீதியாக அதில் மாற்றம் கொண்டு வருவதும், அதன் அரசியக்கச் செயல்பாடுகளில் பங்கேற்று அதில் உள்ளார்ந்த மாற்றங்களைச் சாத்தியமாக்குவதும் அவரது நோக்கம். ஏற்கனவே கண்டதுபோல் பெரியார் அரசியக்கத்தோடு உறவாடத் தயங்கியவரில்லை. அதனோடான இயக்க உறவைத் தவிர்த்து, ஆனால், இயக்கத்தை நிகழ்த்துபவரைக் கொண்டு, சமூக மாற்றத்திற்கான அரசத்துவ நடவடிக்கைகளை, சட்ட வடிவுகளை உருவாக்குவதும், அதன் வழி சமூக நீதியும், மக்கள் நலனும் பேணப்படச் செய்வதும் அவரது முறை/வழி. இதன் நோக்கம் தேர்தல் அரசியல் நிர்பந்தங்களால், கொண்ட

கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாமல் பண்பாட்டுத்தளத்தில் இயங்க முடியும் என்பது. அதை இறுதி வரை கையாளவும் செய்தார். அதற்கான அவரது வழிமுறைகள் கடுமையானவை. ஆனால் பண்பாட்டுத் தள இடையீடு மற்றும் அடிப்படை மாற்றங்கள் மக்கள் தொகுதியின் நம்பிக்கைகளை வழிப்படுத்துவது, ஆட்சியாளர் தேர்விலும் விளைவுகளை ஏற்படுத்துமெனக் கருதவும் செய்தார். ஆனால் தேர்தல் பரப்புரையெல்லாம் செய்து வெற்றி பெறச் செய்த ஆட்சியாளர்களை, அடுத்த நொடியே தயக்கமின்றி விளாசித் தள்ளிவிடும் உரிமையை அவர் ஒருபோதும் விட்டதில்லை. காங்கிரஸ் / காமராஜர் உறவு காலத்திலும், திமுக / அண்ணா/ கலைஞர் காலத்திலும் இதே நிலையைத் தொடர்ந்தார்.

அண்ணாவின் தேசம் குறித்த பார்வை சற்று மாறுபாடானது. தேசம், தேசீயம் ஆகியவற்றிற்கு முகம் கொடுக்காத வெகுமக்கள் திரள் இயக்கம் சாத்தியமில்லை. பண்பாட்டுத் தள நடவடிக்கையும், வெகுமக்கள் அரசியல் தள நடவடிக்கையும் கைகோர்க்கும் போதுதான் அசலான விளைவுகளை வென்றடைய முடியுமென்பது அவர் பார்வை. தேசம் என்ற தளத்திலும் அவர் திராவிடநாடு எனும் இந்தியாவிற்கு வெளியிலான இருப்பை முன்னிருத்தியே களமிறங்கினார். அதாவது இந்தியாவின் சுதந்திரத்தை அங்கீகரித்தபோதும், அதை முதல் கட்ட நகர்வு எனவும், அதற்கடுத்து திராவிடநாடு என்பதாகவும் முன் மொழிந்தார். திராவிடநாடு கோரியபோதும், பிரிந்து செல்லும்

உரிமை கொண்ட கூட்டாட்சியே அதற்கான மாதிரியாக்கினார். மொழிவாரிப் பிரிவுகளையே, பிரிந்து செல்லும் உரிமை கொண்டவையாக அதில் குறிப்பிட்டார். அதுவே அமைப்பு ரீதியாக மொழிவாரி மாநிலங்களாக அசலான போது திராவிடநாடு தமிழ்நாடுதான் என்பதை அவர் அறிவிக்கத் தயங்கவில்லை. பின் ஏன் திராவிடநாடு? அவரளவில் அது திரள்மக்கள் தொகுதியை உள்ளடக்கிய சொல். திராவிடநாடு எனக் கருதப்பட்ட பிற பிரதேசங்கள் அதனைக் கோராதது, அது தமிழின் மூலம் என்பது கொண்டே என்பதையும் கருத்தில் கொண்டால் இந்த ஐயப்பாடு அகலும். திராவிடநாடு என்பது அன்றும் இன்றும் தமிழ்நாடுதான். இறுதியாக இந்த நிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயரைக் கோரி நிறுவியவரும் அவரே. அரசமைப்புச் சட்டம் உருவான பிறகு, அதனைக் கருதாது பண்பாட்டுத் தளத்தில் மட்டும் இயங்குவது பயன் தராது. அதிகாரம் கொண்டு செயல்படுத்தும் விடயங்களை, அடுத்தவர் தயவில் செய்ய முடியாது. அதைவிட, சமரசமற்ற பண்பாட்டுத்தளச் செயல்பாடுகளைப் போலவே, ஓரிரு சமரசங்கள் வழியான அரசியக்கப் பங்கேற்பு கூடுதலான நலன்களைச் சாத்தியமாக்கும். அதோடு கூட அரசியல் சட்ட உருவாக்க அவைகளில் இயங்கும் நிலையில் சாத்தியப்படக்கூடிய அரசத்துவத்தில் வடிவ மாற்றங்கள் ஒருபோதும் வெறெந்தவகையிலும் ஈடு செய்யக்கூடியது அல்ல.

அண்ணாவின் எண்ணங்கள் அரசியல்களத்தில் வெகுவான விளைவுகளை ஏற்படுத்தின. தேர்தல்

பங்கேற்பு எனத் துவங்கியதும் எதிர்த் தரப்பு அதிர்வுக்குள்ளானது. இந்தியத் துணைக்கண்டம் இன்றளவும் காணாத பிராந்திய நலன் என்ற அடிப்படையிலான அரசியல் இயக்கம் உருப்பெற்றது அண்ணாவின் சிந்தனைகளால். அதன் அடிப்படைகள் பெரியாரியம்தான் என்ற போதிலும், அதில் நுட்பமாக உருவாக்கப்பட்ட சிறு மாற்றங்கள் அதனை வெகுமக்கள் அரசியல் இயக்கமாக்க உதவியது. இந்தியாவில் பிரதேச நலன் கருதிய இயக்கங்கள் இல்லை என்பதில்லை. ஆனால் அவை காஷ்மீரின் தேசிய மாநாட்டுக் கட்சி அல்லது அகாலிதளம் போன்ற மத அடிப்படையிலானவையாக இருந்தன. இவை தவிர்த்த வடகிழக்கு மாநில நாகா போன்ற அமைப்புகள் ஆயுதப் போராட்டக்குழு ஆகின. இந்தியத்தின் அடிப்படையான மதவாதத்தை, குறிப்பாக இந்துமதம் என்பதை ஏற்காத இனம் மற்றும் மொழி அடிப்படையிலான 'பகுத்தறிவுவாத' அரசியல் கட்சி இன்றளவும் சாத்தியமில்லை என்பது கருதத்தக்கது. அண்ணாவின் ஆட்சியாளர் பணி வெகுகாலம் நிகழ்வில்லை. தமிழ்நாடு பெயர் மாற்றம், சுயமரியாதைத் திருமணச்சட்டம் போன்றவற்றை முன்னெடுத்தவர் தொடர முடியாமல் போனார். ஆட்சிப் பொறுப்பு கலைஞரிடம் வந்தது.

கலைஞர் நாளின் ஒருபொழுதுகூட தன்னை அண்ணாவின் தம்பி என்ற நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ளவில்லை என்பதில் துவங்குகிறது கலைஞர் பங்களிப்பு. பெரியார், அண்ணா சிந்தனைகளின் செறிவான தொகுதியென ஐயமின்றிச் சொல்ல முடியும்.

கலைஞர் தன்னை ஒரு சிந்தனையாளராக முன்னிருத்தாத பண்பே அந்தச் செறிவிற்கான சான்று. எல்லாவிதமான சிந்தனைகளும், அதனை ஏற்றுக் கொண்ட ஆளுமையின் உள்ளார்ந்த வடிவமாகிப் போவது அரிது. அந்தச் சிறப்புநிலை கலைஞருக்கு வாய்த்தது. அதனால்தான் அவரால் இயல்பாக பெரியாரது, அண்ணாவினது சிந்தனைகளைச் செயல்வடிவாக்க முடிந்தது. ஆட்சியாளரின் கடுமையான சவால், தன் எண்ணங்களை ஐயமற “நிரந்தர அதிகாரத்திடம்” வலியுறுத்திச் சொல்வது. அதிகாரத்தின் குரல் ஆணவமானது. மக்கள் நலன் கருதும் எளிய மனிதரைக் கேலி செய்ய, இடற ஒருபோதும் அது தயங்காது. தீர்க்கமான கருத்தியல் நிலைப்பாடற்ற அரசியல் தலைமைகளைக் குழப்புவதும், திசை திருப்புவதும் அதன் அடிப்படை குணாம்சம். “என்ன செய்ய வேண்டுமெனச் சொல்லுங்கள், சாத்தியமா, சட்டம் அனுமதிக்கிறதா, பொருளாதாரம் உள்ளதா எனப் பார்த்துச் சொல்கிறோம்” என்பதே அதன் நிரந்தர மொழி. கலைஞர் அதனிடம், “இதுதான் நடக்க வேண்டும். அதை எப்படிச் சாத்தியமாக்குவது, என்பதை மட்டும் சொல்லுங்கள்” என்றே பேசினார். அதிகாரத்திற்கு இந்த மொழியும், நோக்கம் குறித்த தெளிவும் அரிது. சமீபத்தில் வெளிவந்திருக்கும் அந்நாளைய இந்திய ஆட்சிப் பணி அதிகாரி திரு நாராயணன் அவர்களின் நூல் இதற்குச் சாட்சியம் சொல்லும். இந்தப் புள்ளியில் ஒன்றைத் தெளிவு செய்து கொள்வது நல்லது. கலைஞர் குறித்த மதிப்பீடுகளில், கவனமாக தொகுத்துக் கொள்ள வேண்டியது, அவருக்குத் துணைநின்ற கட்சிப் பொறுப்பாளர்களுக்கு அவர் செவிமடுத்த வகை.

கலைஞர் ஆட்சிக் கட்டிலில் ஏறிய சூழல் தில்லி அரசியல் கலகலத்து விட்டிருந்தது. இந்திரா அம்மையாரின் பழமைவாத காங்கிரஸ் சிண்டிகேட் உடனான களத்தில் அவருக்குத் துணை நின்றதில் துவங்கியது திமுக முன் கை. இந்திரா வங்கிகளை தேசியமயமாக்கினார் என்றால், இங்கு போக்குவரத்துத் துறை நாட்டுடைமை ஆனது. முதல் அதிரடியே மாற்றத்திற்கான தொனியை வலுவாக நிறுவியது. நாட்டுடைமையான இரண்டு நிறுவனங்கள் (டிவிஎஸ், ராமன் & ராமன்) பார்ப்பன நிறுவனங்கள். அடுத்தபடியான நடவடிக்கைகள் விறுவிறுவெனத் தொடர்ந்தன. 1969 முதல் 1976 வரையான கலைஞர் ஆட்சிக்காலம் மிக விரிவான ஆய்வுக்கான தொகுதி. ஏற்கனவே பொருளாதார வல்லுநர்கள் பேரா. ஜெயரஞ்சன் போன்றோரால் நிலம் மற்றும் அரிசிக் கொள்கை தொடர்பான வெகுவான நேர்மறை விளைவுகள் பற்றிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. நல் வாய்ப்பாக அதை அவரே வெகுமக்கள் மொழியிலேயே விரிவாக விளக்கியும் இருக்கும் ஒன்று. குறிப்பாக, இவ்விரண்டு தளங்களில் நடந்தவை அடிநிலை மனிதர்களுக்கான நில உடைமையையும், பசிப் பிணியையும் நீக்கியது என்பது மறுக்க இயலாத உண்மை. அது தவிர்த்து சட்டவடிவுகளில் நிகழ்த்தப்பட்ட இடையீடுகள், கல்வி மற்றும் சுகாதாரத்துறை நடவடிக்கைகள், கல்வித்துறை சார்ந்த, மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் போன்றவை பேரா. விஜய் பாஸ்கர், பேரா. ஆனந்தி, பேரா.கலையரசன் போன்ற சென்னை வள ஆய்வு நிறுவன ஆய்வாளர்களால் விரிவான ஆய்வுக்குள்ளாகியுள்ள தொகுதி. ஒரு

கட்டுரைக்குள் அடக்கிவிடும் விடயம் அல்ல. அரசமைப்பு மாற்ற முயற்சி, அரசியக்க மாற்றம் என இரு பொது நிலைகளில் இதைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

முதலில் அரசமைப்புத்தளத்தில் நடந்த இடையீடு. திராவிடநாடு, பிரிவினைவாதத் தடைச்சட்டத்தால் ‘கைவிடப்பட வேண்டியதான’ பொழுதிற்கு முன்னரே, இங்கே விவாதப் பொருளாய் இருந்தன “மாநில சுயாட்சி” மற்றும் “கூட்டாட்சி” என்ற கருத்தாக்கங்கள். திராவிடநாடு பற்றிய விவரணைகளில் “திராவிடநாடு பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய கூட்டாட்சி ஒன்றியம்” எனத் தெளிவாக வரையறுத்தார் அண்ணா. இந்திய அரசியல் சாசன உருவாக்கச் சபை குறித்த வாசிப்பை, திருப்பங்கள் நிறைந்த கதை வாசிப்பு ஆர்வலர்களுக்கு உத்தரவாதமாய்ப் பரிந்துரைப்பேன். மூன்றடுக்கு இந்தியத் துணைக்கண்ட ஆட்சி என்பதாகத் துவங்கி, அந்த நிலப்பகுதியை ரத்தக்களரியான இரண்டு தேசங்களாகப் பிரித்து முடித்த கதை. காந்தியார் ஏன் இந்தியச் சுதந்திரநாளில் கொல்கத்தாவின் இருளறை ஒன்றில் அடைந்து கிடந்தார் என்பதையும் சேர்த்து வாசித்தால் ஓரளவிற்கு “இந்திய தேசியம்” உருவான கதை மூலம் புரியும். சோசலிச, சமத்துவ, மதச்சார்பற்ற, கூட்டாட்சி ஒன்றியம் என்பதாக பிரேரிக்கப்பட்ட ஒன்று, இறுதியாக இதன் எந்தப் பண்புமற்ற ஒன்றாக வந்துதித்தது. சந்தர்ப்பவசமாக நேருவால் உருவான பிரிவினை நெருக்கடி, மோசமான மதவாத கொலைக்களமாக மாறாமல் ஆனது அவரது சராசரியான, ஆனால் நம்பகமான

மதச்சார்பற்ற தலைமையினால் என்பதும் மெய். இந்திய அரசியல் சாசன அவை இந்தியா கூட்டாட்சி அல்ல என்பதை ஐயமறப் பேசியே அரசியல் சாசனத்தைத் தனதாக்கிக் கொண்டது. ஆனாலும் இன்றளவும் இது ஒரு கூட்டாட்சி என்பதான மாய்மாலம் தொடரவே செய்கிறது.நிற்க. இந்தப் பொய்யை வெளிப்படுத்தியது கலைஞர் அமைத்த மத்திய - மாநில உறவுகள், அதிகாரப் பகிர்வுகள் தொடர்பில் ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நியமித்த ராஜமன்னார் குழு. இந்திய ஒன்றியத்தின் இந்த ரீதியிலான முதலாவது முன்னெடுப்பு, அதையும் ஒரு மாநில அரசு செய்யத் துணிந்தது என்பதை வரலாறு ஆச்சர்யத்துடனே பதிவு செய்யும். ராஜமன்னார் குழு அறிக்கையின் பரிந்துரைகள் பாரதூரமான விளைவுகளை நிகழ்த்தவல்லவை. இனிவரும் காலங்களுக்கும் அது உதவும். எந்தவிதக் கருத்துநிலைகளுமின்றி தமிழ் தேசியம் பேசுவோர் அதை வாசித்தால் அவர்களுக்கான அடிப்படைகள் ஒன்றிரண்டை அவர்களால் கண்டடைய முடியும்.

இதே காலத்தில் நிகழ்ந்த இன்னொரு நிகழ்வு சுயமரியாதைத் திருமணச் சட்டம். தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய சட்டவடிவை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பகுதியாக்க நடந்த விவாதங்கள் ஆர்வமூட்டுபவை. சுயமரியாதைத் திருமணம் இந்து திருமணமோ, சிறப்புத் திருமணமோ அல்ல என்பதே வாதத்தின் அடிப்படை. எளிமையாகத் தோன்றும் இந்த வாதத்தை விரித்தால் பெரியாரின் சுயமரியாதை என்ற அடிப்படைக் கருத்தாக்கம் இந்தியத்திற்கு விளக்கப்பட்ட விதம் பெரும்

ஆய்வுத் தொகுதி. பேரா. ஆனந்தி அவர்களின் வழிநடத்தலில் நிகழ்ந்துவருகிறது. சுயமரியாதைத் திருமணம் “இந்து” எனும் வகைமைக்கு வெளியே தனக்கான இருப்பைக் கொண்ட ஒன்று. சிறப்புத் திருமணங்கள் மதம் கடந்தது, அதாவது இந்து திருமணச் சட்டம் அல்லது கிறித்தவ அல்லது இஸ்லாமியத் திருமணச் சட்டங்களுக்குக் கீழ் வராதது. அதாவது இரண்டு வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் மதம் மாறாமல், அவரவர் மதத்தில் தொடர்ந்தபடி செய்து கொள்ளும் திருமணம் ஆனால் சுயமரியாதைத் திருமணம் மதமறுப்பை, சடங்கு ரீதியான எந்தவித மத அங்கீகாரத்தையும் கோராதது. அதாவது, இந்து மதத்தில் அல்லது பிற மதத்தில் பிறந்த, ஒரே மதத்தைச் சேர்ந்த இருவர் அவர்களைக் கட்டுப்படுத்தும் திருமணச் சட்டத்திற்கு வெளியே, அதன் விதிகளை நிராகரித்துச் செய்து கொள்ளும் திருமணம். இவ்வளவு மெனக்கெட்டு இவர்கள் நாடாளுமன்றத்தில் வைத்த வாதங்கள் பிற மாநிலத்தவர்க்கு அதிர்ச்சியையும், ஆச்சர்யத்தையும் அளித்தது. முதலில் எதற்காக இந்தச் சிறப்புச் சட்டம் என நிராகரிப்புத் தொனியில் பேசியவர்கள் அதிர்ந்து போனார்கள். பெரியாரின் சுயமரியாதை எனும் கோட்பாட்டை நாடாளுமன்ற அவைகளில் விரிவாகப் பேசி அந்தச் சட்ட வடிவிற்கு அங்கீகாரம் பெற்றனர். அறியாதவர்க்கு அல்லது அறிய விரும்பாதவர்க்கு எளிதாகத் தோன்றலாம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் “சுயமரியாதை” என்ற கருத்தாக்கம் விளக்கவுரையோடு பதிவாகியுள்ளது என்பது வரலாறுதான். அதனைச் செய்தது கலைஞர்

தலைமையிலான திமுக தான் என்பது பெரும் மைல்கல் நிகழ்வுதான்.

அடுத்து அரசத்துவத் தளத்தில் சமூகநீதி சட்டவிதிகள். சமூகநீதி திராவிட இயக்கத்தின் அடிநாதம் என்பது அறிந்ததே. 1920 ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சியில் துவங்கிய பணி. கலைஞரின் சமூகநீதி நடவடிக்கைகள் ஒரு பெரும் நூல் தொகுதிக்கான தரவு. ஒவ்வொரு ஆணைக்குப் பின்னாலும் வலி மிகுந்த வரலாறு உண்டு. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூக மேன்மைக்காக அவர் உருவாக்கிய சட்ட வரையறைகளைப் பட்டியலிட்டால் வெகுவாக நீளும். கிடைத்த முதல் வாய்ப்பில் சமூகநீதி தொடர்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்தபடி இருந்தார். ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் அதனை வளர்த்தெடுத்தபடியும் இருந்தார். முதல் காலத்தில் (71-76) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஒதுக்கீட்டை 18%, 1% எனவும், பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டை 30% எனவும் உயர்த்தினார். எம்ஜிஆர். குழப்பத்தில் 50% ஆன பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை வகை பிரித்து பிற்படுத்தப்பட்டோர் 30%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 20% என ஆக்கியவர் அவரே. அடுத்த கட்டத்தில் உள் ஒதுக்கீடுகள் வழி இஸ்லாமியருக்கு 3.5% ஒதுக்கீடு செய்ததும், அருந்ததியருக்கு 3% ஒதுக்கீடும் அவரது நடவடிக்கையே. சமூகநீதி இங்கு மட்டுமில்லை, உள்ளாட்சி அமைப்புகளில் 33% மகளிருக்கு ஒதுக்கியதும் அவரே. இந்தப் பட்டியல் முடிவற்றது.

அரசியக்கத்தளத்திலான அவரது பணிகள் எண்ணிலடங்காதவை. கண்ணொளி வழங்கும்

திட்டம் துவங்கி கைரிக்ஷா ஒழிப்பு, குடிசை மாற்று வாரியம், இரந்து வாழ்வோர் மறுவாழ்வு இல்லம், தொழுநோய்ப் பிணி தொற்றியோர் காப்பகம், என நீளும் பட்டியலைக் கொஞ்சம் கூர்ந்து கவனியுங்கள், அவை “பராசக்தி” திரைப்படத்தில் இடித்துரைக்கப்பட்டவை. அவற்றை கலைப்பதாகச் சொல்லி ஆட்சிக் கட்டில் ஏறியவரின் முதல் பணி அங்கிருந்தே துவங்கியது. அரசியக்கத்தின் அசலான தளத்தில் உருவாக்கப்பட்ட தொழிற்கொள்கை, அதன் வழி தோன்றிய  சிட்கோ, சிப்காட் எனத் தொழிற்பேட்டைகள். ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு இணையான டான்சி, அக்ரோ இண்டஸ்ட்ரிஸ், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என மாநில அரசு நிறுவனங்கள். இந்தியாவிற்கே புது மாதிரியான, சவாலான, அரசு / தனியார் துறையாக ஸ்பிக் எனும் பிரமாண்ட உர ஆலை. எல்காட் எனும் எலக்ட்ரானிக்ஸ் துறை சார் நிறுவனம். உண்மையாகவே இது முடிவில்லாத பட்டியல். எண்ணினால் வியப்பில் ஆழ்த்திவிடும். திராவிட ஆட்சியைத் தூற்றுவோர் வாயடைத்துப் போவார்கள். தொழில், அதிலும் கனரகத் தொழில் பெரிதாக உருவான போதே, அதனால் நசுக்கப்பட வாய்ப்புள்ள எளிய மக்கள் வயிறு காயாமல் பார்த்துக்கொண்ட பொது விநியோகத் திட்டம் ஒன்று போதும் அதற்குச் சாட்சி சொல்ல. அதற்காகவே உருவான, மாநிலமே நெல் கொள்முதல் செய்யும்,  நுகர் பொருள் வாணிபக் கழகம். இவர் துவங்கியவர் மட்டுமல்ல, இதுவே திராவிடக் கட்சிகளின் அரசியல் களப் போட்டியாக மாற்றியவரும் அவர்தான். அதனால்தான் அவரைத்

தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்றவர்களில், ஜெய லலிதா போன்ற பிற்போக்கு, திராவிட எதிர்ப்புக் கருத்தியல் சார்ந்தவரையும், அந்தத் திட்டங்களைத் தொடரும்படி நிர்பந்தித்தார்.

அரசியக்கத்தளத்திலான கலைஞர் பங்களிப்பைப் பேச இந்தக் கட்டுரையின் அளவு ஒருதுளிதான். கல்வித்தளத்தில் ஏழை, கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்க்கு அவர் உருவாக்கிய திட்டங்கள் எத்தனையோ. இலவசக்கல்வி தொடங்கி நுழைவுத் தேர்வில் கிராமப்புற மாணவர்க்கு சலுகைவரை ஏராளம். மட்டுமல்ல, சமூகநீதி நடவடிக்கைகள் தடை செய்யப் பட்டால், அதனை உடைத்து வெளியேறும் தீரமும் அவரிடமுண்டு. கிராமப்புற மாணவர்க்கான சலுகை தடை செய்யப்பட்டதும், கொதித்தெழுந்து நுழைவுத் தேர்வையே ஒழித்தார் அவர். ஒன்றைச் சொல்லி நிறைவு செய்யலாம். பல்வேறு முறைசாராத் துறையினர்க்கு வாரியம் கண்ட தலைவர்; மூன்றாம் பாலினத்தவர்க்குக் கண்ட வாரியம், பெரியாரியச் சிந்தனையாளர் ஒருவரால் அன்றி வேறு எவராலும் நினைத்துக்கூடப் பார்க்க இயலாது. அவர்களை திருநங்கைகள் என அழைப்பதை அதிகாரப்பூர்வமாக்கிய நடவடிக்கையும், அதை நாடாளுமன்றத்தில் ஒருநபர் தீர்மானமாக நிறைவேற்றச் செய்ததும் இயல்பில் நிகழ்வதில்லை. சமூகநீதி சில நேரங்களில் பொதுநீதியும் ஆனது. கிராமப்புற மாணவர்க்கு ஒதுக்கீடு பொதுத் தொகுதிக்கும் சேர்த்தே, அதேபோல் அரிதான திட்டமான நாற்பத்தைந்து வயதிற்கு மேல் மணமாகாமல் இருக்கும்

மகளிர்க்கான மாதாந்திர உதவித் தொகை பொதுத் தொகுதிக்கும் உண்டு என்பது. இந்தியாவிற்கே மாதிரியான கணினிக் கொள்கை உருவாக்கி வழிகாட்டி சென்னையை, தமிழ்நாட்டை கணினித்துறையின் வளமையம் ஆக்கியதும், டைடல் பார்க் முதல் ராமாநுஜம் ஐடி பார்க் வரை அவரே. அவரது மகளிருக்கான உதவித் திட்டம் கல்வி துவங்கி திருமணம், மகப்பேறு, பெண் குழந்தைகள் உதவித் தொகை என நீண்டபடியே இருக்கும்.இந்தவகையில் இந்தக் கட்டுரை நிறைவுராது.எனவே நிறுத்துகிறேன். அதன் முழுமை கண்கூடாக தமிழ் வாழ்வு வெளியெங்கும் நிறைந்து நிற்கையில், வார்த்தைகளின் போதாமையைப் பொருத்தருள இயலும்.

கலைஞர் போன்ற  சிந்தனையையும், செயலையும் அரசுத் தளத்திலும், வெகுமக்கள் தளத்திலும் ஒருங்கிணைத்துச் செயலாற்றவல்ல தலைவரை / தொண்டரைப் பெறாமல் போயிருந்தால் பெரியார், அண்ணாவின் உயர் சிந்தனைகள் இந்த வகையில் அரங்கேறியிருக்குமா என்ற நியாயமான ஐயம் தோன்றவே செய்யும். இந்த எண்ணம் அந்தச் சிந்தனைகள் மீதான ஐயப்பாடு தொடர்பில் இல்லை, அதனைச் “செயல்களாக” மாற்றிய வகையில் மட்டுமே. அந்த வகையில் பெரியார், அண்ணாவின் பெருந்தொண்டன் கலைஞர் மட்டுமே.

subagunarajan@gmail.com

# தமிழர் வரலாற்றில் கலைஞர் என்றொரு மாபெரும் ஆளுமை

*ந.முருகேசபாண்டியன்*



கடந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களின் தொகுப்பாக விரிந்திடும் வரலாறு என்பது,

நுண்ணரசியல் பின்புலமுடையது. ஒரு குறிப்பிட்ட காலவெளியில் மனிதர்கள் இப்படியெல்லாம் இருந்தனர் எனச் சித்திரிக்கப்படுகிற விவரணையில், தனிமனிதர்களின் செயல்பாடுகள், பல்வேறு நிலைகளில் இயங்குகின்றன.  சமூகத் தேவையின்பொருட்டு வரலாறு தேர்ந்தெடுத்து உருவாக்குகிற மாபெரும் ஆளுமைகள், எப்பொழுதும் தனிச்சிறப்புடையவர்கள்.இன்னொரு நிலையில் சமூக வரலாற்றில் பாத்திரமாக உருவாகி, ஒரு காலகட்டத்தின் சமூகச் செயல்பாடுகள்மீது ஆதிக்கம் செலுத்துகிற ஆளுமைகள், ஒரு கட்டத்தில் வரலாற்றை உருவாக்குகிறவர்களாக மாறுகின்றனர். வரலாற்றுத் தேவையினால் கட்டமைக்கப்படும் நாயகர்கள், வேறுபட்ட தளங்களில் சமூகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் சூழலில், தனிமனிதனாகச் செய்கிற சாதனைகள், காலங்கடந்த சிறப்பினை முன்னிறுத்துகின்றன. இரண்டாயிரமாண்டு வரலாற்றுப் பின்புலமுடைய தமிழர் வாழ்க்கையில், ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூக இயக்கத்தையும் தேவைகளையும் நேர்மறையாகத் துரிதப்படுத்துகிறவர்களின் செயல்கள் கவனத்திற்குரியன. தமிழகத்தின் வரலாற்றுச் சூழலை அவதானிக்கையில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மதுரையில் ஏற்படுத்தப்பட்ட டில்லி  சுல்தான்களின் ஆட்சியைத் தொடர்ந்து தெலுங்கர், மராட்டியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் என வேற்று மொழியினரின் ஆட்சியதிகாரம் நிலவியதை அறிய முடிகிறது. ஏற்கனவே பல நூற்றாண்டுகளாக வைதீக இந்து சமயத்தின் ஆதிக்கத்தில் சம்ஸ்கிருத மொழியின்

ஆளுகையுடன் போராடிக்கொண்டிருந்த தமிழ் மொழியானது தெலுங்கு, மராத்தி, பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளின் ஆதிக்கத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தமிழை முன்வைத்து நடைபெற்ற அரசியல் என்பது ஒருவகையில் தமிழர் பண்பாட்டு அடையாள அரசியலாகும். குமரகுருபரர், வள்ளலார், பாரதியார் போன்ற கவிஞர்கள் தொடங்கித் தமிழுக்கான பேச்சுகள் பேசுவதற்கான நெருக்கடி ஏற்பட்டது, தமிழர் வரலாற்றில் முக்கியமானதாகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்கூட தமிழ் மொழி எதிர்கொண்ட சவால்கள் ஏராளம். இத்தகு சூழலில் தமிழை முன்னிறுத்தித் தமிழறிஞர்கள் எழுதிய எழுத்துகளால் ஈர்க்கப்பட்டு, இலக்கிய உலகிலும் கலைத்துறையிலும் அடியெடுத்து வைத்த கலைஞர் என அழைக்கப்படுகிற கருணாநிதியின் பிரவேசம், ஒப்பீடு அற்றது. பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையின் விளைவாகத் தமிழக வரலாற்றுப் போக்குகளைக் கேள்விக்குள்ளாக்கிய கலைஞரின் பன்முக ஆற்றல்கள், அவரை வரலாற்றை உருவாக்குகிறவராக மாற்றியமைத்தன. தமிழக வரலாற்றில் தனிநபரின் பாத்திரம் என்னவெல்லாம் செய்யும் என்பதற்கு அடையாளமாக விளங்குகிற கலைஞரின்  பன்முக ஆளுமைத்திறன் தனித்துவமானது. கலைஞர் என்ற அரசியல்வாதி, உருவாவதற்கான சமூகப் பின்புலம் குறித்த பதிவுகள், தமிழர் வரலாற்றில் என்றும் கவனத்திற்குரியன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழக நிலவெளியில் தமிழரின் வாழ்க்கையானது, ஒருபுறம் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் காலனிய ஆதிக்க ஆட்சியினால் நலிவடைந்திருந்தது; இன்னொருபுறம் வைதீக இந்து மதத்தின் ஆச்சார நெறிகளுக்குள் ஒடுங்கியிருந்தது. வைதீக சமயம் முன்னிறுத்திய சநாதன தருமத்தின் விளைவாக மேலோங்கியிருந்த பார்ப்பனீயம், பிறப்பின் அடிப்படையில் மனிதர்களுக்கு இடையில் மேல்கீழ் கற்பித்துத் தீண்டாமையை வலியுறுத்தியது. நிலத்தில் வேளாண்மையின்மூலம் தானியங்களை உற்பத்தி செய்கிற பள்ளர்கள் தொடங்கி கொல்லர், குயவர், நாவிதர், வண்ணார், ஆசாரி போன்ற சேவைச் சாதியினர் எல்லோரையும் இழிவாகக் கருதும் நிலை நிலவியது. பஞ்சமர் எனப்பட்ட தலித்துகளைச் சமூக அடுக்கில் கீழானவர்களாக ஒடுக்கிடும் சாதிய அரசியல் வலுவாக இருந்தது. சாதி, மத ஒடுக்குமுறையுடன் பொருளாதார நிலையில் வாடிவதங்கிய விளிம்புநிலையினரான தமிழர்கள் மலேஷியா, மொரீஷியஸ், பிஜி, டச்சுக் கயானா, ரீ யூனியன் போன்ற நாடுகளுக்குக் கூலிகளாகப் புலம்பெயர்ந்து அடைந்த துயரங்கள் அளவற்றவை. ஆங்கிலேயரின் ஆட்சியில் அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்களினால், அடித்தட்டு மக்கள் பல்லாயிரக்கணக்கில் மடிந்தபோது ஆங்கிலேயரும், அவர்களுடைய அடிவருடிகளாக அரசாங்கத்தில் உயர் பதவிகள் வகித்த பிராமணர்களும், உயர்சாதியினரும் வளமாக இருந்தனர். கிராமங்களில் செல்வாக்குடன் விளங்கிய நிலப்பிரபுக்கள், பார்ப்பனர்களுடன்

சேர்ந்துகொண்டு, வருணாசிரம முறையைக் கறாராக அமல்படுத்தினர். அத்துமீறல் எனக் கருதப்பட்டால் விளிம்பு நிலையினருக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. இந்தியர்களின் போராட்ட மனநிலைக்கு வடிகாலாக விளங்குவதற்காக ஆங்கிலேயரால் தோற்றுவிக்கப்பட்ட காங்கிரஸ் பேரியக்கம், காலப்போக்கில் விடுதலைப் போராளிகளின் களமாக மாறியது. இத்தகு சூழலில் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய புதிய வகைப்பட்ட கல்விமுறையினால் பெண்கள் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட சாதியினரும் படிக்கலாம் என்ற நிலை, சமூக அமைப்பில் காத்திரமான பாதிப்புகளை ஏற்படுத்தியது. ஆங்கிலக் கல்வியின் விளைவாக இந்தியச் சமூக அமைப்பில் வைதீக இந்து மதம், பல நூற்றாண்டுகளாக உருவாக்கியிருந்த கொடூரமான செயல்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. சதி என்ற பெயரில் கணவனை இழந்த இளம் பெண்ணைச் சிதை நெருப்பில் எரித்தல், குழந்தை மணம் போன்ற மத அடிப்படைவாதச் செயல்பாடுகளைத் தடுக்கும்வகையில் ஆங்கிலேய அரசு இயற்றிய சீர்திருத்தச் சட்டங்கள், அதுவரை சமூக அடுக்கில் சௌகரியமாக உச்சியில் இருந்த பார்ப்பனர்கள் உள்ளிட்ட உயர்சாதியினரின் இடத்தை அசைத்தன. இதனால் பாரம்பரியமான தங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டதாகக் கருதிய சநாதனவாதிகள், ஆங்கிலேயருடன் கருத்துரீதியில் மோதினர். அதேவேளையில் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அயோத்திதாசர் போன்றோர் சாதியரீதியில் இழிவுபடுத்தப்பட்ட மக்களுக்குச் சார்பாக எழுதினர் என்பது

கவனத்திற்குரியது. குலத்தொழில் முறை நிலவிய தமிழகத்தில் இடைநிலைச் சாதியினர் கல்வியினால் விழிப்புணர்வு அடைந்தனர். சோழ ஏகாதிபத்தியக் காலகட்டம் தொடங்கிச் சாதியினால் ஒடுக்கப்பட்டு, தீண்டாமை ஆதிக்கம் செலுத்திய தமிழகத்தில் விளிம்புநிலையினர் மரபு, ஆச்சாரம் என்ற பெயரில் ஆதிக்கம் செலுத்திய மூடத்தனங்களைக் கேள்விக்குள்ளாக்கினர். தமிழகத்தைப் பொருத்தவரையில் நாட்டு விடுதலையை முன்னிலைப்படுத்திய காங்கிரஸ் இயக்கமும், சாதிய, மத அடிப்படைவாதப் போக்குகளுக்கு எதிராகப் போராடிய திராவிடர் இயக்கமும் முக்கியமானவை. அன்றைய காலகட்டத்தில் மக்களைத் தொடர்ந்து மூடத்தனத்திற்குள் மூழ்கடித்த வை◌ீக இந்து மதத்திற்கு எதிராகக் குரலெழுப்பிய பார்ப்பனர் அல்லாதார் அமைப்பு முதலாகத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், நீதிக் கட்சி, திராவிட இயக்கம் போன்ற அமைப்புகளின் பணிகள் குறிப்பிடத்தக்கன. ஆரியர் எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதிகள் ஒழிப்பு, கோவில் நுழைவு, விதவை மறுமணம், பார்ப்பனீய எதிர்ப்பு, வருணாசிரம ஒழிப்பு, பகுத்தறிவு நோக்கு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, தமிழின் மேன்மை, தமிழரின் பண்பாட்டுச் சிறப்பு போன்ற கருத்தியல்கள் குறித்த பேச்சுகள், அன்றைய காலகட்டத்தில் தமிழரின் வாழ்க்கையில் அதிர்வுகளை ஏற்படுத்தின. இத்தகைய பின்புலத்தில்தான் தட்சிணாமூர்த்தி என்ற பெயரில் சிறுவனாக வளர்ந்த கருணாநிதியின் சமூக, அரசியல், கலை இலக்கியச்

செயற்பாடுகளைப் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ள�
தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் என்ற ஊருக்கு அருகிலுள்ள துருக்கோளிலி என்ற திருக்குவளை என்ற செழிப்பாகவும் சிங்காரமாகவும் இருந்த கிராமத்தில் 1924-ஆம் ஆண்டில் பிறந்த கலைஞர், வளர்ந்த சூழல் கவனத்திற்குரியது. பிறப்பினால் இசை வேளாளர் குடும்பத்தில் பிறந்த கலைஞர், நிலப்பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்திய காவிரி டெல்டா பகுதியில் ஏராளமான  பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்திருந்தார். சாதியத்தின் இறுக்கம் நிலவிய சமூகச் சூழலில், ஒடுக்கப்பட்ட சாதியப் பின்புலத்தில் இருந்து வந்த கலைஞரின் மனம், சிறுவனாக இருந்தபோது நிச்சயம் துயரமடைந்திருக்கும். சாதியானது ஏன் இப்படி மனிதர்களுக்குள் பேதங்களை உருவாக்கி, மனித உறவுகளை நாசமாக்குகிறது என நடைமுறை வாழ்க்கையிலிருந்து கலைஞர் கற்றுக்கொண்டார். கிராமத்தில் இருந்து உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்திட திருவாரூருக்குச் சென்ற கலைஞரின் உத்வேகம், புதிய கோணத்தில் வெளிப்பட்டது. கலைஞரின் வாழ்க்கையை கருத்தியல் வெளிப்பாடு, அரசியல் நடவடிக்கைகள் என நுணுக்கமாக ஆராய்ந்தால், இளம் கலைஞர், கலைஞர் எனப் பிரிக்கலாம். 1941-இல் திருவாரூரில் பதினேழு வயதான கருணாநிதி, ‘தமிழ் மாணவர் மன்றம்’ தொடங்கியதிலிருந்து, 1967-இல் தமிழக அரசில் அமைச்சராகப் பொறுப்பேற்றதுவரை நடைபெற்ற இளம் கலைஞருக்கான செயல்பாடுகள் தனித்துவமானவை. 1969-இல் முதலமைச்சராகப் பதவியேற்றது முதல் கலைஞர், ஒய்வறியாமல்  தமிழ்ச் சமூகத்தின்

மேம்பாட்டிற்க்காகச் செய்த மாபெரும் பணிகள், மகத்தானவை; ஒப்பீடு அற�தட்சிணாமூர்த்தி என்ற கருணாநிதி எதிர்காலத்தில் கலைஞர் என்ற சொல்லால்  அழைக்கப்படுவதற்கேற்ப அவருடைய இளமைப் பருவம், இசையுடன் தொடர்புடையதாக விளங்கியது. கலைஞரின் தந்தையார் முத்துவேலர் நாதஸ்வரம் வாசிப்பதில் ஆர்வமுடையவர்; கவி புனைந்திடும் ஆற்றல் பெற்றவர்; வடமொழிக் கிரந்தங்களில் தேர்ச்சியடைந்தவர்; பாரத, ராமாயணக் கதைகளைச் சொல்கிறவர்; கிராமிய மெட்டுகளில் கேலிப்  பாடல்களை எழுதுகிறவர்; தேவாரம், திருவாசகத்தில் புலமையாளர்; தேர்ந்த விவசாயி. திருக்குவளையில் இருந்த  குத்தகைக்கார அய்யர் என்ற பண்ணையாரின் கொடுமையை எண்ணி விவசாயக் கூலிகள் பயந்திருந்த காலகட்டத்தில் அவரை எதிர்த்து முத்துவேலர்  பாடல் எழுதியுள்ளார். இந்தக் கொடுமைகள் செய்தால் ஏழைகள் என்ன செய்வோம்? இனி பொறுக்க மாட்டோம், ஈட்டியாய், வேலாய் மாறிடுவோம். அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, படைப்புகள் படைக்கிற செயல், சிறுவனாக இருந்த கருணாநிதிக்கு அவருடைய தந்தையாரிடமிருந்து வந்திருக்க வேண்டும். முத்துவேலர், நாதஸ்வரம் வாசிப்புப் பயிற்சியையும் இசைப் பயிற்சியையும், தனது மகனான கருணாநிதிக்கு அளித்திட முயன்றார். கலைஞருக்கு நாதஸ்வர இசையின்மீது ஆர்வம் இருப்பினும், அன்றைய சமூகம், நாதஸ்வர வித்வான்களுக்குச் செய்த அவமரியாதை, அவரிடம் ஆழமான எதிர்ப்புணர்வை ஏற்படுத்தியது. “நாலு பெரிய மனிதர்கள்

இருக்குமிடத்தில் சட்டை போட்டுக்கொண்டு போக முடியாது. மேல் துண்டினை எடுத்து இடுப்பிலே கட்டிக்கொள்ள வேண்டும். செருப்பு அணிந்துகொள்வதும் தவறு. இப்படியெல்லாம் கடுமையான அடிமைத்தனம் தெய்வீகத்தின் பெயராலும், சாதி மத சாத்திர சம்பிரதாயத்தின் பெயராலும் ஒரு சமுதாயத்தினரைக் கொடுமைக்கு ஆளாக்குவதை என் பிஞ்சு மனம் வன்மையாக எதிர்த்துக் கிளம்பியது. அதன் காரணமாக இசைப் பயிற்சியை வெறுத்தேன்" என்று கலைஞர் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில்தான் கோவில்களின் எண்ணிக்கை அதிகம். அங்கே இசை வேளாளர் சாதியைச் சார்ந்த பெண்களுக்குக் கோவிலுக்குப் பொட்டுக்கட்டி விடுகிற வழக்கம் நிலவியது. அந்தப் பெண்கள் சதிர் கச்சேரி செய்கிறவர்களாக இருந்ததுடன், கோவிலுக்கு உரிமையுடையவர்களாகவும் இருந்தனர். எனினும் அவர்களின் சமூக மதிப்பீடு, தேவடியாள் என இழிவாகக் குறிப்பிடுமளவு கேவலமாக இருந்தது. கோவிலுடன் சார்ந்த நாதஸ்வரக் கலைஞர்களின் நிலையும் பொது மதிப்பீட்டில் உயர்வானதாக இல்லை. மரியாதைக்குரிய நாதஸ்வர வித்வானாகத் தமிழகமெங்கும் பிரபலமடைந்து பேரும் புகழும் அடைய வேண்டுமென்ற தந்தையாரின் மரபான கண்ணோட்டம், சிறுவனாக இருந்த கலைஞருக்கு உவப்பானதாக இல்லை. அவர், தன்னுடைய நடப்பு வாழ்க்கையை இலட்சியத்துக்கு அர்ப்பணிக்குமாறு அன்றைய சமூகச் சூழல் நெருக்கடி தந்தது. குலத்தொழில், மரபு, பாரம்பரியம் எனக் கருதாமல், கலையைச் சமூக மதிப்பீட்டின் அடிப்படையில் பத்து வயதுச்

சிறுவனாக இருந்த கலைஞர் கணித்தது, இளமையில் அவருக்குள் இயற்கையாகப் பொதிந்திருந்த சுயமரியாதையின் வெளிப்பாடு ஆகும். அந்த எண்ணம், நாளடைவில் பெரியாரின் குடியரசு பதிப்பக வெளியீடுகளைத் தொடர்ந்து வாசிப்பவராகக் கலைஞரை மாற்றியது. புத்தக வாசிப்பின்மூலம் கண்டறிந்த புதிய உலகமானது, கலைஞரின் கருத்தியலைப் புதிய நோக்கில் வடிவமைத்தது. அதேவேளையில் அவர் எதிர்கொண்ட அனுபவங்கள், சூழல்கள், நடைமுறைகள் போன்றவை அவருடைய அரசியல் மனோபாவத்தை உருவாக்கியதில் முக்கியப் பங்காற்றின. இளைஞனான கலைஞருக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் தன்மானம் அவசியம் என்ற புரிதல் ஏற்பட்டதில், சூழலின் பங்கு கணிசமானது. அவர் தன்னுடைய வாழ்க்கையின் இறுதிவரையிலும் சுயமரியாதைக்காரன் என்ற சொல்லை நடைமுறையில் பின்பற்றியதுடன், உளப்பூர்வமாகவும் நேசித்தார். கலைஞர் என்ற ஆளுமை உருவாக்கத்தில் பெரியாரின் கருத்துகள் எப்பொழுதும் பின்புலமாக இருக்கின்றன. அவர் சாதிய இழிவு, கட்புலன்களுக்குப் புலப்படாதவகையில் எப்பொழுதும் தன்னைத் துரத்துவதை அறிந்து, அதற்கெதிரான போராட்டத்தில் கடைசிவரை முனைப்புடன் ஈடுபட்டிருந்தார். அந்தவகையில் கலைஞர் சாதியத்துடன் ஒருபோதும் சமரசம் செய்யவில்லை.

திருவாரூரில் பள்ளிக்கூட மாணவனாக இருந்த கலைஞர், பெரிதும் பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டிருந்தார். அன்றைய காலகட்டத்தில் புராணங்கள், பக்தி

இலக்கியங்கள், கடவுளர்களின் கதைகள் போன்றவை பெரிய அளவில் மக்களிடம் ஆதிக்கம் செலுத்தின. விண்ணுலகில் இருப்பதாக நம்பப்படுகிற கடவுள்களின் பெயரால் அவிழ்த்து விடப்பட்ட புராணப் புளுகுகளை உண்மையென்று நம்புகிறவர்கள் கணிசமாக இருந்தனர். எல்லாவற்றுக்கும் தலைவிதி என்ற மூடநம்பிக்கையின் பின்னர் வைதீக இந்து மதம் ஆதிக்கம் செலுத்தியது. பெரியார், கடவுளின் பெயரால் நடைபெறும் செயல்களைப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் கடுமையாக விமர்சித்தார். சாதி, சமயம் கடந்த நிலையில் பெரியார் நடத்திய குடியரசு பத்திரிகையின் வாசகரான கலைஞர், தான் சரியென நம்பியதை நடைமுறைப்படுத்துவதில் இளைஞனாக இருக்கும்போதே முனைந்து செயல்பட்டார். கலைஞர் பள்ளி மாணவர் சங்க ஆண்டு விழாவில் துருவன் நாடகத்தில் இந்திரனாக வேடமிட்டுச் சுயமாகப் பேசிய வசனங்கள், அவருடைய வைதீக இந்து மத எதிர்ப்பினுக்கு அடையாளமாகும். “அகல்யாவிடம் கொஞ்சியதற்குத்தான் உடம்பெல்லாம் கண்ணாகிப் போகுமாறு சாபம் பெற்றுவிட்டேன். ஒரு கண் இரண்டு கண்கள் இருக்கும் தேவர்களே காதல் வியாதியால் கஷ்டப்படும்போது ஆயிரங்கண்ணுடையான் நான் என்ன செய்வேன்? ஏனய்யா நாரதரே! எனக்குத்தான் ஆயிரம் கண்கள்; காளிதேவியையும் ஆயிரங்கண்ணுடையாள் என்கிறார்களே அவளுக்கும் என்னைப்போல ஏதாவது சாபந்தானோ?” மாணவப் பருவத்திலே புராணக் கடவுளர்களைக் கேலியுடன் விமர்சிப்பது, கலைஞரின் இயல்பாயிற்று. துருவன் நாடகத்தில்

நடிக்கும்போது கலைஞரின் வயது பதினாறு. அந்த வயதில் புராண எதிர்ப்பை உள்ளடக்கிய கலகக்குரலை நாடகத்தில் பதிவாக்கியது, எதிர்காலத்தில் அவருடைய அரசியல் வாழ்க்கைக்கான தொடக்கம் என்று சொல்ல முடியும். அவருடைய செயல், சாதி, சமய ஆதிக்கம் நிலவிய நிலப்பிரபுத்துவச் சமூகத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடியது என்பதை நன்கு அறிந்தும் பதின்பருவத்தில் துணிந்து செயல்பட்டுள்ளார்.

1936-ஆம் ஆண்டில் திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் சேர்வதற்காகத் தனது உயிரை மாய்த்துக்கொள்வேன் என்று பன்னிரண்டு வயதுச் சிறுவனான கருணாநிதி, தலைமை ஆசிரியர் கஸ்தூரி அய்யங்காரிடம் போராடிய காலத்திலே அவருக்குள் ‘தான்’ என்ற எண்ணம் உருவாகி விட்டிருந்தது. போராட்டம் என்பது அவருடைய வாழ்வின் இறுதிக்காலத்திலும் பிரிக்க முடியாத அம்சமாக இடம் பெறப்போவதற்கான முன்னறிவிப்பாகப் பள்ளிப் பருவத்தில் நடைபெற்ற சம்பவம் சுட்டுகிறது. ஐந்தாம் வகுப்பில் பள்ளிப் பாடத்தில் துணைப் பாடமாக இருந்த ‘பனகல் அரசர்’ என்ற சுமார் ஐம்பது பக்கங்கள் கொண்ட புத்தகம், நீதிக்கட்சியின் செயல்பாடுகளைக் கருணாநிதிக்கு அறிமுகப்படுத்தியது. இட ஒதுக்கீடு, தனியாரிடமிருந்த கோவில்களை அரசு கைப்பற்றியது, தேவதாசி ஒழிப்புச் சட்டம், பார்ப்பனர் அல்லாதவர் அரசியல் போன்ற நீதிக்கட்சியின் செயல்பாடுகளால் இளைஞராக இருந்த கருணாநிதி கவரப்பட்டார்.

அதேவேளையில் அவர் குடியரசு பதிப்பகத்தின் அரசியல் கருத்துகள் மீதான ஈடுபாட்டினால் பெரியாரையும், அண்ணாவையும் தனது தலைவர்களாக ஏற்றுக் கொண்டார். எட்டாம் வகுப்பு மாணவனாக இருந்தபோது, சிறுவர் சீர்திருத்தச் சங்கம், தமிழ்நாடு மாணவர் மன்றம் போன்ற அமைப்புகளை ஏற்படுத்தியதுடன், ‘மாணவ நேசன்’ என்ற மாதமிருமுறை வெளியாகும் கையெழுத்துப் பத்திரிகையையும் நடத்தினார். திருவாரூரில் ‘தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்‘ என்ற அமைப்பின் தொடக்க விழாவிற்கு வாழ்த்துப்பா வழங்குமாறு 11.11.1942 ஆம் நாள் பாவேந்தர் பாரதிதாசனுக்குக் கருணாநிதி கடிதம் எழுதினார். பாரதிதாசனிடமிருந்து 20.11.1942 ஆம் நாள் அஞ்சலில் வந்த வாழ்த்துப்பா, கலைஞருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் உற்சாகம் அளித்தது.

தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்

தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண்

எனத் தொடங்கி,

கிளம்பிற்றுக் காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்!

கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!

என முழக்கமிட்ட பாவேந்தரின் பாடல் வரிகள் உயிர்த்துடிப்புடன் விளங்கின.

பள்ளி மாணவன் என்று கருதிவிடாமல், கவிஞர் பாரதிதாசன் மதித்து அனுப்பிய வாழ்த்துப்பா, கலைஞரின் எழுத்தார்வத்திற்குத் தூண்டுகோலானது. திருக்குவளை என்ற கிராமத்தில் பிறந்திட்ட கருணாநிதியின் மனதில்

பாவேந்தரின் பாடல், நுட்பமான விளைவுகளை நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும். இந்தச் சம்பவத்தினால் பாரதிதாசன் பாடல்களை ஆர்வத்துடன் வாசித்த கலைஞர், அவருடைய கவித்துவ வரிகளால் ஈர்க்கப்பட்டுத் தனது வாழ்நாள் முழுக்கப் பாரதிதாசன் பாடல்களை மேற்கோள்காட்டிப் பேசவும் எழுதவும் செய்தார்.

1938-இல் மதராஸ் மாகாணத்தின் முதல்வராக இருந்த இராஜாஜி, இந்தியை ஆட்சி மொழியாக்கிடத் திட்டமிட்டார். ஏற்கெனவே பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி போன்றவர்களின் மேடைப் பேச்சுகளைக் கேட்டு, சமூக மாற்றத்திற்கான போராட்ட மனநிலையை வளர்த்துக்கொண்டிருந்த கருணாநிதி, தன்னுடன் படித்த மாணவர்களைத் திரட்டி, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்தினார். சிறுவனாக இருந்த கருணாநிதிக்குக் கிடைத்த சமூக விழிப்புணர்வும், போராட்ட மனநிலையும் அவருடைய எதிர்காலத்தியச் செயல்பாடுகளுக்கு வித்திட்டன. தஞ்சை வண்டல் நிலவெளியில் சாதியரீதியில் ஒடுக்கப்பட்டிருந்த இசை வேளாளர் சாதியில் பிறந்த கருணாநிதி, பொது அரசியல் களத்தில் நுழைந்து, தன்னிருப்பைத் தக்க வைத்துக்கொண்டது ஒருவகையில் சவால்தான். பின்னர் திமுகவில் முக்கியத் தலைவராக உயர்ந்து, அண்ணாவின் அமைச்சரவையில் அமைச்சராகி, அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் முதலமைச்சரானது ஆகியவை கலைஞரின் சமூக வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள். பிறப்பினால் தன்னை அடையாளப்படுத்துகிற சாதி குறித்துப்

பொதுப்புத்தியில் நிலவிய இழிவினால், தன்னை ஒதுக்குவதும், பிறரிடமிருந்து ஒதுங்கியிருப்பதுமான மனநிலையினை ஒருபோதும் கலைஞர் தனக்குள் அனுமதிக்கவில்லை. ஒருவகையில் சாதிக்கும் தனக்கும் என்ன தொடர்பு என யோசித்த கலைஞர், சாதியைத் தனது நினைவிலிருந்து முழுக்க அப்புறப்படுத்தி விட்டார். ‘உதைக்கப்பட்ட பந்து மேலும் வேகமாகக் கிளம்புவதுபோல், ஒடுக்கப்பட்ட இனத்திலிருந்து புறப்படுகிறவன் இழிவு துடைக்க ஆவேசமாகப் புறப்படுகிறான்’ என்று கலைஞர் குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியது. சாதியத்தின் ஆதிக்கத்தினால் கலைஞர் தனக்கு ஏற்பட்ட அவமானங்களைத் தனக்கானதாக மட்டும் குறுக்கி, சோம்பி ஒதுங்கிடாமல், ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்துக்கும் பொருத்திப் பார்த்துப் போராடியபோதுதான் கலைஞர் என்ற மாபெரும் தலைவராக வடிவெடுத்தார். கோடிக்கணக்கான தமிழர்கள் சாதியைப் பொருட்படுத்தாமல் கலைஞரைத் தங்களுடைய தலைவராக ஏற்றுக்கொண்டது, வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். வைதீக இந்து மத மேலாதிக்கம், சாதியத்தினால் நசுக்கப்பட்டிருந்த தமிழர்களின் தலைவராகக் கலைஞர் போற்றப்படுவதன் பின்புலத்தில், அவர் வாழ்க்கை முழுக்க எதிர்கொண்ட போராட்டங்களும், சமூகச் செயற்பாடுகளும் பொதிந்துள்ளன.

அண்ணாவின் திராவிட நாடு பத்திரிகையில் பதினெட்டு வயதான கருணாநிதியின் ’இளமைப்பலி’ என்ற கட்டுரை பிரசுரமானது,

அவருடைய எழுத்துப் பணிக்குத் தொடக்கமாக அமைந்திருந்தது. திராவிட இயக்கத்தில் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணம், அவருக்குள் அழுத்தமாகப் பதிந்தது. 1942- ஆம் ஆண்டில் கலைஞரால் துண்டறிக்கையாக முரசொலி பிரசுரிக்கப்படும்போது, அவருடைய வயது பதினெட்டுதான். பதின்பருவத்திற்குரிய கொண்டாட்டங்களைத் துறந்துவிட்டு, லட்சிய நோக்குடன் எழுதத் தொடங்கிய கலைஞரைப் பிடித்த எழுத்துப் பிசாசு, அவருடைய வாழ்நாளின் இறுதிவரையிலும் அவரை விட்டு விலகவில்லை. 1948-இல் வார இதழாக கலைஞரால் வெளியிடப்பட்ட முரசொலி, பின்னர் 1960-இல் நாளிதழாக மாற்றப்பட்டது. கலைஞரின் பத்திரிகையாளர் மனம் எப்பொழுதும் முரசொலி பத்திரிகையைச் சுற்றிச் சுழன்றது. திராவிட இயக்கத்தின் மீதான வெறியும் செயல்பாடும் ஒருவகையில் கலைஞரின் பள்ளிக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தன. தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற நிதிக்காகப் ‘பழனியப்பன்’ என்ற நாடகத்தைக் கருணாநிதி, தனது, பதினெட்டு வயதில் எழுதிய சம்பவம், அவரின் கலையுலக நுழைவுக்கு வழி வகுத்தது. அந்த நாடகம் பின்னர் சாந்தா, நச்சுக் கோப்பை போன்ற பெயர்களிலும் தமிழகமெங்கும் நிகழ்த்தப்பட்டது.

கலைஞருடைய முதல் படைப்பான பழனியப்பன் நாடகத்தின் முடிவில் அய்யரின் சதியினால், அநியாயமாகப் பழனியப்பன் கொல்லப்பட்டபோது, ஆத்திரமடைந்த சிவகுரு பேசுகிற வசனத்தில் இளம் கலைஞரின் கூர்மையான சமூக விமர்சனம் இடம் பெற்றிருந்தது. “உபயோகமற்ற சமூகமே!

உலுத்துப்போன பிசாசே! கொன்று விட்டாயா பழனியப்பனை? அவன் என்ன தவறு செய்தான்? ஏன் இந்தப் பழிகார வேலை? பள்ளந்தனில் விழும் பழமைச் சமூகமே! சாகப் போகும் சாதிக் கட்டுப்பாடே! பொட்டுப் பூச்சியே!...புன்னைத் தேரையே! அழு, இளி, அஞ்சு! குனி, பிதற்று!...இது ஒரு உலகம்! இது ஒரு வாழ்வு! இதற்கொரு சமுதாயம்! கட்டியாள ஒரு கடவுள்! தூ வெட்கமில்லை!.. நின்று தடை புரிந்த சமூகமே! நீ நிச்சயம் தோல்விகொள்வாய்." ஆவேசமான சொற்களில் ததும்பிடும். உணர்ச்சிக் கொந்தளிப்பானது, பதின்பருவத்திலேயே இளம் கலைஞர், அன்றைய சமுதாயத்தை எங்ஙனம் எதிர்கொண்டார் என்பதற்குச் சாட்சியமாகும்.

கருணாநிதி தனது இளம் பருவத்துக் காதல், சுயமரியாதைக் கொள்கையினால் நிறைவேறவில்லை என்று நெஞ்சுக்கு நீதி நூலில் குறிப்பிட்டுள்ளார்? வைதீகப் புரோகிதர் மூலம்தான் திருமணம் நடைபெற வேண்டுமெனக் கலைஞர் காதலித்த பெண்ணின் பெற்றோர் வலியுறுத்தியபோது, அது தன்னுடைய சுமரியாதைக் கொள்கைக்கு இழுக்கு என்பதால், காதலைத் துறந்தார்.காதல் தோல்வியினால் வேதனையடைந்த கருணாநிதியின் மனதின் வெளிப்பாடாக எழுதப்பட்டதுதான் பழனியப்பன் நாடகம். கலைஞர், இளம் பருவத்திற்குரிய காதலில் ஈடுபட்டாலும், அது முறிந்ததும், சற்றும் தளராமல், போராட்ட அரசியலைத் தொடர்ந்ததும் அவருடைய ஆளுமை உருவாக்கத்தில் அழுத்தமானது. நடப்பு வாழ்க்கையையும், கலை வாழ்க்கையையும் ஒப்பீட்டு விருப்பு வெறுப்பற்றுத்

தனது சீர்திருத்தக் கருத்தினை முன்வைப்பதில் அவர் என்றுமே பின்தங்கியது இல்லை. சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்த காதல் தோல்வியையும் சமூக மாற்றப் பின்புலத்தில், அணுகிடும் மனம் அவருக்கு இருந்தது. கலைஞரின் காதலிக்கும் வேறொருவருக்கும் புரோகித முறைப்படி, சாஸ்திர சம்பிரதாயப்படி திருமணம் நடந்தாலும், சில மாதங்களில் மணமகன் இறந்துவிட அவள் விதவையானாள். அந்தக் கொடுமையான சம்பவம் தந்த நெருக்கடியினால், சாந்தா நாடகத்தில் கலைஞர் எழுதிய வசனத்தில் அவருடைய மூடநம்பிக்கை எதிர்ப்புக் குரல் பதிவாகியுள்ளது. ”எந்தச் சமுதாயம் அவளை மூடநம்பிக்கைக்காகப் பலியிட்டதோ, அதே சமுதாயம் அவளுடைய வாழ்வைத் துண்டித்துவிட்டது! எந்தச் சமுதாயம் அவளுடைய வாழ்வைப் பிணைத்ததோ, அதே சமுதாயம் அவளுடைய வாழ்வை முறித்தது; எந்த சாஸ்திரம் அவளுக்குத் திருமணம் நடத்தி வைத்ததோ, அதே சாஸ்திரம் அவளை விதவையாக்கிற்று. எந்த வைதீகம் அவள் காதலை ஏற்க மறுத்ததோ, அதே வைதீகம் அவளுடைய தாலியை அறுத்தது.” வைதீக சாஸ்திரத்திற்கு எதிரான கலைஞரின் ஆவேச முழக்கம், அன்றைய காலகட்டத்தில் கலகமாகும். இறுகிப்போயிருந்த தமிழர் வாழ்க்கையின்மீது, படைப்புகளின் மூலம் அதிர்வுகளை ஏற்படுத்திட முயலுவது, அவருடைய பதின்பருவத்திலேயே தொடங்கிவிட்டதன் அடையாளம்தான் சாந்தா நாடகம். பிறப்பினால் ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்த கலைஞர், தன்னுடைய சாதிய அடையாளத்தைப் பதின்பருவத்திலே தூக்கியெறிந்துவிட்டு, அரசியல் களத்தில் புகுந்ததுடன், கலையுலகில்

கலகக்காரராக மாறினார். கையெழுத்துப் பத்திரிகை நடத்துவதில் தொடங்கி, நாடக ஆசிரியர், திரைப்பட வசனகர்த்தா, மேடைப் பேச்சாளர், கவிஞர், பத்திரிகையாளர், நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர் எனப் பன்முகரீதியில் விரிவடைந்ததில் அடங்கியுள்ள ஓய்வறியா உழைப்பும் சமூக அக்கறையும் இளம் கலைஞரிடம் தொடங்கிவிட்டது.

1944 ஆம் ஆண்டு வெளியான முரசொலியில் சேரன் என்ற புனைபெயரில் சிதம்பரத்தில் நடைபெறவிருந்த வருணாசிரம மாநாட்டினை வன்மையாகக் கண்டித்துக் கலைஞர் எழுதிய துணடறிக்கை ,அவர் தனது இருபதாவது வயதில் பெற்றிருந்த அரசியல் தெளிவையும், சநாதன எதிர்ப்பையும் காட்டுகிறது. வருணமா? மானமா? என்ற சிறிய கட்டுரை, வைதீக சமயத்தின் ஆணி வேரை அசைத்தது... “இளித்தவாயர்களை உண்டு பண்ணினால்தான் களித்திருக்கிற வழி ஏற்படும் எனக் கண்டு, மடிந்துபோன வருணாசிரமப் பிணத்தை மயக்கமென்று கூறித் தண்ணீர் தெளித்துக் கண்ணீர் பெருக்குகிறார்கள்.” கடுமையான முறையில் எழுதப்பட்டுள்ள அந்தக் கட்டுரையின் இறுதியில் கலைஞர் எழுதியுள்ள பாடல் வரிகள் முக்கியமானவை.

பரணி பல பாடிப் பாங்குடன் வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிதுமில்லாச் சுயநலத்துச்
சோதரர்கள் சிலர் கூடி
வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக்
கரணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலே மானங்காக்க

## மறத்தமிழா! போராடு!
## வருணாசிரமம் வீழ்க!

சமுதாயத்தை ஆதிக்கம் செய்த வருணாசிரமத்தை எதிர்த்திட்ட கலைஞர், தனது கண்டனக் குரலைப் பதிவு செய்துள்ள முறையானது, எதிர்காலத்தில் அவர் அரசியலிலும் கலை இலக்கிய உலகிலும் வெளிப்படப் போகிறார் என்பதற்கு அடையாளமாக உள்ளது.

அதிகாரத்தின் முழுமையான ஆற்றலானது, பிறப்பின் அடிப்படையில் பார்ப்பனர்களாகப் பிறந்தவர்களிடம் மட்டும் குவிக்கப்படும்போது, பிற சாதியினர் அனைவரும் ஆற்றல் இல்லாதவர்களாகி விடுகிறார்கள், பிராமணர் கடவுளுக்கு நெருக்கமானவர் என்ற நிலையில் சுத்தம் அசுத்தம், மேல்-கீழ் கற்பித்து, விண்ணுலகு பற்றிய புனைவு உச்சநிலை அடையும்போது, பிற சாதியினரான ஒட்டுமொத்த தமிழரும் மனிதத்தன்மை இல்லாத, விலங்கு நிலையில் இருக்கின்றனர் என்று பொருளாகும். மதத்தில் கடவுளின் உச்ச அதிகாரம், மனிதனைக் கடவுளின் அடிமையாக மாற்றுவது போன்று, பார்ப்பனர்கள் இந்துமதச் சாதிய அடுக்கில் இன்றளவும் உயர்நிலை வகித்துச் சமூகத்தில் அடிமைப் புத்தியை விதைக்கின்றனர். இதிலிருந்து மீளவியலாமல், வருணாசிரம நெறி என்ற பெயரில் பெரும்பான்மையினர் சூத்திரர்களாகத் தங்களைப் பாவித்துக்கொள்வதுதான் வரலாற்றில் பெரும் சோகம். அன்றைய சமுதாயத்தில் வலுவாக நிலவிய சாதிய ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, பார்ப்பனீயத்தின் மேலாதிக்கம் போன்றவை அநீதியானவை, அருவருப்பானவை என்ற

கருத்தியல் கலைஞரின் அரசியல் செயல்பாடுகளில், மேலோங்கியிருந்தது. ஏற்கனவே பெரியாரின் புரட்சிகரமான சமூகக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டிருந்த கலைஞர், சமூக யதார்த்தத்தை எப்படி அடியோடு மாற்றுவது எனச் சிந்தித்தார். நாடகம், திரைப்படம், நாவல், சிறுகதை, பத்திரிகை, மேடைப்பேச்சு போன்றவற்றின் மூலம் தனது கொள்கைகளைப் பரப்பிட விழைந்தார். திராவிட இயக்க அரசியலை நடைமுறையுடன் இணைத்துச் சமூக மாற்றத்தைத் துரிதப்படுத்திட முயன்ற கலைஞரின் அரசியல் விமர்சனம் காத்திரமானது. 'அம்பாள் எந்தக் காலத்திலே பேசினாள், அறிவு கெட்டவனே' எனப் பராசக்தி திரைப்படத்தில் கலைஞர் எழுதிய வசனம், புன்மைத் தேரைகளாக ஒடுங்கி, மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்த பெரும்பான்மைத் தமிழர்கள்மீது ஏவி விடப்பட்ட வலிமையான ஆயுதமாகும். கலைஞர், வைதீக இந்து மதத்தின் மீதும் குறிப்பாகப் பார்ப்பனர்களின் மேலாதிக்கத்தின் மீதும் போர் தொடுத்தபோது, அவர் முதன்மையான பாசாங்குக்காரரும் கொடுங்கோலருமாகிய கடவுள்மீதும் போர்ப் பிரகடனம் செய்தார். மத அடிப்படைவாதத்துடன் உறவை முறித்துக்கொள்ளாமல், அற்பவாதமான வாழ்க்கையுடனான தொடர்பை முழுமையாகத் துண்டித்துக்கொள்ள முடியாது. கருத்து முதல்வாத நிலைப்பாட்டிலிருந்து மதத்தைப் பற்றி ஈவிரக்கமற்ற, முரணற்ற விமர்சனத்தைச் செய்திட முடியாது. எனவே கலைஞர் மதத்துடன் தனது உறவைத் துல்லியமாக முறித்து விட்டார். எனவேதான் பின்னர் அவர் திமுகவின் தலைவராக

இருந்தபோதும், முதல்வராகப் பணியாற்றியபோதும் கடவுள் நம்பிக்கையைக் கேலிக்குள்ளாக்கினார். அவர் கடைசிவரையிலும் கடவுள் விவகாரத்தில் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளவில்லை. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ராமர் பாலம் குறித்த விவாதம் நடைபெறுகையில், கடவுளாகக் கருதப்படுகிற ‘ராமர் எந்தப் பொறியியல் கல்லூரியில் படித்தார்? என்ற கலைஞரின் கேள்வியில் பொதிந்திருந்த பகடி, நுட்பமானது. வடநாட்டைச் சார்ந்த பொறுக்கிச் சாமியார் ஒருவன், கலைஞரின் தலையைச் சீவ வேண்டுமெனச் சொல்லி அவருடைய தலைக்கு விலை வைத்தபோது, “என் தலையை நானே சீவி நீண்ட நாளாச்சு” என்று கேலி செய்தது தற்செயலானது அல்ல. கோவில் திருவிழாவில் மூடநம்பிக்கையினால் தீ மிதித்த அமைச்சரைக் ‘காட்டுமிராண்டித்தனம்’ என்றும், இந்து என்றால் திருடன் என்று பொருள் என்றும் துணிச்சலுடன் சொன்ன கலைஞரின் பகுத்தறிவுப் பேச்சுகள், இளைஞனாக இருந்தபோது அவருக்குள் உருவான ஆளுமையின் தொடர்ச்சியாகும். இளம் வயதிற்குரிய துடிப்புடன் சமூகம் புனைந்திருந்த புனிதங்களை உற்சாகத்துடன் கட்டுடைத்த கலைஞர், அரசியல் வாழ்க்கையில் முதலமைச்சர் பதவி வகித்தபோதும், இந்திய அரசியலில் முக்கியமான ஆளுமையாக அறியப்பட்டபோதும் தனது அடிப்படைக் கொள்கைகளை மாற்றிக்கொள்ளவில்லை.

இளம் கலைஞர், லட்சிய வேகத்துடன் தான் மாற்ற விரும்பிய சமுதாயப் போக்குகள் குறித்துக் கனவு கண்டார். அவருடைய வாழ்க்கையில்

ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகப் போராடுவது என்பது இளம் பருவத்திலேயே தொடங்கிவிட்டாலும், அவருக்குள் கனன்று கொண்டிருந்த விடுதலை நெருப்பு, இறுதிவரையிலும் சுடர் விட்டு ஒளிர்ந்தது. தமிழகத்தின் தலைவிதியை மாற்றுவதற்குப் பல்வேறு முனைகளில் முயன்ற இளம் கலைஞரின் செயல்பாடுகள், 1967-ஆம் ஆண்டில் அண்ணாவின் தலைமையிலான திமுகவின் ஆட்சியில் அமைச்சராகப் பதவியேற்றவுடன், புதிய நிலையை அடைந்தன. அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் 1969-இல் முதலமைச்சராகப் பதவியேற்ற கலைஞரின் வாழ்க்கைப் போக்கு, பெரும் மாறுதலுக்குள்ளானது. திருக்குவளையில் பிறந்து, திருவாரூர் வீதிகளில் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய கலைஞரின் கனவுகளும் லட்சியங்களும் செயல் வடிவம் பெறத் தொடங்கின. திமுக என்ற அமைப்பும், பரந்துபட்ட தமிழர்களின் ஆதரவும்தான் சாதிய ஏற்றத்தாழ்வற்ற சமத்துவச் சூழலையும், பொருளாதார மேம்பாட்டினையும் உருவாக்குவதற்குக் கலைஞருக்குப் பின்புலமாக இருந்தன. எந்தப் பிரச்சினைகளை முன்வைத்து மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினோம் என்பதைக் கலைஞர் எப்பொழுதும் நினைவில் வைத்திருந்தார். எனவேதான் கடந்த நாற்பதாண்டு கால அரசியல் வாழ்க்கையில் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களின் சமூக மேம்பாடு குறித்த அக்கறையுடன் செயல்பட்டார். இந்தக் காலகட்டத்தில் கலைஞர் கட்சியிலும், குடும்பத்திலும் எதிர்கொண்ட பிரச்சினைகள்

ஏராளம். துரோகம், சூழ்ச்சி, நயவஞ்சகம் போன்ற அற்பத்தனங்களைத் தனது வாழ்க்கை முழுக்கச் சந்தித்த கலைஞர், அவற்றைச் செயல்தந்திரத்துடன் எதிர்கொண்டு, தனது லட்சியப் பயணத்தைத் தொடர்ந்தார். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவருடைய மனம், சமநிலையில் இருந்தமையினால்தான், தோல்வியைக் கண்டு, சோர்வடைந்திடாமல் திமுக என்ற இயக்கத்தின் தொண்டர்களை அரவணைத்துக் காத்திரமான தலைவராகச் செயல்பட முடிந்தது.

கலைஞர் தமிழகத்தின் முதல்வராக இருந்த காலகட்டத்தில் மக்களின் நலன்களுக்காகச் செய்த செயல்களைச் சாதனைகள் என்று வெறுமனே கூறிவிட முடியாது. திருவாரூரில் இளம் கலைஞராகச் சமூக மாற்றத்திற்காகப் போராடியபோது எவையெல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென விரும்பினாரோ, அவற்றை வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் நடைமுறைப்படுத்தினார். அவருடைய லட்சியங்களை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பாக முதலமைச்சர் பதவியையும் ஆட்சியதிகாரத்தையும் கருதியதால்தான், அவருடைய செயல்பாடுகள் பன்முகத்தன்மையுடையனவாக விளங்குகின்றன. சாதிய ஒடுக்குமுறையைத் தகர்ப்பது எப்படியென்று யோசித்துச் செயலாற்றிய கலைஞரின் செயல்கள் கவனத்திற்குரியன. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற வள்ளுவரின் வரிகளை உள்வாங்கிப் பாடலாக்கியுள்ள கலைஞர், சாதியரீதியில்

ஒடுக்கப்பட்ட அனைவருக்கும் சமூக நீதி கிடைத்திட கடுமையாகப் போராடினார். வைதீக இந்து மதத்தின் செல்வாக்கு இன்றுவரை மேலோங்கியிருப்பதற்கு முதன்மைக் காரணமாக விளங்குவது, கோவில் கருவறையில் நுழைந்து வழிபாடு நடத்தும் உரிமை பார்ப்பனர்களிடம் மட்டுமே இருப்பதுதான். இந்நிலைமையை மாற்ற வேண்டுமெனில், பிறப்பின் அடிப்படையில் எல்லாச் சாதியினரும் அர்ச்சகராக நியமிக்கப்பட வேண்டுமென்று கண்டறிந்த கலைஞர், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை இயற்றினார். தலித்துகள் உள்ளிட்ட எல்லாச் சாதியினரும் வேத ஆகமங்களில் பயிற்சி பெற்றிட பள்ளிகளை நிறுவினார். இதனால் பார்ப்பனீயத்தின் இடம் ஆட்டங் கண்டது. தமிழர்கள் சாதியினால் பிளவுண்டிருந்த நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமெனில், சாதி மறுப்புத் திருமணம் பரவலாக வேண்டுமென்று கருதிய கலைஞர், அரசின் அங்கீகாரத்துடன்  சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதியினருக்குத் தங்கப் பதக்கம், ஊக்கத் தொகை, சான்றிதழ் வழங்கிட ஆணை பிறப்பித்தார்.  கோவில்களில் நியமிக்கப்படுகிற அறங்காவலர் குழுவில் தாழ்த்தப்பட்டவர்கள் நிச்சயம் இடம் பெற வேண்டுமென ஆணையிடப்படுவதற்குக் கலைஞர்தான் காரணம். அரசு ஆவணங்களில் உயர் சாதியினரை அர் விகுதியுடன் மரியாதையாகக் குறித்திடும்போது, அட்டவணைச் சாதியினரைக் குறிப்பிடும்போது, அன் விகுதியுடன் மரியாதையில்லாமல்  குறிப்பிடுவதை மாற்றி, முதல்வரான கலைஞர் ஆணையிட்டார். சேரி

என்று காலங்காலமாகத் தலித்துகள் ஒதுக்கப்பட்ட வாழிடங்களில் தனித்து வாழ்ந்திட்ட நிலையை மாற்றியமைத்திட விரும்பிய கலைஞர், தமிழகமெங்கும் அனைத்துச் சாதியினரும் சேர்ந்து வாழ்வதற்கான சமத்துவபுரங்களை உருவாக்கினார். தலித்துகளுக்கு இலவச வீடுகள், அருந்ததியினருக்கு 3% இட ஒதுக்கீடு போன்றவையும் கலைஞரால் வழங்கப்பட்டவையே. இன்றைக்கும் இந்தியாவின் பல மாநிலங்களில் குழந்தைகளுக்குச் சாதியப் பெயர்கள் பின்னொட்டுகளாகச் சூட்டப்படுகிற சூழலில், தமிழகத்தைப் பொருத்தவரையில் மனதுக்குள் சாதி அபிமானம் இருப்பினும், சாதியின் பெயரை வெளியே சொல்வதைக் கேவலமாகவும் அக்கிரமமாகவும் கருதுகிற மனப்பான்மையை உருவாக்கியதில் திராவிட இயக்கத்திற்கு முதன்மை இடம் உண்டு. அத்தகைய சூழலை நடைமுறைப்படுத்தியதில் கலைஞர் தனிச்சிறப்புடையவர். சமத்துவம் என்ற சொல்லினை முன்வைத்துச் சாதிகளை மறுக்கிற கலைஞரின் கொந்தளிக்கிற மனம், போராட்டத்தின் உலைக்களம் போன்றது.

மக்களின் போராட்டங்கள் காரணமாக ஐரோப்பிய நாடுகள், விளிம்புநிலையினருக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இந்திய நடுவண் அரசானது பொதுவாக மக்கள் நலத்திட்டங்களைப் பெரிதும் நடைமுறைப்படுத்துவது இல்லை. முதலில் பொருளாதார வளர்ச்சி, பின்னர் சமூக நலன் என்று பிரதமராக இருந்த நேரு பின்பற்றிய கொள்கைக்கு எதிராகப் பெரியார் தொடங்கி திராவிட

இயக்கத்தினர் சமூக வளர்ச்சியை முதன்மையான குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். கல்வி, மருத்துவம், போக்குவரத்து, குடிநீர் வேண்டி சிறந்த சமூக நலத்திட்டங்களைச் செயலாக்குவதில் முதலமைச்சராக இருந்த கலைஞர் எப்பொழுதும் முன்னணியில் இருந்தார். மக்களுக்கான ஜனநாயக அரசாங்கம் எனில் எந்தவொரு நலிந்த பிரிவினரும் வறுமையில் கஷ்டப்படக் கூடாது என்று இயல்பிலே பொதுவுடைமைக் கருத்துடன் ஈடுபாடுகொண்டிருந்த முதல்வரான கலைஞர், அடித்தட்டு மக்களின் பொருளாதார மேம்பாடு குறித்துத் தீவிரமாக யோசித்தார். வன்முறை இல்லாமல் வறுமையை ஒழிப்போம் என்று பேசிய இளம் கலைஞரின் எண்ணத்தைச் செயல்படுத்திட அவர் முதலமைச்சரானவுடன் அதற்கான சாத்தியங்களைப் பல்வேறு  வழிகளில் கண்டறிந்து, அரசின் திட்டங்களாக அறிவித்துள்ள சமூக நலத்திட்டங்களின் பலன்களைத் தமிழகத்தின் விளிம்புநிலையினர் அனுபவித்து வருகின்றனர். ‘எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ என்ற பாரதியின் கவிதை வரிகளை நடைமுறைப்படுத்திட  விரும்பிய கலைஞர் தனது ஆட்சிக்காலத்தில் அறிவித்துள்ள கணக்கற்ற மக்கள் நலத்திட்டங்கள், அவருடைய ஆளுமை உருவாக்கத்தில்  முதன்மை இடம் வகிக்கின்றன. சமூகத்தில் பல்வேறு பிரிவினராக வாழும் நெசவாளர்கள், பனையேறும் தொழிலாளர்கள், கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருப்போர், விவசாயிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், விவசாயிகள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், விதவைகள், விவசாயிகள், சலவைத் தொழிலாளர்கள் போன்ற

நலிவடைந்தவர்களுக்குத் தனித்தனியாக வகுக்கப்பட்ட நலத்திட்டங்கள் காத்திரமானவை. கை ரிக்‌ஷாவை ஒழித்து சைக்கிள் ரிக்‌ஷா வழங்குதல், நடைபாதைவாசிகளுக்கும், குடிசைவாசிகளுக்கும் குடிசை மாற்று வாரியம், கண்ணொளித் திட்டம், பிச்சைக்காரர், தொழுநோயாளிகள் மறுவாழ்வு மையங்கள், ஊனமுற்றோர் நலவாழ்வுத் திட்டம், விவசாயத்துக்குக் கட்டணமில்லா மின்சாரம், விவசாயக் கடன்கள் தள்ளுபடி, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள், அரவாணிகளைத் திருநங்கைகள் எனப் பெயர் மாற்றியதுடன் அவர்களுக்கெனத் தனி வாரியம், ஆதரவற்ற குழந்தைகளுக்கான கருணை இல்லங்கள், இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்குதல், உழவர் சந்தைகள், நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் போன்ற நலத் திட்டங்களை அமல்படுத்தியதில் கலைஞர் இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்குகிறார். அடித்தட்டு மக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்காகப் போராடுகிற சூழலைக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கான வழிமுறைகளைத் திட்டமிட்ட முறையில் வகுத்தது, கலைஞரின் சமூக நலக் கொள்கையின் அடிப்படையாகும். பொது விநியோகம், கிராமப்புறங்களில் பாதுகாப்பான மகப்பேறு திட்டங்கள், முழுமையான வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார மையங்கள், சிசு மரண விகிதம் குறைப்பு, 108 ஆம்புலன்ஸ், இலவச அமரர் ஊர்தி, பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தரமான

கல்வி போன்ற பல சமூக நலத்திட்டங்கள் கலைஞரால் தொடங்கப்பட்டாலும், அவை இன்றும் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதனால்தான், தமிழகத்தின் மனிதவளம் மேம்பாடு அடைந்துள்ளது. ஒடிசா மாநிலத்தில் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் அரசு மருத்துவமனையில் இறந்துபோன தனது மனைவியைத் தோளில் தூக்கிக்கொண்டு, எட்டு கி.மீ. தொலைவிலுள்ள கிராமத்திற்கு நடந்துபோன சம்பவம் போன்று தமிழகத்தில் ஒருபோதும் நடந்திட வாய்ப்பில்லை. சமூக நலன், மருத்துவம், கல்வி, வறுமையொழிப்பு போன்றவற்றில் இன்று தமிழகம் அடைந்திருக்கிற பிரமாண்டமான வளர்ச்சியுடன் குஜராத், ஒடிசா, சட்டீஸ்கர், பீகார், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற வட இந்திய மாநிலங்களை ஒப்பிட்டால், அவை எவ்வளவு பலவீனமாக இருக்கின்றன என்பது புலப்படும். ஒப்பீட்டளவில் பல வடமாநிலங்கள் முப்பதாண்டுகள் பின்தங்கியிருக்கின்றன. தமிழகத்தின் பொருளாதார சமூக வளர்ச்சியில் இத்தகைய வளர்ச்சியைக் கட்டமைத்ததில் கலைஞரின் பங்கு குறிப்பிடத்தக்கது. இந் நிலையினை அறியாமல், திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தமிழகம் வீழ்ச்சி அடைந்துள்ளது என்று வெறுமனே போலியாகப் பிதற்றுகிற பேச்சுகள் அபத்தமானவை; உள்நோக்கம் கொண்டவை. பெண் அசுத்தமானவள் என ஒதுக்கிவைத்த வைதீக இந்து சமயக் கருத்துக்கு மாற்றாகப் பெரியார், ஆணும் பெண்ணும் சமம்; ஆணைப் போலவே பெண்ணுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு எனப் பாலினச் சமத்துவத்தை முன்வைத்தார். அவருடைய கொள்கைகளை

ஏற்றுக்கொண்ட அண்ணாவும் கருணாநிதியும் முதலமைச்சர் பதவியில் இருக்கும்போது, பெண்களின் நலன்களுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினர். ஒருவரையொருவர் விரும்பிய இளைஞனும் இளைஞியும் புரோகிதர் இல்லாமல் செய்துகொள்ளும் திருமணத்தை ஏற்கும்வகையில் ‘சுய மரியாதைத் திருமணச் சட்டம்’ அண்ணா முதல்வராக இருந்தபோது இயற்றப்பட்டது, திராவிட இயக்கத்தின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும். 1989-இல் மீண்டும் முதல்வரான கலைஞர், பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் உரிமையளிக்கிற வகையில் இயற்றிய சொத்துரிமைச் சட்டம், இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழகப் பெண்களுக்குச் சமத்துவத்தை அளித்தது. பத்தாம் வகுப்பு வரையிலும் கல்வி கற்ற வசதியற்ற பெண்களுக்குத் திருமண உதவித் தொகை வழங்கப்படுமென்ற 1989-இல் கலைஞரின் அறிவிப்பினால், கிராமப்புற நடுநிலைப் பள்ளிகளில் பெண்கள் சேர்க்கை அதிகரித்தது. அரசு அலுவலகங்கள், ஊராட்சி மன்றங்கள், அரசு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் போன்றவற்றில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்கிடச் சட்டம் இயற்றப்பட்டதனால் பெண்களின் புழங்குவெளியும் தன்னிச்சையான வாழ்க்கையும் உறுதி செய்யப்பட்டன. காவல்துறையில் பெண் காவலர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், தொடக்கப் பள்ளிகளில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் பெண்களை ஆசிரியராக நியமித்தல் காரணமாகப் பெண்களின் உலகம் விரிந்திடும்

சூழல் ஏற்பட்டுள்ளது. இதுவரையிலும் ஆண்களின் உலகமாக இருந்துவந்த துறைகளில் பெண்களைப் பணியேற்றதனால், பெண் பற்றிய சமூக மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. திராவிட இயக்கம் முன்னிறுத்திய சமத்துவப் பெண்ணியக் கருத்தியலுக்குக் கலைஞர் நடைமுறையில் செயல் வடிவம் தந்துள்ளார்.

கலைஞர் என்றால் தமிழ், தமிழிலக்கியம் என்ற கருத்தியல், தமிழர்களிடையே ஆழமாக ஊடுருவியுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆளுகையாகவும் வளமாகவும் இல்லாமல் சோனியாக இருந்த தமிழ் மொழி குறித்த விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்கியதில் திமுகவின் செயல்பாடுகள் முக்கியமானவை. கோவில்களில் வழிபாட்டு மொழியாக சம்ஸ்கிருதமும், இசைக் கச்சேரிகளில் தெலுங்குக் கீர்த்தனைகளும், ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் உயர் கல்வி மொழியாகவும் இருந்த நிலைமை தமிழகத்தில் நிலவியது. பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதோர், தமிழ்-சம்ஸ்கிருதம் என்ற எதிரிணையான அரசியல் சூழலில், தமிழுக்கான இடத்தை முன்வைத்துத் திமுகவினர் தொடர்ந்து போராடினர். இந்தி மொழியைத் தமிழகத்தில் திணித்தபோது அதற்கெதிராகப் போராடிய வரலாற்றில் கலைஞரின் பெயர் தனித்து நிற்கிறது. இந்தியாவின் பிற மாநிலங்களில் பள்ளிக்கூடங்களில் தாய் மொழி, ஆங்கிலம், இந்தி என மும்மொழிக் கொள்கை நடைமுறையில் இருக்கும்போது, தமிழ்நாட்டில்தான் இந்திக்கு இடமளிக்காத சூழல் நிலவுகிறது. இளம் கலைஞர்

எழுதிய தொடக்ககாலப் படைப்புகளில் தமிழ் குறித்த சொல்லாடல்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ் மொழி, தமிழர் குறித்த பேச்சுகளை உருவாக்கிட கலைஞர், தனது வாழ்நாள் முழுக்கத் திட்டமிட்டுச் செயலாற்றியுள்ளார். தமிழரின் பண்பாட்டுச் சிறப்பினை முன்மொழிந்திடக் கலைஞருக்குச் சிலப்பதிகாரக் காப்பியம் பயன்பட்டுள்ளது. சங்க இலக்கியம், திருக்குறள், தொல்காப்பியம் போன்ற பண்டைத் தமிழிலக்கியப் படைப்புகளைப் போற்றுகிற கலைஞர், அவை இளைய தலைமுறையினருக்கும் புரிந்திட வேண்டுமென சங்கத் தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா என  மறு உருவாக்கம் செய்துள்ளார். ஈழத்தின் போராளி  மன்னனை வைத்து பாயும் புலி பண்டார வன்னியன், பொன்னர் சங்கர், இராமானுஜர் தொலைக்காட்சித் தொடர், சிலப்பதிகாரக் காப்பியப் பின்புலத்தில் பூம்புகார் திரைப்படம், ரஷிய எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கி எழுதிய தாய் நாவலைத் தழுவிக் கவிதை நடையில் எழுதப்பட்ட தாய் காவியம் போன்ற படைப்புகள்,  அவருடைய எழுத்தாற்றலுக்குச் சான்றுகள். ரோமாபுரிப் பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம் போன்ற வரலாற்று நாவல்களுடன்  பல சமூக நாவல்களையும் கலைஞர் எழுதியுள்ளார். சிறுகதைகள், மரபுக் கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், புதுக்கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள், என கலைஞரின் இலக்கிய முயற்சிகள் கணக்கற்றவை. அவர் குறைந்தபட்சம் லட்சம் பக்கங்கள் எழுதிக் குவித்திருப்பார். இடைவிடாத அரசியல் வாழ்க்கையில் ஒருவர் இவ்வளவு

படைப்புகளைப் படைத்திருப்பது, ஒருவகையில் மிகப்பெரிய சாதனைதான்.

அன்றைய தமிழகத்தில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. எனவேதான் அண்ணா, கலைஞர் போன்ற திராவிட இயக்கப் படைப்பாளிகள் எழிலான மேடைப் பேச்சு, நாடகம், திரைப்படம் போன்ற வடிவங்களில் கவனம் செலுத்தினர். அச்சு ஊடகத்தினைப் பயன்படுத்தியபோது அடுக்கு மொழி, அலங்காரச் சொல்லடுக்கு, அலங்கார மொழி என எழுதிய கலைஞருடைய படைப்புகளுக்கான வாசகர் பரப்பு விரிவடைந்தது. திராவிடச் சிந்தனை, ஓரளவு வாசிக்கத் தெரிந்தவரிடமும் போய்ச் சேர வேண்டுமென்ற அவரது நோக்கம் வெற்றியடைந்தது. திராவிடர் இயக்க எழுத்தின் மையமாகத் திகழ்கிற தமிழின் சிறப்பைப் பரப்புதல், தமிழுணர்வை வளர்த்தல்,  தமிழர் பண்பாட்டை மீட்டுருவாக்குதல், ஆரியப்பண்பாட்டை அகற்றுதல், பண்டைத் தமிழிலக்கியத்தின் பெருமையை எடுத்துரைத்தல் போன்றவை கலைஞரின் படைப்புகளில் ஊடும் பாவுமாக இடம் பெற்றுள்ளன. திராவிட இயக்கக் கருத்தியல் பிரச்சாரத்திற்குக் கலைஞரின் சமூக நாடகங்களும், அரசியல் நாடகங்களும் பெரிய அளவில் பயன்பட்டுள்ளன. உதயசூரியன், காகிதப் பூ, திருவாளர் தேசியம் பிள்ளை ஆகிய மூன்று நாடகங்கள் மூலம் ஆளுங் கட்சியான காங்கிரசின் மக்கள் விரோதப் போக்கினை அம்பலப்படுத்தவும், திமுகவின் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்திடவும் வலிமையான நிகழ்த்துக் கலைகளைக் கலைஞர் வெறிகரமாகக்

கையாண்டுள்ளார். கலைஞர் தான் எழுதிய தூக்கு மேடை நாடகத்தில் எம்.ஆர்.ராதாவுடன் சேர்ந்து நடித்துள்ளார். நாடகம் என்ற கலை வடிவத்தைக் கலைஞர் முழுமையாகப் பயன்படுத்தியதுடன் திரைப்படங்களுக்குக் கதை-வசனம் எழுதுவதிலும் சிறப்புடன் செயல்பட்டார். திராவிட இயக்கக் கருத்தியலைப் பராசக்தி முதலாகப் பல திரைப்படங்களில் வெளிப்படுத்தியது, அவருடைய அரசியல் செயல்பாடுகளுக்கு உதவியது. அன்றைய காலகட்டத்தில் கதாநாயகனைவிட கலைஞர் அதிகம் ஊதியம் பெற்றதுடன், திரைப்படத்தின் தொடக்கத்திலேயே கதை-வசனம் கருணாநிதி என்ற பெயரைத் திரையில் காண்பித்தது, அவருடைய படைப்பாகக்கச் செல்வாக்கினைக் காட்டுகிறது. ராஜகுமாரி, அபிமன்யூ, மந்திரிகுமாரி, மலைக்கள்ளன் தொடங்கி திரையுலகில் கலைஞரின் கொடி பறக்கத் தொடங்கியது. இடைவிடாத அரசியல் செயல்பாடுகள், முதலமைச்சர் பணிகள், கட்சிப் பணிகள், மேடைப் பேச்சுகள் போன்ற நெருக்கடியான சூழலிலும் கலைஞர் 75 திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுதியிருப்பது அவருடைய கலை ஆளுமையின் வெளிப்பாடுதான்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்கிட நடுவண் அரசை வலியுறுத்தி, ஆணை பெற்றதும், மைசூரு நகரில் செயல்பட்ட செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தைச் சென்னை நகருக்குக் கொண்டு வந்ததும் கலைஞரின் சீரிய முயற்சியின் வெற்றியாகும். கலைஞரின் ஆட்சியில் 110க்கும் மேற்பட்ட தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள்

நாட்டுடைமையாக்கப்பட்டன. எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்குக் கணிசமான பணம் கிடைத்தது. நாட்டுடைமையான புத்தகங்களை யார் வேண்டுமானாலும் பிரசுரிக்கலாம் என்ற நிலையில் பல புத்தகங்கள் மறுஅச்சு வடிவம் பெற்றன.

இந்தியாவின் விடுதலைக்குப் பின்னர் தமிழகத் தொடக்கப்பள்ளிக் கல்வியில் வியக்கத்தக்க வளர்ச்சியை உருவாக்கிய அன்றைய முதல்வர் காமராசர் வகுத்த அடித்தளத்தில், உயர் கல்வியின் வளர்ச்சியில் கலைஞர் செய்த சாதனைகள் அளப்பரியன. கலைஞரின் ஆட்சிக்காலங்களில் ஐம்பதுக்கும் கூடுதலான அரசு கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. சிறிய நகரங்களிலும் அரசு கலை- அறிவியல் கல்லூரிகள் நிறுவப்பட்டதனால், கிராமப்புற மாணவிகளின் எண்ணிக்கை, கணிசமாக உயர்ந்தது. கோவை வேளாண் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், மத்தியப் பல்கலைக்கழகம், இந்தியக் கடல்சார் பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்கள் நிறுவப்படுவதற்கும் கலைஞரே காரணமாக இருந்தார். பள்ளிக் கல்வி மேம்பாடு அடைந்திட பள்ளிக்கல்விக்கெனத் தனித்துறையும், பள்ளிக் கல்வி அமைச்சரையும் நியமித்தது, சமச்சீர் கல்வி போன்ற நிகழ்வுகள், கலைஞரின் தொலைநோக்குச் சிந்தனையின் வெளிப்பாடுகள் ஆகும். கல்வித் துறையில்

அறிவுஜீவிகளாக விளங்கிய கல்வியாளர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செயல்பட்ட கலைஞர், தமிழக இளைய தலைமுறையினர் உயர் கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டுமென விரும்பினார். அதற்கான ஆக்கப்பூர்வமான பணிகளை ஈடுபாட்டுடன் செய்தார். தமிழகத்தின் கல்வி, தொழில் வளர்ச்சியில் கலைஞர் ஒருபோதும் சமரசம் செய்துகொண்டது இல்லை.

தமிழை நவீனத் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவகையில் மாற்றங்களை உருவாக்கியதில் கலைஞரின் முயற்சி, தொலைநோக்குடையது. 1999-இணையத்தில் தமிழ், இலவச தமிழ் மென்பொருட்கள் என்று கணினியில் தமிழை நவீனயுகத்திற்கேற்ப மாற்றியமைத்ததில் கலைஞர் தலைமையிலான திமுக அரசின் பங்கு கணிசமானது. 1999-இல் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் இணையப் பல்கலைக்கழகம், தமிழை அறிவியல் அடிப்படையில் வளர்த்தெடுத்தது. கலைஞரின் ஆட்சியில் உருவாக்கப்பட்ட டைடல் மென்பொருள் பூங்கா, தென்னகத்தின் இளைய தலைமுறையினருக்குக் கணினித் துறையில் அளவற்ற வேலை வாய்ப்புகளை அளித்துள்ளது. தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியைத் தமிழகத்தின் இளைய தலைமுறையினர் அறிந்திட வேண்டுமென்பதற்காக 1999-இல் மேல்நிலைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் கணினிப் பாடம் சேர்க்கப்பட்டது. கலைஞர், கணினிக் கல்வியை மேம்படுத்திட 2007-ஆம் ஆண்டில் 1,880 அரசுப் பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் ஏற்படுத்தினார். மாறிவரும் அறிவியல் சூழலுக்கேற்ப தமிழகத்தில் கலைஞர்

நடைமுறைப்படுத்திய திட்டங்கள் காரணமாகத்தான், இன்று தமிழ்நாட்டில் கணினிக் கல்வி கற்ற இளைஞர்கள், உலகம் முழுக்கப் பணியாற்றுகின்றனர்.

ஈழத் தமிழர் போராட்டத்திற்கு ஆதரவாக 1985-இல் மதுரையில் டெசோ மாநாட்டினைக் கூட்டி, இந்தியாவிலும், சர்வதேச அளவிலும் கவனத்தைத் திருப்பிட முயன்ற கலைஞரின் செயல்பாடுகள் கவனத்திற்குரியன. ஈழத்தில் தமிழர்மீது சிங்கள ராணுவத்தினர் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்ட போதெல்லாம், அதற்கெதிராகக் குரலெழுப்புவதில் கலைஞர் எப்போதும் முன்னணியில் இருந்தார். 1987 -இல் இலங்கைக்குச் சென்ற இந்திய அமைதிப்படையினர் பொதுமக்கள்மீது  நடத்திய கொலைவெறித் தாக்குதல்களையும், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளையும், விமானத் தாக்குதல்களையும் கலைஞர் உடனுக்குடன் கண்டித்தார். உச்சகட்டமாக இந்திய அமைதிப்படை, 1990-இல் நாடு திரும்பியபோது, அதை வரவேற்க வேண்டிய கடமையை முதல்வரான கலைஞர் மறுத்தார். அதனால் தேசத் துரோகி என்ற விமர்சனத்தையும் தாங்கிக்கொண்டு, மன உறுதியுடன் இருந்தார். ஈழத்தில் போரிடச் சென்ற இந்திய அமைதிப் படையை இந்தியா திரும்பச் செய்யுமாறு வலியுறுத்தியது, இந்தியாவிற்குத் திரும்பிய அமைதிப் படையை வரவேற்கச் செல்லாதது போன்றவை கலைஞரின் ராஜதந்திரங்கள். சென்னையில் பத்மநாபாவையும் அவரது இயக்கத்தினரையும் விடுதலைப்புலிகள் கொலை

செய்த சம்பவத்துடன் தமிழகத்தில் விடுதலைப் புலிகளைத் தாராளமாக நடமாட அனுமதித்தார் என்ற குற்றத்தைச் சுமத்தி, கலைஞர் தலைமையிலான திமுக ஆட்சியை இந்திய நடுவண் அரசு கலைத்தது. அப்போது கலைஞரும் திமுகவினரும் மட்டுமின்றி பெரும்பான்மைத் தமிழர்களும் வருந்தினர். 1991 தேர்தலின்போது தமிழக மக்களின் மனநிலை, கலைஞருக்குச் சாதகமாக இருந்தது; தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் நிரம்ப இருந்தன. அப்போது, ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த பிரதமர் இராஜீவ் காந்தி, மனித வெடிகுண்டினால் கொல்லப்பட்டதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் என்ற தகவல் வெளியானதால், அந்தத் தேர்தலில் திமுக பெரும் தோல்வியைத் தழுவியது. கலைஞர் உள்ளிட்ட இருவர் மட்டும் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1991-96 காலகட்டத்தில் திமுக அழிந்துவிட்டது என்ற கணிப்பைப் பொய்யாக்கி, மக்கள் மீண்டும் திமுகவை ஆட்சிக்குக்கொண்டு வந்தனர். அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர், விடுதலைப் புலிகளுக்குச் சர்வதேச அளவில் நெருக்கடி ஏற்பட்டது; சுமார் முப்பது நாடுகள் புலிகள் அமைப்புக்குத் தடை விதித்தன. இந்திய அரசாங்கம் புலிகளை அழித்தொழிக்கத் திட்டமிட்டது. 2009-இல் இந்திய அரசின் ஆதரவுடன் சிங்கள அரசாங்கம் ஈழத்தில் நடத்திய முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு அன்றைய முதல்வரான கலைஞர் உடந்தை என அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டபோதிலும் அவர் தெளிந்த மனநிலையுடன் செயல்பட்டார். வீண் பழியைச்

சுமத்தி, வெறுமனே கூச்சல் போடுகிற வெற்றுக் கிளுகிளுப்பையும் அரசியல்வாதிகளையும் எப்படிச் சமாளிக்க வேண்டுமென்பது கலைஞருக்குத் தெரியும். இங்கிருக்கும் தமிழ்த் தேசியவாதிகள் சிலரும், மேலைநாடுகளில் செட்டிலாகியுள்ள ஈழத் தமிழர்கள் சிலரும் ஈழப் போராட்டம் தோற்றதற்குக் கலைஞர்தான் காரணம் என்று மீண்டும் மீண்டும் சொல்வது அப்பட்டமான பொய். மொழியால் இந்தியத் தமிழர்களும் ஈழத் தமிழர்களும் ஒன்றுபட்டாலும், இரண்டு பிரிவினரும் வெவ்வேறு நாடுகளில் வசிப்பவர்கள் என்ற புரிதல் பலருக்கும் இல்லை. இந்தியா என்ற குட்டி வல்லரசாகச் செயல்படுகிற நாட்டில், தமிழ்நாடு ஒரு மாநிலம், அந்த மாநில முதலமைச்சரின் அதிகாரம் வரம்பிற்குட்பட்டது. “கலைஞர் மட்டுமே தமிழ்த் தேசியவாத முகம்கொண்ட பிற தமிழகத் தலைவர்களைப் போல புலிகளை விமர்சனமின்றி வழிபட்டவரல்ல. தீவிரப் புலி விசுவாசம் காட்டி அரசியலில் செல்வாக்குப் பெறவேண்டிய நிலையில் அவர் இருக்கவில்லை. அவரது அரசியல் பலமும் அவரது அரசியல் கட்டமைப்பும் இந்த மொண்ணைத்தனமான தமிழ்த் தேசியத்தில் இருந்து வேறுபட்டவை; சனநாயக அரசியலை அடிப்படையாகக் கொண்டவை. திராவிட இயக்கத்தில், தமிழ் இலக்கியத்தில், தமிழ் சினிமாவில் என்றென்றைக்கும் தலைமகனாகக் கலைஞர் கருதப்படுவது போல, ஈழத் தமிழர்களின் இன்பதுன்பங்களில் உடன் இருந்தவராக எங்களது அரசியலிலும் கலை இலக்கியத்திலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியவராகவே கலைஞரைக் காலம் குறித்துக்கொள்ளும்” என்று ஈழத்து

எழுத்தாளர் ஷோபா சக்தி குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.
அமைதிப் படை என்ற பெயரில் இந்திய ராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டதற்கும், அந்த ராணுவம் அங்கு செய்த கொடுமைகளுக்கும் காரணமாக இருந்த மேனாள் பிரதமர் இராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர், தமிழக மண்ணில் கொடூரமான முறையில் கொன்றது எப்படிச் சரியாகும் என்ற தமிழகத் தமிழர்களின் கேள்விக்கு என்ன விடை இருக்கிறது? பிரச்சினைக்கு மூலகாரணமான எதிரியாகக் கருதப்படுகிற தலைவரை அழித்தொழிக்கும்போது, அதனுடைய பின்விளைவுகள் எத்தகைய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற புரிதல் சிறிதும் இல்லாமல் செய்த புலிகளின் செயல், வெறும் சாகசம்தான். காங்கிரசுக்குப் பதிலாகப் பாரதிய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தால், ஈழத் தமிழர் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்கும் என்று தமிழ்த் தேசியவாதிகள் அப்போது கருத்துத் தெரிவித்தனர். இராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று, 27 ஆண்டுகளாகச் சிறையில் வாடுகிற தமிழர்களை விடுவிக்க முடியாது என உச்சநீதிமன்றத்தில் பாரதிய ஜனதா அரசாங்கம் வாக்குமூலம் தந்துள்ளது. இதுதான் யதார்த்தம். இந்நிலையில் ஈழத் தமிழர் போராட்டத்தை முன்வைத்துக் கலைஞர் மீது சுமத்தப்படுகிற குற்றச்சாட்டுகள், அவருடைய ஆளுமையைச் சிதைப்பதற்கான அற்பத்தனமான முயற்சிகள். அவ்வளவுதான். ஈழத் தமிழர் பிரச்சினையின் பன்முகத் தன்மைகளைப் புரிந்துகொண்டு,

செயல்பட்ட கலைஞரின் செயல்பாடுகளை விருப்பு வெறுப்பற்று ஆராய்ந்தால், தமிழர் விடுதலைக்காக அவர் மேற்கொண்ட எண்ணற்ற ராஜதந்திரச் செயல்கள் புலப்படும்.

சூரியனுக்குக் கீழே நடைபெறுகிற எல்லாவற்றையும் பகுத்தறிவின் மூலம் கேள்விக்குள்ளாக்கிய கலைஞர், எப்பொழுதும் எல்லாவற்றையும் பகடிக்குள்ளாக்கியது தற்செயலானது அல்ல. அவர் தனது வாழ்க்கை முழுக்க நகைச்சுவை உணர்வுடன் எல்லோருடனும் பேசிக்கொண்டிருந்தார். அரசியல் வாழ்க்கையில் கடுமையான தோல்விகளை எதிர்கொண்டபோதும், அவரிடமிருந்து வெளிப்பட்ட இயல்பான கேலி, கிண்டல் போன்றவை சூழலின் இறுக்கத்தைத் தளர்த்தின. கலகக்குரல், எதிர்மறையான சிந்தனைப்போக்கு, பகடி செய்தல் என அவர் தனது வாழ்வின் இறுதி நாட்களிலும் கொண்டிருந்தது, ஒருவகையில் அவருடைய கலை மேதைமையின் வெளிப்பாடுதான். பொதுவாகக் கலையானது, எல்லாவிதமான வறட்டுக் கோட்பாடுகளுக்கும், கல்லாகிப்போன கருத்துகளுக்கும் அந்நியமாக இருக்கிறது. அது, யதார்த்தத்தை நிகழ்வுப் போக்காகவும், இயக்கமாகவும் நடவடிக்கையாகவும் புரிந்துகொள்கிறது. கலை, ஒவ்வொரு கணத்திலும் வாழ்க்கையின் உயிர்த்துடிப்பையும் மூச்சையும் ஒன்றுசேர்க்க முயல்கிறது. கலஞர் குழந்தைப் பருவத்தில் இருந்தே கலைப் பின்புலத்தில் வளர்ந்தவர். இசையும் நடனமும் செழித்தோங்கிய தஞ்சை வண்டல் நில வெளியில் கலையின்

உன்னதங்களைத் தரிசித்தவர். அரசியலும் கலையும் கலைஞரின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்தவை. எனவேதான் அவரால் முதலமைச்சராக இருந்தபோதும், முரசொலி இதழில் உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் தொடர்ந்து எழுத முடிந்தது. சோ எழுதிய முகமது பின் துக்ளக் நாடகத்திற்கு எதிராக நானே அறிவாளி நாடகத்தை எழுதும்போது கலைஞர் முதலமைச்சராக இருந்தார். அ.தி.மு.க. ஆட்சியைக் கண்டித்து எழுதப்பட்ட புனித ராஜ்ஜியம் நாடகம், அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது எழுதப்பட்டது.

1975-இல் நாட்டில் அவசர நிலை, நடுவண் அரசினால் அமல்படுத்தப்பட்டபோது, அதற்கெதிராகக் குரலெழுப்பிய கலைஞரின் ஜனநாயக மனப்பாங்கு, குறிப்பிடத்தக்கது. எதுவும் நடப்பதற்கான சாத்தியங்களினால் தானும் திமுகவினரும் அடக்குமுறைக்குள்ளாகலாம் என்றபோதிலும், கலைஞரின் மனம் அச்சமற்று இருந்தது. நெருக்கடி நிலையின்போது அரசியல்வாதியாகச் செயல்பட்ட கலைஞர், இக்கட்டான நேரத்தில் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்ததன்மூலம், மாவீரர் ஆனார். திமுகவின் ஆட்சி கலைக்கப்பட்டபோது, முரசொலி பத்திரிகையில் கலைஞர் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதங்கள், கரிகாலன் கேள்வி - பதில்கள், வீதி நாடகங்கள் எனப் படைப்புரீதியில் ஒடுக்குமுறைக்கு எதிராகத் துணிந்து செயல்பட்டார். ஆட்சி கலைக்கப்பட்டபோதிலும் அதைப் பொருடபடுத்தாமல், எதிர்வினையாற்றிய செயல்,

கலைஞரின் அஞ்சா நெஞ்சத்திற்கு எடுத்துக்காட்டு. சிறையில் அடைக்கப்பட்ட திமுகவினர் யார் என முரசொலியில் பட்டியலிட அன்றைய தணிக்கை அதிகாரிகள் அனுமதிக்காத அடக்குமுறை நிலவியபோது, அண்ணா நினைவிடத்திற்கு மலர் வளையம் வைக்க வர இயலாதோர் பட்டியலைப் பிரசுரித்தது, கலைஞர் தேர்ந்த பத்திரிகையாளர் என்பதன் வெளிப்பாடு. சிறையில் அடைக்கப்பட்டபோது, 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை' என்று துயரத்தையும் கவித்துவத்துடன் சொல்கிற மனம், கலைஞருக்கு இருந்தது. இந்தப் போக்கானது, திருவாரூரில் சிறுவனாக இருந்த இளம் கலைஞர், திராவிட இயக்கச் செயல்பாடுகளில் ஈடுபட்ட காலத்தின் நீட்சியாகும். கலைஞர், தான் செய்கிற செயல்களின் பின்விளைவுகள் குறித்து அறிந்திருந்ததால், அரசியல் வாழ்க்கையில் அவர் ஒருபோதும் தேவையற்ற அச்சம் கொள்ளவில்லை. அதுதான் அரசியலில் அவருடைய பலம்.

கலைஞரின் பெரும்பாலான இலக்கியப் படைப்புகள் பெரிதும் அரசியல் நோக்கம் கருதிப் படைக்கப்பட்டவை. திரைப்படத் துறையில் கலைஞர் சாதாரணக் குடும்பக் கதையம்சங்கள், அரச காலத்துப் படங்களுக்கும் கதை-வசனம் எழுதியிருந்தாலும் பராசக்தி போன்ற சமூக சீர்திருத்தக் கருத்துகளை உள்ளடக்கிய படங்களுக்கு முன்னுரிமை அளித்தார். நாடகம், சிறுகதை, நாவல் போன்ற வடிவங்களைத் திராவிடக் கருத்தியல் பிரச்சார நோக்கம் கருதிப் படைத்த கலைஞரின் படைப்புகள், பரவலாகக்

கவனம் பெற்றன; வீர்யமுடன் பரவின; இதுவரை சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திய சநாதனத்தினை அம்பலப்படுத்தின. திராவிடக் கருத்துகளைப் பரப்பிடவும் லட்சிய நோக்கில் அரசியல் விடுதலை வேண்டிப் போராடிய இயக்கப் போராளிகளுக்குக் கலைஞரின் படைப்புகள் வாளும் கேடயமாகவும் பயன்பட்டன. வாள் முனையைவிடப் பேனா முனை கூர்மையானது என்ற பிரெஞ்சுச் சிந்தனையாளர் வால்டேரின் குரல், கலைஞர் உள்ளிட்ட திராவிட இயக்கப் படைப்பாளிகளுக்கு வேதமாயிற்று. இலக்கியப் படைப்புகளைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவதற்காகத் தொடர்ந்து எழுதிய கலைஞர், தனது  படைப்பு மனநிலை குறித்தும், இலக்கியத்தின் இடம் குறித்தும் நன்கு அறிந்திருந்தார். அவருடைய சில படைப்புகள், எழுதப்பட்டதன் நோக்கம் நிறைவேறியவுடன் ஆவணமாகி விடுகின்றன. சில படைப்புகள் காலங்கடந்து நிலைத்திருக்கின்றன. அவர் 26 வயதில் திராவிட இயக்கக் கருத்தியல் பிரச்சாரத்திற்காக எழுதிய ‘தூக்கு மேடை’ நாடகம், மறுவாசிப்பில் இன்றையச் சூழலுக்கும் பொருந்தியிருப்பதை அவதானிக்க முடிகிறது. வைதிக இந்து சமயத்திற்கு எதிரான கலைஞரின் சிந்தனை, அந்த நாடகத்தில் துல்லியமாக வெளிப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் நம்பிக்கையின் அடிப்படையில் உருவாக்கி, ஒற்றைத் தன்மையை வலியுறுத்தும் மத அடிப்படைவாதிகளின் போக்குகள், காலப்போக்கில் பாசிச அபாயத்திற்கு இட்டுச் செல்கிற இன்றைய  அபாயகரமான சூழலில், கலைஞரின் படைப்புகள் மீண்டும் தேவைப்படுகின்றன.

நாற்பதுகளில் இந்திய அரசியல் விடுதலை முதன்மையானது, அதனைத் தொடர்ந்து பொருளாதார விடுதலை கிடைக்குமென்று பொதுவுடைமை இயக்கத்தினர் சொன்னபோது, கலைஞரின் அரசியல் அணுகுமுறை வேறுபட்டிருந்தது. மார்க்சியத்தை மக்கள் விடுதலைக்கான தத்துவமாக ஏற்றுக்கொண்ட கலைஞர், அன்று தமிழர்களிடையில் நிலவிய சாதிய ஏற்றத்தாழ்வு, மூடநம்பிக்கை, பாலியல் சமத்துவமின்மை, பார்ப்பனீய மேலாதிக்கம் போன்ற சமூகப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தந்தார். தமிழின் சிறப்பினையும் தமிழர் பண்பாட்டினையும் போற்றிய கலைஞர், பெரியாரின் வழியில் வருணாசிரம தருமத்திற்கு எதிராகக் கருத்தியல் புரட்சியை முன்னிலைப்படுத்தினார். அன்றாடம் உடனடிப் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு, மனிதனை மனிதன் மதிக்கிற உண்மையான சமுதாய விடுதலை அவசியம் என்ற கருத்து கலைஞருக்கு உண்டு. கலைஞர் திராவிட இன வாதம் பேசுகிறார் எனக் காங்கிரஸ் இயக்கத்தினரும் இடதுசாரிகளும் கருதினர். இந்திய நாடு சுதந்திரமடைந்து 71 ஆண்டுகள் கடந்த பின்னர், உலகமயமாக்கல் காலகட்டத்தில் கார்ப்பரேட்டுகளின் மேலாதிக்க அரசியல் ஆதிக்கம் செலுத்துகிற புதிய காலனியாதிக்கச் சூழலில், இந்தியாவின் தன்னிறைவான பொருளாதாரம் கேள்விக்குறியாகி விட்டது. எங்கும் நுகர்பொருள் பண்பாட்டின் ஆதிக்கம் வலுவடையும் நிலையில், மரபான எல்லாவிதமான அடையாளங்களும் அழித்தொழிக்கப்படுகின்றன. தமிழ் போன்ற இரண்டாயிரமாண்டுப்

பாரம்பரியமான மொழியின் தனித்துவத்தை மீட்டெடுக்கும்வகையில் அரசியலை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் தமிழ், தமிழர் குறித்துக் கடந்த எண்பதாண்டுகளாகப் பேசியும் எழுதியும் அதற்கான ஆக்கமான பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்திருக்கிற கலைஞரின் செயல்கள், தமிழர் வரலாற்றில் என்றும் முக்கியமான பதிவுகளாக விளங்குகின்றன. தமிழ் மொழியை முன்வைத்துக் கலைஞர் உருவாக்கிய அரசியல், அவருடைய பிரமாண்டமான ஆளுமை உருவாக்கத்தில் தனித்துவமானது.

கலைஞரின் அறிவு, தமிழர் பண்பாட்டின் வேர்களைத் தேடிக் கண்டறிய முயன்றவேளையில், அவருடைய இதயம் துயரப்படுகிறவர்கள் அனைவருக்காகவும் குருதியைச் சிந்தியது. அதற்கான தீர்வுகளைக் கலை இலக்கியத்தின் வழியாகக் கண்டறிய முயன்றது. “எழுத்தாளன், தன்னுடைய எழுத்தை ஒரு கருவியாக நினைப்பதில்லை. அது குறிக்கோளாக இருக்கிறது. அது அவனுக்கும் மற்றவர்களுக்கும் மிகக்குறைந்த அளவிலேயே ஒரு கருவியாக இருப்பதால், அவசியம் ஏற்படுகிறபோது. அவன் அதனுடைய இருத்தலுக்காகத் தன்னுடைய இருத்தலைத் தியாகம் செய்கிறான்” என்ற காரல் மார்க்ஸ் குறிப்பிடுவது கலைஞருக்குப் பொருந்துகிறது. பத்திரிகை நாவல், சிறுகதை, கடிதம், நாடகம், திரைப்படம், மேடைப்பேச்சு, கேலிச் சித்திரம், கவிதை எனத் தொடர்ந்து இயங்கிய கலைஞருக்குத் தீர்க்கமான செயல்திட்டம்

இருந்தது. தமிழக மக்களின் நலன்களுக்காகத் தான் என்ன செய்ய வேண்டுமென்ற தீர்மானத்துடன், பொது வாழ்வில் செயல்பட்ட கலைஞர், தனது வாழ்நாள் முழுக்கச் செயலூக்கத்துடன் விளங்கினார்.

இளம் கலைஞர் தான் தேர்ந்தெடுத்த பாதையின் போக்கினை நன்கு அறிந்தவர். தமிழர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடப் போகிற செயல்பாட்டில், வழியெங்கும் நிரம்பியிருக்கிற முட்களை நன்கு அறிந்தவர். தான் செய்யப்போகிற பணியின் பெரும் பொறுப்பினையும் கடுமையான சுமையினையும் உணர்ந்திருந்தார். அவர் 1940களில் தனது எதிர்காலத்தைத் தேர்ந்தெடுத்து விட்டார். தன்னுடைய தேர்வின் அழுத்தம், மறுபக்கம் நன்கு தெரியுமென்றாலும், அது தமிழ்ச் சமூகத்தின் விடுதலைக்கானது என்ற புரிதல் கலைஞருக்கு உண்டு. தனிப்பட்ட முறையில் தனது செயல்கள் குறித்து அற்பத் திருப்தியடையும் மனநிலை கலைஞருக்கு ஒருபோதும் இல்லை. அவர் தனக்காக மட்டும் செயல்பட்டிருந்தால், இன்னும் நாடறிந்த அறிவுஜீவியாகி இருக்கலாம்; ஞானியாகி இருக்கலாம்; பிரபலமானவராக மாறியிருந்திருக்கலாம். ஆனால் அவர் உண்மையிலே மாபெரும் மனிதராகி இருக்க முடியாது. மாபெரும் மனிதர்கள் சூழலின் தவிர்க்கவியலாத தேவை அல்லது நெருக்கடியின்போது பிறக்கிறார்கள். பழமையான சமூகத்தின் அற்பத்தனங்கள் ஆதிக்கம் செலுத்திய சூழலில், வளர்ச்சிக்குத் தடையாக விளங்கிய இழிவுகள், முட்டுக்கட்டைகள் போன்றவற்றிலிருந்து

விடுதலையடைந்த கலைஞர், தன்னுடைய சொந்தச் சிந்தனையின் விளைவுகளைக் கண்டு அஞ்சாமல், அவற்றைத் துணிவுடன் செயல்படுத்தக்கூடிய உறுதிப்பாடு மிக்கவரானார். அதனால் அவர் தனது வாழ்நாளின் இறுதிவரையிலும் போராடியதால் மாபெரும் ஆளுமையாகி விட்டார். கலைஞர் என்ற சொல்லின் இன்னொரு பொருள் ஓய்வறியாப் பணியும் போராட்டமும் என்று சொல்லுமளவு அவருடைய  மாபெரும் ஆளுமை ஒப்புவமையற்று விரிந்துள்ளது. தமிழர் வாழ்க்கையின் தேவைகள் காரணமாகத் தமிழக வரலாறு, கலைஞர் என்ற மாபெரும் மனிதரை உருவாக்கியவேளையில், அவர் தனிமனிதராக வரலாற்றை மாற்றியமைத்ததும் காத்திரமாக நடைபெற்றுள்ளது. மொழி, இலக்கியம், கலை, அரசியல், சமூக சீர்திருத்தம் எனப் பன்முகத் தளங்களில் காத்திரமாகச் செயலாற்றியுள்ள கலைஞர், தமிழர் வரலாற்றில் என்றும் அபூர்வமான ஆளுமையாக விளங்குவார்.

murugesapandian2011@gmail.com

�றவை.

□□□.

# மனுஷ்ய புத்திரன் கவிதைகள்



## தலைவர் எப்படியிருக்கிறார்

தலைவர் எப்படியிருக்கிறார்?”
இன்று இந்தக் கேள்வியைத்தவிர
வேறு எந்தக்கேள்வியும்
எங்கும் இல்லை
வீடுகளில் தொடங்கி
தெருக்கள்,
நகரங்கள்,
சிற்றூர்கள்,
தேசங்கள் கடந்து அந்தக் குரல்
வியாபித்துக்கொண்டே இருக்கிறது
எந்த பதிலிலும் யாருக்கும் சமாதானம் இல்லை

மக்கள் தெருக்களில்
அமைதியிழந்து நின்றுகொண்டிருக்கிறார்கள்

ஒரே ஒரு பதில் மட்டுமே
எல்லோராலும் வேண்டப்படுகிறது
அந்த ஒரே ஒரு பதிலைத்தேடித்தான்
ஒவ்வொருவரும் கூட்டத்தில்
முண்டியடித்துக்கொண்டு
முன்னேறிச் செல்கிறார்கள்
நலமாக இருக்கிறார்’
என்ற ஒற்றை வாக்கியத்தை வேண்டி
லட்சோப இலட்சம் மனங்கள் துடிக்கின்றன
லட்சோப இலட்சம் கண்ணீர்த் துளிகள்
துளிர்க்கின்றன

எப்போதும் காலத்தை எதிர்த்து நின்ற தலைவன்
இப்போதும் காலத்தோடுதான் போராடுகிறான்
காலத்தை வென்ற மனிதன்
காலத்தின் சதுரங்கக் கட்டத்தில்
தளர்ந்த கைகளோடு காய்களை
மெல்ல நகர்த்துகிறான்

எளியவர்களிலும் எளிய மனிதர்கள்
அச்சம் கவிந்த இரவுகளில்
சூரியன் உதிக்கும் திசை நோக்கி
தூங்காமல் விழித்திருக்கிறார்கள்
தங்கள் விதியை மாற்றிய தலைவன்
தன் விதியோடு நிகழ்த்தும் போரை
மனம் கசியப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்

வாழ்க எனும் முழக்கங்கள்
அவரது பாதித் துயிலில்
ஒரு கனவுபோல கேட்கிறது
அரை நூற்றாண்டுகளாக
ஒரு கணமும் ஓயாத முழக்கம் அது
வாழ்வித்த தலைவனை

வாழ்வித்த முழக்கம்
காலத்தின் காற்றில் கலையாத முழக்கம்

அவர் இப்போது தன் கனவில்
கரகரத்த குரலில்
உரையாற்றிக்கொண்டேதான் இருக்கிறார்
இந்த நிலத்தின் மீது தான் கண்ட கனவுகளை
அவர் இப்போதும்
உரத்துச்சொல்லிக்கொண்டிருக்கிறார்
அந்தக் குரல் எனக்குக் கேட்கிறது
உங்களுக்குக் கேட்கிறது
கேளாத காதுகளுக்கும்கூட
அது இப்போது கேட்கிறது
இடிமுழக்கம்போல அது கேட்கிறது

அவர் அருகில் யாரோ குனிந்து
என்னைத் தெரிகிறதா என்று கேட்கிறார்கள்
அவர் புன்னகைக்கிறார்
எத்தனை கோடி மனிதர்களுக்கு அடையாளம்
வழங்கிய மனிதரிடம்
தங்கள் அடையாளம் தெரிகிறதா
என்று கேட்கிறார்கள்
கோடானு கோடி நினைவுகளில்
வாழும் மனிதரின் நினைவுகள் தளும்புகின்றன

இந்த நாளில்
உன் பெயர்
ஒரு வன நெருப்பாய்
எங்கும் படர்ந்துகொண்டிருக்கிறது
எல்லோரும் அந்த நெருப்பின் வெளிச்சத்தில்
உன்னைத் தங்களுக்கு இவ்வளவு பிடிக்குமா என்று
தம்மைத்தாமே வியந்துகொள்கிறார்கள்

நீ ஏன் காலத்தோடு போராடுகிறாய்
நீதானே காலம்
காலத்தின் சக்கரங்களை உருட்டி

வரலாற்றின் ஓடாத தேர்களையெல்லாம்
ஓடவைத்தவன்தானே நீ
கடைக்கோடி மனிதனின் கொடியை
நீ கோட்டைச்சுவர்களில் ஏற்றியபோது
நீ சுவாசிக்கும் காற்றால்
அதைப்பறக்க வைத்தாய்

நாங்கள் இந்த இரவுகளுக்கு அஞ்சுகிறோம்
நாங்கள் இந்தப் பகல்களுக்கு அஞ்சுகிறோம்
வதந்திகளுக்கும் உண்மைகளுக்கும் நடுவே
புலரியின் பார்வை மயங்கும்
சாம்பல் வெளிச்சத்தில்
வீடு திரும்பிக்கொண்டிருக்கிறோம்
(கலைஞர் மருத்துவமனையில் இருந்தபோது
எழுதிய கவிதை)

## அற்புதம் நிகழ்ந்த இரவு...



எப்போதும் அற்புதங்களை நிகழ்த்திய தலைவன்
நேற்றிரவும் ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார்
99 முறை தன் மரணச் செய்தியைத்

தானே கேட்டுச் சிரித்த தலைவன்
100 வது முறையாகவும் கேட்டுப்
புன்னகையுடன் காலைத் தேநீர் அருந்துகிறார்

கட்டுமரமாய் இருப்பேன் என்று சொன்ன
தலைவனை
நேற்றிரவு ஆழிப்பேரலை ஒன்று சூழ்ந்தது
எங்கோ முழ்கி
ஒரு நீச்சல் சாகசக்காரனாய்
மிதந்து மேலே வருகிறார்
போராடுகிற மனிதனுக்கு
அதுவே ஒரு போதையாகிவிடுகிறது
அற்புதங்களை நிகழ்த்துகிற மனிதனுக்கு
அதுவே ஒரு பழக்கமாகிவிடுகிறது

அற்புதம் நிகழ்ந்த இரவில்
வதந்திகள் வெட்டுக்கிளிகளைப்போல
நகரமெங்கும் பரவியிருந்தன
கடைகள் அவசரமாக அடைக்கப்பட்டன
மிஞ்சியிருந்த பால் பாக்கெட்டுகளைப்
பதட்டத்துடன் வாங்கியபடி
அவசரமாக வீடு நோக்கி நடந்தார்கள்
எல்லோரும் எல்லாவற்றையும் நம்பினார்கள்
எல்லோரும் எல்லாவற்றையும் சந்தேகித்தார்கள்
எல்லோரும் மற்றவர்களைத் தூங்கச்
சொல்லிவிட்டு
எல்லோரும் விழித்திருந்தார்கள்
நகரமெங்கும் துயரம்
கம்பளம் விரித்து அமர்ந்திருந்தது

மக்கள் குரலை
எப்போதும் கேட்ட தலைவனுக்கு
இப்போதும் கேட்டது
மக்களின் குரல்
எழுந்து வா தலைவா”

ஒரு நூற்றாண்டு களைப்பில்
சற்றே கண்ணயரச் சென்ற தலைவனின்
இதயத்தின் ஆழத்தில் கேட்டது அந்தக் குரல்
எழுந்து வா தலைவா"

அந்தக்குரல்
மருத்துவமனையின்
மூடப்பட்ட கதவுகளை
அறுத்துச் சென்றது
பேரிருள் சூழ்ந்த ஒரு இரவின்
கனத்த இருளை ஊடுருவிச் சென்றது
எழுந்து வா தலைவா"

மக்கள் கொட்டும் மழையில்
கலைய மறுத்து நின்றுகொண்டிருக்கிறார்கள்
ஆயிரம் ஆயிரம் கண்ணீர்த் துளிகள் மேல்
ஆயிரமாயிரம் மழைத்துளிகள்
விழுந்தவண்ணம் இருக்கின்றன
யாரோ ஒருத்தி மருத்துமனை வாயிற்கதவைப்
பிடித்து உலுக்குகிறாள்
என் தகப்பனை வரச் சொல்
என் தலைவனை வரச் சொல்"

தலைவனின் காதில்
யாரோ சொல்கிறார்கள்
நிலைமை கட்டுக்கடங்காமல்
சென்று கொண்டிருக்கிறது
உங்களைத் தவிர வேறு யாரும்
அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது"

ஒரு நூற்றாண்டு காலம்
லட்சோப லட்சம் முடிவுகளை
எடுத்த தலைவன்
கண் விழித்து கண் துஞ்சும் வரை
முடிவுகள் எடுப்பதையே வாழ்வாகக் கொண்ட
தலைவன்

கரகரத்த குரலில் முணுமுணுக்கிறான்
நான்தான் எல்லாவற்றையும் முடிவு
செய்திருக்கிறேன்
அப்படித்தானே இதுவரை எல்லாமும்
நடந்திருக்கிறது
அவர்களிடம் போய்ச் சொல்
நான் இன்னும் முடிவெடுக்கவில்லை
இன்றைய பொதுக்கூட்டம் முடிந்தது
பத்திரமாக வீட்டிற்குப் போகச் சொல்"

பிறகு நாங்கள்
வீடு திரும்பினோம்
( கலைஞர் மரணத்தோடு போராடிக்கொண்டிருந்த
தருணத்தைப் பதிவு செய்த இந்தக் கவிதை
முரசொலியில் வெளியிடப்பட்டு
பல்லாயிரக்கணக்கானோரை மனம் நெகிழச்
செய்ததுடன் சமூக வலைத்தளங்களிலும்
பரவலாக வாசிக்கப்பட்டது)

## இறுதி ஊர்வலம் தொடங்கிவிட்டது

இறுதி ஊர்வலம் தொடங்கிவிட்டது
நூறு நூறு ஊர்வலங்களை
வழி நடத்திச் சென்ற தலைவனின்
இந்த நீள் பயணத்தை
மக்கள் வழி நடத்திச் செல்கிறார்கள்
நீதி கேட்டு
பல லட்சம் மைல்கள் நடந்த தலைவனின்
இறுதிப் பயணம்
கோடானுகோடி கண்ணீர் துளிகள்மேல்
நிகழ்ந்துகொண்டிருக்கிறது

ஒரு தலைவனின் முகத்தைக்

கடைசியாகக் காண
ஒரு தலைவனின் கரத்தைக்
கடைசியாகத் தொட
லட்சோப லட்சம் மக்கள்
அலைமோதுகிறார்கள்
தடியடிபடுகிறார்கள்
நெரிசலில் மிதிபடுகிறார்கள்
கண்ணுக்குத் தெரியாத ஒரு அழைப்பு
அவர்களை ஆட்கொள்கிறது
அவர்களால் அந்தக் கரகரத்த குரலின் அழைப்பை
ஒருபோதும் மறுக்க முடிந்ததில்லை

குடிக்கத் தண்ணீர் இல்லை
நிற்க நிழல் இல்லை
யாருக்கும் எந்தப் புகாரும் இல்லை
மக்கள் அலை அலையாக
வந்துகொண்டிருக்கிறார்கள்
மீட்க முடியாததை மீட்பதற்காக
முழக்கமிடுகிறார்கள்
சொல்ல முடியாததை சொல்வதற்காக
வாய்விட்டு அழுகிறார்கள்

ஒரு திருநங்கை நெஞ்சில் அடித்துக்கொண்டு
அழுகிறாள்
கட்டை ஊன்றி நடக்கும் ஒரு மனிதன்
கூட்டத்தில் தடுமாறி விழுகிறான்
ஒரு எளிய மனிதனின் மூக்குக் கண்ணாடி
தவறி விழுகிறது

அவர்களுக்குத் தெரியும்
அவன் தங்களைப் போன்ற ஒரு எளிய மனிதன்
என்று
அவன் தங்களைப்போன்றே அநீதி
இழைக்கப்பட்டவன் என்று
அவன் தங்கள் குருதியிலிருந்து முளைத்து
வந்தவன் என்று
அவனே அவர்களுக்கு மகனாக இருந்தான் என்று
அவனே அவர்களுக்குத் தகப்பனாக இருந்தான்
என்று
அவனே அவர்களுக்கு மீட்பனாக இருந்தான் என்று
வரலாற்றின் கொடூரமான விதிகளுக்கு எதிராக
அவனே தங்கள் கடைசித் துருப்புச் சீட்டாக
இருந்தான் என்று

பரிதவிக்கும் கரங்களுக்குத்தான் தெரியும்
பறிகொடுத்தல் என்றால் என்னவென்று
போராடுகிறவர்களுக்குத்தான் தெரியும்

போர்க்களத்தில் தங்கள் படைக்கலனை
இழப்பது என்றால் என்னவென்று

இதோ தலைவனின் முகத்தில்
பட்டுத் தெறிக்கும் இந்த அந்தியின் சூரியன்
ஆயிரம் மடங்கு பிரகாசமுடையதாகிறது
மக்களின் மேல் பொழியும் மழைத்துளிகள்
காலத்தின் பாலைவனங்களை ஈரமாக்குகிறது

ஒரு சித்தாந்தம் ஒரு தலைவனின் பெயராக
இருந்தது
ஒரு எதிர்க்குரல் ஒரு தலைவனின் உடலாக
இருந்தது
ஒரு போராட்டம் ஒரு தலைவனின் வாழ்வாக
இருந்தது

அம்பாள் எந்தக் காலத்தில் பேசினாள்?' என்று
கேட்ட
அதே தலைவன்தான்
ராமர் எந்தக் கல்லூரியில் படித்தார்?' என்றும்
கேட்டான்
அவன் கையில் எடுத்த
பகுத்தறிவின் வாள்
ஒருபோதும் உறைக்குத் திரும்பவில்லை

ஒரு துயரமான இசை
துயரத்தைச் சொல்லிவிடுமா?

ஒரு துயரமான கண்ணீர்
துயரத்தை வெல்ல முடியுமா?

ஒரு இரங்கற் பா
இரங்கும் இதயத்தைக் காட்டிவிடுமா?

அணுவணுவாக நகர்கிறது
இறுதி ஊர்வலம்
அது ஒரு நாளும்

எங்கும் முடிவடையாத ஊர்வலம்
லட்சியத்தின் கனல் எம் நெஞ்சில் எரிகிறது
நீதிக்கான நெருப்பு எம் கண்களில் படர்கிறது
ஒருபோதும் அணையா நெருப்பு
அவன் மூட்டிய நெருப்பிற்கு
அவனே எண்ணெயாக இருந்தான்
அவன் வளர்த்த வேள்விக்கு
அவனே நெய்யாக இருந்தான்

காலத்தின் நட்சத்திரக் கூட்டங்களுக்குள்
ஒரு தலைவனின் முகம்
அழிவற்ற நட்சத்திரமாகிக்கொண்டிருக்கிறது
தலைவனைப் புதைத்த இடத்தில்
வனங்கள் உருவாகும்
பறவைகள் கூடுகட்டும்
நூறு நூறு வசந்த காலங்கள் வரும்

எப்போதெல்லாம்
இந்த நிலத்தின் மீது
ஒடுக்குமுறையின் நிழல் படிகிறதோ
அப்போதெல்லாம்
தலைவன் உறங்கும் கடற்கரையில்
ஆழிப்பேரலைகள் எழும்

பிரமாண்டமான கடலில்
பிரமாண்டமான இருள் கவிவதைத் கண்டு
வீடு திரும்ப மனமில்லாமல்
மனம் பிறழ்ந்து அங்கேயே
நின்றுகொண்டிருக்கிறோம்
(இந்தக் கவிதை கலைஞரின் இறுதி ஊர்வல
நேரலை நிகழ்ச்சியில் சன் நியூஸ்
தொலைக்காட்சியில்  கவிஞரால் நெஞ்சை
உருக்கும் வகையில் வாசிக்கப்பட்டது. அப்போதே
சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட
இக்கவிதை நியூஸ் 7, நியூஸ் 8 ஆகிய

தொலைக்காட்சி களிலும் வெவ்வேறு குரல்களில் பலமுறை வாசிக்கப்பட்டு கலைஞரின் இறுதி ஊர்வலத்தைக் கண்டுகொண்டிருந்த கோடிக்கணக்கானோரைச் சென்றடைந்தது.)

## நடந்தாய் வாழி தலைவா



நடந்தாய் வாழி தலைவா
வறண்ட தமிழ் நிலத்தின் மீது
வற்றாத காவிரியாய்ப் பாய்ந்த தலைவா
கண்ணீர் கடலில் நகர்கிறது
உன் இறுதிப் பயணம்

நடந்தாய் வாழி தலைவா
எங்களுக்காகக் காலமெல்லாம் நடந்தாய்

வரலாற்றின் தடைகளை உடைத்து நடந்தாய்
அநீதியின் சுவர்களை உடைத்து நடந்தாய்
இன்று உன் இறுதிப் பயணத்தில்
லட்சோப லட்சம் கால்கள்
உன்னோடு சேர்ந்து நடக்கின்றன
நடந்தாய் வாழி தலைவா

சூர்ய குமாரா
இருண்ட நிலங்களிலிருந்து எழுந்து வந்தாய்
காலத்தின் நீண்ட இரவுகளிலிருந்து பிறந்து
வந்தாய்
வாராது வந்த உதயமாய் வந்தாய்
வெளிச்சமற்ற தலைமுறைகளின்
வரலாற்றுத் துயரங்களின் மீது
ஒரு மகத்தான  விடியலாய் வந்தாய்

பகுத்தறிவுப் பகலவனின்
பதாகையை உயர்த்திப் பிடித்தவர்  நீர்
பேரறிஞரின் கனவுகளைக்
கோடானு கோடி மனிதர்களுக்கு
நனவாக்கித் தந்தவர் நீர்

சூர்ய குமாரா
பசித்த மானுடத்தின் கூக்குரல்
உன் இதயத்தில் கனல் மூட்டியது
வயிற்றிற்கு சோறிட
வாழும் மனிதருக்கெல்லாம்
அட்சயப் பாத்திரங்கள் திறந்தவர் நீர்

சாதியத்தின் அடிமைச் சங்கிலிகள்
புரளும் ஓசை உன்னை அமைதியிழக்க வைத்தது
அதன் ஆதிக்க கண்ணிகளை
ஒவ்வொன்றாக நீ உடைத்தபோது
வரலாறு நீண்ட உறக்கத்திலிருந்து
விழித்தெழுந்தது

கைவிடப்பட்டவர்களுக்காக
எப்போதும் நீண்ட கரங்கள் உன் கரங்கள்
திசையற்றவர்களின்
திசைகாட்டியாக இருந்தவர் நீர்

சிதைக்கப்படும் உன் மொழியின் விம்மல்
உன்னை சினமுறச்  செய்தது
தமிழ் இன்பத் தமிழை
தமிழரின் உயிருக்கு நேராக்கியவர் நீர்

பதினான்கு வயதில் ஏந்திய
எதிர்ப்பின் கொடியைப்
பிறகு ஒருபோதும் நீ கீழே வைக்கவில்லை

எண்பதாண்டு காலமாக
நீ மூட்டிய நெருப்பு
அன்னியர்  நுழையவியலா
அக்கினி வளையமாய்
இந்த நிலத்தின் மேல்
எரிந்துகொண்டிருக்கிறது

ஐந்துமுறை  ஆட்சியில் இருந்ததல்ல
உன் சாதனை
ஐந்து தலைமுறைகளை
வழி நடத்திய தலைவன் நீ

கிராமங்களை சாலைகளால்
நகரங்களை பாலங்களால்
இணைத்ததல்ல உன் சாதனை
நீ பிளவுபட்ட சமூகங்களுக்கு இடையே
பாதைகளை உருவாக்கினாய்
பாலங்களை உருவாக்கினாய்

சமூக நீதிப் பாதைக்கு
நீ உருவாக்கிய ராஜபாட்டைகளால்
ஆயிரம் ஆண்டுகள் வளைந்த முதுகுகள்
நிமிர்ந்தன

ஆயிரம் ஆண்டுகள் இறுகிய சங்கிலிகள் தெறித்த

எளிய மனிதனுக்கு கண்ணொளி வழங்கியதல்ல
உன் பெருமை
கோடானு கோடி மனிதர்களின் கண்களை
நீ கல்வியால் திறந்தாய்

கை ரிக்‌ஷாவை ஒழித்ததல்ல உன் புரட்சி
வரலாற்றின் தேர் சக்கரங்களை
சேரிகளுக்குள் ஓடச் செய்தவன் நீ

ஆதிக்கத் திமிரின் திண்ணைகளைத் தாண்டி
உள்ளே வர முடியாதவர்களுக்கு
அரியாசனங்களையும்
சரியாசனங்களையும்  உத்தரவாதப்படுத்தினாய்

மேல் சட்டை மறுக்கப்பட்ட
மௌனமாய் தலைகுனிந்து நடந்து
சென்றவர்களை
தோளில் துண்டணிவித்து
சபைகளில் முழங்கச் செய்தாய்

அரசியலின் சதுரங்கக் கட்டங்களில்
வெட்டும் காய்களை சாதுர்யமாக
எப்போதும் நகர்த்தியன் நீ
உன் காய்கள் வெட்டுப்பட்டபோது
தனி ஒருவனாகப் படை நடத்திய தலைவன்

என் மொழி உயர் மொழி
இதுவே உன் குரல்
என் நாடு பொன்னாடு
இதுவே உன் முழக்கம்
இதுவே உன் முக்கால் நூற்றாண்டு முழக்கம்
காலத்தின் அழியாத முழக்கம்
அது  இன்று
தமிழ் நிலத்தின் எல்லைகள் தாண்டியும்
ஒலிக்கிறது

உன் நெஞ்சுக்கு நீதி என்றால்
அது சமூக நீதி
இதுவே உன் நீதியின் அளவு கோல்
உனக்கு வளர்ச்சி என்றால்
அது அனைவருக்குமான வளர்ச்சி
வாழ்ந்தால் எல்லோரும் வாழ்வோம்
என்று சொல்லித் தந்தவர் நீர்
வீழ்ந்தால் எல்லோரும் வீழ்வோம்
என்று கற்பித்தவர் நீர்

உன் கரகரத்த குரல்
உழவனின் ஏர் முனையில் கேட்கும் குரல்
அது தொழிற்சாலைகளில் கேட்கும் எந்திரங்களின் குரல்
அது லட்சோப லட்சம் சிலேட்டுகளில் கேட்கும் சாக்பீஸின் குரல்
அது அய்யன் திருவள்ளுவனின் அறத்தின்  குரல்
அது நீதி கேட்ட இளங்கோ அடிகளின் குரல்
அது கவிபித்தேறிய கம்பனின் குரல்
அது வேலைக்குச் செல்லும் பெண்களின்
பருத்திப் புடவைகளின் சரசரக்கும் குரல்
அது மூன்றாம் பாலினத்தவருக்காகவும்  கேட்ட உரிமைக் குரல்
அது மரண தண்டனையை மறுதலித்த குரல்
தில்லியின் அதிகாரத்திற்கு கிலியைத் தந்த குரல்
அது ஏழைகளின் உலைகளில் கொதிக்கும் அரிசியின் குரல்
அது ஜல்லிக்கட்டு மாட்டிற்கு வாடிவாசல் திறந்த குரல்
அது தெய்வத்தின் கருவறை வாசலைக்
கடைக்கோடி மனிதனுக்கும் திறந்த குரல்
எல்லாவற்றுக்கும் மேலாக
அதுவே குரலற்றவர்களின் குரல்

சூர்ய குமாரா

உன் பயணம்முடிவற்ற பயணம்
எங்கள் கண்ணீர் துளிகளால் அணைவதல்ல
நீ ஏற்றி வைத்த நெருப்பு
காலனால் முடிவதல்ல
நீ உருவாக்கிய காலம்
ஒரு சமாதியில் முடிவதல்ல
உன் சரித்திரம்

நீயே சுற்றாத காலத்தின் சக்கரங்களை
சுழல வைத்தாய்
மீற முடியாத விதிகளை மீற வைத்தாய்
இறக்க முடியாத சுமைகளை இறக்கி வைத்தாய்
எதிர்க்க முடியாத அதிகாரங்களை எதிர்க்க
வைத்தாய்

உன் சாவில் இருள் இல்லை
நீயே எங்கள் வெளிச்சமாக இருக்கிறாய்

உன் சாவில் தனிமை இல்லை
கோடானு கோடி இதயங்கள்
உன்னோடு இருக்கின்றன

உன் கால்தடங்கள் பதியாத
தமிழனின் வீடு ஒரு நூற்றாண்டாக இல்லை
உன் கரங்கள் பட்டுத் தீராத
நோய்மைகள் எதுவும் இந்த தமிழ் நிலத்தில்
இல்லை

அன்றும் நீயே வழி நடத்தினாய்
இன்றும் நீயே வழி நடத்துகிறாய்
என்றும் நீயேவழி நடத்துவாய்
நடந்தாய் வாழி தலைவா
இந்நாடு தமிழ் நாடு
என் நாடு கலைஞர் நாடு
(இந்தக் கவிதை கலைஞரின் இறுதி ஊர்வல
நேரலை நிகழ்ச்சியில் நியூஸ் 18

தொலைக்காட்சியில் பலமுறை வாசிக்கப்பட்டது. இதன் சற்றே சுருங்கிய வடிவம் ஜூனியர் விகடன் இதழில் வெளிவந்தது )

# கலைஞரும், அகில இந்திய அரசியலும்

*வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன்*

என்னுடைய ஒரு நிகழ்வில், 11-08-2009 அன்று கலந்து கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், “தி.மு.கழகம் தேசிய இயக்கமாக நிலைக்கும் என்றும், இந்தியாவின் அரசியல் ஜாதகத்தை இந்த இயக்கம் கணிக்கும்” எனவும் கலைஞர் அறிவிப்புச் செய்ததை அன்றைக்குப் பல பத்திரிகையாளர்களும் நண்பர்களும் என்னிடம் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று குறிப்பிட்டனர். அந்த நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், இதற்கு முன்னும் பேரறிஞர் அண்ணாவோ, தலைவர் கலைஞரோ அகில இந்திய அளவில் பிரச்சினைகள் ஏற்பட்டபோது முக்கிய முடிவுகளை அறிவித்துள்ளனர். சீனா இந்தியா மீது தாக்குதல் நடத்த வந்தபொழுது அண்ணா அவர்கள் திராவிட நாடு கோரிக்கையைத் தளர்த்தினார். அண்ணாவின் கொள்கைகளை அண்ணாவிற்குப் பிறகு கழகத்தைப் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் 45 ஆண்டுகளாக தலைமையேற்று பீடுநடை போட்டு நடத்துகின்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய பார்வையும் அகில இந்தியப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் மற்றும் அகில இந்தியத் தலைவர்களுக்கு வழிகாட்டியாகவும் உள்ளது. இதற்குச் சான்றாக பல நிகழ்வுகளும், சம்பவங்களும் உண்டு.

காங்கிரஸ் பிளவுண்டு இந்திரா தலைமையில் ஆளும் காங்கிரஸ் என்றும், நிஜலிங்கப்பா தலைமையில் ஸ்தாபன காங்கிரஸ் என்றும் 1960களின் இறுதியில் ஏற்பட்ட பொழுது, இந்திரா காந்தி அவர்களுடைய ஆட்சியைக் காக்க கலைஞர் அவர்கள் ஆதரவுக் கரம் நீட்டி ஆதரவைத்

தெரிவித்ததனால் தான் அன்றைக்கு மன்னர் மானிய ஒழிப்பு, பொதுவுடைமைத் தத்துவத்திற்கு ஏற்ற வகையில் வங்கிகள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டன. இதற்கு கலைஞர் அவர்களின் ஆதரவே காரணம். அவை அன்றைக்கு பிரதமர் இந்திராவின் ஆளுமைக்கு வலு சேர்க்கும் வகையில் அச்சாரம் போட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதுவரை நடந்த பெரும்பாலான நாடாளுமன்றத் தேர்தல்களில் தி.மு.கழகம் தோழமை கொண்டுள்ள கட்சிகள்தான் மத்தியில் ஆட்சி அமைத்துள்ளன. இந்திரா காந்தி காலத்திலும், ஜனதா கட்சி ஆட்சியில் மொரார்ஜி தேசாய் பிரதமரானபோதும், அதன்பின் 1980 இல் இந்திரா மீண்டும் பிரதமரானபோதும், 1989 இல் வி.பி.சிங் பொறுப்பேற்றபோதும், தேவேகவுடா, குஜ்ரால் ஆட்சிக் காலத்திலும், 1999 இல் வாஜ்பாய் பிரதமரான போதும், 2004இல் தொடங்கி 10 ஆண்டுகள் மன்மோகன் சிங் பிரதமராக நீடிப்பதற்கு கலைஞர் அவர்களின் பங்களிப்பும் தோழமையும் இதில் பிரதானமாகும். இது மாதிரியான பங்களிப்பு மற்ற எந்த அகில இந்தியத் தலைவர்களுக்கும் இல்லை, நாட்டில் நிலையான ஆட்சி அமைத்திட வேண்டிய முன்முயற்சிக்கு கலைஞருடைய அணுகுமுறையே காரணமாகும்.

## மற்றொரு முக்கிய நிகழ்வு:

தலைவர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தைப் பழுது பார்க்க முனைந்தபோது அதற்குரிய அனுமதியை மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திடம் இருந்து பெற

வேண்டுமென்றும், தமிழகத்தின் முதலமைச்சராகவே இருந்தாலும் தன்னுடைய விருப்பத்திற்கேற்றவாறு தலைமைச் செயலகத்தில் எந்தச் சீர்திருத்தப் பணிகளையும் செய்யமுடியாத நிலை. முதலமைச்சராக இருந்தும் மத்திய அரசின் அதிகாரக் குவியல் என்ற நிலையில் தான் இந்தச் சிக்கல் என்று உணரத் தொடங்கினார் தலைவர் கலைஞர். அந்தத் தாக்கமே மாநில சுயாட்சி என்ற கோரிக்கையாகும். இதனால்தான் ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டது.

டில்லியில் பத்திரிகையாளர்களிடம் 1969 மார்ச் 17ஆம் நாள், மத்திய - மாநில அரசுகளின் அதிகாரங்கள் குறித்து ஆராய ஒரு குழு அமைக்கப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். இந்த அறிவிப்பால் அகில இந்திய அளவில் ஒரு ஆரோக்கியமான விவாதம் நீண்டகாலமாக நடந்தது. இந்த அதிகாரப் பகிர்வு தமிழகத்திற்கு மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் இதுபற்றி ஆதராய நீதிபதி ராஜமன்னார் தலைமையில் டாக்டர். ஏ. லட்சுமணசாமி முதலியார், பி. சந்திராரெட்டி ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு மத்திய - மாநில உறவுகளும், அதனிடையே உள்ள அதிகாரப் பகிர்வு குறித்தும் ஆராய்ந்து சுமார் ஒன்றரை ஆண்டு காலம் இது குறித்தான கருத்துகளை அகில இந்திய அளவில் பல தரப்பினரிடம் கேட்கப்பட்டு ஒரு அற்புதமான அறிக்கையை 27-05-1971 இல் தலைவர் கலைஞரிடம் அந்தக் குழுவினர் வழங்கினர். 383 பக்கங்கள்

கொண்ட அந்த அறிக்கை இன்றைக்கும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அரிய ஆவணமாகும். மத்திய - மாநிலப் பிரச்சினைகள் எழும்போதெல்லாம் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லும் ஒரு மகா சாசனமாக (Magna Carta) அது உள்ளது. இந்த ஆவணத்தை அகில இந்திய அளவில் அனைவரும் விரும்பிப் படித்து அதுகுறித்தான விவாதங்களும் அப்போது நடந்தன.

ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் சில வருமாறு:-

- அரசியலமைப்புச் சட்டத்தின் 7ஆவது இணைப்பிலுள்ள அதிகாரப் பட்டியல்களின் பொருளடக்கத்தை மாற்றியமைத்து மாநிலங்களுக்கும் சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்கவேண்டும். இப்போது நீட் தேர்வுப் பிரச்சினையில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. அதுவும் இந்தப் பட்டியல் பிரச்சினையைச் சார்ந்ததுதான்.
- கார்ப்பரேஷன் வரி, ஏற்றுமதித் தீர்வைகள், சுங்க வரிகள் போன்ற வரிகளின் பங்கும் பகிர்வும் மாநிலங்களுக்கு அதிகரித்து வழங்க வேண்டும். மாநிலங்களுக்கு வருவாயை அதிகப்படுத்த வேண்டும். வரிச் சீர்திருத்தம் வேண்டும் என மாநிலங்களுக்கான நியாயமான நிவாரணங்கள், மானியங்கள் குறித்தான உரிமைகளை எந்தச் சிக்கலும் இல்லாமல் தாராளமாக வழங்க வேண்டும்.

- திட்டக் குழு என்பது இப்போது இல்லை. ஆனால் அப்போது இருந்த திட்டக் குழுவானது மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் மாநிலங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்ற நிலையிலேயே செயல்பட்டது.
- ஆளுநர்கள் மாநில அரசுகளின் ஆலோசனையைப் பெற்றே நியமிக்கப்பட வேண்டும்.
- அவசரநிலை பற்றி முடிவெடுக்கும் பொழுதும், அந்த நெருக்கடிக் கால அறிவிப்பை பிரகடனப்படுத்தும் போதும் மாநிலங்களிடையேயுள்ள உறவு கவுன்சிலுடன் (Inter State Council) கலந்தாலோசித்து அறிவிக்கப்பட வேண்டும்.
- நீதித்துறையில் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும்போது மாநில அரசு, ஆளுநர், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரின் கருத்துகள் முக்கியமானதாகக் கருதப்பட வேண்டும்.
- மாநிலங்களவையில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான எண்ணிக்கையில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.
- மாநிலங்களிடையே உள்ள நீர்த் தகராறுகளை உச்சநீதிமன்றம் முடிவு செய்து, அதன் ஆணைகளை உடனடியாக மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும்.

- அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்றால் மூன்றில் இருபங்கு மாநிலச் சட்டமன்றங்கள் அதை ஏற்க வேண்டும்.

இப்படி மைய அரசு நிர்வாகம் மாநிலங்களுடைய நீர்ப் பகிர்வு, பொது ஒழுங்கு, வணிகம், மொழி, பொது ஊழியங்கள் என பல பரிந்துரைகளை ராஜமன்னார் குழு அளித்து அது தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு அதை இரா. செழியன், முரசொலி மாறன் ஆகியோர் இடம்பெற்ற குழு ஆய்வு நடத்தி அதன் அறிக்கையை மத்திய அரசுக்கு அன்றைய திமுக அரசு அனுப்பியது. அதைப் பெற்றுக் கொண்ட பிரதமர் இந்திரா காந்தி அதன் மேல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பதில் கடிதம் அனுப்பினார்.

ராஜமன்னார் குழு மத்திய, மாநில உறவுகளை ஆராயவும், மாநில சுயாட்சிக் கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை மெய்ப்படுத்தவும் அமைத்ததற்கு முன்பே, 1967இல் மத்திய அரசு மத்திய, மாநில உறவுகளை ஆய்வு செய்ய நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷனை அமைத்தது. மீண்டும் மத்திய அரசு 1969லும் மத்திய, மாநில உறவுகளை ஆராய ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகள் செயல்பாட்டுக்கு வரவில்லை.

அதற்கு பின் இந்திரா அம்மையார் பிரதமராக இருந்தபோது 1984 வாக்கில் நீதிபதி சர்க்காரியா தலைமையில் மத்திய - மாநில உறவுகளை ஆராய குழு அமைக்கப்பட்டது. அதற்கு அடிப்படைக் காரணமே கலைஞர் அவர்கள் அமைத்த

ராஜமன்னார் குழுவே ஆகும். சர்க்காரியா குழுவும் ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. நீதிபதி சர்க்காரியா குழு இரண்டு தொகுதிகள் அடங்கிய விரிவான அறிக்கையை மத்திய அரசிடம் அப்போது அளித்தது. இதில் இன்னொரு செய்தி என்னவென்றால் ஈழத்தமிழர் பிரச்சினையில் 1980 களில் திம்பு பேச்சுவார்த்தைக்கும் இந்த ராஜமன்னார் குழுவின் அறிக்கையே அடிப்படை ஆவணமாகத் திகழ்ந்தது. அன்றைக்கு இந்த அறிக்கையின் நகல் கிடைக்காமல் இருந்ததால் அமிர்தலிங்கத்திற்கும் பாலசிங்கத்திற்கும் இந்த அறிக்கையை அடியேன் நகல் எடுத்துக் கொடுத்தேன்.

இந்த அறிக்கையும் திம்பு பேச்சுவார்த்தையில் பேசப்பட்டதோடு, நார்வே பேச்சுவார்த்தையிலும் ஒரு ஆவணமாக இருந்தது என்று செய்திகள் வந்தன. இப்படிப்பட்ட அரிய பணிக்கு காரணகர்த்தா தலைவர் கலைஞர் அவர்கள்தான். அகில இந்திய அளவில் முக்கியத்துவம் பெற்ற இந்த அறிக்கை 1980 களில் மறைக்கப்பட்டது. சட்டப்பேரவை நூலகத்தில் கூட இந்த அறிக்கை கிடைப்பது அரிதாக இருந்தது. அது மட்டுமல்லாமல், அனைவரின் நினைவில் வாழும் அண்ணன் முரசொலி மாறனின் ‘மலர்க மாநில சுயாட்சி’ என்ற நூல் இந்தத் தத்துவத்திற்கே வேதமாகும்.

மாநில உரிமைகளை வென்றெடுப்பதில் அக்கறையும் ஆவலும் கலைஞருக்கு இருந்தாலும், இந்தியாவின் ஒன்றுபட்ட ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்ற நோக்கமே இந்த அறிவிப்பாகும.

ராஜமன்னார் குழுவின் அறிக்கை வழங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பின் என்.டி.ராமா ராவ் ஐதராபாத்தில் மாநில உரிமைகள் குறித்து நடத்திய மாநாடும், அம்மாதிரியே அசாம் கண பரிஷத் ஷில்லாங்கில் நடத்திய மாநாடும், அதற்குப் பிறகு ஸ்ரீநகரில் ஃபரூக் அப்துல்லா நடத்திய மாநாட்டில் மத்திய அரசிடம் வெளியுறவு, பாதுகாப்பு, தொலைத்தொடர்பு, நிதி போன்ற துறைகளை மட்டும் வைத்துக்கொண்டு மற்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு அரசும் ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வேண்டும் என்று மத்திய அரசுக்கு வெள்ளை அறிக்கையை அனுப்பியது. பெங்களூருவில் அன்றைய கர்நாடக முதல்வர் இராமகிருஷ்ண ஹெக்டே தென்மாநில முதல்வர்கள் மாநாட்டினை இதுகுறித்துப் பேசக் கூட்டினார். இந்த நிகழ்வுகள் யாவும் தலைவர் கலைஞருடைய தொலைநோக்குப் பார்வையால் ஏற்பட்ட பின்விளைவுகளே ஆகும்.

தலைவர் கலைஞர் போட்ட இந்த விதையால் மேற்கு வங்க அரசு 01-12-1977 இல் இதன் அடிப்படையிலேயே மத்திய, மாநில நிதிப் பகிர்வுகள் குறித்து ஒரு விரிவான அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பியது. அதைத் தொடர்ந்து பிரிவு 356யைக் கொண்டு ஒரு மாநில அரசைக் கலைப்பது குறித்தான அறிக்கையை மக்களவைச் செயலகம் 1996 இல் வெளியிட்டது. வாஜ்பாய் பிரதமராாக இருந்தபோது நீதிபதி

வெங்கடாச்சலையா தலைமையில் அரசியலமைப்புச் சட்ட சீர்திருத்தங்களையொட்டி அறிக்கை வழங்கிய போது மத்திய, மாநில உறவுகள் குறித்தான பரிந்துரைகளையும் அந்தக் குழு 2002 இல் அறிக்கையாக வழங்கியது. மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது 2010 இல் நீதிபதி பூன்ச் தலைமையில் மத்திய, மாநில உறவுகள் குறித்தான விரிவான அறிக்கையும், மத்திய பாதுகாப்புப் படையினர் மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல் ஒரு மாநிலத்திற்குச் செல்லலாம் என்பது பற்றியும் இந்தக் குழு ஆய்வு செய்தது. இப்படி பல குழுக்கள், பரிந்துரைகள். இவற்றுக்கு அடிப்படையே கலைஞர் அமைத்த ராஜமன்னார் குழு அளித்த பரிந்துரைகள் தான்.

மாநில சுயாட்சி என்பது நாட்டு விடுதலைக்கு முன்பே விவாதிக்கப்பட்ட பிரச்சினையாகும். 1916 இல் மதன்மோகன் மாளவியா, சாப்ரூ, ஜின்னா போன்றோர் அடங்கிய 19 பேர் கொண்ட குழுவின் அறிக்கை லக்னோவில் வெளியிடப்பட்டது. அதில் மாநில எல்லைக்குள் முழு சுயாட்சி வேண்டும் என்று கூறியிருந்தனர். அதுவே ‘லக்னோ ஒப்பந்தம்’ என்று அழைக்கப்படுகிறது. 03-04-1946 ஆம் ஆண்டு அபுல் கலாம் ஆசாத் போக்குவரத்து, வெளியுறவு, பாதுகாப்பு போன்ற துறைகளை மத்திய அரசிடம் வைத்துக் கொண்டு மற்ற துறைகளை மாநிலங்களுக்கு வழங்கி தன்னாட்சியாக விளங்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருந்தார். 11-12-1944 இல் காங்கிரஸ் கட்சியின் அறிக்கையிலும் மாநிலங்களில் தன்னாட்சி என்று அறிவிப்புச் செய்தது. அதற்குப் பிறகு இதுகுறித்து பலகாலம் விவாதிக்காமல்

இருந்து, அறிஞர் அண்ணா 1967இல் தேர்தல் அறிக்கையில் மாநில சுயாட்சியை வலியுறுத்தினார். இந்த அரிய தொடர் பணியை தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றி வருகிறார். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பலம் சேர்க்கவே இக்கோரிக்கையாரும். இதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்.

மாநிலத் திட்டக் குழு, நுகர்பொருள் வாணிபக் கழகம் என சில சுயாட்சி அமைப்புகளை மாநில நலன் கருதியும், முன் மாதிரியாகவும் தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சியில் அமைத்தார்.

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற நிலையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அமெரிக்காவில், சுவிட்சர்லாந்தில், மற்ற ஐரோப்பிய நாடுகளில் இருப்பதைப் போன்று தனிக்கொடி வேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்தினார்.

இதைக் குறித்து நாடாளுமன்றத்தில் 20-08-1970 இல் பிரதமர் இந்திரா காந்தி பதில் அளிக்கும் போது அமெரிக்கா போன்ற நாடுகளில் மாநிலங்களுக்குத் தனிக்கொடி இருக்கின்றன. இது குறித்து மாநில முதல்வர்களிடம் தான் கலந்தாலோசிக்க இருப்பதாகக் கூறினார். மாநிலங்களுக்குத் தனிக்கொடி அவசியமில்லை என்று ஸ்தாபன காங்கிரஸும், அன்றைய ஜன சங்கமான இன்றைய பிஜேபி எதிர்த்தது. அவர்கள் இதுகுறித்துச் சொன்னபோது ஒரு வேளை கம்யூனிஸ்ட்கள் மாநிலங்களில் ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அரிவாள், சுத்தியல் சின்னங்கள்

அடங்கிய சீன, ரஷ்யக் கொடிகளை இங்கு கொண்டு வந்துவிடுவார்கள் என்றும் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் கலைஞர் அவர்கள் டெல்லியில் 27-08-1970இல் பத்திரிகையாளர்கள் முன் தமிழக அரசின் கொடி எப்படி இருக்கும் என்று தான் வடிவமைத்த படத்தை வெளியிட்டார். அந்தப் படத்தில் தேசியக்கொடி மேல் புறத்திலும், தமிழக அரசின் இலச்சினையான வட்டவடிவமான கோபுர முத்திரையை வலது பக்கக் கீழ் முனையில் அமைவது போலவும் வடிவமைத்து வெளியிட்டார். இப்பிரச்சினையில் தீர்வு எதுவும் எட்டப்படாத நிலையில், தலைவர் கலைஞர் அவர்கள் அந்தந்த மாநில முதல்வர்கள் சுதந்திரதின விழாவில் தேசியக்கொடியை ஏற்றும் உரிமையை வழங்கவேண்டுமென்று வலியுறுத்தினார். இந்தக் கோரிக்கையை பிரதமர் இந்திரா ஏற்றுக்கொண்டார்.

ஆகஸ்டு 15, அன்று இந்திய விடுதலை நாளில் அந்தந்த மாநில முதல்வர்கள் கொடி ஏற்றும் உரிமையை 1974 இல் தலைவர் கலைஞர் போராடிப் பெற்றார். இதன் விளைவாக மற்ற மாநில முதல்வர்களும் தங்களுடைய மாநிலத் தலைநகரங்களில் தேசியக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்றனர்.

ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது மத்தியில் தேவகவுடா பிரதமராக இருந்தபோது மாநிலங்களில் இருந்து பெறுகின்ற வரிகளின் பங்கு சதவிகிதத்தைக் கூடுதலாக பெற்றது கலைஞருடைய சாதனையாகும்.

இந்தியா - பாகிஸ்தான் போரிலும் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாக தலைவர் கலைஞர் அவர்கள் போர் நிதி திரட்டிக் கொடுத்தது வரலாற்றுச் செய்தியாகும். வாஜ்பாய் பிரதமராக இருந்தபோதும் கார்கில் போரின்போதும் கலைஞர் அவர்கள் நிதி திரட்டி அனுப்பியதை அன்றைய பிரதமர் வாஜ்பாய் பாராட்டினார்.

இந்திய வரலாற்றில் கலைஞர் போன்று இந்திரா காந்தியிலிருந்து இன்றைக்கு இருக்கின்ற டாக்டர் மன்மோகன் சிங் போன்றவர்கள் வரை, பிரணாப் முகர்ஜி போன்ற குடியரசுத் தலைவர்கள் இருந்தவரை கடந்த 45 ஆண்டுகளில் அகில இந்திய அளவில் பெரிதும் மதிக்கப்பட்டவர் தலைவர் கலைஞர். மத்திய அரசு 1990 வி.பி.சிங் காலத்தில் இருந்து மாநிலக் கட்சிகளுடைய அமைச்சர்களின் பங்களிப்பென்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. தேசியப் பார்வையோடு தமிழகத்தின் நலனையும், உரிமைகளையும் பெறத் தலைவர் கலைஞர் அவர்களது சிந்தனை, மாபெரும் அரசியல் தத்துவமே. குளோபல் வில்லேஜ் என்று சொல்லக்கூடிய அளவில் உலகமே ஒரு கிராமமாக அமைந்துவிட்டது. தாராளமயமாக்கல், புதிய பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் தலைவர் கலைஞர் அறிவித்த அறிவிப்பு மிக முக்கியத்துவம் பெற்ற செய்தியாகும். அந்த வகையில் மாநிலங்களுக்குள் சகோதர பாசத்தோடு பிரச்சினைகளைத் தீர்ப்பது இன்றியமையாதது. அந்த அளவில் கலைஞர் அவர்களின் சமயோசிதத்தால் 19 ஆண்டுகள் பெங்களூருவில் திறக்கமுடியாமல் இருந்த ஐயன்

திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டது. அதேபோன்று சென்னையில் கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் சிலையும் திறக்கப்பட்டது. இதுவே கலைஞர் அவர்களுடைய ராஜதந்திரத்திற்கும் பெருந்தன்மைக்கும் சான்றாகும்.

தலைவர் கலைஞர் விரும்பியபடி எதிர்காலத்திலும் இந்திய அரசியலில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் உலகிற்கே வழிகாட்டும் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா விளங்கும்.

நாகாலாந்து, மணிப்பூர் போன்ற வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பிரச்சினைகள், காஷ்மீர் சிக்கல், பஞ்சாப் மாநிலக் கோரிக்கைகள் என நாடு எதிர்கொள்கின்ற, தேசிய இனங்கள் எரியும் அக்னியை எப்படி அணைக்கப் போகின்றோம் என்பது நமக்கான வினாவாகவே இருக்கின்றது.

பல்வேறு தேசிய இனங்கள், மொழிகள், கலாச்சாரங்கள், பண்பாடுகள் என்ற மாறுபட்ட சூழலில் ‘பன்மையில் ஒருமை’ என்ற ஒருமைப்பாடு இந்தியாவில் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், பிராந்திய நலன்கள், வட்டார அபிலாஷைகளைப் பாதுகாத்து மாநில சுயாட்சி அமைந்தால் ஒரு ஆரோக்கியமான கூட்டாட்சியாக இந்தியா விளங்கும்.

மாநில சுயாட்சி மட்டுமல்ல, மத்தியில் நிலையான ஆட்சி, இந்திரா காந்தி காலத்தில் இந்தியா-பாகிஸ்தான் போர், வாஜ்பாய் காலத்தில் கார்கில் போர் போன்ற அகில இந்தியப் பிரச்சினைகளில் கலைஞரின் அணுகுமுறைகள் எல்லாம் இந்தியாவை வலிமைப்படுத்தும் வகையில்

இருந்தன என்பதை எவராலும் மறுக்க முடியாது. இப்படி எத்தனையோ அகில இந்தியப் பிரச்சினைகளில் தலைவர் கலைஞருடைய பங்களிப்பு இருந்திருக்கிறது.

இதுவே தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை!

இந்தப் பார்வை இந்திய ஒருமைப்பாட்டுக்கு நிச்சயம் வலு சேர்க்கும்!

rkkurunji@gmail.com

# கலைஞர் – என் நம்பிக்கையின் ஒளி! கனவுகளின் குளிர்மை!

*தமிழச்சி தங்கபாண்டியன்*

“கறுப்பர் வீடுகளின் மேல் சூரியன் காய மறுக்கவில்லை. காற்று அவர்களைத் துறக்கவும் இல்லை” என்று சொன்ன மார்ட்டின் லூதர் கிங் வாழ்ந்த வீடு நினைவுச் சின்னமான போது அந்த இல்லம் வீடாக மட்டும் இல்லை - ஒரு மாபெரும் மனிதர் வாழ்ந்ததின் சூட்டைத் தனக்குள் அடைகாத்துக் கொண்டுதானிருக்கிறது என்பார்கள்.

தமிழகமும் அப்படித்தான் - கலைஞர் இல்லாத தமிழகம், எக்காலத்திலும் அம்மாமனிதர் பூமிப்பந்தின் இந்நிலப்பரப்பில் வாழ்ந்ததின் அடையாளங்களைத் தன்னுள் அடைகாத்துக் கொண்டிருக்கும்! மரணம் எவ்வளவு வலிமையானதாக இருந்தாலும், நினைவுகளின் வாசற்படிகள் முன், ஞாபகங்களின் தாழ்வாரத்தின் முன் அது நொறுங்கிப் போகும். அப்படித்தான், கலைஞர் குறித்து அவரை அறிந்தவர், அறியாதவர், தெரிந்தவர், தெரியாதவர் அனைவருக்குமே ஏதாவதொரு நினைவலை தொடர்ந்து கால் நனைத்து மரணத்தின் வெற்றிடத்தைப் பரிகசிக்கும்.

பிறந்தது முதலே கேட்டு வளர்ந்த அந்தப் பெயருக்குப் பின்தான் எத்தனையெத்தனை நினைவலைகள் எனக்கு!

பிறந்து, ஓரளவு விவரம் தெரிந்தது முதல் என்னை வணங்க வைத்த அந்த ஒரு பெயர், என்னைச் சுவீகரித்த அந்த தந்தைமை, என்னை வசீகரித்த அந்த கரகரத்த குரலின் மாயம், என்னை வியக்க வைத்த ஆகப்பெரிய அந்த ஆளுமை... ஆகஸ்ட் ஏழாம் தேதி நீள்துயில் கொண்டது. கலைஞர் எனும்

அந்த மந்திரச் சொல் மாற்றி எழுதிய தமிழகச் சரித்திரத்தின் பக்கங்களை அனுதினமும் நினைவு கூர்ந்தால் ஆண்டுகள் பல கடந்த பின்பும் அவை பால்வீதி போல நிலைத்து நிற்கும்!

அந்த மாமனிதரோடு, அவரது ஆலமர அணைப்பில் விழுதென வேர்விட்டது என் குடும்பம். என் தந்தைக்குத் 'தலைவர்' என்றால் இறுதிவரை அது கலைஞர் மட்டுமே!

வீடு முழுவதும், என் பால்யத்தை நிறைத்தவை அவரது புகைப்படங்கள், அவரது எழுத்துகள் நிரம்பிய புத்தகங்கள், அவரது குரல் ஒலிக்கின்ற மேடைப் பேச்சுக்கள்... கேட்டும், பார்த்தும், படித்தும் வளர்ந்த என்னில் பதின்பருவம் முதல் இக்கணம் வரை தலைவராகவும், தந்தையாகவும் பதிந்திருக்கின்ற அந்தப் பொற்சித்திரத்தின் ஒளியை மரணத்தால் மங்கிவிடச் செய்ய இயலுமா என்ன? 'புகழுடம்பு' என்பது மங்காத நினைவுகள் எனில் அவரது 'புகழுடம்பு' காலத்தால் அழியாத, மரணம் மண்டியிடுகின்ற பிரபஞ்ச இசை அல்லவா எனக்கு?

உலகெங்கிலும் தலைவர்களும், அவர்கள் நம்பிய கொள்கையின்படி வழிநடத்தப்படுகின்ற இயக்கங்களும் பலரும், பலவும் உண்டு. ஆனால் அவற்றில் எதிலாவது அல்லது எங்காவது இயக்கத் தொண்டர்களைத் தன் குடும்பத்தைவிட மேலானதொரு ரத்த உறவாகப் பாவித்த, 'கடிதோச்சி மெல்லக்' கடிந்தும், பெருமழையென அணைத்தும், அன்பு செலுத்திய கலைஞர் போல ஒரு தலைவர் உண்டா? அவர் அழுதால் துடித்து, அவர் சிரித்தால் பூரித்து, அவரது சுக,

துக்கங்களைத் தனதெனப் பாவித்த கடைக்கோடித் தொண்டனின் ஆற்றாமையும், நம்பிக்கையும் அல்லவா அவர் உடல் நலிவுற்ற நாட்களின் “எழுந்து வா தலைவா” எனும் அந்த விளி? அவை சொற்களா என்ன - உலகத் தலைவர் வேறெவருக்கும் கிட்டாத உயிர் கசியும் பேரன்பு முத்தத்தின் எதிரொலி அல்லவா?

புதையல் வரமாய் தலைவரோடு எனக்குப் பல நினைவுகளுண்டு. அதில் தலையாய பெருமையாய் ஒன்றுண்டு!

எனது முதல் கவிதைத் தொகுப்பான ‘எஞ்சோட்டுப் பெண்’ புத்தகத்தினை அவரது கரங்களில் அளித்து வாழ்த்து வாங்கச் சென்றிருந்தேன். எப்பொழுது

அருகில் சென்றாலும் உச்சந்தலையில் கை வைத்து வாழ்த்துப் பெறுகின்ற அந்த மகிழ் கணங்களுக்குப்பின், புத்தகத்தை வாங்கி முதல் பக்கத்தைத் திறக்கிறார். சட்டென அதனை மூடி என்னிடம் கொடுத்து அந்தக் கரகரத்த குரலில் “கையெழுத்துப் போடலியே” என்கிறார். சப்தநாடியும் ஒடுங்க அந்த இமயத்தின் முன் பேச்சற்று, நா எழாமல், “கேலியாக ஏதோ சொல்கிறார்” என நினைத்து நிற்கிறேன். மறுபடியும் புன்சிரிப்போடு அதே கேள்வி. நாக்குழற “பேனா எடுத்து வரவில்லை, அப்பா” என்கிறேன். அடுத்த அதிசயம் நிகழ்கிறது! பல்லாயிரம் பக்கங்களை எழுதிக் குவித்த அந்தப் பேனா - பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என்பதைச் சட்டமாக்கிய அந்தப் பேனா, மாற்றுப் பாலினத்தவரைத் ‘திருநங்கை, திருநம்பி’ என அழைப்பதை முதன்முதலில் சட்டமாக்கிய அந்தப் பேனா, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கிய அந்தப் பேனா, படியரிசி ஒரு ரூபாயென்பதை நனவாக்கிய அந்தப் பேனா - அவரது அந்தப் பேனாவை எடுத்து நீட்டி, “கையெழுத்துப் போட்டுக் கொடு” என்கிறார். காலடியில் பூமி நழுவுகின்ற பெரும் பரவசத்துடன் அதனைக் கைகளால் தொட்டுச் சிலிர்த்து, வாழ்வின் பேறு பூர்த்தியான நிறைவுடன், தலைவரிடம் மீண்டும் கையளிக்கிறேன்.

ஒரு கடைக்கோடிப் படைப்பாளியைக் கௌரவப்படுத்துகின்ற பெருந்தன்மையுடன், அந்த எழுதுகோலைச் செங்கோல் சீராட்டித் தன் சட்டைப்பையில் பொதிந்து கொள்கிறது!

என் அப்பாவின் மரணத்திற்குப் பின்பாக என்னை அடியோடு அசைத்துக் கலங்கடிக்க முடியாதென மரணத்தைச் சவாலுக்கழைத்து, மனம் சமானப்பட்டதொரு திடத்திலிருந்தேன். ஆனால் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு, எங்கள் இயக்கத்தின் ஆலமரம் நீள் துயிலுக்கு நீங்கிய அந்த இரவில் என்னைத் தோற்கடித்த துயரத்துடன் மரணமும், தேற்றுவாரற்ற என் கையறு நிலைக்கு இரங்கிப் பேச்சற்று விக்கித்திருந்தது.

“Virtuous men pass mildly away, and whisper to their souls to go...
When one such man dies - one Chapter is not torn out of book,
but translated into a better Language” எனப்படுவதுண்டு.

ஈடு இணையில்லாத அந்த சகாப்தத்தின் எதிர்காலப் பக்கங்களை, தனக்கானதொரு தனித்துவமான மொழியில், தலைமையேற்கின்ற தளபதி இனி எழுதுவார்!

கலைஞர் எனும் அந்தச் சூரியன் என் பகல்களைக் கூடுதலாக வெளிச்சப்படுத்தியது! என் இரவுகளை நிலவிற்குத் தண்மை தந்து குளிர்வித்தது! என் நம்பிக்கையின் ஒளியும், கனவுகளின் குளிர்மையுமான அத் தலைவனுக்குத் தேற்றவொண்ணாத் துக்கத்தின் வண்டலெனக் கேவும் இந்த மகளின் வீர வணக்கம்!

நான் உண்ணும் ஒரு பிடி அன்னம்
அவர் பெயரெழுதிய நெல்மணிகளால் சமைத்தது.
நான் அருந்தும் ஒரு துளி தண்ணீர்
அவர் பெயரெழுதிய மூலக்கூறால் துளிர்த்தது.
நான் சுவாசிக்கும் ஒரு சிறு மூச்சு
அவர் பெயரெழுதிய உயிர்க்காற்றால் பிறந்தது.
நான் துயிலும் ஓரிரவு உறக்கம்
அவர் பெயரெழுதிய நற் கனவுகளால் நிறைந்தது.

# ஓர் அரசியல் யுகம்:

## கலைஞர் கருணாநிதியும் சிறுபான்மையினரும்

*எச்.பீர்முஹம்மது*



தமிழ்நாட்டு திராவிட இயக்க வரலாற்றில் கலைஞர் கருணாநிதி ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக இருந்திருக்கிறார். அவரின் மரணம் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்திச் சென்றிருக்கிறது.. இருபதாம் நூற்றாண்டில் பிறந்து

அதைக் கடந்தும் வாழ்ந்த ஓர் அரசியல் தலைவர் நம்மிடமிருந்து விடைபெற்றிருக்கிறார். பெரியார், அண்ணா, ராஜாஜி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என்று அவரின் அரசியல் பயணம் தொடர்ந்தது.

1924 ஜூன் 3 ஆம் தேதி திருவாரூர் மாவட்டம் திருக்குவளையில் ஒரு பின்தங்கிய குடும்பத்தில் பிறந்த கருணாநிதியின் பெற்றோர் தன் மகன் பின்னாளில் இந்தியாவின் புகழ் மிக்க ஆளுமையாக வெளிப்படுவார் என்பதை நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் வரலாற்றில் அது தற்செயலானதாக, தவிர்க்க முடியாத ஒன்றாக, சூழல் சார்ந்ததாக மாறியது. கலைஞர் கருணாநிதிக்கு ஆரம்ப காலத்திலேயே தமிழ் இலக்கியத்தின் மீது ஆர்வம் இருந்தது. அன்றைய காலத்திலேயே மாணவர் தமிழ் மன்றத்தை ஏற்படுத்தினார். மேலும், மாணவ நேசன் என்ற கையெழுத்துப் பத்திரிகையையும் நடத்தினார். அன்றைய காலகட்டத்தில் தமிழ்நாடு முஸ்லிம் லீக் காயிதே மில்லத் தலைமையில் இயங்கியது. அது சில விஷயங்களில் கருத்தொற்றுமை அடிப்படையில் பெரியாருடன் இணைந்து செயல்பட்டு வந்தது. பெரியாரின் பார்ப்பனீய எதிர்ப்புக் கருத்தியல் முஸ்லிம் லீக்கிற்கும் உடன்பாடான ஒன்றாக இருந்தது. அதுவே பரஸ்பரம் மேடைகளைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பாக அமைந்தது. அதன் தொடர்ச்சியில் கலைஞர் கருணாநிதிக்கு அன்றைய கட்டத்தில் பெரியாரின் கருத்துக்கள் மீது ஈர்ப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக பெரியாரின் பகுத்தறிவுக் கூட்டங்களுக்கு கருணாநிதி சென்று வந்தார். அவரை ஒரு கட்டத்தில் திருவாரூரில் மேடை

ஏற்றியது திருப்பூர் மொய்தீன் என்ற முஸ்லிம் லீக் நிர்வாகி. இதன் தொடர்ச்சியில் பெரியாருடன் கிடைத்த அறிமுகம் அவரை பெரியாரின் மேடைகளில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் நிலைக்குச் சென்றது. பின்னர் பெரியாரின் நம்பிக்கைக்குரிய நபராக கருணாநிதி மாறினார். இந்நிலையில் 1940 களில் பாண்டிச்சேரியில் பகுத்தறிவு இயக்கப் பொதுக்கூட்டம் ஒன்றில் கருணாநிதி பேசி விட்டுத் திரும்பும் போது வகுப்புவாதக் கும்பல் ஒன்று அவரைக் கடுமையாகத் தாக்கி சாக்கடையில் வீசியது. இரவு நேரம் என்பதால் அவரை யாரும் கவனிக்கவில்லை. அடிபட்டு மயக்க நிலையில் கிடந்த அவரை  அதிகாலை தொழுகைக்கு அந்த வழியாகச் சென்ற முஸ்லிம் பெரியவர்கள் சிலர் எதேச்சையாகப் பார்த்து உடனடியாக முதலுதவி அளித்து மருத்துவமனையில் அனுமதிக்கச் செய்தனர். இதனை தன் நெஞ்சுக்கு நீதியில் எழுதிய கருணாநிதி அந்தக் காலத்தில் என் உயிரைக் காப்பாற்றிய அந்த முஸ்லிம் பெரியவர்களின் வாரிசுகளை நான் தேடிக்கொண்டிருக்கிறேன். அவர்களைக் காண ஆவலாக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார். சிறுபான்மைச் சமூகத்துடன் அவருக்கான உறவு என்பது முஸ்லிம் லீக் மேடைகளிலிருந்து ஆரம்பித்தாலும் இது போன்ற விஷயங்கள் தான் அதற்கான உளவியல் தொடக்கமாக அமைந்திருக்கிறது.

திராவிட இயக்கத்திற்கும், சிறுபான்மை முஸ்லிம்களுக்குமான உறவு என்பது நீதிக்கட்சி காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. அதன்

அடிப்படைக் கொள்கையான பிராமணர் அல்லாதர் என்பதிலிருந்தே அது தொடங்கி விட்டது. நீதிக்கட்சி அமைச்சரவையில் முகம்மது உஸ்மான் என்பவர் அமைச்சராக இருந்தார். பெரியாரின் சுயமரியாதைக் காலகட்டத்தில் பெரியாரின் கணிசமான மேடைகள் முஸ்லிம் லீக்கின் மேடைகளாக இருந்தன. மேலும் சுயமரியாதை இயக்கத்தில் முஸ்லிம்கள் இணைவதில் தவறில்லை என்ற குரல் கூட அக்காலகட்டத்தில் ஒலித்தது. மேலும் அன்றைய சூழலில் இஸ்லாமிய அறிஞர் தாவூத்ஷா போன்றவர்கள் பெரியாருடன் இணைந்து பணியாற்றினர். அவரின் தாருல் இஸ்லாம் பத்திரிகையை பெரியார் நம் பத்திரிகை என்றார். இஸ்லாமியர்களின் கல்வி குறிப்பாக இஸ்லாமிய பெண்கள் கல்வி குறித்து அதிகம் வலியுறுத்திய தாவூத்ஷாவின் கருத்துகள் பெரியாரைக் கவர்ந்தன. இதன் தொடர்ச்சியில் பெரியார் பல மிலாது விழாப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு பார்ப்பனீயம், சாதிக்கொடுமைகள் குறித்துப் பேசி இருக்கிறார். அந்த பிரசாரத்திற்கான பாதுகாப்பு மேடையாக அது இருந்தது. மேலும் 1947இல் இன இழிவு நீங்க இஸ்லாமே அருமருந்து என்றார் பெரியார். இது முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியது. மேலும் திராவிடர் கழகத்திற்குள் கூட சலசலப்பை ஏற்படுத்தியது. குத்தூசி குருசாமி, பொன்னம்பலனார் போன்றவர்கள் அதற்கு மாறுபட்டு நின்றார்கள். அன்றைய காலத்தில் பெரியாரின் அந்த வார்த்தைகளானது சாதி இழிவிற்கான மாற்றுச் செயல்தந்திரமாக பார்க்கப்பட்டது. இந்நிலையில் இஸ்லாம் குறித்தும்

பெரியார் பல சந்தர்ப்பங்களில் விமர்சித்திருக்கிறார். தமிழ் முஸ்லிம்களைப் பொறுத்தவரை பெரியாரின் திராவிடர் கழகத்தில் பெரும்பாலும் தங்களை இணைத்துக்கொள்ளவில்லை. அதே நேரத்தில் அண்ணா 1949இல் பெரியாரிடமிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது அதில் பெருவாரியான முஸ்லிம்கள் தங்களை இணைத்துக்கொண்டனர். திமுக நாத்திகக் கொள்கையில் திராவிடர் கழகத்திலிருந்து வேறுபட்டு நின்றதுதான் அதற்குக் காரணம். இந்நிலையில் 1957இல் திமுக ஆதரவுடன் அப்துல் வஹாப் ஜானி என்பவர் மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்காலத்தில்  சாதிக் பாட்சா, கடையநல்லூர் சாகுல் அமீது போன்றவர்கள் அதில் தங்களை இணைத்துக்கொண்டனர். மேலும், மறைந்த பிரபல இஸ்லாமியப் பாடகர் நாகூர் அனீபா ஆரம்பகாலத்தில் பெரியாரால் ஈர்க்கப்பட்டு பின்னர் அண்ணா தலைமையில் திமுகவில் இணைந்தார். அதே காலகட்டத்தில் கலைஞர் கருணாநிதியின் உற்ற நண்பராகவும் இருந்தார். 1967இல் திமுக ஆட்சிக்கு வர இவரின் எழுச்சி மிகுந்த கணீர்க் குரல் பாடல்களும் ஒரு காரணமாக அமைந்தது. மேலும், சுதந்திரத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் திமுக நடத்திய பல போராட்டங்களில் முஸ்லிம்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக, 1965இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ் முஸ்லிம்களும் கலந்து கொண்டனர். இவர்களுடன் முஸ்லிம் லீக்கும் கலந்து கொண்டது. அதே நேரத்தில் உருது முஸ்லிம்கள் இந்தப் போராட்டத்தில்

பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உருது சார்ந்த மேட்டிமை மனோபாவம்தான் அதற்குக் காரணம். இன்றளவும் அது தொடர்கிறது.



1967இல் தமிழ்நாட்டின் மிகப்பெரும் அரசியல் சக்தியாக இருந்த காங்கிரஸை வீழ்த்தி விட்டு அண்ணா தலைமையில் திமுக ஆட்சியைப் பிடித்தது. அண்ணாவின் ஆட்சியில்தான் முந்தைய காங்கிரஸ் அரசால் அதிகம் கவனிக்கப்படாமல் இருந்த சிறுபான்மையினர் கவனிக்கப்பட்டனர். அவர்களின் நலன்களுக்காகப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. சாதிக்பாட்சா அமைச்சராக இருந்தார். மேலும் காயிதேமில்லத்தால் அண்ணாவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட காஞ்சிபுரம் மசூதிப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட்டது. இந்நிலையில் 1969இல் அண்ணாவின் மறைவிற்குப் பின் முதலமைச்சராக கருணாநிதி பொறுப்பேற்றார். அதன் பின் அவரின்

சிறுபான்மையினர் ஆதரவு நடவடிக்கை இன்னமும் வேகம் பெற்றது. முதன் முதலாக மாநில பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டது. மிக முக்கிய நிகழ்வாக உருது பேசும் அனைத்து முஸ்லிம்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். உருது அகாடமியும் அமைக்கப்பட்டது. மேலும், கலைஞர் கால திமுகவில் முந்தைய காலகட்டத்தை விட அதிக முஸ்லிம்கள் இணைந்தனர். இந்நிலையில் 80 களில்  தமிழ்நாட்டில்  இந்து முன்னணி என்ற மத அடிப்படைவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு எம்.ஜி.ஆரின் மறைமுக ஆதரவும் இருந்தது. இந்தக் கட்டத்தில் இந்து முன்னணியின் நிறுவனர் இராமகோபாலன் எம்.ஜி.ஆரைச் சந்தித்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் பெரும்பாலான முஸ்லிம்கள் அன்றைய காலகட்டத்தில் திமுகவில் இருந்தது எம்.ஜி.ஆருக்கு கோபமூட்டக்கூடிய விஷயமாக இருந்தது. இந்து முன்னணியை மறைமுகமாக எம்.ஜி.ஆர் ஆதரிக்க அதுவும் ஒரு காரணம். இந்நிலையில் 13 ஆண்டுகள் எதிர்க்கட்சியாக இருந்த திமுக அதன் காலகட்டத்தில் சிறுபான்மையினருக்கு ஆதரவாக குரல் கொடுக்கத் தயங்கியதில்லை. இந்நிலையில் தமிழ்நாட்டில் முஸ்லிம் லீக்கின் தீவிர பழமைவாதம், சுயநல அரசியல், தேக்க நிலை போன்ற காரணங்களால் 90 களில் தமிழ்நாட்டில் வஹ்ஹாபிய இயக்கங்கள் தோன்றின. குறிப்பாக, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பிற்கு பி.ஜெய்னுலாப்தீன் தலைமையேற்றார். இவரின் காலத்தில் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் பலர் சகிப்பான சமூக

சிந்தனையற்று தீவிர மத அடிப்படைவாதத்திற்குள் நுழைந்தனர். மேலும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் தீவிரவாதப் பாதையையும் தேர்ந்தெடுத்தனர். இதற்கு ஜெய்னுலாப்தீனின் உணர்ச்சிவசப்பட்ட தவறான வழிகாட்டலும் ஒரு காரணம். இந்நிலையில் தமுமுக முஸ்லிம் லீக்கை விமர்சித்ததுடன் , அதனோடு இணைந்து திமுகவையும் கடுமையாக விமர்சித்தது. ஒரு கட்டத்தில் கருணாநிதியை சிறுபான்மையினரின் விரோதி என்றார் ஜெய்னுலாப்தீன். இதன் காரணமாக அடுத்து வந்த தேர்தல்களில் திமுகவின் சிறுபான்மையினர் வாக்கு வங்கி உடைந்து குறிப்பிட்ட சதவிகித வாக்குகள் அதிமுகவிற்கு சென்றன. இதை ஜெயலலிதா தனக்குச் சாதகமாகப் பார்த்தார். மேலும், இந்த அமைப்பு உடைந்து 2004இல் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமா அத்தாக மாறிய கட்டத்தில், அந்த அமைப்பு தீவிர திமுக எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தது. அதன் மூலம் ஒவ்வொரு தேர்தலிலும் அது தனிப்பட்ட பலன்களை அடையத் தவறியதில்லை.

திமுக ஆட்சியின் பொற்காலமாகப் பார்க்கப்பட்ட 1996 காலகட்டத்தில் கருணாநிதி முதலமைச்சராக இருந்த தருணத்தில் உள்ளாட்சிகளில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட 33 சதவிகித இடங்களில் முஸ்லிம் பெண்கள் பயன்பெறும் வகையில் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள வார்டுகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டன. இதன் மூலம் பல இடங்களில் முஸ்லிம் பெண்கள் உள்ளாட்சிகளின் தலைமைப் பதவிக்கு வந்தார்கள். அதுவரை முஸ்லிம் பெண்கள் அச்சம்,

மடம், நாணம் என்ற வகையில் வீடுகளுக்குள் ஓடி ஒளிந்து கொண்டிருந்தார்கள். கலைஞரின் இந்தச் செயல்பாடு அன்றைய கட்டத்தில் அடிப்படைவாதிகளால் அதிகம் விமர்சிக்கப்பட்டது. இருந்தும் அதனை மீறி அவர் முஸ்லிம் பெண்களின் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கைக் கொண்டிருந்தார். மேலும், முஸ்லிம் மாணவிகள் பயன்பெறும் பொருட்டு அரசு சார்பில் பல விடுதிகள் கட்டப்பட்டன. இதன் தொடர்ச்சியில் 2006 ஆட்சிக் காலத்தில் மிக முக்கிய விஷயமான முஸ்லிம்களின் நீண்ட நாள் கோரிக்கையான தனி இடஒதுக்கீடு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. சச்சார் கமிட்டி அறிக்கையின்படி இது நிறைவேற்றப்பட்டது. மிகக் குறைவாக இருந்தபோதும், எதிர்ப்புகளை மீறி கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகித தனி இட ஒதுக்கீடு திமுக ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்டது. முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்களுக்கும் 3.5 சதவிகித தனி இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. பின்னர் கிறிஸ்தவர்கள் அதனை வேண்டாம் என்று திருப்பியளித்தார்கள். மேலும், முஸ்லிம் சமூகம் சார்ந்து இந்தக் குறைவான இட ஒதுக்கீடு சதவிகிதத்திற்கு முஸ்லிம் அமைப்புகளின் நடவடிக்கைகளும் ஒரு காரணம். அவர்கள் எதார்த்த கள நிலவரத்தை அறிய முற்படுவதற்குப் பதிலாக, அதன் பலனை யார் அனுபவிப்பது என்ற போட்டிக்குள் இறங்கினார்கள். அன்றைய காலகட்டத்தில் தாவூத் மியாகான் போன்றவர்கள் இதனை வலியுறுத்தியும் முஸ்லிம் அமைப்புகள் அந்தக் குரல்களைப் பொருட்படுத்தத் தவறின. இந்நிலையில்  இட ஒதுக்கீடு சதவிகிதத்தை

அதிகரிக்க வேண்டும் என்று தற்போது மீண்டும் அவர்களே கோரிக்கை வைக்கக்கூடிய சூழலுக்கு நிலைமை சென்றிருக்கிறது. அதே நேரத்தில் அடிப்படைவாதத்திற்கு எதிரான திமுக அரசின் திட்டங்கள் இங்குள்ள அடிப்படைவாத அமைப்புகளை ஆடச் செய்திருக்கின்றன. குறிப்பாக, திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட கட்டாயத் திருமணப் பதிவு சட்டம். அதாவது திருமண விஷயத்தில் பெண்கள் ஆண்களால் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும் தொலை நோக்கில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இது முஸ்லிம் பெண்களுக்கு எதிராக இருக்கிறது என்று சில அடிப்படைவாத முஸ்லிம் அமைப்புகள் கொதித்தன. அதற்குக் காரணம் தமிழ்நாட்டில் இன்னமும் முஸ்லிம் சமூகத்தில் வழக்கத்தில் இருக்கும் குழந்தைத் திருமணம். குழந்தை திருமணத் தடுப்புச் சட்டத்தின்படி 18 வயதிற்கு குறைவான சிறுமிகளின் திருமணத்தை அதிகாரிகள் கேள்விப்பட்டால், அதைத் தடுக்கிறார்கள். பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவராக கிருதாரேஷ் அகமது இருந்த காலத்தில் இது போன்ற முஸ்லிம் சிறுமி ஒருத்தியின் திருமணத்தை அவர் தடுத்து நிறுத்தினார். உடனே அடிப்படைவாத அமைப்புகள் அவரை மாற்ற வேண்டும் என்று குரல் கொடுத்தன. இருந்தும் அவர் உறுதியாக இருந்தார். இவர்களின் இந்த நடவடிக்கை பிற சமூகத்தினரிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. மேலும் தன் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் பெண்களை அரசின் பொறுப்புகளுக்கு கருணாநிதி கொண்டு வந்தார். அதே நேரத்தில் பல

விமர்சனப் பூர்வமான நிலைப்பாடுகளும் ஏற்பட்டது உண்டு.

கலைஞர் கருணாநிதியைப் பொறுத்தவரை சிறுபான்மையினர் விஷயத்தில் பெரும்பாலும் சாதகமாகவே நடந்து கொண்டாலும், சில தருணங்களில் அடிப்படைவாத விஷயங்களை விமர்சிக்கவும் அவர் தயங்கியதில்லை. மேலும், தமிழ் முஸ்லிம் பெண்கள் சமூக, பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தார். அதற்கு எதிரான அடிப்படைவாதக் குரலுக்கு எதிராக இருந்தார். தன் கட்சியினரிடத்தில் கூட தனிப்பட்ட முறையில் பல தடவை இது பற்றிப் பேசி இருக்கிறார். மேலும், சவூதி அரேபியாவில் இலங்கைப் பெண் ரிசானா நபீக் தவறுதலாகக் கொல்லப்பட்ட போது அதற்கு எதிராகத் தமிழ்நாட்டில் எழுந்த குரலுக்கு ஆதரவாக இருந்தார். குறிப்பாக அது பற்றி மனுஷ்ய புத்திரன் நக்கீரனில் எழுதிய கட்டுரைக்கு ஆதரவாக அறிக்கையும் வெளியிட்டார். இதன் மூலம் தவ்ஹீத் ஜமா அத் அவருக்கு விவாத அழைப்பு விடுத்தது. மேலும், விஸ்வரூபம் படப் பிரச்சினையில் ஜெயலலிதா கமலுக்கு எதிராக முஸ்லிம்களைப் பயன்படுத்திக் கொண்டபோது அந்த ரகசியத்தை அம்பலப்படுத்தியதும் கலைஞர் தான். ஆக, அவரின் 50 ஆண்டுகால தமிழ் அரசியல் வரலாற்றில் பெரும்பாலும் சிறுபான்மையினரின் ஆதரவாளராகவே இருந்திருக்கிறார். அதே நேரத்தில் பல போதாமைகளும், சமரசங்களும் இருக்கவே செய்தன. அது இனிவரும் காலகட்டத்தில் நிச்சயமாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும். மேலும், ஒரு சமூகத்தின் சமூக,

பொருளாதார வளர்ச்சியை நோக்கிய கரிசனை என்பது வெறுமனே அதன் மீதான ஆதரவு நடவடிக்கைகள் மட்டுமல்ல. மாறாக, உரிய விமர்சன நிலைப்பாடுகளும் கூட அதனை மேம்படுத்தும் நடவடிக்கையே. இது அடிப்படைவாதச் சமூகத்திற்கு அவசியமானதும் கூட.

mohammed.peer1@gmail.com

# தானியங்கி வரலாறும்-தலைவர்களும்:

## கலைஞரை முன்வைத்துச் சில சிந்தனைகள்

*ராஜன் குறை*

“மானிடர் அவர்கள் வரலாற்றை உருவாக்குகிறார்கள்; ஆனால் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றபடியெல்லாம் உருவாக்க இயல்வது இல்லை. அவர்கள் உருவாக்கிக்கொள்ளும் சூழலில் அவர்கள் செயல்படுவதில்லை, கடந்தகாலத்திலிருந்து பெறப்பட்ட  சூழலில், அதன் எல்லைகளில்தான் அவர்கள் செயல்பாடுகிறார்கள். இறந்துபோன

காலங்களின் மரபுகளெல்லாம் அவர்கள் ஆன்மாவின்மேல் துர்க்கனவுகளாக அழுத்துகின்றன" என்ற பொருளில் புகழ்பெற்ற மேற்கோள் ஒன்று கார்ல் மார்க்ஸின் கட்டுரை ஒன்றிலிருந்து எடுத்தாளப் படுவதுண்டு.

மானுடச் சிந்தனையின் விடுவிக்கப்படாத புதிர்களில் ஒன்று, வரலாறு மனிதர்களை உருவாக்குகிறதா, மனிதர்கள் அதை உருவாக்குகிறார்களா என்பது. இரண்டும்தான்; வரலாறு அவர்களை உருவாக்குகிறது - அவர்கள் அதை மாற்றியமைக்கிறார்கள் என்று சுலபமாகக் கூறிவிடலாம். ஆனால் ஏன் மாற்றுகிறார்கள், யார் மாற்றுகிறார்கள், எப்படி மாற்றுகிறார்கள் என்பதையெல்லாம் எளிதில் கணிக்கவோ, அளவிடவோ, புரிந்துகொள்ளவோ முடிவதில்லை. குறிப்பாக வரலாற்றில் தனிநபர்களின் பாத்திரம் என்பது என்ன? ஏன் தலைவர்களாக ஒரு சிலர் மட்டும் உருவாகிறார்கள்? வரலாறு ஏன் ஒரு சிலரை மட்டும் தன்னை மாற்றியமைத்துக்கொள்ளத் தேர்ந்தெடுக்கிறது? என்பவை மர்மமான கேள்விகள்.

கலைகளில் இந்தக் கேள்வி மேலும் கூர்மை யடையும். படைப்பாளிக்கே எப்படித் தனக்கு அந்தச் சிந்தனை வந்தது என்று கூற முடியாது. ஒரு அற்புதமான வரி, ஒரு பண், ஒரு சித்திரம் எந்தத் தருணத்தில் அகவெளியில் உதித்து வெளியாகிறது என்பது எல்லாக் காலத்திலும் வியப்பிற்குரியதாகத்தான் இருக்கிறது. அதைச் சமூகம் எப்படிப் புரிந்துகொள்கிறது, ஏன் பாராட்டுகிறது, நிராகரிக்கிறது என்பதையெல்லாம் காரண, காரியங்களைக்

கொண்டு விளக்கலாம். ஆனால் படைப்பின் கணம் ஒரு தற்செயலாகத்தான் இருக்கிறது.

மானுடச் சிந்தனையில் வெகுகாலம் அதனால்தான் இறைமுதல்வாதம் கோலோச்சியது. “அகர முதல எழுத்தெல்லாம் அறிய வைத்தாய் தேவி!” என்றும்; “யார் தருவார் இந்த அரியாசனம்?” என்றும் இறையை நோக்கிப் பாடுவது இயல்பாக இருக்கிறது. நம் அறிதலுக்கு அப்பாற்பட்ட சக்தி நம்மை வழிநடத்துகிறது என்றும், அது சிலவற்றை நமக்கு விதித்திருக்கிறது என்றும், தலையில் எழுதியிருக்கிறது என்றும் வெகு இயல்பாகவே மானுடம் நம்புகிறது. ஆனால், இறையியலிலும் மானுட எத்தனம் என்பதற்கான இடம் என்ன என்ற கேள்வி எப்போதும் உண்டு. புராணங்களில் பல சிக்கலான கதைகள் உண்டு. எல்லாம் விதிப்படி நடக்கிறதா? அல்லது மனிதன் கடவுளைத் தொழுதால் மாற்ற முடியுமா? என்றும் பதினாறாக ஒரு மனிதன் விதிக்கப்பட்ட மரணத்தை வென்று வாழ முடியுமா?

மானுடவாதம் உலகில் பரவிய பிறகு விதிப்படி நடக்கவில்லை; மனிதனின் செயலூக்கம் முக்கியமானது எனவும், வரலாறு மனிதனை வழிநடத்துகிறது எனவும் ஒரு எண்ணம் பரவியபோதுதான், மேலே சொன்னபடி, இறைவன் சித்தமா, மனிதனின் சித்தமா என்ற பழைய சிக்கல் மனிதனை வரலாறு உருவாக்குகிறதா அல்லது வரலாற்றை மனிதன் உருவாக்குகிறானா என்பதாக மாறியது.

வரலாறு அதன்போக்கில் இயங்குகிறது, மனிதர்களை உருவாக்குகிறது என்பவர்கள்

வரலாற்று நிர்ணய வாதம் (historical determinism) என்பதைப் பின்பற்றுவர்கள் அல்லது விதி நிர்ணய வாதம் (fatalism) பேசுபவர்கள்; மானுட யத்தனமே நிகழ்வுகளைத் தீர்மானிக்கிறது.
நம்பக்கூடியவர்கள் மானுடவாதம் (humanism), செயலூக்கவாதம் (voluntarism) ஆகியவற்றைப் பின்பற்றுகிறார்கள்.

செயலூக்க வாதத்தினுள் கூட்டுச்செயல்பாட்டிற்கு முதன்மையளிப்பது, தனிநபர்களுக்கு, தலைவர்களுக்கு முதன்மையளிப்பது என்று இரு பிரிவுகளைக் காணலாம். ஹெகல் தனிநபர்களுக்கு முன்னுரிமை தந்தார் என்றால், மார்க்ஸ் கூட்டுச்செயல்பாட்டிற்கு முன்னுரிமை தந்தார் எனலாம். தனி மனித குணாம்சத்தை வர்க்க குணாம்சம் தீர்மானிப்பதாக இடதுசாரிகளும், தேசிய குணாம்சம் தீர்மானிப்பதாக சுதந்திரவாதிகளும், ஜாதி தீர்மானிப்பதாக பிற்போக்கு வாதிகளும் கருதுவதைக் காண முடியும்.

## தமிழக வரலாறு

தமிழக வரலாறு என்பதை நாம் எப்படிப் புரிந்துகொள்கிறோம் என்பது அடுத்த கேள்வி. தமிழகத்தில் எத்தனையோ சமூகப்பிரிவுகள் உள்ளன; பல்வேறு குறுநில மன்னர்கள், ஜமீன்தார்கள், சமஸ்தானங்கள் இருந்துள்ளன. பண்டைய சாம்ராஜ்யங்கள் இருந்துள்ளன. ஏராளமான போர்க்களங்கள் உருவாகியுள்ளன. மடாதிபதிகள், மத நிறுவனங்கள் இருக்கின்றன; தொழில்கள் இருக்கின்றன; கலை வடிவங்கள் இருக்கின்றன. தமிழக வரலாறு என்பது

இதுபோன்ற எண்ணற்ற அம்சங்களைக் கொண்டது என்று ஒருவர் கூறலாம். அது உண்மைதான். இந்த வரையறையில் “தமிழக நெசவுத்தொழிலின் வரலாறு” என்ற முக்கியமான நூல் எழுதப்பட்டிருக்கலாம்; எழுதப்படலாம்.

ஆனால் இன்னொரு வரையறையில் நாமெல்லாம் தமிழர்கள் என்று மக்கள் தன்னுணர்வு பெற்றபிறகுதான் தமிழக வரலாறு என்று ஒன்று துவங்குகிறது என்றும் சொல்லலாம். அதாவது, தமிழக வரலாறு என்பது இந்த நிலப்பகுதியில் நிகழ்ந்த அனைத்துச் சங்கதிகளின் வரலாறு என்று பார்க்காமல், அது குறிப்பாக “தமிழ் பிரக்ஞை” என்ற தன்னுணர்வு எப்படி ஒரு மக்கள் கூட்டத்திற்கு, சமூகத்திற்கு உரியதானது என்பதே அதன் சரியான பொருளில் தமிழக வரலாறு என்று ஒருவர் கூறலாம்.

வரலாற்று எழுத்தியலை நுட்பமாக கவனித்தால் இந்த இரண்டாவது வரையறை முதல் வரையறையைச் சாத்தியமாக்குவதையும் பார்க்கலாம். உதாரணமாக, தஞ்சை பெரியகோவிலை ஆராயும் ஒருவர் அது ஆசியக் கட்டடக்கலையின் உதாரணம் என்று கூறலாம். வேறு சிலர் அதை தெற்காசியக் கட்டக்கலை என்றோ, இந்தியக் கட்டடக்கலை என்றோ, தென்னிந்தியக் கட்டடக்கலை என்றோ கூறலாம். தமிழ், தமிழகம் என்ற தன்னுணர்வு மிகுந்த பிறகு ஒருவர் உறுதியாக தஞ்சை பெரியகோயில் தமிழ் கட்டடக்கலையின் முக்கிய உதாரணம் என்று கூறலாம்.

ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகுதிக்கு வரலாற்றுத் தன்னுணர்வு, சுய உணர்வு, அல்லது பிரக்ஞை உருவான பிறகுதான் அந்த மக்கள் தொகுதி வாழும் பிரதேசத்தின் அனைத்து அம்சங்களும் ஒரு குறிப்பிட்ட அடையாளத்திற்குள் தொகுக்கப்படுகிறது. இதன் மூலமாகவே ஒரு தேசியம் கட்டமைக்கப்படுகிறது; அரசும் இறையாண்மையும் உருவாகிறது.

## இந்திய தேசம், வரலாறு, இறையாண்மை

வரலாற்றுப் பிரக்ஞையின் வெளிப்பாடு வரலாற்று எழுத்தியல் என்பதே நவீன மானுடவாதப் புரிதல். இந்தப் புரிதலின் அடிப்படையில்தான், இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்கள் இந்தியாவில் வரலாறு எழுதுதல் என்ற பயிற்சியே இல்லை; எனவே வரலாற்றுப் பிரக்ஞையும் இல்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள். பொதுவாகவே ஆவணங்களைப் பேணுவது, சரிபார்ப்பது என்பதிலெல்லாம் பெரிய அக்கறை இல்லாத சமூகமாகவே இந்தியச் சமூகங்கள் உள்ளன என்று அவர்கள் கூறுவது முற்றிலும் பிழையானது அல்ல.

முகலாய வரலாற்றாசிரியர் அல்பெரூனி இது தொடர்பாக கூறியது பிரசித்தி பெற்றது: “துரதிர்ஷ்ட வசமாக இந்துக்கள் வரலாற்றுக் காலவரிசைக்கு முக்கியத்துவம் தருவதில்லை; அரசர்களின் வம்சாவளி வரிசையைக் கூடச் சரியாக நினைவில் கொள்வதில்லை; அவர்களைத் தகவலுக்காக வறுபுறுத்தினால், என்ன சொல்வது என்று தெரியாமல், ஏதாவது

கற்பனைக்கதைகளைச் சொல்லத் துவங்குகிறார்கள்.”

வரலாற்று எழுத்தியல் இல்லாத சமூகங்களில் கடந்த காலம் என்பதே மறக்கப்படுவதாகச் சொல்ல முடியாது. அங்கே கடந்த காலம் ஒரு பாரம்பரிய உணர்வாக (ஹெரிடேஜ் எனப்படுவது) செயல்படுகிறது. கால வரிசையைவிட, நிகழ்வுகளின் தாக்கம் உணர்வுரீதியாகத் தொகுக்கப்படுகிறது.

இலங்கையிலும் கூட சிங்களர் “மகாவம்சம்” என்ற நூல் சுட்டுவது போல வரலாற்றுப் பிரக்ஞையுடன் இருப்பதையும், தமிழர்கள் பாரம்பரிய உணர்வுடன் இருப்பதையும் வேறுபடுத்திப்பார்க்கிறார் பேராசிரியர் வாலண்டைன் டானியல்.

இந்த நிலையில் காலனிய காலகட்டத்தில் வரலாற்று எழுத்தியல் துவங்கிப் பரவியபோது, இந்தியா என்ற கருத்தாக்கம் நிலைபெற்றதால், வரலாறு இந்திய வரலாறாக அறியப்பட்டது. ஆங்கிலத்தில் எழுதும்போது இந்தியாவின் பல மொழிச் சமூகங்களைச் சுலபமாக இந்தியா என்ற பொதுவரலாற்றில் இணைத்துவிட முடிகிறது.

ஆனால் இந்திய மொழிகளில் இந்திய வரலாற்றை எழுதும்போது இந்தியா என்பதே அந்தந்த மொழிகள் சார்ந்த பிரக்ஞையாக மாறிவிடுகிறது. தமிழில் எழுதப்படும் இந்திய வரலாறு என்பது தமிழின் சிந்தனையாக, தமிழின் பார்வையாக, தமிழ் உணர்வாக மாறிவிடுகிறது. “இந்திய நாடு என் வீடு” என்று பாடும்போது “நாடு” என்ற வார்த்தை இந்தியாவை தமிழ்ப்படுத்தி விடுகிறது. ஒரு வங்காளியின் இந்தியாவும், மராத்திய

இந்தியாவும், அஸ்ஸாமிய இந்தியாவும், தமிழ் இந்தியாவும் அந்தந்த மொழிகளின் பிரக்ஞை சார்ந்து வேறு வேறாகவும் இருக்கும். தத்தமது மொழியில் சூல்கொண்ட உணர்வுகளை ஆங்கிலம் கற்று எழுதும்போதும் முழுவதும் தவிர்க்க முடியாது.

இது மதங்களையும் கடந்த பார்வை என்பதையும் சுலபத்தில் காணமுடியும். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட  கிறித்துவரோ, இஸ்லாமியரோ பிற மொழி கிறித்துவர், இஸ்லாமியரிட மிருந்து மாறுபட்ட வரலாற்று உணர்வுகளைக் கொண்டவர்களாகத்தான் இருப்பர். இந்துக்களைக் குறித்துச் சொல்லவே வேண்டாம். தமிழ் ஜைனம் என்பது இன்று அதிகம் அறியப்படாத ஒரு வியக்தியாகவே இருந்தாலும்

எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால், பொதுமொழி என்பதே ஒரு மக்கள் தொகுதியின் தனித்துவமான பிரக்ஞைக்கு, அதன் மூலம் உருவாகக்கூடிய வரலாற்றிற்கு அடிப்படை. அதன் ஊடாக வரலாற்று எழுத்தியலுக்கும் அடிப்படை. மொழியே பிரக்ஞையின், வரலாற்றின் விளைநிலம்.

## தலைவர்கள்

இதுவரை கூறியதைத் தொகுத்துக்கொள்வோம். இறைவன் சித்தமல்ல, திருவிளையாடல் அல்ல மானுட யத்தனமே அதன் இருப்பை வடிவமைக்கிறது என்ற எண்ணம் வரலாறு குறித்த சிந்தனை, அக்கறை வலுப்பெறுவதற்கு முக்கியக் காரணம் ஆகிறது. ஆனால் வரலாறு மனிதர்களை உருவாக்குகிறதா, மனிதர்கள் வரலாற்றை

உருவாக்குகிறார்களா என்ற கேள்வி மானுட யத்தனம் குறித்த கேள்வியாக எப்போதும் தொடர்கிறது. குறிப்பாக, தனிநபர்களின் இடம் என்ன, அவர்கள் சார்ந்திருக்கும் மக்கள் தொகுதியின் இடம் என்ன என்ற கேள்விகள் எழுகிறது.

இந்திய அளவில் இந்தியா என்ற அடையாளம் காலனிய கால எழுத்தில் நிலைபெற்று வரலாற்றின் கொள்கலமாக மாறினாலும், இந்திய மொழிகள் ஒவ்வொன்றிலும் இந்தியா வெவ்வேறாக அந்த மொழியின் பிரக்ஞையில் வடிவம் கொள்வது தவிர்க்க முடியாதது. மொழியே வரலாற்றின் விளைநிலம்.

இத்தகைய பின்னணியில்தான் நாம் சுதந்திர இந்தியாவின் பகுதியாக 1947ஆம் ஆண்டு தமிழகத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த ஆண்டு தேசிய அளவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் சதவீதம் 3%. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில்தான் அதிக அளவு: 15%. தமிழகத்தில் இவற்றிற்கு இடையில் ஏதோவொரு சதவீதம். பதினான்கு என்று வைத்துக்கொள்வோம். அதாவது இரண்டரைக் கோடித் தமிழர்களில் முப்பது முதல் நாற்பது இலட்சம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

மாநிலத்தின் பெரும்பகுதி நிலஉடைமைச் சமூகம்; ஜமீன்தார்கள், மிட்டா, மிராசுகள், பண்ணை யார்கள் இப்படி பல பெயர்களில். கடைசியாக இருந்த பாண்டியப் பேரரசு சிதைவுற்று அறுநூறு ஆண்டுகள் கடந்து நாயக்கர்கள், மராத்தியர்கள், இஸ்லாமியர்கள், பின்னர் ஐரோப்பியர்கள் என பல

ஆட்சிகள், நிர்வாகங்கள், மொழிகள் ஆகியவை புழங்கிய நிலை. நில அளவீடு செய்யும் கணக்கர்களாகவும், பூசாரிகளாகவும், புரோகிதர்களாகவும், அரசு நிர்வாகிகளாகவும், அதிகார வர்க்கமாகவும், ஆங்கில நீதிமன்றங்களில் வக்கீல்களாகவும், நீதிபதிகளாகவும், பல்வேறு புதிய தொழில்களிலும் முதன்மையானவர்களாகவும், சில இடங்களில் நில உடைமையாளர்களாகவும், தொழில் முனைவோராகவும் பார்ப்பனர்கள் விளங்கி வந்தனர்.

சமஸ்கிருத மொழி கலந்த தமிழே அரசாங்கத்திலும், ஊடகத்திலும் புழங்கிய நிலை. இருபதுகளின் இறுதியிலிருந்தே பரவலான வாசகர் தளத்தைப் பெற்றிருந்த எஸ்.எஸ்.வாசனின் வெகுஜன இதழான ஆனந்த விகடனில் வாசகர்களுக்கு ஆசிரியர் கடிதம் எழுதும் பகுதியின் தலைப்பு “உபயகுசலோபரி”. தமிழில் சொன்னால் கிட்டத்தட்ட “நலம்; நலமறிய ஆவல்”.

தமிழகத்தின் அதிகார வர்க்கம் என்பது பல்வேறு நில உடைமை ஜாதிகளாக இருந்தாலும், பார்ப்பனர்கள் அதன் முக்கிய விசையாக இருந்தனர். அவர்களே இந்திய தேசியத்தின் முகவர்களாகவும் காங்கிரஸ் கட்சியில் விளங்கினர். தென்னிந்தியாவின் நான்கு முக்கிய மொழிகள் புழங்கும் பிரதேசங்களில் நிஜாம் சமஸ்தானங்கள் போக பிற பகுதிகள் மெட்றாஸ் பிரிசிடென்ஸியாக இருந்தன. தமிழகம் என்று ஒரு பகுதி தனித்து உணரப்படவில்லை.

இந்த நிலையில்தான் அதிகார வர்க்கத்தில் பார்ப்பனர், பார்ப்பனரல்லோதார் முரண்பாடு கூர்மையடைந்து ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது. பார்ப்பனர்களிடம் குவியும் சகலவித அதிகாரங்களையும் உணர்ந்த நில உடைமை, புதிய தொழில் முனைவோர், கல்வியாளர்களின் கூட்டமைப்பாக அது இருந்தது எனலாம். பார்ப்பனர்கள் ஒரே நேரத்தில் காலனிய அரசாட்சியிலும், இந்திய நலன்களை முன்னெடுக்கும் காங்கிரஸிலும் செல்வாக்குப் பெற்றிருந்தினர். ஜஸ்டிஸ் கட்சி ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய இரட்டையாட்சி முறை அரசில் பங்குபெற்று, காங்கிரஸ் மிதவாதிகள் போல சமூக சீர்திருத்தத்துடன் கூடிய ஆங்கில இறையாண்மைக்கு உட்பட்ட சுயாட்சி என்ற கருத்தியலைக் கொண்டிருந்தனர். காங்கிரஸ் பூரண சுதந்திரத்தைக் கோரும் நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.

இந்த நிலையில்தான் காங்கிரஸின் சீர்த்திருத்த நோக்கிலான பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்த விஜயராகவாச்சாரியாரும், ராஜாஜி என்று அறியப்பட்ட ராஜகோபாலாச்சாரியாரும், பெரியார் என்ற பெயரில் தமிழக வரலாற்றை நிர்ணயிக்கப்போகும் ஈரோடு ராமசாமி நாயக்கரை காங்கிரஸில் இணைத்தார்கள். காங்கிரஸில் பார்ப்பனரல்லோதார் பங்கேற்பை அதிகப்படுத்த விழைந்தார்கள். அவர்கள் விரும்பியபடியே காங்கிரஸ் கட்சிக்கு வெகுஜனத் தன்மை கிடைத்தது. கள்ளுக்கடை மறியல், கதர்ப் பிரசாரம், தீண்டாமை ஒழிப்பு போன்ற சீர்திருத்த அரசியல் நடவடிக்கைகள் பலம் பெற்றன. ஆனாலும், இட ஒதுக்கீட்டுச் சித்தாந்தத்தில்

(அப்போது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்று பெயர்) ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பெரியார் விலகியதும், ராமநாதனின் சுயமரியாதை இயக்கத்தில் இணைந்து அதை வெகுஜன ஆற்றலாக வடிவமைத்ததும் வரலாறு.

காங்கிரஸ் 1937இல் இரட்டையாட்சி முறையில் பங்கெடுத்து, ராஜாஜி முதல்வரானதும், இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்க முயன்றது முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனை ஆனது. இந்திய வரலாற்றுப் பிரக்ஞைக்கும், தமிழக வரலாற்றுப் பிரக்ஞைக்கும் இடையில் நுழைந்து பிரிக்கும் கோடரியாக இந்தி மொழித் திணிப்பு அமைந்தது. மெல்ல, மெல்ல அரும்பிக்கொண்டிருந்த தமிழ்மொழி மறுமலர்ச்சி அரசியல் உணர்வு பெற்றது.

இதன் விளைவாக நாற்பதுகளில் வட இந்தியா, ஆரியம், சமஸ்கிருதம், பார்ப்பன மேலாதிக்கம் ஆகியவற்றை இணைத்துப்பார்த்து அதற்கு மாற்றாக பார்ப்பனரல்லாதோரின் அரசியல் வடிவமாக தென்னிந்திய நிலப்பரப்பை திராவிட மொழிகளின், திராவிடர்களின் நாடாக உருவகித்து தனி நாடு கோரிக்கையும் எழுந்தது. அண்ணா திராவிட நாடு என்ற இதழை 1944 ஆம் ஆண்டு துவங்கினார். பெரியாரின் விமர்சன இயக்கமாக மட்டுமன்றி, தமிழ் அடையாளத்தை உருவாக்கும் நோக்கம் அண்ணாவிற்கு இருந்ததால் 1949ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது.

அவர்கள் முன்னால் இருந்த சவால் இதுதான். தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் தொகுதியினை

தாங்கள் தனித்துவமிக்கவர்கள் என்ற உணர்வைப் பெற்று, தாங்கள் வரலாற்றின் விளைபொருள் மட்டுமல்ல, புதிய வரலாற்றின் விளைநிலம் என்றும் உள்ளம்கொள்ளச் செய்வது. இது இந்திய தேசியத்தை முற்றிலும் மறுதலிக்காமலேயே, அதன் இறையாண்மையை ஏற்று, அதற்குள்ளாகவே மெல்ல வளர்ந்து திண்மை பெறுவது.

இந்த வரலாற்றுணர்வைத் தமிழர்களும், தமிழ் அடையாளம் பற்றிக்கொள்ள வைப்பதில் அடுத்த பதினெட்டு ஆண்டுகளில் தி.மு.க கண்ட வெற்றி அதனை 1967ஆம் ஆட்சியில் அமர்த்தியதுடன், மொழிவாரிப் பிரிவில் தனியாக அடையாளம் கண்டிருந்த தமிழகத்தின் பெயரை தமிழ்நாடு என்று அறிவிக்கவும் காரணமானது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த அபூர்வ சாதனையின் மையத்தில் விளங்கியவர் கலைஞர் மு.கருணாநிதி என்றால், அது மிகையாது.

## மொழியும் அரசியலும்

அரசியலின் இலட்சியம் பொருளாதார வலிமை, உற்பத்தி நுகர்வு ஆகியவற்றை நேர்செய்வது, சமத்துவத்தை உறுதிசெய்வது, மக்களின் சுதந்திர இயக்கம் எனப் பல இருக்கலாம். அவற்றையெல்லாம் நிகழ்த்த அரசியலுக்கு இருக்கும் முக்கிய ஆயுதம் மொழிதான்.

லெனின் செய்த புரட்சி, மாவோ செய்த புரட்சி என பல்வேறு நாடுகளிலும் தலைவர்கள் செய்தது எல்லாம் முதலில் மொழிச்செயல்பாடுதான். அதாவது, குறிப்பிட்ட சாத்தியத்தை, சிந்தனையை மொழிவழி எடுத்துரைத்துப் பரப்பியதுதான்.

மொழியின் மூலம் சிந்தனைகளில், உள்ளங்களில் உருவாகும் மாற்றமே, பல செயல்களாகப் பரிணமித்து புறஉலகில் பல மாற்றங்களைக் கொண்டு வருகிறது.

இந்த மொழிச்செயல்பாடுகளில் கலை, இலக்கியமும் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒன்றோடொன்று கைகோர்த்து புதிய மொழியாற்றலை உருவாக்குகின்றன. புதிய சொற்சேர்க்கைகளின் சாத்தியங்களை உருவாக்குகின்றன. மனிதர்களின் நடவடிக்கைகளில் இது மாற்றத்தைத் தோற்றுவிக்கிறது.

மொழியை பொருள்வய உலகிலிருந்து பிரித்து, அதைக் கருத்து என்ற வளிமண்டல அரூபமாக்குவதுதான் மொழியின் அரசியல் தன்மையைப் புரிந்துகொள்ளவிடாமல் செய்கிறது. மொழி என்பது, அதில் உருவாகும் கருத்து என்பதெல்லாம் பொருள்வயமானவைதான். அவை பொருள் உலகில், பௌதிக உலகில்தான் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. மனிதர்கள் தங்கள் செயல்களை வடிவமைத்துக்கொள்ளவும், இயற்கையுடனான தங்கள் உறவை நெறிப்படுத்திக்கொள்ளவும்தான் மொழியைக் கையாள்கிறார்கள்.

மொழி சரஸ்வதியாலோ, வேறு எந்த தெய்வ உருவத்தாலோ நமக்கு வழங்கப்படவில்லை, நாவிலும் எழுதப்படவில்லை என்பதை உணர்ந்தால், மொழி உடலின் தசைகளிலிருந்து பிறந்து மானுடருக்கும், இயற்கைக்குமான உறவில் உறைவதைப் புரிந்துகொள்ளமுடியும். அதனால்

தமிழ் மொழி பொருள் என்ற சொல்லை பௌதிகமான இருப்பிற்கும், மொழியின் விளைபொருளான அர்த்தத்திற்கும் பொதுவாக வைத்துள்ளது. தமிழ்ச் சினிமாவில் இன்று பொருள் என்பது ஆயுதத்தை குறிப்பதாகவும் இருக்கிறது. வன்முறையின் பொருள். மொழியின் அரூபம் எல்லாம் தூலத்தின் வெளிப்பாடுகளே.

## தானியங்கி வரலாறு

இவ்வாறு மொழியில் இயங்கி, தங்கள் சமூக இயக்கத்தை மாற்றிக்கொள்ளும், வடிவமைத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்ற மானுடத்தில் தலைவர் என்பதன், படைப்பாளி என்பதன் பொருள் என்ன?

ஒரு மக்கள் தொகுதி உருவானால்தான் அதற்குத் தலைவர் இருக்க முடியும். குட்டி இளவரசன் என்ற ஃபிரெஞ்சு நாவலில் வருவது போல ஒரு அரசன் தனியாக அமர்ந்து ஆணையிட்டுக்கொண்டிருக்க முடியாது. ஆனால் தலைவர்கள்தான் அந்தத் தொகுதியை உருவாக்குவதுபோலவும் தோன்றுகிறது. எது உண்மை?

வரலாற்றிற்கான சிறந்த உருவகம் தேரோட்டம்தான். தேர் யார் ஒருவர் இழுப்பதாலும் நகர்வதில்லை; ஆனால் அனைவரது ஆற்றலும் சேர்ந்துதான் அது நகர்கிறது. அப்படி நகரும்போது அது தானாகவே நகர்வதுபோல இருக்கிறது. தானியங்கி போலத் தோன்றுகிறது. அதற்குக் காரணம் அதன் விசை என்பது பரவலாக இருப்பதுதான்.

அப்படிப்பட்ட தேரோட்டமே வரலாறு என்றால், தலைவர் என்பவர் யார்? தேர் இழுப்பவர்களை நிறுத்தவும், துவக்கவும் யாராவது சமிக்ஞை கொடுக்கவேண்டும். முரசை ஒலிக்க வேண்டும். அந்த முரசொலி அனைவரையும் வடத்தைப் பற்றி இழுக்கத் தூண்டும். அதைப்போல ஒன்றுபட்ட இயக்கத்தைச் சாத்தியமாக்கும் மொழிச்செயல்பாட்டைப் படைப்பவர்கள் தலைவர்கள் ஆகிறார்கள்.

படைப்பாளி என்ற பாத்திரத்தை எப்படிப் புரிந்துகொள்வது என்பதும் இதே போன்ற ஒரு கேள்விதான். மொழியின் சாத்தியங்கள்தான் படைப்பை உருவாக்குகிறது; வாசிப்பின் சாத்தியங்கள்தான் அதை இயங்க வைக்கிறது. அப்படியானால் படைப்பாளியின் பங்கு என்ன?

முரசின் அதிர்வுகளைத் தனக்குள் உணர்பவன் படைப்பாளி; தன்னை மொழியின் கருவியாக தகவமைத்துக்கொள்பவன் படைப்பாளி. இது தற்செயலாக, நனைவிலி மனதின் பிரக்ஞைக்கு எட்டாத செயல்பாடாகத் தோன்றினால் பிரக்ஞை சார்ந்த விளைவுகள் இன்றி, முயற்சியின்றி இது நடைபெறாது. இந்தக் கட்டுரையை எழுதவேண்டும் என்று முனைந்து உட்கார்ந்து துவங்கிய பிறகு, சில வாக்கிய அமைப்புகள் உருவாகின்றன. அதுபோல தனக்குள் ஒரு தானூக்கியை விதைத்துக்கொள்ள வாய்ப்பவர்களுக்கு படைப்பு சாத்தியமாகிறது.

கலைஞரைப் பொறுத்தவரை அவரது விழைவும், உழைப்பும் அவருக்குள் தமிழ் மொழியின் சாத்தியங்களை மலர வைத்தது; அவரால் அதைப்

பயன்படுத்தி மொழியுணர்வை, மொழி சார்ந்த சுயத்தின் அடையாளத்தை மக்கள் தொகுதியின் அடையாளமாக மாற்றுவதில் பெரும் பங்காற்ற முடிந்தது.

## தானியங்கிக் கலை: சினிமா

சினிமாவின் தனித்துவம் அது தானியங்கிக் கலை என்பதுதான். திரையில் பிம்பங்கள் தானாகவே அசைவைச் சாதிக்கின்றன. புரொஜெக்டர் ஓடுவதால்தான் அவை அசைகின்றன. ஆனால், புரொஜெக்டர் திரையின் அனைத்து அசைவுகளையும் இயக்குவதில்லை. அந்த அசைவுகள் காமிரா மூலம் தங்களைப் படச்சுருளுக்குள் பிம்பங்களாக, இன்றைக்குப் பல்வேறு வடிவங்களில் டிஜிட்டல் சமிக்ஞைகளாகப் பதித்துக்கொள்கின்றன. அந்தக் கடத்திகளை இயக்கும்போது வெளியே வந்து திரையில் தங்கள் பல்வேறு அசைவுகளை மீண்டும் நிகழ்த்துகின்றன. இவ்வாறு பிம்பங்கள் தானாக இயக்கம் கொள்ளும் அபூர்வமான தானியங்கிக் கலையாக சினிமா உள்ளது.

தானியங்கிக் கலையான சினிமா, தானியங்கி வரலாற்றிற்கு மிகவும் அணுக்கமானது. ஏனென்றால் அது சினிமாவில் மொழியின் மூலம் அகவெளி, புறவெளி இரண்டையும் இணைக்கிறது.

கலைஞர் கட்டுரைகள் எழுதியது,
பொதுக்கூட்டங்களில் பேசியது, பத்திரிகைகளில்

எழுதியது, புதினங்களில் எழுதியது எல்லாமே மொழிதான் என்றாலும், சினிமா என்ற தானியங்கியில் செலுத்திய மொழி மிகப்பெரிய தாக்கத்தைத் திரையிலும், சமூகத்திலும் ஏற்படுத்தியது என்றால், மிகையாகாது. திரையில் மொழியின் அகவெளி மாற்றத்தை தன் முகபாவங்கள் மூலம் சுயத்தினுள் செலுத்தும் ஆற்றலுடன் ஒரு சிவாஜி கணேசன் கலைஞரின் வசனங்கள் மூலம் உருவானார். தங்கள் சுயத்தை உருவாக்கிக்கொள்ள ஒரு வழிமுறையினை எதிர்நோக்கி இருந்த எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு இது புதியதொரு திறப்பினைக் கொடுத்தது. பராசக்தியோ, மனோகராவோ பெற்ற வெற்றி என்பது வெகுஜனத் தளத்தில் பெரும் வீச்சினைக் கொண்டிருந்ததற்கு ஆழமான காரணங்கள் உண்டு. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லையும், செயலையும் பிணைத்து தங்கள் சுயங்களை உருவாக்கித் தரவல்ல அரூப எந்திரம் ஒன்றை சமூகம் எதிர்பார்த்திருந்தது என்பதுதான்.

அந்த அரூப எந்திரத்தின் புறவழிச் செயல்வடிவமாக எம்.ஜி.ஆர் இருந்தார். மந்திரி குமாரியிலும், மலைக்கள்ளனிலும் அவர் கலைஞரின் வசனம் தோற்றுவித்த புறவெளிச் செயல் வடிவமானார். அவர் சிவாஜி கணேசனுடன் இணைந்து அகத்திலும், புறத்திலும் செயலாற்றும் அரூப எந்திரத்தின் பிறிதொரு பகுதியானார். தானியங்கிச் சினிமாவிலிருந்து பிறந்த இந்த அரூப இயந்திரம், தி.மு.க.வின் அரசியலான தமிழ் மொழி பேசும் வரலாற்று விளைநிலத்தை இருபதாம் நூற்றாண்டுச் சமூகத்தில் உருவாக்கப் பெரும்

உறுதுணையாக அமைந்தது. இதை ஒரு கருத்தியல் செயல்பாடாக, பொருளாதார செயல்பாட்டிலிருந்து பிரித்து நோக்கினால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. இது மொழியென்னும், தானியங்கி பிம்பம் என்னும் பொருளியல் செயல்பாடும் சேர்ந்ததுதான் என்பதைக் கவனிக்க வேண்டும்,

தானியங்கிக் கலையையும், தானியங்கி வரலாற்றையும் பிணைத்த கலைஞர் மு.கருணாநிதி கலைஞர் என்று பின்னாளில் குறிக்கப்பட்டதை இந்த அபூர்வ வரலாற்று நிகழ்வில் வைத்துத்தான் பார்க்கவேண்டும்.

தானியங்கி வரலாற்றின் விசையாக மொழியை மாற்ற வேண்டும் என்றால் வெறுமனே அந்த மொழி பேசுபவர்களை, மொழி அடையாளம் கொண்டவர்களை அணிதிரட்டினால் மட்டும் போதாது. அந்த மொழியை வரலாற்றின் விசையாக, அனைவரையும் ஒருங்கிணைக்கும் ஆற்றலாக மாற்ற வேண்டும். அதற்கேற்றபடி மொழி தன்னைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

திராவிட நாடு பத்திரிகையிலும், சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் நாடகத்திலும், பின்னர் வேலைக்காரி திரைப்படத்திலும் இந்தப் புதிய மொழியாற்றலை உருவாக்கிக் காட்டியவர் அண்ணா என்பதில் ஐயமில்லை. அண்ணா ஓசை நயத்துடன் பேச்சு மொழியாகவும் இல்லாத, பண்டித மொழியாகவும் இல்லாத புதியதொரு மொழியில் பேசவும், எழுதவும் செய்ததுடன் திரைக்கலைத் தானியங்கி பிம்பங்களையும் அதில் பேசவைத்தார்.

அவரால் ஈர்க்கப்பட்ட இளைஞர் கருணாநிதி அவருக்கும் முன்பாகவே தானியங்கிக் கலையில் அந்த மொழியினைப் பயன்படுத்தும் வாய்ப்பினைப் பெற்றார். அண்ணாவின் வெற்றிக்குப் பிறகு, பரவலான வீச்சினைக்கொண்ட திரைக்கதையாடல்கள் மூலமாக தானியங்கிக் கலையில் அந்த மொழியினை இயங்க வைத்தார்.

திரைப்படங்கள் மூலமாக மட்டும் அதைச்செய்யாமல், கூட்டங்கள், நாடகங்கள், பத்திரிகைகள் ஆகிய அனைத்திலும் பண்டைய மொழியின் மறுமலர்ச்சியாக இந்தப் புதிய மொழியாற்றலைக் கையாண்டது மிகவும் குறுகிய காலத்தில் தமிழ்நாட்டு மக்களை தமிழ் அக மக்களாக, தமிழை அகத்தில் கொண்டு செயல்படுபவர்களாக மாற்றியது.

மக்கள் முன்பு போலவே ஜாதிகளாக, மதங்களாக, விவசாயிகளாக, தச்சர்களாக, உழைப்பாளிகளாக, தொழிலாளிகளாகத்தான் இருந்தார்கள். ஆனால் அவர்களை மெல்ல, மெல்ல ஒரு மொழிச்செயல்பாடு சூழ்ந்தது. அந்த மொழிச்செயல்பாட்டினுள் ஈர்க்கப்பட்டு அவர்கள் தமிழர்கள் ஆனார்கள்.

பண்டைய தமிழின் வளம் சமூகப்பரப்பில் நிலத்தடி நீராக இருந்தது. தானியங்கி வரலாறு ஒரு தருணத்தில் தூண்டப்பட்டு சில துளைகள் இட்டதில், பெரிய நீரூற்றாகப் பாய்ந்த மொழி வெளியை நிரப்பியது. தமிழ்ச் சமூகம் வரலாற்று விளைநிலமானது.

திராவிட இயக்கத்திற்கு வெளியேயும் இத்தகு செயல்பாடுகள் நடக்கத்தான் செய்தன. வாசன், கல்கி ஆகியோரின் இயக்கமும் இது போன்ற மொழிச்செயல்பாடுகளின் மூலம் நவீன சமூகத்தைக் கட்டமைக்கவே தலைப்பட்டன. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியிருக்காவிட்டால் அந்த முயற்சி அடித்தள மக்களை அவ்வளவு விரைவாகச் சென்று அடைந்திருக்காது.

கலைஞர்  என்ற சொல்லில் இந்த வரலாற்றின் தானியங்கி படைப்பூக்கம் துலக்கம் பெருகிறது. கட்சியினைக் கட்டமைப்பதில் பணியாற்றி, தேர்தல் வெற்றிக்கு வழிவகுத்து, சட்டமன்ற பணியில் மக்களாட்சி நடைமுறைகளை வலுப்படுத்தி, ஆட்சியாளராகி மக்கள் நல அரசாக தமிழக அரசை வடிவமைத்து, ஐம்பதாண்டுகாலம் கட்சியை வழிநடத்தி, தமிழக வரலாற்றின் தனிப்பெரும் ஆளுமையாக மாறியவர். அவரை மிக முக்கியமான தலைவரென அரசியல் கூறும். ஆனால் அவரை ‘கலைஞர்’ என்று குறிப்பிடும்போது, படைப்பாற்றலின் அவசியம் சமூக மாற்றத்திற்கு இன்றியமையாதது என்பது துலக்கம் பெருகிறது.

அழகியலுக்கும், அரசியலுக்கும் உள்ள தொடர்புகள் குறித்து ஐரோப்பாவில் பல விவாதங்கள் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நிகழ்ந்துள்ளன. தானியங்கிக் கலைக்கும், தேசிய உளவியலுக்கும் உள்ள தொடர்பை ஜெர்மனியை முன்வைத்து கிரகௌளர் எழுதியுள்ளார். ஆனால் அது எதிர்மறை உதாரணம்.

அந்த உதாரணத்தை வைத்து வெகுஜன அரசியலாக தானியங்கி வரலாறு இயங்குவதே ஆபத்தானது என்ற எண்ணம் உலகெங்கும் பரவியுள்ளது.

தமிழக உதாரணம் ஜெர்மனியின் உதாரணத்திற்கு நேர் எதிரானது. தமிழகத்தில் வெகுஜன அரசியலாகப் பரிணமத்த தானியங்கி வரலாறு, வெகுஜன அரசியலைப் பாசிசத்திற்கு எதிரான அரணாக தகவமைத்துள்ளதுதான் முக்கியமானது.

இந்த உதாரணத்தை உலக அறிவியக்கம் இன்னும் பரிசீலிக்கக் கற்கவில்லை. ஏனெனில் முதலில் தமிழகமே அதை இன்னும் பரிசீலிக்கக் கற்கவில்லை. ஐரோப்பிய மேட்டிமைவாதக் கோட்பாடுகளும், உள்ளூர் பார்ப்பனீயக் கோட்பாடுகளும் இணைந்து உருவாக்கிய கலவையாக இயங்கும் கல்விப்புல அறிவியக்கம் மெல்ல, மெல்லத் தனக்கான கோட்பாட்டுத் தெளிவைக் கண்டடையும் என்றுதான் நம்பவேண்டும்.

அவ்வாறு புரிந்துகொள்ள வேண்டுமானால், மிக விரிவான மானுட நாடகத்தின் அடிப்படை தர்மம் என்ன என்பதைக் காணவேண்டும்.

வெளியில் ஒரு எதார்த்தம் இருக்கிறது; அதை மாற்ற முடியாது - அதற்குத் தகுந்தாற்போலத்தான் நாம் இயங்க வேண்டும் என்று நினைப்பது சாதாரண, எளிய மானுட தர்மம்.

அதை மாற்றியமைப்போம் என்று நம்புவதுதான் அரசியல் தர்மம்; கலையின் தர்மம்.

கலைஞர் என்ற வார்த்தையில் மு.கருணாநிதி அவர்களை அழைக்கும்போது நாம் இந்த இணைவை, சமூக மாற்றத்திற்கான பொது விழைவைத்தான் இனம் கண்டு புரிந்துகொள்ள வேண்டும்; பாராட்ட வேண்டும்; பின்பற்ற வேண்டும்.

rajankurai@gmail.com

சமூகநீதியை உள்ளடக்கிய மருத்துவக் கட்டமைப்பு

# கலைஞரும், மக்கள் நல்வாழ்வும்

*இள.சிவபாலன்*

சுதந்திர இந்தியாவின் முன் இருந்த சவால்களில் மிக முக்கியமான சவால் என்பது ஒரு சிறந்த மருத்துவக் கட்டமைப்பை நாடு முழுமைக்கும் ஏற்படுத்துவதே. இந்தியா போன்ற ஒரு பெரும் நிலப்பரப்பில், பன்முகத்தன்மை கொண்ட ஒரு துணைக்கண்டத்தில், ஒரு சிறந்த மருத்துவக் கட்டமைப்பை உருவாக்குவது என்பது மிகப்பெரிய சவால். அதற்குக் காரணம் மருத்துவ வளர்ச்சியின் போதாமைகளோ அல்லது மருத்துவத் துறையின் நவீன வளர்ச்சிகளை இந்தியா நுகராததோ அல்ல. “ஒரு சிறந்த மருத்துவக் கட்டமைப்பு என்பது எது?” என்ற கேள்விக்கான ஒரு நியாயமான பதிலை நாம் உணராததே ஆகும். உதாரணமாக, எந்த ஒரு வளர்ச்சியடைந்த நாட்டிற்குச் சென்றாலும் அவர்களிடம் நாம் இந்தக் கேள்வியைக் கேட்கலாம்: “ஒரு சிறந்த மருத்துவக் கட்டமைப்பு என்பது எது?” பதில்கள் என்னவாக இருக்கும்? “மருத்துவத் துறையின் நவீன வசதிகளை, வளர்ச்சிகளை உள்வாங்கிக் கொள்வதும், அதைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நவீன மருத்துவ உபகரணங்களைக் கொண்டு, ஒரு அதிமுக்கியத்துவம் வாய்ந்த (state-o-f-the-art) நிறுவனங்களை நிறுவுவதும்தான் சிறந்த மருத்துவக் கட்டமைப்பு” என்று சொல்வார்கள்.

வளர்ச்சியடைந்த நாடுகள் சொல்லக் கூடிய இதே கருத்துடன், இந்திய மருத்துவக் கட்டமைப்பை உருவாக்க நினைத்தால் நாம் எப்போதும் இங்கே சிறந்த மருத்துவக் கட்டமைப்பை ஏற்படுத்த முடியாது. உண்மையில், சுதந்திர இந்தியா இப்படிப்பட்ட மருத்துவக் கட்டமைப்பை உருவாக்குவதில்தான் இன்றளவும் முனைப்பைக்

காட்டுகிறது. எய்ம்ஸ் போன்ற மிக உயர்ந்த, நவீன மருத்துவ வளர்ச்சியை உள்ளடக்கிக் கொண்ட, உலக நாடுகளுக்கு இணையான மருத்துவ உபகரணங்களைக் கொண்ட மருத்துவமனைகளின் வழியாக இந்திய மருத்துவத்துறையைச் சிறந்த ஒன்றாக மேம்படுத்த முடியும் என இந்தியா இன்றளவும் நம்பிக் கொண்டிருக்கிறது. ஆனால் எய்ம்ஸ் இருக்கும் அதே இந்தியாவில்தான் தலித்துகளுக்கு போலியோ சொட்டு மருந்து போட மாட்டோம் என்று சொல்லுகிற கொடுமையும் நடந்து கொண்டிருக்கிறது. இந்தியா போன்ற நாட்டில், ஒரு சிறப்பான மருத்துவத் துறையை உருவாக்குவதில் உள்ள மிகப்பெரிய சவால் இதுதான். இந்தியா என்பது பிரிவினைகளால் நிறைந்த நாடு. மொழி ரீதியாக, மத ரீதியாக, பொருளாதார ரீதியாக, சாதி ரீதியாக நிறைய ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த ஒரு நிலப்பரப்பு, ஒரு துணைக்கண்டம்தான் இந்தியா. இத்தனை ஏற்றத்தாழ்வுகளையும் மீறி, இத்தனை தடைகளையும் மீறி பொதுச் சுகாதாரத்தை நாம் எப்படி ஏற்படுத்தப் போகிறோம் என்பதுதான் நமக்கான கேள்வியாக இருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட கேள்வியை இந்திய முகத்தின் வழியாக யாரும் கேட்டதாகத் தெரியவில்லை.

2000 ஆம் ஆண்டு, திருச்சியில் புதிதாகத் துவங்கப்பட்ட கி.ஆ.பெ.விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரியைத் திறந்து வைப்பதற்காக அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் வந்திருந்தார். நான் அப்போது அதே கல்லூரியில் முதலாமாண்டு மாணவன். என் இளம் வயதில் கேட்ட கலைஞரின் அந்த உரை இப்போதும் என்

செவிகளில் வந்து விழுகிறது. அவரது பேச்சின் இடையே ஒரு சிறந்த மருத்துவக் கட்டமைப்பைப் பற்றி அன்று கலைஞர் ஒரு விளக்கம் கொடுத்தார் “ஒரு சிறந்த மருத்துவக் கட்டமைப்பு என்பது நவீன உபகரணங்களாலோ அல்லது ஒரு சிறந்த மருத்துவமனையை நிறுவிவிடுவதால் மட்டுமே ஏற்படுத்தி விட முடியாது. ஒரு நாட்டின் சிறந்த மருத்துவக் கட்டமைப்பு என்பது அந்த நாட்டின் கடைக்கோடியில் இருக்கும் ஒருவனுக்கும் அடிப்படை மருத்துவச் சேவையை உறுதி செய்வது. மருத்துவத் துறையின் நவீன வளர்ச்சிகளை அந்த நாட்டின் விளிம்பு நிலையில் உள்ளவனுக்கும் கிடைப்பதற்காகப் பாடுபடுவது; இதன் வழியாகவே நாம் அப்படிப்பட்ட மருத்துவக் கட்டமைப்பை உருவாக்க முடியும்.” கச்சிதமான, துல்லியமான விளக்கம்.

மருத்துவத் துறையையே சாராத ஒருவர் அதன் நடைமுறைச் சிக்கல்களை எப்படி இத்தனை துல்லியமாகப் புரிந்து வைத்திருக்கிறார் என்று இப்போது நினைத்தாலும் எனக்கு வியப்பாக இருக்கிறது. கலைஞரின் சுகாதாரத் துறை சார்ந்த இந்தப் பார்வைதான் இந்தியா முழுவதும் தேவையானதாக இருந்தது. தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு, ஏனைய இந்திய மாநிலங்களை விடச் சிறப்பாக இருப்பதன் காரணத்தை நாம் கலைஞரின் இந்தப் பார்வையில் இருந்தே பெறமுடியும்.

ஒரு காலத்தில், இந்திய மருத்துவத் துறை என்பதே உயர் சாதி இந்துக்களால் நிரம்பியிருந்தது. உயர் சாதி இந்துக்களைத் தவிர வேறு யாரும் அப்போது மருத்துவம் பயில முடியாத நிலை இருந்தது.

அதனால் மத ரீதியாக, பொருளாதார ரீதியாக, சாதி ரீதியாக ஒடுக்கப்பட்டவர்களுக்கு அடிப்படை மருத்துவமே சென்று சேர்வதில் நிறையச் சிக்கல்கள் இருந்தன. பெரும்பாலான நேரங்களில் அவர்கள் மருத்துவமனையின் உள்ளே கூட அனுமதிக்கப்படாமல்தான் இருந்தார்கள். அதையும் மீறி அவர்கள் செய்யும் தொழிலையும், அதற்காக அவர்கள் உயிர் வாழவேண்டிய தேவையும் உயர் வகுப்பினருக்கு இருந்ததால் அவர்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. அப்போது கூட அவர்களைத் தொடாமல் வைத்தியம் செய்த கேவலமும் இங்கு நடந்திருக்கிறது. இன்றளவும் கூட இட ஒதுக்கீட்டு நடைமுறையில் இல்லாத உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் கல்வியை முடித்ததும் வெளிநாடுகளுக்குச் சென்று விடுவதாகப் புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன.

மருத்துவத் துறையின் வளர்ச்சிக்காக ஏராளமான நிதியை மத்திய அரசு ஒதுக்கினாலும், ஐந்தாண்டுத் திட்டங்களின் வழியே மருத்துவத்துறையில் படிப்படியான வளர்ச்சி குறித்து நிறையத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்த முனைந்தாலும், தடுப்பூசி முதலான ஏராளமான தொற்றுநோய்த் தடுப்புச் செயல்திட்டங்களைக் கொண்டு வந்தாலும், அது சமூகப் படிநிலைகளில் முதல் இரண்டு அடுக்குகளைத் தாண்டி கீழே செல்வதில்லை. சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் இவை எதுவுமே சென்று

சேராததற்கு மிக முக்கியக் காரணம் சாதியத் தீண்டாமைகளும், ஏனைய பிரிவினைவாதங்களும் தான். இதை முழுமையாக உணராதவரை நாம் மேலிருந்து எத்தகைய திட்டங்களைத் தீட்டினாலும் அவற்றைச் சமூகப் படிநிலைகள் முழுமைக்கும் ஒரே சீராகக் கொண்டுசேர்க்க முடியாது.

அமெரிக்காவிலும் கூட கருப்பர்களுக்கான சுகாதாரத்தை மேம்படுத்துவதில் இதே சிக்கல் இருந்தது. அப்போது அமெரிக்க மருத்துவத் துறையின் செயலாளராக இருந்த சாலிவன் தலைமையில் கருப்பர்களுக்கான பொது சுகாதாரத்தை எப்படி மேம்படுத்துவது என ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு விரிவாக ஆராய்ந்து ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதாவது "கருப்பர்களுக்கான பொதுச் சுகாரத்தையும், அவர்களின் நல்வாழ்வையும் மேம்படுத்த வேண்டுமானால் மருத்துவர்களாகவும், சுகாதாரத் துறை அதிகாரிகளாகவும் கருப்பர்களே இருக்க வேண்டும். அப்போதுதான் ஒரு கல்ச்சுரல் காம்பிடென்ஸ் (Cultural Competence) இருக்கும். ஏனென்றால் ஒடுக்கப்பட்டவர்களுடனான ஒரு பண்பாட்டு இணக்கத்தை, இன்னொரு ஒடுக்கப்பட்டவனாலேயே தர முடியும்" என சாலிவன்தான் பரிந்துரை செய்தார். இதே கல்சுரல் காம்பிடென்ஸை நாம் இந்தியாவுடன் பொருத்திப் பார்க்க முடியும். உண்மையில் அந்தப் பரிந்துரை இந்தியாவிற்குத்தான் அத்தனை பொருத்தமாக இருக்கும். இந்த கல்ச்சுரல் காம்பிடென்ஸ் என்பது

வேறு எதுவுமல்ல, அதுதான் சமூக நீதி என்கிறார் அம்பேத்கர்.

கலைஞர் இந்த கல்ச்சுரல் காம்பிடென்ஸ் வழியாகவே மருத்துவக் கட்டமைப்பை அணுகினார். அதாவது சமூக நீதியின் வழியாகவே, சமூக நீதியின் கண்ணோட்டத்துடன்தான் மருத்துவக் கட்டமைப்பை அவர் எப்போதும் அணுகினார். சாதிய மற்றும் ஏனைய ஒடுக்குமுறைகளால் ஒடுக்கப்படும் மக்களுக்கான மருத்துவத்தை மேம்படுத்த வேண்டும் என்றால் ஒடுக்கப்பட்ட மக்களையே அந்தத் துறைக்குள் பெருவாரியாகத் தேர்வு செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல் வேறு எந்த ஐந்தாண்டுத் திட்டங்களை தீட்டினாலும் மருத்துவத் துறையை சிறப்பாகக் கட்டமைக்க முடியாது என்பதை கலைஞர் நன்றாகவே உணர்ந்திருந்தார்.

இந்த கல்ச்சுரல் காம்பிடென்ஸை மையமாக வைத்து அவர் மூன்று படிநிலைகளை வகுத்துக்கொண்டார்:

- சமூகத்தின் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான கல்வியை உறுதி செய்வது.
- அதன் வழியாக அவர்களைக் கொண்டே வலிமையான மருத்துவக் கட்டமைப்பை உருவாக்குவது.
- அப்படி உருவாக்கப்பட்ட கட்டமைப்பின் வழியாக மருத்துவத் துறையின் திட்டங்களைச் செயல்படுத்துவது.

சமுதாயத்தில் பல்வேறு வகையிலும் ஒடுக்கப்பட்டவர்கள் கல்வி கற்பதில் இருக்கும் முக்கியமான தடை வறுமை, போக்குவரத்து மற்றும் மின்சாரம். இதைக் கருத்தில் கொண்டு 1969 இல் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, PUC வரை இலவச கல்வியைக் கொண்டு வந்தார். 1970 களில் போக்குவரத்தை அரசுடைமையாக்கியதின் மூலம் கடைக்கோடி கிராமங்களும் நகரங்களுடன் இணைக்கப்பட்டன. பெரும்பாலான கிராமங்களுக்குச் சாலை வசதிகளை ஏற்படுத்தினார். அத்தனை கிராமங்களும் நகரங்களுடன் இணைக்கப்பட்டன. கலைஞரின் அதே ஆட்சிக் காலத்திலேயே அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அத்தனை கிராமங்களும் மின் இணைப்பைப் பெற்றிருந்தது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான். இன்றளவும் கூட பெரும்பாலான வடமாநில கிராமங்கள் மின் இணைப்பைப் பெறவில்லை என்பதையும் நாம் இங்கே உணர வேண்டும். இந்தத் திட்டங்கள் வழியாக அது வரை கல்வியின் வாசனையே எட்டியிராத ஏராளமான மக்களை சமூகத்தின் மைய நீரோட்டத்திற்கு கலைஞர் அழைத்து வரத் தொடங்கினார்.

அதே காலகட்டத்தில், நாட்டிலேயே முதன் முறையாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையத்தையும், தனித் துறையையும் அமைத்தார். அதன் வழியாக கல்வி, வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை உறுதி செய்தார். அப்போது

பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பான ஏராளமான சர்ச்சைகளும் விவாதங்களும் இந்தியா முழுவதும் எழுந்தன. அதனால் அவர்களுக்கான இட ஒதுக்கீடும் பெரும்பாலான மாநிலங்களில் செயல்படுத்தப் படாமல் இருந்தது. கலைஞர்  தனி ஆணையத்தை அமைத்து பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டைச் செயல்படுத்தியது மட்டுமல்லாமல், 25 சதவிகிதத்தில் இருந்து 31 சதவிகிதமாகவும் உயர்த்தினார். மேலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டை 14 சதவிகித்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்தினார். இதன் வழியாக சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கான கதவுகள் திறக்கப்பட்டன.  தமிழ்நாட்டின் மருத்துவ துறையில் பிற்காலத்தில் நிகழப் போகும் ஏராளமான மாற்றங்களுக்கான தொடக்கம் கலைஞரின் இந்த ஆட்சிக் காலத்தில் இருந்தே தொடங்குகின்றது.

கலைஞரின் தேர்ந்தெடுக்கப்பட இந்தத் திட்டங்களால், பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏராளாமான முதல் தலைமுறையினர் கல்வியின் வாசனையை முதல் முறையாக நுகரத் தொடங்கினர். போக்குவரத்தும், மின் வசதியும், இலவசக் கல்வியும் அவர்களின் வாழ்க்கையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் அந்தக் காலகட்டத்தில் மருத்துவக் கல்வி என்பது அத்தனை வெளிப்படையானதாக இல்லை. மேலும், அது ஒரு சரியான அமைப்பின் படியும் இயங்கவில்லை. அதனால் இவர்கள் மருத்துவக்

கல்வியைப் பயில்வதில் அப்போதும் சிக்கல் எழுந்தது. அதன் பின்னர் கலைஞர் மருத்துவக் கல்வியை சீரமைக்கத் தொடங்கின்றனர். முதன் முறையாக மருத்துவப் பல்கலைக்கழகம் கலைஞரால் தொடங்கப்படுகிறது. அதற்கு தனது நண்பரும், அரசியல் எதிரியுமான எம்.ஜி.ஆர் அவர்களின் பெயரையே வைக்கிறார் டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் தொடங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளை இந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கிறார். மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கையை முறைப்படுத்துவதற்காக, அதன் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக மருத்துவக் கல்வி இயக்ககத்தையும் கலைஞர் தொடங்கினார். அதன் வழியே மருத்துவக் கல்வியில் மாணவர் சேர்க்கை என்பது ஒற்றை சாளர முறையில், மிக வெளிப்படைத்தன்மையுடன் நடக்க தொடங்குகிறது. இதன் வழியாக எந்த வித பொருளாதார, சாதிய பின்புலம் இல்லாத மாணவர்களும் கூட மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்தனர். தமிழக மருத்துவக் கட்டமைப்பில் புரட்சி என்பது இங்கிருந்துதான் தொடங்கியது.

அதன் பிறகு ஏராளமான முதல் தலைமுறை மருத்துவர்கள் தமிழகம் முழுவதும் உருவானார்கள். ஒரு எளிய, கிராமப்புற, சாதி ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மருத்துவத் துறையில் முதல் முறையாகக் காலடி எடுத்து வைத்தனர். கலைஞர், அவர்களைக் கொண்டு கிராமப்புறச்

சுகாதாரத்தை மேம்படுத்தத் தொடங்குகிறார். ஏராளமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் கலைஞர் ஆட்சியில் தொடங்கப்பட்டன. இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கை கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. 24 மணி நேரமும் செயல்படும் நிலையங்களாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதன்முறையாக கலைஞரால்தான் மேம்படுத்தப்பட்டன. கிராமப்புறத்தில் இருந்தும், எளிய குடும்பங்களில் இருந்தும் வந்த ஏராளமான மருத்துவர்கள் மிகுந்த சமூக இணக்கத்துடனும், பொறுப்புணர்வுடனும் ஆரம்ப சுகாதார மையங்களில் பணிபுரியத் தொடங்கினர். கல்வியைப் போன்றே அடிப்படை மருத்துவச் சேவையும் தமிழகத்தின் கடைக்கோடி கிராமங்களுக்கும் இதன் மூலம் சென்றடைந்தது. இதனால் மருத்துவமனைகளில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை உயரத் தொடங்கியது. தாய்-சேய் இறப்பு விகிதம் பெருமளவு குறையத் தொடங்கியது. தொற்று நோய்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மூலமாக கிராமப்புறச் சுகாதாரம் மேம்படுத்தப்பட்டது. ஒரு வலிமையான அடிப்படை மருத்துவக் கட்டமைப்பை ஏற்படுத்தியதன் வழியாக, தடுப்பூசி போடுதல் முதலான பெரும்பாலான திட்டங்கள் கடைக்கோடி கிராமத்திற்கும் சென்று சேர்ந்தது. மக்களுக்கு மருத்துவ விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியது. குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரங்களை இப்படிப்பட்ட வலுவான கட்டமைப்பின் வழியாக செய்ததின் விளைவாக தமிழகத்தின் பிறப்பு விகிதமும் குறையத் தொடங்கியது. மேலும்

கலைஞரின் தாய்-சேய் நலத்திட்டம், பிரசவ காலங்களில் நிதி உதவி போன்றவைகளால் பெரும்பாலான அடித்தட்டு மக்கள் மருத்துவச் சேவையின் முழுமையான பலன்களைப் பெறுகின்றனர்.

கலைஞர் அத்துடன் நிற்கவில்லை. மாவட்டம்தோறும் மருத்துவக் கல்லூரிகளைத் திறக்கும் தனது கனவைச் செயல்படுத்தத் தொடங்கினார். இன்றுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் பெரும்பாலானவை கலைஞரால் திறக்கப்பட்டவையே. கிராமப்புறங்களில் படிக்கும் மாணவர்களின் நலன் கருதி நுழைவுத் தேர்வை ரத்து செய்த கலைஞர், கிராமப்புற மாணவர்களுக்குத் தனியாக 15 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை மருத்துவப் படிப்புகளில் கொண்டு வந்தார். அதே போல கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கு முதுநிலை மருத்துவப் படிப்பில் 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டையும் ஏற்படுத்தினார். இதன்மூலம் பெரும்பாலான மருத்துவர்கள் கிராமப்புறச் சேவையைத் தேடிச் செல்லத் தொடங்கினார்கள். அதன் வழியே மருத்துவத்தின் பல்வேறு துறைசார்ந்த வல்லுனர்களும் கிராமப்புற மருத்துவமனைகளில் குவியத் தொடங்கினார்கள். இதனால் அடிப்படை மருத்துவம் என்பதையும் தாண்டி எத்தகைய சிறப்புத் துறை சார்ந்த மருத்துவ சிகிச்சைகளையும் தமிழ்நாட்டின் எந்த கடைக்கோடி கிராமத்தினரும் சில கிலோ மீட்டர் தொலைவில் இருந்து பெற முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

மருத்துவத் துறை தனது அத்தனை பரிமாணங்களிலும் சிறப்பான வளர்ச்சிடைந்ததற்கு கலைஞரின் தொலைநோக்குப் பார்வைதான் காரணம். ‘வருமுன் காப்போம் திட்டம்’, ‘நமக்கு நாமே திட்டம்’ போன்றவற்றின் மூலமும், ஆரம்ப சுகாதார மையங்களை மேம்படுத்துவதன் மூலமும் அடிப்படை மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்திய அதே வேளையில், உயர் மருத்துவக் கட்டமைப்பின் வளர்ச்சியிலும் அவரது பங்களிப்பு அசாத்தியமானது. இறந்தவர்களிடம் இருந்து பெறப்படும் உடல் உறுப்பு மாற்று சிகிச்சை (Cadaveric organ Donation programme) கலைஞரால் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. உடல் உறுப்பு மாற்று சிகிச்சையில் இந்தத் திட்டம் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கி வைத்தது. தமிழ்நாடு இந்தத் துறையில் இன்றும் சிறந்து விளங்குகிறது. தேசிய அளவில் செய்யப்படும் உறுப்பு மாற்ற சிகிச்சையில் பாதிக்கு மேல் தமிழ்நாட்டில் தான் நடக்கிறது. பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல் (British Medical Journal) எனப்படும் உலகத்தின் சிறந்த மருத்துவ இதழ் இதைப் பாராட்டி “இறந்தவர்களிடம் இருந்து பெறப்படும் உடல் உறுப்பு மாற்று சிகிச்சை”யில் தமிழ்நாடு உலகத்திற்கே முன்னோடியாகத் திகழ்கிறது” என கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அதே போல, கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடங்கி அதன் வழியாக மருத்துவத்தின் நவீன வளர்ச்சிகளை, அதன் உயரிய தொழில்நுட்பங்களை ஏழை எளிய மக்களுக்கும் கொண்டு சேர்த்தார். மேலும், அரசு ஊழியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டைத்

தொடங்கியது, அமைப்புச் சாரா தொழிலாளர்களின் நல வாரியம் மூலமாக அவர்களுக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது, “நலமான தமிழகம் திட்டம்” வழியாக இதய நோய், புற்று நோய் போன்ற நோய்கள் பற்றிய தொடர்ச்சியான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தியது, இதய நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு இலவச இதய நோய் அறுவை சிகிச்சைக்கான நிதி உதவி அளித்தது என இன்னும் ஏராளமான மருத்துவத் துறைக்கான திட்டங்கள் கலைஞரால் அவரது ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் தொடங்கப்பட்டன.

இன்று தேசிய அளவில் தமிழகம் மருத்துவத் துறையில் சிறப்பாகச் செயல்படுவதற்கும், மருத்துவத் துறையின் வளர்ச்சி தொடர்பான புள்ளி விவரங்கள் யாவும் வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிடும் அளவிற்குத் தமிழகம் முன்னணியில் இருப்பதற்கும், மருத்துவத் துறையின்மீதும், மக்கள் நல்வாழ்வின் மீதும் கலைஞருக்கு இருந்த உண்மையான அக்கறையும், சமூக நீதியுடன் கூடிய அவரது தொலைநோக்குப் பார்வையும்தான் முக்கியக் காரணங்களாகும்.

வழக்கமாக எந்த ஒரு தலைவரின் மறைவிலும் நாம் அவருக்கான இரங்கல்களையும், அஞ்சலிகளையும் தான் பார்க்க முடியும். ஆனால் வரலாற்றில் முதல் முறையாக கலைஞர் மறைவின் போதுதான் ‘Thank you MK’ என்ற டேக் சமூக வலைத்தளங்களில் வைரலானது. அந்த நன்றியைத் தெரிவித்தவர்களில் பெரும்பாலானவர்கள் மருத்துவர்கள், குறிப்பாக

கலைஞரால் உருவாக்கப்பட்ட முதல் தலைமுறை மருத்துவர்கள். தெற்காசியாவின் ஒரு சிறந்த மருத்துவக் கட்டமைப்பு அவர்களின் வழியாக அதனை உருவாக்கிய சிற்பிக்கு நன்றி சொன்னதாகவே நாம் அதைப் பார்க்க வேண்டும்.

இன்று கலைஞரைத் தவிர்த்து விட்டு நாம் மருத்துவத் துறையைப் பார்க்கமுடியாது. பார்ப்பனீய கருத்தாக்கங்கள் தகுதி, திறமை என்று சமூக நீதியைப் புறக்கணிக்க ஏராளமான காரணங்களைத் தொடர்ச்சியாக உருவாக்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், சமூக நீதியை உள்ளடக்கி உருவாக்கப்படும் அமைப்பே ஒரு சிறந்த அமைப்பாக இருக்க முடியும். மேலும், அதுவே இந்தியா போன்ற நாடுகளுக்கு அவசியம் என்பதற்கு உதாரணமாக இருப்பதுதான் தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு. அதனால்தான் இந்த மருத்துவக் கட்டமைப்பைச் சீர்குலைப்பதற்காகவே “நீட் தேர்வு” போன்ற புதிய யுக்திகளை அதிகார மட்டம் பரிசோதனை செய்து பார்க்கிறது.

இன்றைய சூழலில் கலைஞரால் அத்தனை துல்லியத்தோடும், நேர்த்தியோடும் கட்டமைக்கப்பட்ட இந்த மருத்துவக் கட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டியதுதான் நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும். ஏனென்றால், தமிழகத்தின் மருத்துவக் கட்டமைப்பு என்பது செங்கல்லும், சிமெண்ட்டும் கலந்த வெறும் கட்டிடங்கள் அல்ல; அதன் ஒவ்வொரு செங்கல்லிலும் பெரியாரின் சிந்தனையிலும்,

கலைஞரின் பேனாவிலும் உறைந்திருந்த சமூக நீதி படிந்திருக்கிறது.

sivabalanela@gmail.com

# கலைஞர் டாட் காம்

*ஷான் கருப்பசாமி*

1924... இந்த ஆண்டில் இந்தியா எப்படி இருந்திருக்கும்? உண்மையில் இந்தக் கேள்வியே அபத்தமானது. ஏனென்றால், அப்போது இந்தியா என்ற நாடு உருவாகவே இல்லை. முதல்

உலகப்போர் அப்போதுதான் முடிவுக்கு வந்து பல நாடுகளின் வரைபடங்கள் மாற்றி வரையப்பட்டிருந்தன. பிற்காலத்தில் உலகத்தையே ஆட்டிப் படைக்க ஹிட்லர் என்ற சர்வாதிகாரி மெல்ல உருவாகிக் கொண்டிருந்தான். இந்தியத் துணைக்கண்டத்தின் மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பான வட்ட மேசை மாநாடுகள் 1930களில்தான் தொடங்கின. தமிழ்நாடு என்ற ஒரு மாநிலமே அதற்குப் பிறகு 40 ஆண்டுகள் கழித்தே உருவாகிறது. அப்படிப்பட்ட 1920களின் மத்தியில் பிறந்த கலைஞர 2018ஆம் ஆண்டு வரை வாழ்ந்து மறைந்திருக்கிறார். அவருடைய ஆயுட்காலத்தில் உலகம் அப்படியே தலைகீழாக மாறியிருக்கிறது. வெறும் 26 கோடியாக இருந்த இந்தியாவின் மக்கள் தொகை 120 கோடியாக அதிகரித்திருக்கிறது.

அப்போதிருந்த சவால்கள் இப்போது இல்லை. ஆனால் இயந்திரமயமாக்கலால் பல தொழில்கள் அழிந்து போயின. அதே நேரம் தொழில் நுட்ப வளர்ச்சி எத்தனையோ புதிய தொழில்களை உருவாக்கியது. குலத்தொழில் மட்டுமே வாழ்க்கை என்ற நிலை மாறி வாழ்க்கைக்கு உதவும் தொழிலை ஒருவன் தேர்ந்தெடுக்கலாம் என்ற நிலை வருகிறது. புதிய தொழில்களைக் கற்க அரசாங்கம் அனைவருக்கும் கல்வியை இலவசமாக அளிக்கிறது. கணினிகள் வருகின்றன. வேறு எந்த நூற்றாண்டிலும் இல்லாத பெரிய மாற்றத்தை இந்தக் காலகட்டத்தில் மனிதகுலம் பார்த்திருக்கிறது. குறிப்பாக, தொழில்நுட்பம் சார்ந்த இக்கால வளர்ச்சியானது முன்னெப்போதும் நிகழ்ந்திராத ஒரு பாய்ச்சல்.

கலைஞர் என்ற தலைவரின் பயணத்தை இந்த மாற்றங்களின் நடுவேதான் பொருத்திப் பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த நீண்ட நெடிய பயணத்தில் 10ம் வகுப்பு வரை மட்டுமே படித்திருக்கும் ஒருவர் தன்னைத் தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டும் வளர்த்துக் கொண்டும் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்தும் வாழ்ந்திருக்கிறார். அது மட்டுமில்லாமல் அந்த மாற்றங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும், அதற்கு அவர்களைத் தயார் செய்வதிலும் அவர் தொடர்ந்த முனைப்போடு இருந்திருக்கிறார். சினிமா என்ற தொழில்நுட்பம் இந்தியாவில் அறிமுகமாகிறது. அதுவரை கோலோச்சிக் கொண்டிருந்த நாடகத்துறையை அது ஒட்டு மொத்தமாக விழுங்கிக் கொள்கிறது. அந்தத் துறையின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு தன்னை ஒரு சிறந்த திரைக்கதை எழுத்தாளராக நிலை நிறுத்திக் கொள்வதில் தொடங்கும் அவரது பயணம் ஒரு ஆட்சியாளராக ஐடி எனப்படும் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில் துடிப்புடன் பங்கு கொள்வது வரை தொடர்கிறது.

கிராமங்களில் படித்து தகவல் தொழில் நுட்பத்துறையில் நுழைந்த பல லட்சம் தமிழக இளைஞர்களின் வாழ்க்கை பெரிய முன்னேற்றத்தை அடைந்திருப்பதை நாம் காண்கிறோம். பலர் இன்று அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் வசித்து வருகிறார்கள். இந்த வளர்ச்சியை இந்தியாவின் வேறு பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அடைய முடியவில்லை என்பதையும் உணர்கிறோம்.

நிச்சயமாக அந்தத் துறையை உருவாக்கியது கலைஞர் அல்ல. அவருக்கு அதுபற்றிய நுணுக்கங்கள் பெரிய அளவு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அப்புதிய துறை அளிக்கவிருந்த பெரிய வாய்ப்புகளை உணர்ந்து அவற்றைத் தமிழகத்துக்குக் கொண்டு வருவதில் கலைஞர் தொடர்ந்து பணியாற்றி வந்திருக்கிறார். இது தொடர்பாக அண்டை மாநிலங்களுடன் போட்டியிட வேண்டியிருக்கும் என்பதை அவர் தொண்ணூறுகளின் தொடக்கத்திலேயே நினைவில் வைத்திருந்தார். எனவேதான் 1997ஆம் ஆண்டிலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கொள்கைகளை வரையறை செய்த இந்தியாவின் முதல் சில மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் இருந்தது. அவர் தகவல் தொழில்நுட்பத்தோடு நின்றுவிடாமல், பயோ டெக்னாலஜியையும் வளர்த்துவிடும் ஆர்வத்தில் இருந்தார். அந்த வகையில் தமிழ்நாடுதான் இந்தியாவில் பயோடெக் தொடர்பான பொருளாதாரக் கொள்கையை வகுத்த முதல் மாநிலம். ஆனால் தகவல் தொழில்நுட்பம் வளர்ந்த அளவு அந்தத் துறை வளரவில்லை. இவ்விரண்டு துறைகளின் வளர்ச்சிக்காக டைடல் மற்றும் டைசல் என்ற இரண்டு பிரமாண்டமான தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட்டன.

கலைஞருடைய ஆட்சியில் உருவான டைடல் பார்க் 13 மாடிகள் உயரமுள்ளது. 12 லட்சம் சதுர அடிகள் கொண்டிருந்த, மையக் குளிரூட்டிய அந்தக் கட்டிடத்தில் உணவகங்கள், ஆடிட்டோரியம் போன்ற பல வசதிகள் இருந்தன. அதிவேக இணையத் தொடர்புடன் உருவான

இந்தக் கட்டிடம் 2000ம் ஆண்டு திறக்கப்பட்டது. அப்போது இந்தக் கட்டிடத்தை 15 மாதங்களில் விரைவாகக் கட்டி முடித்திருக்கிறார்கள். இதைத் திறந்து வைத்தவர் அன்றைய பாரதப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய். அவரும் கலைஞரும் 1920களின் ஆட்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இதுதான் சென்னையின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் விதையாக மாறியது. பழைய மாமல்லபுரம் சாலையில் இன்று முளைத்து வளர்ந்திருக்கும் பல பெரிய தகவல் தொழில் நுட்பப் பூங்காக்களுக்கு அப்போதே நீச்சல் குளம், உணவக வளாகங்கள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டிருந்த டைடல் பார்க் ஒரு முன் மாதிரி. கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோதுதான் ஐடி ஹைவே எனப்படும் ராஜீவ் காந்தி சாலை முழுமையடைந்து திறக்கப்பட்டது. அதன் இருமருங்கிலும் டைடல் கட்டிடத்தை விடப் பல மடங்கு பெரிய தொழில் நுட்பப் பூங்காக்கள் வரிசையாக உருவாகத் தொடங்கின. அசுரப்பாய்ச்சலில் சென்று கொண்டிருந்த கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களுக்கு நடுவே தமிழகத்தையும் ஒரு தகவல் தொழில் நுட்ப மையமாக உலகம் பார்க்கத் தொடங்கியது.

1970களின் பின்பகுதியிலிருந்து தொடங்கி 1990கள் வரை கணினிகள் பெரிதாகப் பரவி வளர்ந்தன. இந்தக் காலகட்டத்தில் ஆங்கிலம்தான் கணினியின் மொழியாக இருந்தது. தமிழைக் கணினிக்குள் கொண்டு வருவதற்கு தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பல தொழில்நுட்ப வல்லுனர்களும், உலகெங்கிலும் இருந்த குழுக்களும் முயன்று வந்தார்கள். ஆனால் அந்தக்

குழுக்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் இழுத்துக் கொண்டிருந்தார்கள். கணினிக்கான தமிழ் தட்டச்சுப் பலகை என்று அவரவருக்கு ஒன்று உருவாக்கி வைத்திருந்தார்கள். எழுத்துருக்கள் வெவ்வேறு தொழில்நுட்ப அடிப்படைகளில் உருவாக்கப்பட்டிருந்தன. உலகமெங்கும் கணினிகளில் தமிழைக் கொண்டுவர இவை ஒன்றாக இணைக்கப்படவேண்டியது அவசியம். அது நடப்பதற்கு இவர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படுவதும் அவசியம். அதற்கான முதல் முயற்சி 1997இல் சிங்கப்பூரில் நடந்த முதல் தமிழ் இணைய மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது. அந்த மாநாட்டில் தமிழ் மொழியை இணையத்தில் கொண்டு வருவதில் இருக்கக்கூடிய சவால்களை முன்வைத்து விவாதிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து 1999ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த மாநாட்டில்தான் அந்த சவால்களைத் தீர்ப்பது தொடர்பான செயல் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த மாநாட்டை முன்னின்று நடத்தியது அப்போதைய கலைஞரின் அரசுதான். தமிழ்நெட் 99 என்ற தமிழ் தட்டச்சுப் பலகை இந்த மாநாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது. இதுதான் இன்றுவரை தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட விசைப்பலகையாக இருக்கிறது. தமிழ் இணையக் கல்விக் கழகம் எனப்படும் இணையம் சார்ந்த தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உருவாக்கும் முடிவும் இந்த மாநாட்டில் எடுக்கப்பட்டு அது 2001ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

அந்த மாநாட்டைத் தொடர்ந்த ஆண்டுகளில் இணையத்தில் தமிழின் பரவல் புதிய வேகம் பெற்றது. இணையத்தில் தமிழைக் கொண்டுவர எந்த வரைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்ற தெளிவு இதற்குப் பிறகுதான் ஏற்பட்டது. தமிழில் மின்னஞ்சல்கள் அனுப்ப முடிந்தது. வலைப்பூக்கள் அறிமுகமாயின. சமூக வலைத்தளங்களில் தமிழ் இடம்பெற்று வளரத் தொடங்கியது. அதற்கு முன்பாக தமிழை இணையத்திலோ கணினியிலோ பயன்படுத்த முயன்றவர்களுக்கு இத்தகைய முன்னெடுப்புகள் எத்தனை பெரிய வரம் என்று புரிந்திருக்கும். இதற்குப் பிறகு மீண்டும் இந்த மாநாடு தமிழகத்தில் நடந்தது 2010ஆம் ஆண்டு. அப்போதும் கலைஞர்தான் தமிழக முதல்வர். தமிழை இணையத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்பது எத்தனை முக்கியமானது என்பதும், அது தொடர்பாக நடக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து ஊக்குவிக்க வேண்டும் என்பதும் அந்தப் பழுத்த மூளைக்குத் தெரிந்திருக்கிறது.

தகவல் தொழில்நுட்பத்தில் நமது மாநிலம் சாதிப்பதற்குத் தேவையான கட்டமைப்புகளை மட்டும் உருவாக்கினால் போதாது; அதற்கான மனிதவளத்தையும் தொடர்ந்து உருவாக்கவேண்டும் என்று அவர் அறிந்திருந்தார். பிற எந்த மாநிலமும் முன்னெடுக்காத வகையில் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் கணினி அறிவியலை 1990ஆம் ஆண்டே சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தியது. அப்போதைய திமுக அரசு. ஆனால் அதன் பிறகு வந்த ஆட்சியில் இது பெரிய அளவில் கண்டுகொள்ளப் படவில்லை. மீண்டும்

1998ஆம் ஆண்டு அவரது ஆட்சியில்தான் தமிழகமெங்கும் 11ஆம் வகுப்பில் கணினி அறிவியல் பிரிவு பரவலாக்கப்பட்டது. தற்காலிக ஆசிரியர்களாக இருந்த கணினி ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக நியமனம் செய்தவரும் அவர்தான். அதன் பிறகு கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட சமச்சீர் கல்விப் பாடத்திட்டத்தில் 6 முதல் 10 வரை ஒவ்வொரு வகுப்பிலும் கணினி அறிவியலை அறிமுகம் செய்தது தமிழக அரசு. கணினி என்பது தனிப்பட்ட துறை என்ற பார்வையிலிருந்து, அது அனைவருக்கும் தேவையான ஒரு அடிப்படையான அறிவு என்ற பார்வை மாற்றத்தையே இது சுட்டுகிறது. இதற்காகத் தமிழக அரசு 120கோடி ரூபாயை 2011-12ஆம் ஆண்டுகளில் ஒதுக்கியது.

2015ஆம் ஆண்டில் இணையத்தைப் பயன்படுத்தும் இந்திய மொழிகளில் தமிழுக்கு இரண்டாவது இடம். இதன் காரணமாக மைக்ரோசாப்ட், ஆப்பிள், சாம்சங் உட்பட பெரிய தயாரிப்பு நிறுவனங்கள் தங்களுடைய கணினிகளிலும், கைபேசிகளிலும் தமிழ் மொழியைக் கொண்டுவரவேண்டிய கட்டாயம் ஒன்று உருவானது. இதற்கெல்லாம் கலைஞர் மட்டுமே காரணம் என்று வாதிடுவதல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். ஆனால் மொழிப்பற்று கொண்ட அரசியல்வாதியான கலைஞர் கொண்டுவந்த இந்த மாற்றங்களும், முன்னெடுப்புகளும் அந்தப் பயணத்தில் ஏனைய பல மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழகத்துக்கு ஒரு பெரிய முந்திச் செல்லும் பாய்ச்சலை அளித்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. இணையத்தில் தமிழைப்

பரவலாக்குவதிலும், தொழில்நுட்ப ரீதியாக முன்னெடுத்துச் செல்வதிலும் கலைஞரை விடவும் அதிகப் பங்களித்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆளுமை மிக்க அரசியல்வாதியாக இந்த மாற்றங்களை அவர் புரிந்து கொண்டு அவற்றிற்கான வழிகளைத் தொடர்ந்து ஏற்படுத்தித் தந்து அவர்களுக்கு உதவி வந்திருக்கிறார் என்பதை நாம் மறக்க முடியாது.

தமிழகம் மட்டுமே ஐடி துறையில் ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடிகளைக் கடந்து வியாபாரம் செய்யும் அளவுக்கு இன்று வளர்ந்து நிற்கிறது. பலரது வாழ்க்கையை மாற்றியிருக்கிறது. மாற்றிக் கொண்டிருக்கிறது. இருபது வருடங்கள் கழித்து வேலை வாய்ப்பைத் தரும் ஒரு துறைக்கான கொள்கைகளை முன்பே வகுத்து அதற்கான கல்வித் திட்டங்களை அறிமுகம் செய்தார் கலைஞர் என்பதுதான் இங்கே ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இன்னும் பல ஆண்டுகள் கழித்து வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஒரு புதிய துறைக்கு இப்போதைய அரசு எந்த விதமான கொள்கைகளை வகுத்து வைத்திருக்கிறது என்பதைச் சற்று சிந்தித்தால் கலைஞரின் தொலைநோக்குப் பார்வை குறித்த ஒரு சரியான ஒப்பீடு நமக்குக் கிடைக்கும். அவர் பிறந்த காலத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இணையம் என்ற ஒன்றே 60வது வயதுக்கு மேல்தான் அவருக்கு அறிமுகமாகிறது. எனவே அதன் நுட்பங்கள் குறித்து அவர் அறியாதவராக இருந்திருக்கலாம். அதன் வளர்ச்சியில் அவரை விடப் பலர் பெரிய பங்களிப்புகளைச் செய்திருக்கலாம். அவருக்கு

அதை எடுத்துச் சொல்ல நிபுணர்கள் குழு என்ற ஒன்று இருந்திருக்கலாம். ஆனால், இறைவனைப் புகழ்ந்து ஆயிரம் பாடல்களை அடியார்கள் பாடினாலும், ஒரு பெரிய கோவிலைக் கட்ட சோழச் சக்கரவர்த்தி என்ற மக்கள் தலைவன் தேவைப்படுகிறான். தன்னுடைய அரசியல் வாழ்க்கை தந்த அதிகாரத்தைத் தமிழகமும், தமிழ் மொழியும் நீண்ட காலம் பயன் பெறும் வகையில் ஒரு தொழில் நுட்ப யுகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திய வகையில்தான் நாம் கலைஞரை உயரத்தில் நிறுத்திக் கொண்டாட வேண்டியிருக்கிறது.

shan.mugavari@gmail.com

# என் உயிரைக் காத்த கலைஞர்

*புலியூர் முருகேசன்*



ஆதிக்கச் சாதி வெறியர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு, கரூர் அரசு மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்பட்டிருந்த நேரம். எம்.எல்.தோழர்களும், த.மு.எ.க.ச. தோழர்களும், சி.பி.எம். விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் இன்ன பிற தோழமைகளும் ஆதரவாக இருந்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னரும், அந்த வளாகத்தினுள் அமைச்சரின் ஆதரவாளர்கள்

நிறையப் பேர் சுற்றிக் கொண்டிருப்பதாகவும், எப்படியும் தீர்த்துக்கட்டி விட வேண்டும்  எனப் பேசிக் கொள்வதாகவும் எனக்குத் தகவல் வந்தது. இரவெல்லாம் தூங்கவே முடியவில்லை.

அடுத்த நாள் காலை செய்தித்தாள்களிலும், முகநூலிலும் கலைஞரின் ஆதரவுக் கருத்து வெளியானதும் சூழல் பரபரப்படைந்தது. ‘எழுத்தாளருக்கு போதிய பாதுகாப்பைத் தமிழக அரசு வழங்க வேண்டும்’ என்ற ஒற்றை வரி எல்லாவற்றையும் மாற்றி விட்டது. அரசு மருத்துவமனையின் நுழைவுவாயிற் கதவுகள் பூட்டப்பட்டு காவல்துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. சந்தேகப்படும்படியான ஆட்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். நோயாளிகளையும் தீவிரமாக விசாரித்தே உள்ளே அனுமதித்தனர். நான் இருந்த படுக்கைக்குப் பக்கத்திலேயே காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோர் பாதுகாப்பிற்காக நாள் முழுதும் இருந்தனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர் என வரிசையாக வந்து பார்வையிட்டுப் பாதுகாப்பை உறுதி செய்தனர். ஆட்சியர் வருவதாக இருந்ததாகவும், ஆனால் அமைச்சர் தடுத்து விட்டதால் வரவில்லை எனவும் பின்னர் அறிந்தேன்.

மருத்துவமனையிலிருந்து கிளம்பி தஞ்சைவரை கரூர் மாவட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் உடன்வர பாதுகாப்பாய் வந்து சேர்ந்தேன். தஞ்சையிலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில், தினமும் இரண்டு காவலர்கள் தொடர்ந்து இரண்டு மாதங்களாக எங்கள்

வீட்டிற்குப் பாதுகாப்பு வழங்கினர். எல்லாம் கலைஞரின் ஒற்றை வரி மகிமை. அதேசமயம், கரூர் மாவட்டம் முழுவதும் ஆதிக்கச் சாதியினர் கலைஞருக்கு எதிராகப் போஸ்டர் ஒட்டினர். பிரச்சினைக்குக் காரணமான சிறுகதையை ஆயிரக் கணக்கில் நகலெடுத்து கலைஞருக்கு அனுப்பிவைத்து ஆதரவுக் கருத்தை வாபஸ் வாங்கச் சொல்லி வலியுறுத்தினர். ஆனால், அதை கலைஞர் துளியும் பொருட்படுத்தவில்லை. கரூரிலிருந்து ஒரு குழுவினர் கிளம்பிப் போய் கலைஞரை நேரில் சந்திக்க முயற்சித்தனர். கலைஞரோ அவர்களைச் சந்திக்க நேரம் ஒதுக்காமல் மறுத்துத் திருப்பி அனுப்பி விட்டார். தன் உதவியாளரிடம் ‘இவங்க எல்லாம் நான் கதையப் படிக்காமலே ஆதரவு தெரிவிச்சுட்டேன்னு நினைக்கிறாங்க! இதை எப்பவோ படிச்சுட்டேன்’ எனச் சொல்லி என்னுடைய சிறுகதைத் தொகுப்பை எடுத்து மேசைமேல் போட்டிருக்கிறார். (கரூரில் உள்ள என்னுடைய நண்பர் தென்னரசு தி.மு.க.வைச் சேர்ந்தவர். அவர்தான் புத்தகத்தை முன்னதாகக் கலைஞருக்கு அனுப்பி வைத்திருந்தார்)

உயிர் பிழைத்துத் தஞ்சைக்கு வந்து விட்டேன். இப்போது உயிருடன் வாழ்கிறேன். ஒரே ஒரு ஒற்றை வரியால் என் உயிரைக்காத்த கலைஞரைத்தான் கடைசிவரை என்னால் பார்க்க முடியாமலே போய்விட்டது.

puliyurmurugesan70@gmail.com

# இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்!

*¬ ராஜா ராஜேந்திரன்*

கலைஞரின் அந்திமக் காலம்தான், அவர் யார், என்ன சாதித்தார், அவர் ஈட்டியதுதான் என்ன? என்பதை ஒவ்வொரு தமிழனுக்கும் புரிய வைத்தது.

கட்சிப் பாகுபாடில்லாமல் மக்கள் காவேரி மருத்துவமனைக்கு வெளியே நின்று, மீண்டு வா தலைவா, எழுந்து வா தலைவா என்று வெயில், மழை, தூக்கம் பாராமல் கோஷமிட்ட வண்ணமிருந்தனர். அணையப்போகும் விளக்கு உச்சப்பிரகாசம் காட்டுவதற்கொப்ப, ராகுல்காந்தியின் வருகையின் போதெல்லாம் உடல் நலம் நன்கு முன்னேறி நமக்குக் காட்சியளித்த தலைவர், தன் அன்பு மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி மீண்டும் தெம்பாக வரப்போகிறார் என்கிற ஆசையை நிராசையாக்கிவிட்டு, அனைவரையும் கண்ணீர்க்கடலில் மூழ்கடித்துவிட்டு மறைந்து போனார். ஆனால் அந்தப் புகழுடல் மருத்துவமனையிலிருந்து எப்படித் தன் இல்லங்களுக்குப் பயணித்தது என்பதைத்தான் நீங்கள் பார்த்திருப்பீர்களே ?

அதைத்தான் ஈட்டியிருக்கிறார் கலைஞர். மக்களின் அந்த அன்புக்கு ஈடாக வேறெந்தப் பேறுமே தேவை கூட இல்லை. ஆனால் எல்லாப் பேற்றையும் பெற்று, பெயரையும் பெற்ற, ஓய்வறியாச் சூரியன், ஓய்வெடுக்கச் சென்றுவிட்டது !

அகாலமான பொழுது. சென்னைத் தெருக்களில் ஊசி விழுந்தால் நங்கென்று ஓசை கூட எழுமளவு பேரமைதி தவழும் நேரத்தில், கலைஞரின் புகழுடல் மருத்துவமனையிலிருந்து கிளம்புகிறது. உடல் ஆம்புலன்ஸில் வருகிறது. ஆனால் ஆம்புலன்ஸோ ஆமைநடை பயில்கிறது. முன்னும், பின்னும் எத்தனை ஆயிரம் மக்கள். மிக மிக நெருக்கமாக அந்த வாகனத்துடன் நடந்து

வருகின்றனர். கலைஞர் என்கிற அந்த மாபெரும் ஆளுமை, எத்துணை எளிமையாக மக்கள் அணுகும் வண்ணம் வாழ்ந்து சென்றிருக்கிறார் என்பதற்கு இந்தக் காட்சிகள்தான் பெருஞ்சான்று. அந்த அன்பு மக்கள் பிரளயத்தில், மிக முக்கிய ஆட்கள் கூட கோபாலபுரம் வீட்டுக்கு வந்து கலைஞருக்கு இறுதி அஞ்சலி செலுத்த பெரும் பிரயத்தனப்பட வேண்டியதாயிற்று !

கலைஞர் பத்து நாட்களுக்கும் மேலாகவே மருத்துவமனையில் தீவிரசிகிச்சை பெற்றுக் கொண்டிருந்ததால், அவரைப் பற்றி, அவருடைய சாதனைகள் பற்றி ஊடகங்கள் தொடர்ந்து பேசி வந்தன. அவரைப் பற்றிய மிக மோசமான துவேஷங்களை மட்டுமே பேசி வந்த ஊடகங்கள் கூட, வேறுவழியின்றி அவருடைய உண்மையான பக்கங்களைப் பேச ஆரம்பிக்க, பலருக்கும் வியப்புதான் ! இவ்வளவு செஞ்ச மனுஷனைப் பற்றி, இத்தனை நாட்கள் தாம் புரிந்து வைத்திருப்பதென்ன என்று வெட்கிய பலரைக் காண நேர்ந்தது. அவர்தான் நம்மை நீண்டகாலம் ஆண்ட முதல்வர் என்கிற உண்மையைக் கூட பலரால் சீரணிக்க இயலவில்லை. அந்தளவு அவரைப் பற்றிய பொய்கள், கட்டுக்கதைகள், நச்சு விதைகளாய் விதைக்கப்பட்டிருந்திருக்கிறது. மாபெரும் வெள்ளம் வந்து கசடுகளைத் துப்புரவாகத் துடைத்தழித்து விட்டுப் பாய்வதைப் போல, கலைஞரின் அரிய பல சாதனைகள் பற்றிய செய்திக் குறிப்புகள், அவருடைய இழப்பைப் பெரும் வலிகளுக்குள்ளாக்கியது !

தமிழ்த் தேசிய ஆர்வமுள்ள ஓர் இளைஞன் இத்தனை நாள் தான் பயணித்த பாதையைத்

திரும்பிப் பார்த்து வெட்கப்பட்டுக் கொண்டிருந்தான்.

“சரி, சீன் போதும் தம்பி.  அந்த மனுஷன் அப்படி என்ன நமக்குப் பண்ணிட்டார்ன்னு ஒரு நாலு சொல்லு.’ உடனே அவன் தன் கைபேசியைத் தடவி,  “அவர் சாதனைகள்ன்னு 74 பாயிண்ட் இருக்கு அண்ணா, அணைகள் கட்டினார், மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பித்தார், சத்துணவில் முட்டை” என்று நம் இந்நாள் முன்னாள் முதல்வரைப் போல பார்த்து ஒப்பிக்கத் தொடங்கினான்.  கையமர்த்தி அவனை நிறுத்தினேன்.

“இதத்தான் ஏழு நாளா தொடர்ந்து வாசிச்சியே, கேட்டவுடனே டக்குன்னு சொல்ல ஒண்ணு கூட உன் நினைவுல இல்லையா? சரி போகட்டும். இந்த அணைகள் கட்டியது, சாலைகள் போட்டது, மரங்களை நட்டதுன்னு நாம அசோகர் காலத்துலருந்துதான் வாசிச்சிக்கிட்டு இருக்கோமே, இவர் புதுசா என்ன பண்ணார்ன்னு சொல்லுய்யா?”

ஏண்டா கேட்டோம்ன்னு ஆகிப் போச்சு. அவன் திரும்பவும் ஆழமா அந்தக் கைபேசிக்குள்ள போயிட்டான். அவர் வித்தியாசமா என்ன சாதிச்சார்ன்னு தேடறானாமாம்.  கொஞ்சம் பரிதாபமாகத்தான் இருந்தது.  வரலாற்றை அறவே புறக்கணித்து, நினைவுகளை கூகுளில் தேடி உறுதிசெய்து கொள்ளும் தலைமுறை, இவ்வளவு பெரிதாக வளர்ந்து கண் முன் நிற்கிறதே, இதைச் சீர் செய்ய முடியுமா என்ன என்று!

“கை ரிக்ஷா ஒழிப்புன்னு இருக்கா பார்” என்றேன்.

“ஆங் ஆங்... இருக்குண்ணா.”

“குடிசை மாற்று வாரியம், சமத்துவபுரம்னு இருக்கா பார். உழவர் சந்தை இருக்கா? காவிரி நடுவர் மன்றம் இருக்கா? முதல் தலைமுறைப் பட்டதாரி குடும்பத்திற்கு சலுகைகள்னு போட்டிருக்கா, அருந்ததியின மக்களுக்கு உள் ஒதுக்கீடுன்னு போட்டிருக்கா .....இதுமாதிரி இன்னும் பல ஆயிரம் திட்டங்கள், நாட்டில் எந்த முதல்வருமே சிந்திக்காத, எந்தப் பிரதமரும் எண்ணாத திட்டங்களையெல்லாம் கொண்டு வந்து, பாமர மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தி விட்டதில் பெரும்பங்காற்றியவர் கலைஞர்” என்றேன்!

கலைஞரால் நேரடியாகப் பயன்பெற்ற பல லட்சம் குடும்பங்களில் என் குடும்பமும் ஒன்று. அந்த நன்றியை என்றுமே மறக்கவியலாது. தமிழகத்தின் முதல் குடிசைமாற்று வாரிய வீட்டைப் பெற்ற பயனாளிகளில் என் தந்தையும் ஒருவர். சென்னை பழைய வண்ணாரப்பேட்டை, பார்த்தசாரதி நகரில், 120 வீடுகளைக் கொண்ட குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளைக் கட்டி, அதைத் திறந்துவைக்க கலைஞர் வந்திருந்தார். என்னைத் தன் தோளில் சுமந்து பார் என்று மேடையில் பேசிக் கொண்டிருந்த கலைஞரைக் காண்பித்தார் என் அப்பா!

சமத்துவபுரத்தின் முன்னோடி இந்தக் குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள் என்றால் அது மிகையாகாது ! எந்தச் சாதி மதப் பாகுபாடுமின்றி ஏழை மக்களுக்காகப் பகிர்ந்து வழங்கப்பட்டன இந்தக் குடியிருப்புகள்.

இஸ்லாமியர், கிறித்துவர், தெலுங்கர்கள், மலையாளிகள், ஒடுக்கப்பட்டோர் என்ற எந்தப் பேதமும் தெரியாமல், ஆனால் பண்டிகைகளின் போது தெரிந்து, விருந்தோம்பல்களுக்குப் பின் அதை மறந்து தொடர்ந்து ஒற்றுமையாய் வாழ, இத்தகைய குடியிருப்புகள் பயன்பட்டன!

வெறுமனே குடியிருப்புகள் மட்டுமன்றி, ரேஷன் கடை, பூங்கா, விளையாடுமிடம், மார்க்கெட், சமூக நலக்கூடம், கிணறு, நீரேற்ற மோட்டார் ரூம் என்று சகலவசதிகளுடன் அமைக்கப்பட்டது அந்த குடிசைமாற்று வாரியக் குடியிருப்பு. எதற்கு இதைச் சொல்கிறேன் எனில், மாத வாடகையாக எங்களுக்கு அரசு நிர்ணயித்தது வெறும் இருபத்தி ஐந்து ரூபாய். அதுவும் அதை இருபத்தைந்து வருடங்கள் தொடர்ந்து கட்டினால் போதும், அதன் பின் அந்த வீடு உங்களுக்குச் சொந்தம். ச்... சும்மாதானே தர்றோம், அதுக்கு இத்தனை வசதிகளைச் செய்து தரணுமா என்ன? என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள், திட்டத்தை உருவாக்கச் சொன்ன முதல்வர் கலைஞரைப் பார்த்துக் கேட்காமலா இருந்திருப்பார்கள்?

ஆனால் இந்த வாடகையைக் கூடக் கட்ட முடியாமல் பல மாத வாடகையைப் பாக்கி வைத்திருந்த ஆட்களும் அந்தக் குடியிருப்பில் இருக்கத்தான் செய்தார்கள். அப்போதைய வாழ்க்கைச் சூழல் அப்படித்தான் இருந்தது. அதற்காக பாத்திரங்களைத் தூக்கிப் போட்டு, வீட்டைக் காலி செய் என்றெல்லாம் எந்த அதிகாரிகளும் வரவில்லை. பாமரர்களின்பால் அத்தனை பாசமிக்க தலைவனாய் இருந்தவர் கலைஞர் !

கலைஞர் தன் ஆட்சியில் செயல்படுத்திய, மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ், மாணவிகளுக்கு மிதிவண்டி, அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த சில திட்டங்கள், உண்மையிலேயே அடித்தட்டு மக்களுக்கு மாபெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இதைக்கண்கூடாக நான் வாழ்ந்த அந்த குடிசைமாற்று வாரியப் பகுதிகளில் பார்த்திருக்கிறேன்!

கலைஞருக்கு ஈடாக ஓர் ஆட்சியாளரை, நிர்வாகத் திறன்மிக்கவரை, இனி என் வாழ்நாளில் பார்ப்பேனா என என்னால் கணிக்க இயலவில்லை. ஆனால் அவர் ஆட்சி செய்த காலங்களில் வாழ்ந்திருக்கிறேன், அவர் ஆட்சிக்காக வாக்களித்திருக்கிறேன், அவர் தீட்டிய திட்டங்களின் பயன்களை அனுபவித்திருக்கிறேன், இதைவிட வேறென்ன நற்பேறு வேண்டும் எனக்கு?

இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்

இவர் போல யார் என்று ஊர்சொல்ல வேண்டும்!

நன்றி பேராசானே....

rashraja1969@gmail.com

# தலைவர் கலைஞர்: தமிழினத்தின் அட்சயப் பாத்திரம்

*கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்*

நாட்டில் தங்களுக்கென எதுவுமே இல்லாத ஏழைகளின் பசிப்பிணி போக்க சிந்தாதேவியின் அருளால், ஆபுத்திரன் கைக்கு வந்தபின் விதிப்பயனால் இடைவந்த சோதனையில், கோமுகிப் பொய்கை வழியே தீவத்திலகை எனும் தெய்வம் மூலம், மணிமேகலையின் கைக்கு வந்த அட்சய பாத்திரம் மக்களின் பசிப்பிணி போக்கியது என்று இலக்கியம் கூறுகிறது. அன்புத் தலைவனே! யதார்த்தத்தில், தெய்வ சித்தாந்தத்திற்கும் நீ ஏற்றுக்கொண்ட கொள்கைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. ஆனாலும், தமிழினத்தின் அட்சய பாத்திரமாய் நீ மாறிப்போன அதிசயம் நிகழ்ந்தது எப்படி? சில தலைவர்கள் மறைந்தால், அன்று மட்டுமே பேசுவதற்குப் பொருள் இருக்கிறது. சிலருக்கோ, மூன்று நாட்கள், வெகு சிலருக்கோ ஏழு நாட்கள். அதுவும், அரசியல் என்ற ஒற்றைத் தளத்தில் மட்டும்தான். ஆனால், 16ஆம் நாளும் கடந்தாயிற்று, பலநாளும் பேசியாயிற்று. இருந்த போதிலும், உன்னை, உன் போர்க்குணத்தை, உன் இலக்கியத்தை, உன் எழுத்தை, கதையை, வசனத்தை, நிர்வாகத்தை, கவிதையை, தாய்மொழிப் பற்றை, இனப் பாசத்தை, சமூகநீதித் தத்துவத்தை, பத்திரிகைத்துறைப் பங்களிப்பை, ஆட்சி நடத்தும் அழகை, சிலேடைத் தமிழ் சமயோசிதத்தை, தொண்டர்களுடனான தூய்மையான நேசத்தை, வாள்வீச்சைத் தோற்கடிக்கும் உன் சொல்வீச்சை, குறைந்த அளவும் பேச முடியவில்லையே என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

நீ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 27.7.2018-லிருந்து, பத்திரிகைகளும், தொலைக்காட்சி ஊடகங்களும் உன்னை மையமாக வைத்தே செய்திகளை வெளியிட்டன. அரசியல் விவாதங்களை நடத்தின. பல்துறை வல்லுநர்களும் உன்னோடு அவரவருக்கு இருந்த அனுபவத்தையும், அதன் மூலம் அவர்கள் கற்றுக்கொண்ட பாடத்தையும் பதிவு செய்தனர். எனக்குத் தெரிந்து இயேசுநாதர் கூட ஒருமுறைதான் மரித்துப் பின் உயிர்த்தெழுந்தார். ஆனால் நீயோ, 20 முறைக்கு மேல் உயிர்த்தெழுந்திருக்கிறாய். ஏறத்தாழ, 2000த்திலிருந்து, நம் எதிரிகள் ஆண்டுக்கு ஒரு முறையாவது உன் இறப்புச் செய்தியைப் பரப்புவார்கள். அதிலும், பெரும்பாலும் இரவு நேரத்தில்தான் அந்த விஷமம் நடக்கும். ஆனால், மறுநாள் காலை சூரியன் உதித்தெழும் முன்னாலே நீ உயிர்த்தெழுந்து தமிழோடு உறவாடிக் கொண்டிருப்பாய். அப்படித்தானே 8.8.2018 அன்று காலையும் நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், சூரியன் உதித்தது. தமிழ் அழுதது துயிலும் உதயத்தைப் பார்த்து.. மறைந்தாய் நீ! என்று மனிதாபிமானம் இல்லாத எதிரிகள் பலபேர், திரைமறைவு அரசியல் செய்து, காலமெலாம் யார் இதயம் உனை இயக்கியதோ, அந்த அண்ணாவின் அருகில் உனை இல்லாமல் ஆக்கி விட, எத்தனித்த எட்டப்பர்களை நீதிமன்றத்திலே எட்டி உதைத்து, எட்டடி நிலத்தை உறுதி செய்த போதுதான் அட்சய பாத்திரம் ஆகிப்போனது உன் போர்க்குணம்.

அண்ணாவின் தம்பிகளில் பல்கலைக்கழகம் பார்க்காத, பன்முகத் தன்மை உள்ள தம்பி நீ

ஒருவன்தான். ஆனால், இலக்கியத்தின் பல பரிமாணங்களான கவிதை, கட்டுரை, கடிதம், விளக்கவுரை, கேள்வி-பதில், புதினம், சரித்திர நாவல், திரைக்கதை வசனம் என அத்தனையிலும் பரிமளித்த தம்பியும் நீ ஒருவன்தான். தொல்காப்பியனுக்கும், வள்ளுவனுக்கும் விளக்கம் தந்த நீதான், ரஷ்யாவின் மார்க்சிம் கார்க்கியின், ‘தாய்’-க்கு விளக்கம் தந்தாய். ரோமாபுரிப் பாண்டியனும், பொன்னர் சங்கரும், பண்டாரக வன்னியனும் உனது வரலாற்றுப் படைப்புகளில் ஒன்றிரண்டு பக்கங்கள்தான். பூம்புகாரில், கண்ணகிக்கு நீதி கேட்ட உன் பேனாதான், ‘நெஞ்சுக்கு நீதி’ தந்தது. இப்படி, எல்லாம் சாதித்த உனது உச்சம் எதுவென்றால், இளநிலை, முதுகலைப் பட்டங்களை அங்கீகரிக்கும் பல்கலைக்கழக மானியக்குழுவின் (UGC) அதிகாரப்பூர்வ இணைய முகவரியான shodhganga.inflibnet.ac.in-ல், கலைஞர் உரைநடை நூல்களில் காணும் புலப்பாட்டு நெறி, கவிதைகளின் அழகிய உவமைகள், பழகிய சொற்கள், பாங்கான வருணனை என்று பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டு அவற்றிற்கு முனைவர் பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் பலபேர், ஆய்வுகள் மேற்கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலும் மேற்கொள்வார்கள். பட்டம் வாங்காத உன் எழுத்துக்கள்தான் பல பேருக்கு பட்டயங்களை வழங்கிக் கொண்டிருக்கிறதென்றால் நீ இலக்கியத்தின் அட்சய பாத்திரம்தானே!



திராவிட இயக்கக் கொள்கைகளை நடைமுறைப் படுத்த வேண்டுமென்றால் ஆட்சி அதிகாரம் வேண்டும் என்கிற தொலைநோக்குச் சிந்தனையோடு 17.9.1949இல் கழகத்தை நிர்மாணித்து, 6.3.1967இல் ஆட்சியமைத்து, 14.4.1967இல், செயின்ட் ஜார்ஜ் கோட்டையைத் தமிழக அரசாக மாற்றி, 18.7.1968இல் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத் தீர்மானம் நிறைவேற்றி, 23.11.1968இல் நாடாளுமன்றத்திலும் நிறைவேறச் செய்தார். இப்படி, ஒவ்வொன்றாக நிறைவேற்றி வந்த அண்ணா, எதிர்பாராத விதமாய்

தமிழகத்தையே கண்ணீரில் மிதக்கவிட்டு, 3.2.1969இல் வங்கக் கடலோரம் மீளாத்துயில் கொண்டார். கழகத்தின் வளர்ச்சி கண்டு கலங்கிப் போயிருந்த அரசியல் கழுகுகள் கழகத்தைக் கபளீகரம் செய்ய வட்டமடித்துக் கொண்டிருந்த சோதனையான காலகட்டத்தில், 10.2.1969இல், ஆட்சித்தலைமையும், 27.7.1969இல் கட்சித்தலைமையும் உன் தோள்மீது ஏற்றி வைக்கப்பட்டது. அண்ணாவுக்கு இல்லாத கூடுதல் சுமை நீ சுமந்ததுதான். அண்ணா கைவிட்ட, 'திராவிட நாடு' கோஷத்தை மாநில சுயாட்சி கோரிக்கையாக உருமாற்றி முன்னாள் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி P.V. ராஜமன்னார் கமிட்டியை 15.9.1969இல், அமைத்து அதன் அறிக்கையை 20.4.1974 அன்று, சட்டப்பேரவையில் தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தாய். தமிழர்களின் சுய மரியாதை உணர்வை டெல்லிக்கு நிரூபித்து, கோட்டைக் கொத்தளத்திலே சுதந்திர தினத்தன்று முதலமைச்சர் கொடியேற்றும் உரிமையை 7.2.1974இல் மத்திய அரசிடம் கோரி, அத்தனை மாநிலங்களுக்கும், 15.8.1974இல் பெற்றுத் தந்தாய். பெரியாரின் பெருங்கனவாம் பெண்ணுரிமையை நிலைநாட்ட பெண்கள் சொத்துரிமைச் சட்டம் தந்தாய். பேருந்துகளை நாட்டுடைமையாக்கி, வங்கிகளை நாட்டுடைமையாக்கத் துணை நின்று நகரப் பொருளாதாரத்திற்கும், கிராமப் பொருளாதாரத்திற்கும் பாலம் அமைத்தாய். "காடு வெளஞ்சென்ன மச்சான்! நமக்கு கையும், காலும் தானே மிச்சம்!" என்று விரக்தியிலிருந்த ஏழை விவசாயிகளுக்கு, இலவச மின்சாரம் தந்து நம்பிக்கை ஒளி ஏற்றினாய்.  இலவசப் பயண

அட்டை (பஸ் பாஸ்) தந்து கிராமப்புற மாணவர்களுக்கு எட்டாத கல்வியை எட்டிப் பிடிக்க உதவினாய். சமூக மேம்பாட்டிற்கு, இட ஒதுக்கீடு, சம வாய்ப்பாக அமைவதற்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்றொரு புதிய பிரிவை உருவாக்கி, இட ஒதுக்கீட்டை நிரவல் செய்தாய். தேசிய அரசியலில் பங்கெடுத்தபோது மண்டல் கமிஷனையும், மகளிர் சொத்துரிமை மசோதாவையும் நிறைவேற்றி, இந்தியா முழுவதும் ஆரியத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் திராவிட அரசியலைக் கொண்டு சேர்த்தாய். உன் ஒவ்வொரு அசைவிலும் தந்தை பெரியாரின் கனவும், பேரறிஞர் அண்ணாவின் கருத்துருவும் இரண்டறக் கலந்தே இருந்தன. உன் ஆட்சியின் சாதனைகளைப் பட்டியலிடப் புறப்பட்டால் பக்கங்கள் போதாத அளவிற்கான அட்சய பாத்திரமாய் அவை நிறைந்து கிடைக்கின்றன.

இந்திய ஆட்சி முறையில், IAS அதிகாரிகளைக் கண்டே பெரும்பாலானோர் பயந்ததுண்டு. அந்த அதிகாரிகளே, பயந்துபோனது உன் ஆட்சி நிர்வாகத் திறமையைக் கண்டுதான். உனது ஆட்சியில், காலை 6:30 மணிக்குள் அவர்கள் வீட்டுத் தொலைபேசி மணி அடித்தால் முதலமைச்சராக இருக்கும் என்று பதட்டத்துடனே தொலைபேசியை எடுத்துப் பேசியதாக பல அதிகாரிகள் கூறுகிறார்கள். பத்திரிகை படித்து ஒவ்வொரு மாவட்ட நிகழ்வுகள் குறித்து விவாதிப்பதும், பிரச்சினைகளுக்கு விடை காண்பதும், உன் ஆட்சிச் சக்கரத்தின் வேகத்திற்கு எடுத்துக்காட்டு. ஒரு முறை சித்த மருத்துவர் குழு ஒன்றுக்கு 10

மணித்துளிகள் நேரம் ஒதுக்கி வரச்சொன்ன நீ 55 மணித்துளிகள் அவர்கள் கருத்துக்களை உள்வாங்கி, அலசி ஆராய்ந்து, இரண்டு மணி நேரத்தில் அவர்களின் கோரிக்கையை அதாவது, மரபணு மாற்றப்பட்ட பயிர்களுக்கு தமிழகத்தில் தடை விதித்தாய் என்று ஒரு சித்த மருத்துவர் கூறும்போது, உன் சமூக அக்கறை வெளிப்படுகிறது. ஒரு நாளில், நீ 4 மணி நேரம் மட்டுமே தூங்கி விழித்தாலும், நாள் முழுவதும் உன்னால் மட்டும் எப்படி உற்சாகமாய் உழைக்க முடிகிறது என்றெண்ணிப் பலபேர் அதிசயிக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாது, யாரிடமும் இல்லாத ஏதோ ஒன்று உன்னிடம் இருக்கிறது. ஒரு முறை 14.3.69-அன்று, சட்டமன்றத்தில், மெரீனா கடற்கரையின் ஒரு பகுதியில், "லவ்வர்ஸ் பார்க் இருக்கிறது. அங்கு மற்றவர்கள் நுழையாமல், காதலர்கள் சுதந்திரமாக இருக்கும் நிலையை அரசு ஏற்படுத்தித் தருமா?" என்று காங்கிரசின் கே.விநாயகம் கேட்க, "இந்த விஷயத்தில் விநாயகத்துக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும்" என்று நீ பதிலுரைத்ததும், 14.3.73 அன்று, "மதுரை மீனாட்சிக்கு, வைர கிரீடம், வைர அட்டிகை மற்றும் இன்னும் இருக்கிற எல்லா நகைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு" என்று சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி கேட்டதற்கு, "மீனாட்சியின் சொத்து மதிப்பைச் சொன்னால், காமாட்சிக்குப் பொறாமை ஏற்படுமே!" என்ற உனது சொல் விளையாட்டும், இன்னொரு தருணத்தில், உனக்கு ஆளுயர மாலை அணிவித்தபோது, "இது ஆளுயர மாலை" என்று ஒருமுறை சொல்லி, "ஆள் உயர

மாலை” என்று மறுமுறை நீ சொல்லிச் சிலாகித்ததும், ஒரு பேட்டியின் போது உன்னிடம், “எம்ஜிஆர் தன்னை மன்றாடியார் வகையைச் சேர்ந்தவர் என்று சொல்லுகிறாரே” என்று கேட்டதற்கு, “ஆம். அவர் மன்றாடியார்தான்” என்று நீ சொல்ல, அங்கிருந்த அத்தனை பேரும் உன்னைத் திகைத்துப் பார்க்க நீயோ, “மத்திய அரசிடம் மன்றாடிக் கொண்டுதானே இருக்கிறார்” என்று புன்னகைத்துப் போன அழகும், உன் இனிய நண்பன் கவியரசர் கண்ணதாசன் ஒரு தேர்தலின் போது, உன்னிடம் வந்து, “தமிழ்நாட்டில் தேர்தலில் நிற்காமல், இந்த முறை பாண்டிச்சேரியில் நிற்கலாம் என்றிருக்கிறேன்” என்று சொல்ல, நீயோ, “பாண்டிச்சேரியில்தான் உங்களால் நிற்கவே முடியாதே!” என்று கவியரசரின் அந்தி மாலை மயக்கத்தைக் குறும்புடன் கேலி செய்ததும், மறைந்த ஜெயலலிதா அம்மையார் ஒருமுறை, “நான் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களுக்கு நன்மை செய்வேன்” என்று கூறியது குறித்து, உன்னிடம் கருத்துக் கேட்டபோது, “அம்மையார் ஆட்சியில் இல்லாமல் இருப்பதே மக்களுக்குச் செய்யும் பெரிய நன்மைதான்”, என்று உன் விமர்சனத்தை நீ நிதர்சனமாக்கியதும், பிறிதொரு முறை, உன் தலைமையில் நடந்த இசைக்கலைஞர்கள் கூட்டத்தில், சிறப்புரையாற்ற வந்த திரு. முக்தா சீனிவாசன் உன்னிடம், “உங்களுக்குப் பாட வருமா?” என்று கேட்க, நீயோ, “இப்ப வராது. கொஞ்ச நாள் கழிச்சு வரும்” என்று எல்லா மனிதருக்குமான கடைசி அத்தியாய மரணத் தத்துவத்தைச் சிலேடையாக விளையாடியதும், உன் தமிழ் மொழி ஆளுகையும், சமயோசிதச்

சிந்தனையும், நகைச்சுவை உணர்வும்தான், யாரிடமும் இல்லாத, உன்னிடத்தில் மட்டும் உள்ள ஏதோ ஒன்றாகி, ஆளுமைத்திறனையும், ஆட்சி நிர்வாகத்தையும், ஓய்வில்லாத உழைப்பையும் அட்சய பாத்திரமாக்கி அழகு பார்த்த�
இதற்கெல்லாம் மேலாக, எங்களுக்கும் உனக்குமான உறவை உன் முதல் பிள்ளை, ‘முரசொலி’ வாயிலாக அன்றாடம் புதுப்பித்தாய். உன் கொள்கைப் பாதையினைக் கற்பித்தாய். மாநில, தேசிய, சர்வதேச அரசியலை அனாயாசமாய்ப் புரிய வைத்தாய். ஒவ்வொரு மேடையிலும், தூரத்திலிருந்து உனைப் பார்ப்பதும், ‘சவுண்ட் பாக்ஸ்’ அருகில் நின்று உன் காரமேறிய குரலைக் கேட்டு ரசிப்பதும், மேடையிலிருக்கிற தலைவர்களின் பெயர்களை வரிசையாக அழைத்து, முடிவில், “என்” என்று உச்சரித்து, சில வினாடிகள் நீ நிறுத்தி, எம் நாடி நரம்பெல்லாம் ஒரு விதமாய் முறுக்கேறி நிற்கையிலே, “உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்பே” என்று நீ சொல்லி முடிப்பதற்குள் எம் பிறவிப் பயன் பெற்றுவிட்ட திருப்தியோடு ஒரு உற்சாகத் துள்ளலோடு கரவொலி எழுப்பி, உன் முழு உரையையும் கேட்டு, நீ காரில் கிளம்புகையில், கையசைத்து உன்னை வழி அனுப்பினாலும் உன் குரல் மட்டும் எங்கள் மனதிற்குள் ஒரு வேதிவினை மாற்றத்தினை நிகழ்த்திக் கொண்டே இருக்கிற அதிசயம் எம் மீது நீயும், உன் மீது நாங்களும் கொண்டிருக்கிற எழுபிறவியிலும் இணைபிரியாத இதமான பாசத்தின் அட்சய பாத்திரம்தான்.

எப்படிப் பிரிய முடிந்தது உன்னால்? உனைப் பிரிந்து எப்படி இருக்க முடிகிறது எங்களால்?

எங்களுக்கு இருக்கிற ஒற்றை நம்பிக்கையே தளபதியார்தான். ஏறத்தாழ, கழக ஆட்சி ஆரம்பித்த ஆண்டிலிருந்து, கடந்த 49 ஆண்டுகளாய், உன்னோடு, உன் நிழலாய், உன்னிடம் அரசியல் பயின்று, "ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு,.. அவர்தான் என் அரசியல் வாரிசு" என்று உன் வாயால் சொல்லும் அளவிற்கு ஓய்வில்லாமல் உழைத்து, களம் பல கண்டு, சிறையில் பெருந்துயர்கள் அனுபவித்து, தமிழகத்தில் இனி திராவிட அரசியலை அடுத்தடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் அட்சய பாத்திரமாய்ப் பரிணமித்தவர் தளபதியார் என்று புரிந்து, புரிந்தவற்றை உணர்ந்து, நாட்டிற்கும், கழகத்திற்கும் இனி நல்ல காலம்தான்; "எதிலும் இனி வெற்றிதான்" என்ற நம்பிக்கையோடு, உன் வழியில், நீ தந்த அட்சய பாத்திரமாம் நம் தளபதி தலைமையில், வீறுநடை போடுவோம்.... வெற்றிகள் பல காணுவோம்...

jcrsarnew@gmail.com

□□□.

# ஒளிரும் சொற்களை உருவாக்கியவர் கலைஞர்

*¬ இமையம்*



திராவிட இயக்கம் சமத்துவம், சகோதரத்துவம், சம நீதி, சமூக நீதி, மூட நம்பிக்கை ஒழிப்பு, இன உணர்வு, மான உணர்வை உண்டாக்குவதற்கு சினிமா, நாடகம், கவிதை, பேச்சு என்று கலையின் அத்தனை வடிவங்களையும் பயன்படுத்தியதோடு, அந்தந்த துறை சார்ந்த கலைஞர்களையும் உருவாக்கியது. திராவிட இயக்கம் கலைஞர்களை உருவாக்கியதா? கலைஞர்கள் திராவிட

இயக்கத்தை உருவாக்கினார்களா? இரண்டுமே ஒரே நேரத்தில் நிகழ்ந்தது. ஒன்றாகவே நடந்தது.

திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்காக நாடகம் எழுதினார்கள், கவிதை, சிறுகதை என்று எழுதினார்கள். சினிமாவில் கதை-வசனம் எழுதினார்கள். பேச்சுக் கலையை முழுமையாகப் பயன்படுத்தினார்கள். திராவிட இயக்கம் உருவாக்கிய எழுத்தாளர்களில், பேச்சாளர்களில், கவிஞர்களில், சிறுகதை ஆசிரியர்களில், சினிமா வசனகர்த்தாக்களில் உச்ச நட்சத்திரமாக விளங்கியவர் கலைஞர். எழுபத்தைந்து சினிமாக்களுக்கு கதை வசனமும், இருபத்தி ஐந்து நாடகங்களும், இருபது நாவல்களும், அறுபத்தியெட்டு சிறுகதைகளும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளும், இனியவை இருபது என்ற பயண நூலையும் படைப்பிலக்கியமாக எழுதியிருக்கிறார். குறளோவியம், தொல்காப்பிய பூங்கா என்ற உரை நூல்களையும் எழுதியிருக்கிறார். 'தாய்' நாவலை தன்னுடைய உரைநடை கவிதை பாணியில் மறுஆக்கம் செய்திருக்கிறார்.

கலைஞரின் மொத்த எழுத்தின் நோக்கமும், பேச்சின் நோக்கமும் தமிழ் சமூக மேம்பாடு, முன்னேற்றம், வளர்ச்சி, சம நீதி, சமூக நீதி, மூட நம்பிக்கை எதிர்ப்பு, மத கற்பிதங்களுக்கு எதிர்ப்பு, அறிவியல் ரீதியில் சமூகத்தை, அதன் சிக்கல்களை ஆராய்வது, தீர்வு காண்பது. சாதி சார்ந்த இழிவுகளுக்கு, மதம் சார்ந்த பிற்போக்கு தனங்களுக்கு எழுத்தின் வழியே சவுக்கடி கொடுப்பது. பழைய தமிழ் இலக்கியங்களைக் கொண்டாடுவது. பழைய இலக்கியங்களைத்

தமிழின் அடையாளமாக, தமிழரின் அடையாளமாக, பெருமையாக, பொக்கிஷமாக நிலை நிறுத்துவது.

கலைஞர் தன்னுடைய எழுத்துக்களை, தன்னுடைய கொள்கை முழக்கமாகவே கருதினார். கடைசிவரை தன்னுடைய கொள்கைகளையும் மாற்றிக்கொள்ளவில்லை. தன்னுடைய எழுத்தின் தன்மையையும் அவர் கடைசிவரை மாற்றிக் கொள்ளவில்லை. சமரசமும் செய்துகொள்ளவில்லை.

தமிழில் உரைநடை இலக்கியம் தோன்றி ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. நூற்றாண்டு காலத்தில் வெகு மக்களால் அதிகமாகப் பேசப்பட்ட, கொண்டாடப்பட்ட எழுத்தும், பேச்சும் கலைஞருடையதுதான். கலைஞருடைய எழுத்தும், பேச்சும் தமிழ் சமூகத்தில் திரும்பத் திரும்ப நினைவுகொண்டு பேசப்பட்டிருக்கிறது. கொண்டாடப்பட்டிருக்கிறது. கலைஞரின் அளவுக்கு வேறு எந்த எழுத்தாளரின் பேச்சும், எழுத்தும் கொண்டாடப்பட்டதில்லை. நினைவுகொள்ளப்பட்டதில்லை. கலைஞர் என்றதும் பராசக்தி படமும், மனோகரா, பூம்புகார், ராஜகுமாரி, மந்திரிகுமாரி போன்ற படங்கள் எப்படி நினைவுக்கு வருகின்றன? கலைஞர் என்றாலும் எல்லாருக்கும் எப்படி ‘பேச்சு’ என்ற சொல்லும், ‘கவிதை’ என்ற சொல்லும் ‘தமிழ்’ என்ற சொல்லும் நினைவுக்கு வருகின்றன. கலைஞர் சில சொற்களின் அடையாளமாக இருக்கிறார். அதிசயம்.

கலைஞருடைய சினிமா வசனங்கள், நாவல், நாடகம், கவிதை, சிறுகதைகளில் வரக்கூடிய சில சொற்கள், சில வாக்கியங்கள் பலருக்கும் தெரிந்த வாக்கியமாக இருப்பது ஆச்சரியம். சில சொற்களுக்காகவும், சில வாக்கியங்களுக்காகவும்தான் அவர் திரைக்கதை எழுதிய சினிமா படங்கள் திரும்பத் திரும்பப் பேசப்படுகின்றன. கலைஞருடைய நாவல்களும், சிறுகதைகளும் பெரும்பாலும் வசனங்களால் கட்டமைக்கப்பட்டவை. பாத்திரங்கள் சார்ந்த, சூழல் சார்ந்த விவரிப்புகள் அரிதாகவே இடம்பெறும். கதை சொல்வது என்பதைவிட உரையாடலை எவ்வாறு சிறப்பாக அமைப்பது என்பது குறித்தே அதிகம் அக்கறை காட்டியிருக்கிறார். கலைஞரின் சிறுகதைகள், நாவல்கள் அனைத்துமே உரையாடல்களால் நிரம்பியவை. உரையாடல்களின் வழியேதான் கதை சித்தரித்துக்காட்டப்படும். காரசாரமான, விவாதத்தன்மையில் அமைந்த, ஒருவிதமான உரைநடை கவிதைத் தன்மையில் அமைந்திருப்பதால் படிப்பவர்களை ஈர்க்கும் தன்மையைத் தனக்குள் கொண்டிருக்கும். கலைஞர் சிறுகதை எழுதியதும், நாவல், கவிதை எழுதியதும் தன்னுடைய கொள்கைகளை சொல்வதற்காகத்தான். சில தெறிப்பான சொற்களை, வாக்கியங்களை உருவாக்கவுமே எழுதினார்.

சினிமாவில், நாடகத்தில், நாவலில், சிறுகதையில் அவர் உருவாக்கிக் காட்ட விரும்பிய கதைகளைவிட அவர் உருவாக்கிய சொற்களும், வாக்கியங்களும்தான் வெகுசன மக்களால்

கொண்டாடப்பட்டது. அதே மாதிரி தன்னுடைய மேடைப் பேச்சுகளின் வழியாகவும், கவியரங்கங்களின் வழியாகவும் அரிதான சில சொற்களையும், அரிதான வாக்கிய சேர்க்கைகளையும் உருவாக்கிக் காட்டினார். அவர் பயன்படுத்துகிற சில சொற்களும், சில வாக்கியங்களும் வெகுசன மக்களை ஈர்த்தது என்பதைவிட, அவர்கள் அதை அன்றாட வாழ்வில் பயன்படுத்தவும் செய்தார்கள்.

“சிங்காரச் சென்னை”, “தமிழ்நாடு அமைதி பூங்காவாக இருக்கிறது”, “அய்யன் திருவள்ளுவர்”, “தமிழ் வெல்லும்” இது போன்று பல சொற்களை அவர்தான் உருவாக்கினார். “வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்” என்பது முரசொலி நாளிதழிற்காகக் கலைஞர் உருவாக்கியது. 1984-88 காலகட்டத்தில் இந்த வாக்கியம் பெரும் முழக்கமாக தமிழகமெங்கும் ஒலித்தது. ஈழத்தமிழர் ஆதரவு போராட்டங்களை முன்னெடுத்த மாணவர்கள் இந்த வாக்கியத்தைத்தான் ஊர்வலத்தில் முழங்கினார்கள். பாரதிதாசனின் “தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா” என்பது மற்றொரு முழக்கமாக இருந்தது. இந்த முழக்கங்கள் இன்றும் உயிருடன்தான் இருக்கின்றன. அதே மாதிரி “இன்றைய செய்தி நாளைய வரலாறு” என்பது முரசொலிக்காக எழுதப்பட்டதுதான் என்றாலும் தமிழக ஊடகங்களில், மேடைகளில் அதிகம் பயன்படுத்தப்படும் முழக்கமாக இருக்கிறது. கலைஞர் மட்டும்தான் முழக்கத்தை உருவாக்குவார் என்றில்லை. அவருடைய

கட்சிக்காரரர்களும் முழக்கத்தை உருவாக்குவார்கள். தி.மு.க.வினரால் உருவாக்கப்பட்ட "இந்தப் படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?" என்ற முழக்கமும் இன்று அனைத்துத் தரப்பினராலும் பயன்படுத்தப்படுகின்றது. 'எழுந்து வா தலைவா' என்று கலைஞரின் கட்சிக்காரரர்கள் உருவாக்கிய முழக்கம் தமிழக மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்த ஒன்று. எமர்ஜென்சியின்போது "Revoke Emergency, Restore Democracy" என்று சொல்லும் ஆற்றல் கலைஞருக்கு மட்டுமே இருந்தது.

'மாற்றுத்திறனாளி' என்ற சொல்லும், 'திருநங்கை', 'கைம்பெண்', 'நெஞ்சுக்கு நீதி' என்கின்ற சொற்களும் கலைஞரால் உருவாக்கப்பட்டதுதான். இந்த சொற்கள் அரசு நிறுவனங்களில் மட்டுமல்ல, பொதுமக்களும் இயல்பாகப் பயன்படுத்துகிற சொற்களாகி, அடையாளமாகிவிட்டது. சாதி சான்றுகளில், தாழ்ந்தோர் என்பதை 'தாழ்த்தப்பட்டோர்' என்றும், 'பிற்பட்டோர்' என்பதை 'பிற்படுத்தப்பட்டோர்' என்றும் மாற்றியது அவர்தான். தற்போது தமிழகத்தில் இருக்கிற, இனிமேல் பிறக்கப்போகிற அனைவருக்குமான சாதி சான்றுகளில் இந்த வார்த்தை இருக்கும். தமிழினம் என்று ஒன்று இருக்கும் வரை, சாதிச்சான்று என்று ஒன்று இருக்கும்வரை, கலைஞர் மாற்றிய சொல் இருக்கும். சொற்களின் மதிப்பை கலைஞர் உணர்ந்த அளவிற்குத் தமிழகத்தில் வேறுயாரும் உணர்ந்ததில்லை. கலைஞர் ஒரு சொல்லைப் பயன்படுத்தினால் அதற்கு உடனே தமிழகமெங்கும் மதிப்பு ஏற்பட்டுவிடும் மாயம்

நிகழ்ந்தது. ஒவ்வொரு அரசு அலுவலகங்களிலும் “தமிழ் வாழ்க” என்று எழுதவைத்தது அவர்தான். 1938இல் “தமிழ் வாழ்க. இந்தி ஒழிக” என கலைஞர் முழங்கியது எத்தனை ஆயிரம் மேடைகளில் நினைவுகொள்ளப்பட்டிருக்கும்? அன்புள்ள மு.க. என்பது யாரை குறிக்கும் என்பது தமிழர்களுக்குத் தெரியும். முரசொலி என்ற சொல், யாரை உணர்த்தும், அதன் அடையாளம் என்ன? அது தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து தமிழகம் அறியும்.

சட்டமன்றத்தில் இது சூத்திரர்கள் அரசு என்று சொன்னவர் கலைஞர். இரண்டாயிரம் ஆண்டுகள் அரசியல் வரலாற்றில் இது சூத்திரர்கள் அரசு என்று சொல்லும் வல்லமை இந்தியாவில் கலைஞருக்கு மட்டுமே இருந்தது.

கலைஞர் அதிகமாக மட்டுமல்ல, திரும்பத் திரும்ப எழுதிய சொல்லும், அதிகமாக மட்டுமல்ல திரும்பத் திரும்ப ஒவ்வொரு மேடையிலும் பயன்படுத்திய வார்த்தை “உடன்பிறப்பே” என்பதுதான். மற்றவர்களுக்கும், அவருடைய கட்சிக்காரரர்களுக்கும்தான் தெரியும் ‘உடன்பிறப்பே’ என்ற சொல்லின் மகத்துவம். அதே போன்று “என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே” என்ற வாக்கியத்தின் மதிப்பு கலைஞருக்கும், அவருடைய கட்சிக்காரரர்களுக்கும்தான் தெரியும். ‘உடன்பிறப்பே’ என்று அவர் எழுதும் கடிதங்கள் பத்து லட்சம் பேரைத் திரட்டும் வல்லமை கொண்டது என்பது ஒரு அதிசயம். உடன்பிறப்பே என்று அவர் எழுதிய கடிதங்கள் எழுபதாயிரம்

இருக்கும் என்று சொல்கிறார்கள். இதுவும் ஒரு அதிசயம்தான்.

1952இல் "அம்பாள் என்றைக்கடா பேசினாள்?" என்று 'பராசக்தி' படத்திற்காக அவர் எழுதிய ஒற்றை வசனத்தை அறியாதவர்கள் தமிழகத்தில் இருக்க வாய்ப்பில்லை. "ராமன் எந்தப் பொறியியல் கல்லூரியில் படித்தான்?" என்று அவர் கேட்ட ஒரு கேள்வி இந்தியாவையே உலுக்கியது. தான் எழுதிய சினிமாவிற்கான கதை வசனங்களிலும், நாடகங்களிலும், நாவல்களிலும், சிறுகதைகளிலும், கவிதைகளிலும் ஆயிரக்கணக்கான அழியாத வாக்கியங்களை உருவாக்கியது மட்டுமல்ல, அவ்வாக்கியங்களை வெகுமக்களும் அன்றாடம் பயன்படுத்தும் விதத்திலும் மாற்றியதில் அவருக்கு இணையான வேறு ஒரு எழுத்தாளர் தமிழ் மொழியில் இல்லை. வெகுமக்களின் மனதில் ஒரு சொல்லை, ஒரு வாக்கியத்தை நிலை நிறுத்துவது எளிய காரியமல்ல. ஒரு சொல்லை உருவாக்குவது, ஒரு வாக்கியத்தை உருவாக்குவது என்பது மொழி சார்ந்த செயல்பாடு மட்டுமல்ல, கலாச்சார செயல்பாடு.

"செங்கோலைவிட எழுதுகோலே நிலையானது" என்று எழுதியது, "இதயத்தை இரவலாக தந்திடண்ணா" என்று அவர் அண்ணாவின் மறைவிற்கு எழுதிய கவிதை வரிகள்:

" மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு, முத்தமிழ் மணமுண்டு!
மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முர சார்த்தவர் தமிழர் - அவர் வாழ்ந்த
தமிழ் வாழ்வுக்கு மூன்றெழுத்து - அந்த

வாழ்வுக்கு அடிப்படையாம் அன்புக்கு
மூன்றெழுத்து..
அன்புக்குத் துணை நிற்கும் அறிவுக்கு
மூன்றெழுத்து
அறிவார்ந்தோர் இடையிலெழும் காதலுக்கு
மூன்றெழுத்து..
காதலர்கள் போற்றி நின்ற கடும் வீரமோ
மூன்றெழுத்து..
வீரம் விளைக்கின்ற களம் மூன்றெழுத்து...
களம் சென்று காணுகின்ற வெற்றி மூன்றெழுத்து
அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும்
அமைதி மிகு அண்ணா மூன்றெழுத்து''

என்று எழுதியது எப்படி எல்லாத் தமிழர்களுக்கும் தெரிந்திருக்கிறது. இந்த வரிகள் எழுதப்பட்டு ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. தமிழகத்தில் இன்று அவர்தான் சொல்விளையாட்டின் தலைவர். இலக்கியம் என்பது மக்களுக்காக என்றால் கலைஞரின் எழுத்துக்கள் மக்களுக்கானது என்பதில் சந்தேகமில்லை. கலைஞர் என்றால் 'தமிழ்' என்று அடையாளப்படுத்துகிறார்கள். 'தமிழ் வெல்லும்' என்று எழுதிய கலைஞருக்கும் 'தமிழ்' என்று அடையாளமிட்டது சரிதான் என்று தோன்றுகிறது.

''ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்'' என்று முப்பது ஆண்டுகள் முன்பு கலைஞர் எழுதிய வாக்கியம்தான் இன்று தமிழகத்தின் முக்கியமான பேசுபொருள்.

கலைஞர் என்ற சொல் எப்படி கலைஞரை மட்டும் அடையாளப்படுத்துமோ, அதே மாதிரி அவர் உருவாக்கிய சொற்களும், வாக்கியங்களும் அவரை மட்டுமே அடையாளப்படுத்தும். அழியாத சொற்களை உருவாக்குகிறவன்தான் எழுத்தாளன்.

“நான், நீ என்று சொன்னால் உதடுகள் ஒட்டாது. நாம் என்று சொன்னால்தான் ஒட்டும்.” கலைஞர் உருவாக்கிய மகத்தான வாக்கியம் இது.

“மனசாட்சி உறங்கும் சமயத்தில்தான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது.”

மு.க.வின் “தமிழ் வெல்லும்” என்றும்.

imayam.annamalai@gmail.com

# கலைஞர்:

# நவீனத் தமிழகத்தின் சிற்பி

*சி. சரவணகார்த்திகேயன்*



பண்டித ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பியாகக் கருதப்படுகிறார். 1947இல் சுதந்திரம் கிடைத்தபோது சிதிலமடைந்து கிடந்த ஒரு பிரம்மாண்ட தேசத்தை அவர் தன் தொலைநோக்குப் பார்வையின் மூலம் - விவசாயம் முதல் விஞ்ஞானம் வரை பல்வேறு துறைகளிலும் மேம்பாட்டை ஏற்படுத்தி - புத்துயிர்ப்புடன் நிர்மாணித்தார். அதன் மூலம் சமூக, பொருளாதார வளர்ச்சியை நாடெங்கிலும் சாத்தியப்படுத்தினார். அவர் மறைந்தபோது ஒரு நவீன தேசத்தை உருவாக்குவதற்கான மிக வலுவான ஓர் அடித்தளத்தை அமைத்துப் போயிருந்தார். நிதானமாய் யோசித்தால் நேரு அவர்கள் இந்திய

நாட்டிற்கு எதைச் செய்தாரோ அதையே தமிழ்நாட்டிற்கு கலைஞர் செய்தார்.

ஆனால் கலைஞரின் நவீனச் சிந்தனை கொஞ்சம் வேறுபட்டது. அது சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை (Inclusive Growth) உத்தேசித்தது.

இன்றைய நவீன ஆட்சி என்பது இரண்டு விஷயங்களை நோக்கி இருப்பதாகக் கருதுகிறேன். 1) வளர்ச்சி 2) சமத்துவம். அதாவது முரட்டுத்தனமாய் நாடு வளர்கிறது எனப் பொருளாதாரக் குறியீடுகள் மூலம் காட்டுவதோ, குறிப்பிட்ட துறைகளில் மட்டும் பெருவளர்ச்சி காண்பதோ, சமூகத்தில் சில பிரிவினர் மட்டும் செல்வச் செழிப்புறுவதோ அசலான வளர்ச்சி அல்ல. வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒரு நவீனமான நிர்வாகம் அதை நோக்கியே திட்டமிடும். மோடியின் குஜராத் வளர்ச்சி ஏன் அனைவருக்குமானதல்ல; கலைஞரின் தமிழகம் எப்படி அனைவருக்குமான வளர்ச்சி என்பதை ஆராய்ந்தால் இது விளங்கும்.

“இந்தியா ஒளிர்கிறது” என்ற வாஜ்பாய் அரசின் கோஷமும், “9 சதவிகித வளர்ச்சி” என்ற மன்மோகன் அரசின் கோஷமும், “புதிய இந்தியா பிறந்தது” என்ற இன்றைய மோடி அரசின் கோஷங்களும் இன்று எளிய மக்களிடையே எடுபடாமல் போவதற்குக் காரணம், அவை எல்லாம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி அல்ல என்பது தான். கலைஞர் அதை ஆரம்பம் முதலே அறிந்து வைத்திருந்தது நம் அதிர்ஷ்டம்.

கலைஞர் தமிழகத்துக்குச் செய்த நவீன பங்களிப்புகள் டைடல் பார்க் கட்டியதும் மேம்பாலங்கள் கட்டியதும் மட்டுமல்ல. அவை நேரடியாக நம் கண்ணில் தெரியும் நவீனங்கள். உண்மையில் எல்லாத் துறைகளிலும் அவர் நவீனத்தைப் புகுத்தினார். பொருளாதார மற்றும் சமூகத் தளங்களிலும் நவீனமான பார்வையை முன்வைத்தார். ஏதொன்றில் பழைய சிக்கல்களை அகற்றி, எளிமைப்படுத்தலைக் கொண்டு வருவதும் நவீனமயமாக்குதலே. இரு உதாரணங்கள், உழவர் சந்தை மற்றும் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள். ஒன்றில் இடைத்தரகை அகற்றி விவசாயிகளுக்கு நேரடிப் பலன் கிட்டச் செய்தார். அது ஒரு பொருளாதாரப் புரட்சி. அடுத்ததில் சாதி வேற்றுமை களைந்த ஒரு மாதிரித் தமிழ்ச் சமூகத்தை உண்டாக்கிக் காட்ட முயன்றார். அது ஒரு சமூக மீட்டுருவாக்கம். இப்படி அவர் எல்லா இடங்களிலும் நவீனத்தைப் புகுத்தினார்.

***

விடுதலைக்குப் பின் நாட்டு வளங்களை நேர்த்தியாகப் பயன்படுத்தவும் (வளங்களைக் கணக்கிடுதல், குறைவான வளங்களைப் பெருக்குதல், சமச்சீர் முறையில் அவற்றைப் பயன்படுத்துதல்), உற்பத்தியைப் பெருக்கவும் (விவசாயம் முதல் தொழிற்சாலைகள் வரை), வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் திட்டக்குழு (Planning Commission) உருவாக்கப்பட்டது. நவீன இந்தியாவை அடைவதற்கான முதற்படி என அதைச் சொல்லலாம். அதன் வழியேதான்

ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாகின. பல்வேறு துறைகளிலும் தேசம் தன்னிறைவை அடைந்தது. ஜனங்களின் வாழ்க்கை மேம்பட்டது. அதில் நேரு என்ற பெருந்தலைவரின் தரிசனம் இருந்தது.

அண்ணாவுக்குப் பின் ஆட்சியில் அமர்ந்த கலைஞர் 1971இல் மாநிலத் திட்டக் குழுவை (State Planning Commission - SPC) உருவாக்கினார். முதலமைச்சரின் தலைமையில் தமிழ்நாட்டின் முன்னேற்றம் தொடர்புடைய பல்வேறு சிபாரிசுகள் வழங்கும் ஆலோசனைக் குழு இது. தேசிய அளவிலான திட்டக்குழு போல் இதுவும் ஐந்தாண்டுத் திட்டங்களின் வழி மாநிலத்தின் வளர்ச்சியை மேற்கொண்டது. (i) விவசாயம் (ii) தொழில், மின்சாரம் மற்றும் போக்குவரத்து (iii) நிலப்பயன்பாடு (iv) கல்வி, வேலைவாய்ப்பு (v) சுகாதாரம் மற்றும் சமூக நலன் (vi) மாவட்ட மற்றும் ஊரக வளர்ச்சி (vii) திட்ட ஒருங்கிணைப்பு என ஏழு பிரிவுகளில் சூழலை ஆராய்ந்து சரிவிகித மாநில வளர்ச்சிக்கான நிதி, நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சிக் குழுமம், சிறப்புப் பகுதிகள் வளர்ச்சித் திட்டம், மாநிலத்தின் புதிய முயற்சிகளுக்கான வைப்பு நிதி எனப் பல பெருந்திட்டங்களை ஆக்கியளித்தது. இதுவரை 12 ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன.

சிறுதொழில் வளர்ச்சிக்கென தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகம் (Small Industries Development Corporation Limited - SIDCO) 1970இல் கலைஞரால் உருவாக்கப்பட்டது. தமிழகம் எங்கும் தொழிற்பேட்டைகள் அமைத்தல், பராமரித்தல், அவற்றுக்குத் தேவையான மூலப்பொருட்களை

வழங்கல், தயாரிக்கும் பொருட்களைச் சந்தப்படுத்தல் ஆகியன நோக்கம். இந்த அமைப்பு 59 தொழிற்பேட்டைகளைத் தமிழகத்தில் உருவாக்கியது போலவே 1971இல் தொழில் வளர்ச்சி கழகமும் (State Industries Promotion Corporation of Tamil Nadu - SIPCOT) பெருந்தொழில்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த தொழிற்வளர்ச்சிக்கென கலைஞரால் உருவாக்கப்பட்டது. 20 தொழிற்சாலை வளாகங்கள் மற்றும் 6 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் இதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. 1973லும் 1989லும் ராணிப்பேட்டையில் இரு தொழில் வளாகங்கள் உருவாக்கப்பட்டன. போலவே ஓசூரில் 1974லும் 1989லும். (அதாவது 13 ஆண்டு வனவாசத்துக்கு முன்பும் பின்பும்.)

1996 - 2001 ஆட்சியிலும் திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் சிப்காட் சார்பில் புதிய தொழில் வளாகங்கள் திறக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இவற்றின் மூலம் வேலைவாய்ப்பு பெற்றார்கள்.

அரசு நிறுவனங்களை உருவாக்கியும், தனியார் நிறுவனங்களுடன் இணைந்தும் மாநிலத்தின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை உருவாக்கத் தொடங்கப்பட்ட தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (Electronics Corporation of Tamil Nadu - ELCOT) கலைஞர் அரசின் முயற்சியில்தான் 1977இல் தன் பணியைத் துவக்கியது (அப்போது அரசு கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி. ஆனால் விதை கலைஞர் இட்டது). தமிழகத் தகவல் தொழில்நுட்பத் துறையின் விரிவாக்கம் மற்றும் மாநிலத்தின்

மின்னணு ஆளுகைப் பரவலாக்கத்துக்கு முதுகெலும்பு இதுவே.

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் விரிவான தகவல் தொழில்நுட்பக் கொள்கையை 1997இல் கலைஞர் உருவாக்கினார். மத்திய அரசு கூட 2004இல்தான் தேசிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிவிக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். “மத்திய நிதியமைச்சர் சின்ஹா தமது பட்ஜெட் உரையில் குறிப்பிடத் தவறிவிட்டார். இருந்தபோதிலும் தமிழ்நாட்டின் முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறி நின்று சென்னையில் நிகழ்ந்து வரும் அமைதியான புரட்சி பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லை. ஓசையில்லாமல் ஏராளமான மென்பொருள் வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னைதான்.” என்று தில்லியை இடித்து தெற்கைப் புகழ்ந்தது DQ Week என்ற இணைய இதழ் (06.03.2000).

1999இல் அவர் நடத்திய தமிழ் இணைய மாநாடும் ஒரு முக்கியமான சாதனை. 2000இல் முதன் முதலாக சென்னை தரமணியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா (Tidel Park) உருவாக்கியதும் கலைஞரே. ஐந்தாண்டு இடைவெளியில் மீண்டும் ஆட்சிக்கு வந்த போது கோவையிலும் அதே போன்ற பிரம்மாண்ட ஐடி பார்க் உருவாக்கப்பட்டது. பன்னாட்டு மூலதனத்தை தமிழ்நாட்டுக்குக் கவர்ந்திட இது மிகவும் உதவியானது. இந்தியாவில் தகவல் தொழில்நுட்பம் கொழிக்கும் மூன்று மாநிலங்களில் ஒன்றாகக் குறுகிய காலத்தில்

தமிழகம் எழுந்தது இம்மாதிரியான முன்னெடுப்புகளின் மூலமே.

***

கிராமங்கள் நாட்டின் முதுகெலும்பு என்றார் காந்தி. விவசாயம் மாநில முதுகெலும்பு என நம்பினார் கலைஞர். அவர் ஆட்சியில் விவசாயம் பெற்ற வளர்ச்சி நிகரற்றது.

1998இல் விவசாய உற்பத்திச் சந்தைப்படுத்துதல், வரி மீளாய்வுக் குழு அமைத்துப் பிற மாநிலங்களில் விவசாயிகள் எவ்வாறு தங்களின் விளைபொருட்களை விற்பனை செய்கிறார்கள் என்பதை ஆய்வு செய்யச் சொன்னார் கலைஞர். சண்டிகரில் ‘அப்னே மண்டி’ என்ற பெயரில் உழவர்கள் தம் வண்டிகளில் அமர்ந்து விளைப்பொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்வதைப் பற்றி அறிந்தார். உழவர் சந்தைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 1999 - 2000இல் மாநிலம் முழுவதும் 103 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டன. இன்று குறைந்தது 179 உழவர் சந்தைகள் தமிழகத்தில் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இடைத்தரகர்களின் ஆதிக்கக்கொள்ளை களைந்த இத்திட்டத்தால் விவசாயிகளும் லாபம் பெற்றனர், பொதுமக்களும் லாபம் பெற்றனர்.

1970இல் கலைஞர் ஆட்சியில் நில உச்சவரம்பு சட்டத்தைத் திருத்தி 15 ஏக்கர் என்று நிர்ணயித்தார் (அதுவரை 30 ஏக்கர் என்று இருந்தது). இதன்படி 5 பேர் கொண்ட குடும்பம் அதிகபட்சம் 15 ஏக்கர் நிலம் மட்டுமே சொந்தமாக வைத்திருக்க முடியும். கூடுதல் உறுப்பினர்களுக்கு தலா 5 ஏக்கர்; மொத்த

உச்ச வரம்பு 30 ஏக்கர். அவரது ஆட்சியில் தமிழகம் முழுக்க இச்சட்டம் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு, சுமார் 1,78,880 ஏக்கர் உபரி நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அவை சுமார் 1,37,236 நிலமற்ற விவசாய மக்களுக்குப் பிரித்து ஒப்படைக்கப்பட்டது. இன்றும் விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் இந்நிலங்களை ‘கலைஞர் பட்டா’ என்றே மக்கள் அழைக்கிறார்கள்.

40,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.7000 கோடி கூட்டுறவு விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தார் கலைஞர் (2006இல் முதல்வராகப் பதவியேற்ற நிகழ்ச்சியின் மேடையிலேயே இதை அறிவித்தார்.) ஒரு தொலைக்காட்சி நிகழ்வில் “அப்படிச் செய்திருக்காவிட்டால் பல விவசாயிகள் தற்கொலை செய்திருப்பர்” என்றார் காங்கேயம் காளைகள் ஆராய்ச்சி மையத்தின் நிறுவனர் கார்த்திகேய சிவசேனாபதி.

இந்தியாவிலேயே முதன்முறையாக விவசாய பாசனத்துக்கெனப் பயன்படுத்தப்படும் பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்க 1990இல் உத்தரவிட்டார் கலைஞர். இதனால் 16 லட்சம் விவசாயிகள் பயன் அடைந்தனர். விவசாயம் குறிப்பிட்ட பருவக் காலங்களில் மட்டுமே நடக்கும் என்பதால் ஆண்டின் 12 மாதமும் அவர்களின் பம்ப் செட் பயன்பாட்டில் இருக்காது என்பதைப் புரிந்துகொண்டு அவர் எடுத்த தர்க்கப்பூர்வ முடிவு அது. 1996இல் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் இதை மேலும் விரிவுபடுத்தினார்.

1996 ஆட்சியில் இயற்கைச் சீற்றத்தால் இறந்த ஆடுகளுக்கு ரூ. 1000மும், மாடுகளுக்கு ரூ. 5,000மும், கன்றுக்கு ரூ.3,000மும் நிவாரணத் தொகை வழங்கினார். 1997 வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் குறுகிய காலக்கடன்கள் மத்திய காலக் கடன்களாக, மத்திய காலக் கடன்கள் நீண்ட காலக் கடன்களாக கலைஞரால் மாற்றப்பட்டன. 2006இல் பயிர்க் காப்பீடு திட்டத்தில் 50 சதவிகிதம் காப்பீட்டுத் தொகையை அரசே மானியமாகக் கொடுத்து ஒரு லட்சம் விவசாயிகளைப் பயனடைய வைத்தார். அவர்களுக்குக் குறைந்த வட்டியிலான வங்கிக்கடன்களை சாத்தியப்படுத்தினார். விஞ்ஞானிகள் உதவியுடன் சிக்கனப் பாசனத் திட்டங்களை அறிமுகம் செய்தார்.

“விவசாயி கிணறு வெட்ட அரசிடம் கடன் வாங்கி கிணறும் வெட்டி, கிணற்றில் தண்ணீர் வராமல் வாங்கிய கடனையும், வட்டியையும் கட்ட சொந்த நிலத்தையும், கடனில் வெட்டிய கிணற்றையும் விற்றுக் கூலிவிவசாயியாக இழிந்து போவதிலிருந்து என்றைக்கு மாற்றம் ஏற்படுமோ?” என ஆதங்கப்பட்டார் கி.ராஜநாராயணன். கலைஞர் அதற்குத் தன் ஆட்சிகளில் பதிலளித்தார். தமிழக விவசாயி தன் மனைவி தாலியை அடகு வைப்பதும் கையறு நிலையில் தாம்புக் கயிற்றில் தொங்குவதும் நின்றது.

விவசாயிகளைக் காப்பது மட்டுமல்ல, விவசாயம் என்ற துறை விஞ்ஞானப்பூர்வமாக உயர வேண்டும், நவீன முகம் கொள்ள வேண்டும் என்றும் விரும்பினார். 1989இல் ஆசியாவிலேயே முதன்முதலாக சென்னை மாதவரத்தில் கால்நடை

மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தார். 1972இல் தென்னிந்தியாவில் முதன் முறையாக கோவையில் விவசாயப் பொறியியல் ஆராய்ச்சிக் கல்லூரி திறந்தார்.

***

மாநில அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கினார். பணியிலிருக்கையில் இறக்கும் அரசு ஊழியருக்கு உதவித் தொகை வழங்க உத்தரவிட்டார். அரசு ஊழியர்களைப் பழிவாங்கப் பயன்பட்ட ரகசியக் குறிப்பேட்டை ஒழித்தார். மாநிய சுயாட்சி என்பதை சுதந்திர தினத்தில் முதல்வர் கொடியேற்றும், தேவையான சட்டங்களை இயற்றும் அதிகாரம் வரை என்பதாக மட்டுமின்றி அரசின் வேர் நுனி, இலை நுனி வரை அதன் சாதகங்களைப் பரவச் செய்யும் எண்ணமே இது. இங்குதான் அவர் ஒரே கையெழுத்தில் ஒரே நொடியில் லட்சம் அரசு ஊழியர்களை வீட்டு அனுப்பிய மற்றவர்களிடமிருந்து வேறுபடுகிறார்.

மத்தியில் ஆளுங்கட்சி மக்களுக்கு உதவும் முன்னெடுப்பைச் செய்யும் போதெல்லாம் கட்சி வேறுபாடுகள் தாண்டி ஆதரவளித்தார். வங்கிகளை நாட்டுடைமையாக்கவும், மன்னர் மானிய ஒழிப்புக்கும் இந்திரா காந்தி அரசுக்கு அவ்வகையில் துணையாக நின்றார் கலைஞர். (சொல்லப் போனால் தில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வங்கிகளை நாட்டுடைமை ஆக்கும் யோசனையை முன்வைத்தவரே கலைஞர்தான்). பேரம் பேசியும் சாதித்தார். 1969இல் நான்காம் ஐந்தாண்டுத் திட்ட இறுதிவடிவம் முடிவாகி விட்டது. தமிழகம்

கோரியிருந்த சேலம் இரும்பாலை அதில் இடம் பெறவில்லை. கொஞ்ச நாளில் காங்கிரஸ் பிளவுகண்டு இந்திரா ஆட்சிக்கு ஆபத்து வர, அவர் திமுகவின் 24 எம்.பி.க்கள் ஆதரவை நாடினார். கலைஞர் சேலம் இரும்பாலை கேட்டார். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அது சேர்க்கப்பட்டது. போலவே 2006 ஆட்சியில் 11வது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டபோது அதில் சேது சமுத்திரம் திட்டத்தைச் சேர்த்து 37 ஆண்டுகளுக்குப் பின் அதற்கு உயிரளித்தார்.

கலைஞரின் கல்வி தொடர்பான சீர்திருத்தங்களும் மிக முக்கியமானவை. கல்வியில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள், அதன் விளைவான மாணவர்களின் தர வேறுபாடு மற்றும் போட்டியிட இயலாமை ஆகியவற்றைக் களையும் நோக்கில் 2010இல் தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக்கல்வி முறைச் சட்டத்தை இயற்றினார் கலைஞர். முனைவர் எஸ்.முத்துக்குமரன் தலைமையிலான ஒருநபர் குழுவின் ஆய்வறிக்கை மற்றும் கர்நாடகா, குஜராத், கேரளா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்குக் கல்வியாளர்கள் குழு நேரில் சென்று ஆய்வு செய்து அளித்த ஆய்வறிக்கையின் அடிப்படையில் இதைக் கொண்டு வந்தார். 2006இல் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகளில் பயிற்சி மையங்களில் சேர்ந்து எழுதும் வாய்ப்பமைந்த பணம் படைத்த / நகர்ப்புற மாணவர்களே அதிகம் தேர்ச்சி பெறுவதை அறிந்து எல்லாத் தரப்பினரும் பலனடைய வேண்டும் என்ற நோக்கில் நுழைவுத் தேர்வை ரத்து செய்து பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில்

சேர்க்கை நடக்க உத்தரவிட்டார். உயர்குடியினர் எதிர்ப்பை மீறி அவர்கள் வெறுப்பைச் சம்பாதித்தால் பரவாயில்லை என்ற துணிச்சலுடன் இம்முடிவினை அமல்படுத்தினார் கலைஞர்.

பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களிலிருந்து வரும் 100 மாணவ, மாணவியர்களுக்கு இலவச தொழிற் கல்வி வழங்கினார். கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு, பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளில் 5% தனி இட ஒதுக்கீடு வழங்கினார்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் இந்தியாவிலேயே குறைந்த கட்டணம் (ஆண்டுக்கு ரூ. 8000). பள்ளி மாணவர்களுக்கு இலவச பேருந்து அனுமதியை பன்னிரண்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தினார். ஏற்கனவே காமராஜரும், எம்ஜிஆரும் செயல்படுத்திய முன்னெடுத்திருந்த பள்ளி மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தில் முட்டை சேர்த்தார். முந்தைய மாற்றுக்கட்சி ஆட்சி கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்கள் உண்மையிலேயே நன்மை பயப்பதாக இருந்தால் அதை மேலும் ஊக்குவிக்கவோ விரிவுபடுத்தவோதான் செய்தார். திட்டத்தின் கழுத்தில் கத்தி சொருகும் அற்பத்தனம் அவரிடமில்லை என்பதுமே ஒருவகையில் முன்னேற்றம் நோக்கிய நவீனச்சிந்தனை.

பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்தார். பல புதிய கல்லூரிகள் திறந்தார். தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையத்தை சென்னைக்குக் கொண்டு வந்தார். இங்கு கடல்சார் பல்கலைக்கழகம் அமைக்கச் செய்தார். சுகாதாரத்திலும், கல்வியிலும், பிற அடிப்படை

வசதிகளிலும் தமிழகம் முன்னணியில் இன்று நிற்க அவரே மிக முக்கியக் காரணம்.

***

திக மற்றும் திமுகவை வளர்க்கத் தமிழகம் முழுக்க நடந்தே அலைந்து திரிந்ததாலோ என்னவோ இங்கே போக்குவரத்து வசதிகளின்றி மக்கள் எத்தனை சிரமப்படுகிறார்கள் எனப் புரிந்து வைத்திருந்தார். தமிழத்தின் சாலைகளை மேம்படுத்தியதில் அவருக்குப் பெரும் பங்குண்டு. தமிழத்தின் எந்நகரத்தின் மேம்பாலங்களை எடுத்துக்கொண்டாலும் அதில் கலைஞருக்குப் பங்கிருக்கும். சாலைகள் இட்டது போட்டதுமின்றி எளியோர் போக்குவரத்துக்குக் கிராமங்கள் வரை பேருந்துகள் விட்டார். 1996 ஆட்சியின்போது நகரங்களை குக்கிராமங்களுடன் இணைத்திட சிற்றுந்து திட்டம் கொண்டு வந்தார்.

மாநில உள்கட்டமைப்பை மேம்படுத்தியதில் அவருக்கு இணையாக எந்த மாநில முதல்வரையேனும் சொல்ல முடியுமா எனத் தெரியவில்லை. சாலைகளை மட்டும் எடுத்தால் ஒருவகையில் வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு 2000ங்களின் துவங்கத்தில் செய்த தேசிய அளவிலான பங்களிப்புக்கு இணையானது அது.

மின் இணைப்பு, குடிநீர் வழங்கல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தினார். இன்றும் பாரதப் பிரதமர் எல்லோருக்கும் மின் இணைப்பு வழங்குவதை ஒரு லட்சியமாகப் பேசிக் கொண்டிருக்கையில் இருபதாண்டுகள் முன்பே அதைச் சாத்தியமாக்கியவர். அவரது ஆட்சிக்காலங்களில் அரசு மருத்துவமனைகள் பெருகின.

கிராமந்தோறும் சுகாதார மையங்கள் அமைத்தார். அனைத்து நகராட்சிகளிலும் பாதாள சாக்கடை திட்டமும், சென்னையில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் கொண்டு வந்தார்.

2006இல் கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கொண்டு வந்தார் கலைஞர். 12,500 கிராமப் பஞ்சாயத்துகளுக்குப் பல அடிப்படை வசதிகளைச் செய்து தருவதுதான் பிரதான நோக்கம். இந்த வசதிகளில் விளையாட்டு மைதானம் அமைப்பது, சுடுகாடு கட்டித்தருவது, நூலகம் கட்டித் தந்தது ஆகியவை அடங்கும். கூட்டுறவு, தற்சார்பு உணர்வை வளர்க்க நமக்கு நாமே திட்டம் கொண்டு வந்தார்.

முதலில் அரசு ஊழியர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வெள்ளோட்டம் பார்த்த கலைஞர் பின் பொதுமக்களுக்கும் அதை விரிவுபடுத்தினார். 2009இல் தமிழக ஏழை மக்கள் உயிருக்கு ஆபத்தான 51 நோய்களுக்கு, ஒரு லட்சம் வரையிலான உயர் மருத்துவ சிகிச்சைகளை, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாகப் பெற வகை செய்யும் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்தார். வெளிநாடுகள் கூட இத்திட்டத்தின் சமூக, பொருளாதார அடிப்படைகள் குறித்து ஆய்வு செய்தன. இன்றும் திட்டம் செயல்படுகிறது. ஏழைகள் பன்முனை மருத்துவப் பரிசோதனை செய்யும் வருமுன் காப்போம் திட்டத்தை அறிவித்தார்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டமும் கலைஞர் முன்னெடுத்த முன்னோடித் திட்டம். 1970லேயே அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால் உச்சநீதிமன்றம் அதற்குத் தடை விதித்தது. பிறகு 2006இல் ஆட்சிக்கு வந்தபோது "பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கும் பொருட்டு" மீண்டும் அச்சட்டத்தைக் கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து பிராமணர் அல்லாத 200 பேர் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் பயிற்சி பெற்றனர். அவர் மறைவதற்கு ஒரு வாரம் முன் அப்படிப் பயிற்சி பெற்ற ஒருவர் மதுரைக் கோவில் ஒன்றில் அர்ச்சகராக அதிகாரப்பூர்வமாகப் பணியமர்த்தப்பட்டார். பிறப்பின் அடிப்படையில் அல்ல, கற்றலில் வருவதே எந்தப் பணியின் திறமையும் என்ற நவீனச் சிந்தனையின் வெளிப்பாடு இது.

கலைஞர் வாக்கரசியலுக்காக இலவசங்களை வாரி வழங்கினார் என்பது அவர்மீது வைக்கப்படும் பரவலான குற்றச்சாட்டு. அவரைப் புகழும் பொருளாதார நிபுணர்களே இவ்விஷயத்தில் அவரைக் குறை கூறுகிறார்கள். அவர் தேர்தல் வெற்றிக்காக அதைச் செய்திருக்கலாம். ஆனால் அதில் நாட்டு நலன் ஏதும் பாதிப்படையவில்லை. அது போக, அப்படியான இலவச அறிவிப்புகளுக்குப் பின் தொலைநோக்கு இருந்ததாகவே படுகிறது. உதாரணமாக, கலைஞர் டிவி என்று மக்களால் குறிப்பிடப்படப்படும் இலவச வண்ணத் தொலைக்காட்சி அறிவிப்புகளைச் சொல்லலாம். தொலைக்காட்சி வசதி வந்து விட்ட இடங்களில்

விழிப்புணர்வு அதிகமாக இருப்பதாகவும் அதனால் குற்றச் செயல்கள் குறைவாக இருப்பதாகவும் ஓர் ஆய்வு சொல்கிறது. அது போக, மின் இணைப்பே இல்லாத சில இடங்களில் தொலைக்காட்சி வழங்கப்பட்டதாலேயே மின் இணைப்பும் வழங்கப்பட வேண்டியதாக இருந்தது. கன்னியாகுமரியைச் சேர்ந்த ராஜன் என்ற வழக்கறிஞர், ஊராட்சித் தலைவர், மலைவாழ் மக்கள் நலனுக்காகப் பணியாற்றுபவர் தொலைக்காட்சி தம் மக்களுக்கு இப்படித்தான் உலகம் இருக்கிறது என்ற புரிதல் வந்தது, உலகத்தை எங்களோடு இணைத்த திட்டம் அது என்கிறார்.

***

கலைஞர் எப்படி மாநிலத்தின் வளர்ச்சியை அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆக்கினார்; தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் உள்ளிட்ட சமூகத்தில் நலிந்த நிலையில் இருந்த அனைவருக்கும் கருப்புக் கண்ணாடி தாண்டிய கடைக்கண் பார்வையை அளித்தார். வளர்ச்சி என்பது அவர்களின் புன்னகையே என நினைத்தார்.

மனிதர்களை மனிதனே இழுத்துச் செல்லும் வகையிலான கைரிக்ஷாக்கள் அன்று அதிகப் புழக்கத்தில் இருந்தன. ‘பராசக்தி’ படத்தில் அதை ஒழிக்கும் கனவைக் கலைஞர் வெளிப்படுத்தி இருப்பார். சுமார் இருபதாண்டுகளுக்குப் பின் தான் ஆட்சிக்கு வந்ததும் “மனிதனை மனிதனே மாடு போல இழுத்துச்செல்வது சுயமரியாதைக்கு இழுக்கு” என்று சொல்லி கை ரிக்ஷாக்கள் ஒழித்து,

அவற்றிற்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கினார். தான் எழுதிய வசனத்தை அதிகாரம் கைக்கு வந்ததும் மெய்ப்படுத்தினார். இந்திய தேசத்துக்கே முன்னோடியான நடவடிக்கை அது.

1971ஆம் ஆண்டின் தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்தல் மற்றும் இசைவு) சட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைத்து தமிழ்நாட்டில் சேரிகளை அகற்றி, அடிப்படை வசதிகளுடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டு வீடுகள் வழங்கினார். குடிசைகளிலும், நடைபாதைகளிலும், சாலை மருங்கிலும் வாழ்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் கான்க்ரீட் கூரைக்குள் கொணர்ந்தார்.

வாழ்நாள் முழுவதும் சமத்துவத்துக்காகப் போராடிய தந்தை பெரியார் நினைவாக அவரது பெயரிலேயே 1997இல் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தை கலைஞர் அறிமுகம் செய்தார். “பேதமற்ற இடமே மேலான திருப்தியான இடம்” என்றார் பெரியார் (குடியரசு, 11-11-1944). மிகத்துல்லியமாக அந்த வாசகம் உயிர்பெற்றெழுந்தால் அது சமத்துவபுரம். அந்த வளாகத்தில் நூறு வீடுகள் இருக்கும். ஒவ்வொரு வீடும் ஐந்து செண்ட் அளவு. சாலைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், பூங்கா, தேவைப்பட்ட இடங்களில் பள்ளிக்கூடம் எனப் பல்வேறு அடிப்படை வசதிகளை உள்ளடக்கிய அங்கே தந்தை பெரியார் சிலையும் இருக்கும். பொது மயானமும் கூட அமைந்த அவ்விடத்தே எந்த மதத்தைச் சேர்ந்த வழிபாட்டுத் தலமும் இருக்காது (அவரவர் வீட்டுக்குள் சாமி கும்பிடுவது பிரச்சினையில்லை.) வீடுகள் ஒதுக்குவதில் சமூக

நீதி பின்பற்றப்பட்டது: தாழ்த்தப்பட்டோருக்கு 40%, பிற்படுத்தப்பட்டோருக்கு 25%, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 25%, பிராமணர்கள் உள்ளிட்ட மற்றவர்களுக்கு 10%. 1996 ஆட்சிக் காலத்தில் 145 சமத்துவபுரங்களும், 2006 ஆட்சியில் 95 சமத்துவபுரங்களும் தமிழகமெங்கும் திறந்தார். இந்தியாவில் யாருக்கும் தோன்றியிராத இத்திட்டத்தை கலைஞர் இங்கே செய்தது ஒரு மகத்தான சமூகப் பரிசோதனை. அது ஒரு மிக நவீனமான முன்னெடுப்பு. ஒருவகையில் மொத்த தமிழகத்தையே சமூக நீதி திகழும் சமத்துவபுரமாக்க கலைஞர் கண்ட பெருங்கனவின் சிறு துளிதான் அத்திட்டம்.

தாழ்த்தப்பட்டோரை, பிற்படுத்தப்பட்டோரைக் கைதூக்கிவிட கலைஞர் செய்த உதவி அளப்பரியது. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென தனித் துறை அமைத்தார். சமூக நலத்திற்காகத் தனி அமைச்சகம் ஏற்படுத்தினார். மொத்த இட ஒதுக்கீட்டை 49 சதவிகிதம் என்று உயர்த்தி இட ஒதுக்கீட்டை அதிகரிக்கும் ஒரு மிக முக்கியமான தைரியமான நகர்வை முன்னெடுத்தவர் கலைஞரே. எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் பிற்பாடு செய்த உயர்த்தல்கள் அதன் அடியொற்றியே. சட்டநாதன் ஆணையம் மூலம் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டை 25லிருந்து 31 சதவிகிதம் ஆக்கினார்; தாழ்த்தப்பட்டோருக்கு 16லிருந்து 18 சதவிகிதம் ஆக்கினார். அருந்ததியர் உள் ஒதுக்கீடு கொணர்ந்தார். உருது பேசும் இஸ்லாமியர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தார்.

இஸ்லாமியர்களுக்கு 3.5 உள் ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார். மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்குத் தனியாக 20% ஒட ஒதுக்கீடு கொண்டு வந்தார்.
தாழ்த்தப்பட்டோருக்கு, பிற்படுத்தப்பட்டோருக்கு பட்டப் படிப்பு வரை கட்டணம் ரத்து செய்தார்.
தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் படிக்க பல நூறு விடுதிகள் அமைத்தார்.
தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஐஏஎஸ், ஐபிஎஸ் பயிற்சி முகாம் தொடங்கினார்.
யோசித்தால் இந்தியாவின் சமூக நீதிக் காவலர் விபி சிங் என்பது போல் தமிழகத்தின் சமூக நீதிக் காவலர் கலைஞர்!

1989 -1991 ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலேயே முதல் முறையாகப் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கும் சட்டத்தைக் கொண்டு வந்தார்.
மக்கட்தொகையில் பாதிக்கு மேல் இருக்கும் ஆண்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி இருக்கும் என்று தெரிந்திருந்தும் இதைச்செய்தார்.
அதன் பிறகே மத்திய அரசு பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தது.
மாநில அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு கொண்டு வந்தார்.
உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கினார்.
ஏழைப்பெண்டிருக்கு மூவலூர் இராமாமிருதம் திருமண உதவித் திட்டம், விதவைகளுக்கான மறுமண உதவித் திட்டம், விதவைப் பெண்கள் தொழில் தொடங்க உதவி, பெண்களுக்கு இலவசப் பட்டப்படிப்பு, கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரசவம் வரை மாதந்தோறும் நிதியுதவி முதலான அவரது

பிற திட்டங்களும் பெண்களுக்கு உதவிகரமாக அமைந்தன. 1989இல் தர்மபுரியில் மகளிர் சுயஉதவிக் குழு தொடங்கி வைக்கப்பட்டது. பெண்கள் ஒருங்கிணைந்து சுயதொழில் வாய்ப்பைப் பெருக்கும் இத்திட்டம் இன்று மாநிலம் முழுவதும் பெரும் வளர்ச்சி கண்டு பெண்களைத் தற்சார்பு கொண்டவர்களாக மாற்றியுள்ளது. பெண்களுக்கு என தனியே கருப்பூர், வாளவந்தான் கோட்டை, திருமுல்லைவாயில், திருமுடிவாக்கம், கப்பலூர் ஆகிய 5 இடங்களில் பெண்கள் தொழிற்பூங்காக்களை 2009இல் உருவாக்கி பெண் தொழிற்முனைவோரை ஊக்குவித்தார். இன்று தமிழ்ப்பெண்கள் பல துறைகளில் கம்பீரமாகக் கோலோச்ச கலைஞரே பிரதான காரணம் என்றால் அது மிகையல்ல.

Unorganised Workers எனப்படும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்புக்காக - ஓய்வூதியம், மகப்பேறு கால உதவி, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, காப்பீட்டு திட்டம், பணிக்காலத்தில் இறந்தால் நிவாரணத்தொகை உள்ளிட்ட பலன்கள் - விவசாயத் தொழிலாளர், மீனவர், கட்டுமானத் தொழிலாளர், சீர்மரபினர், பழங்குடியினர், ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுனர், பனைமரத் தொழிலாளர், காலணித் தொழிலாளர், ஊனமுற்றோர், அரவாணிகள், வண்ணார், முடி திருத்துவோர், தையல் தொழிலாளர், ஓவியர், கைத்தறி மற்றும் கைத்தறி நெசவு தொழிலாளர்கள், தூய்மைப் பணிபுரிவோர், நரிக்குறவர், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள், கிராமக் கோவில் பூசாரிகள், நாட்டுப்புறக்

கலைஞர்கள், அருந்ததியர், கட்டடத் தொழிலாளர்கள், புத்தகப் பதிப்பாளர், விற்பனையாளர் மற்றும் பணியாளர், அச்சகத் தொழிலாளர், கேபிள் டிவி ஆபரேட்டர்கள், வணிகர்கள், வீட்டுப் பணியாளர், பொற்கொல்லர், திரைத் தொழிலாளர் உள்ளிட்ட மொத்தம் 35 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களை 2006 முதல் 2011 ஆட்சிக் காலத்தில் உருவாக்கிச் செயல்பட வைத்தார் கலைஞர். ஒரு சமூகப் புரட்சி என்றே சொல்லலாம் இதை.

தமிழறிஞர்களின் பிள்ளைகளுக்குப் பொறியியல், மருத்துவப் படிப்புகளில் 5% தனி இட ஒதுக்கீடு வழங்கினார். மொழிப்போர் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கினார்.

பார்வையற்றோருக்குக் கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள், முதியோர்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு இல்லம், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம், மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு, சுடுகாடு, இடுகாட்டில் பணி செய்தோருக்கு அரசு வேலை, மீனவர்களுக்கு இலவச வீடு, கோயில்களில் அனாதைக் குழந்தைகள் தங்கிப் படிக்க கருணை இல்லம், இலவச சமையல் எரிவாயு அடுப்பு, ஏழைகளுக்கு இலவச வீடு என அவர் விளிம்பு நிலை மனிதர்களுக்குச் செய்த உபகாரம் ஏராளம்.

தேர்தல் வாக்குறுதிப்படி 2006இல் கிலோ அரிசி 2 ரூபாய்க்குக் கொடுத்தவர் இரண்டே ஆண்டுகளில் அதைப் பாதியாகக் குறைத்தார். 2008 முதல் கிலோ

அரிசி 1 ரூபாய் விலையில் மாதம் 20 கிலோ அரிசி நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்டது. இதன் மூலமாக, பட்டினிச்சாவுகளே இல்லாத மாநிலமாக தமிழகம் மாறியுள்ளது.

***

நாம் கலைஞரின் பண்டைய முகம் எனக் கருதும் குறளோவியமும், சங்கத்தமிழும், தொல்காப்பியப் பூங்காவும் கூட உண்மையில் நவீனத்துவத்தின் முகம்தான். அவர் அந்தப் பழைய விஷயங்களை இன்றைய தலைமுறைக்கு அவர்களுக்குப் புரியும், அவர்கள் ரசிக்கும் நவீன வடிவில் கடத்த முயன்றார். அவற்றைக் கற்றறிந்தவனாக அது தன் கடமை என் நம்பினார். கட்சி வேலைகள் கழுத்தை நெரிக்கும்போதும், ஆட்சிப் பணிகள் அழுத்தம் தரும்போதும் இவற்றைச் செய்ய நேரம் ஒதுக்கினார்.

சென்னை வள்ளுவர் கோட்டம், குமரி வள்ளுவர் சிலை, மெரீனா கண்ணகி சிலை போன்றவை எல்லாம் கூட அவர்களை நவீன வகையில் மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சிகளே! தமிழை நவீனப்படுத்த, உலகெங்கும் பரப்ப உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்; தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் செய்தார். தமிழக அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடச் செய்தார். அண்ணா நூற்றாண்டு நூலகம் அவரது இவ்வகையான செயல்பாடுகளின் உச்சம்.

ஊனமுற்றோர் மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவருக்குத் திருநங்கை என்ற சொற்களை அதிகாரப்பூர்வமாக்கியது கூட நவீன

முன்னெடுப்பே. சரியாய் அடையாளப்படுத்துதலில் தொடங்குகிறது மாற்றம் என்று சொல்லாமல் சொல்கிறார். அவ்வகையில் விதவை என்ற சொல்லுக்குக் கூட மாற்றாய் கைம்பெண் என்றார். மெட்ராஸ் என்ற பெயரை சென்னை என்பதாக மாற்றியதையும் இதோடு இணை நோக்கலாம் (அதாவது முன்னதில் காலனி மனோபாவ மிச்சங்கள் இருப்பதால்).

திராவிடம் என்ற சித்தாந்தமே பழமைக்கு எதிரான நவீனக் கருத்தாக்கம்தான். அது இன்று தமிழகத்துக்கு அவசியமானதென்றும் வெல்லக்கூடியது என்றும் கடந்த அரை நூற்றாண்டில் நிரூபித்ததற்காக தமிழர்கள் அனைவருமே கலைஞருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். மூன்று தலைமுறைகள் அத்தத்துவம் நோக்கி வசீகரித்திருக்கிறார். இன்று கம்யூனிஸம் வீழ்ந்து விட்டது என்கிறார்கள். ஏன்? கம்யூனிஸக் கட்சிகள் ஆட்சியை இழந்து விட்டதை, அவர்கள் தவறான ஆட்சி முறையால் மக்கள் அவர்களை வெறுத்து விட்டதையே சித்தாந்தத் தோல்வியாகச் சித்தரிக்கிறார்கள். அந்த ஆபத்து எல்லாச் சித்தாந்தத்துக்கும் உண்டு. திராவிடத்துக்கும் இருந்தது. ஆனால் கலைஞர் அதை நடக்க விடாமல் பார்த்துக் கொண்டார். சமூக நீதி, மொழி உரிமை, மாநில சுயாட்சி என திராவிடம் என்பது இன்றும் அவசியமான, வெல்லும் சித்தாந்தம் என்று நிரூபித்துக்காட்டினார். மற்ற திராவிடக் கட்சிகளுக்கும்தானே அதில் பங்குண்டு எனக் கேட்டால் பெயரில் திராவிடம் கொண்டுள்ள கட்சிகள் எல்லாம் திராவிடக் கட்சிகள் ஆகி விட

முடியாது. அதை மீறி சில பங்களிப்புகளை அவர்கள் தம்மையறியாமல் செய்திருக்கலாம். மறுக்கவில்லை. நான் சொல்வது திட்டமிட்டுச் செய்தது. அப்படிப் பார்த்தால் அது அண்ணாவும் கலைஞரும்தான்.

கலைஞரின் பொதுவெளியில் செயல்பட்டுக் கொண்டிருந்த கடைசி ஐந்தாண்டுகளில் சமூக வலைத்தளங்களிலும் மிகத் துடிப்பாக இயங்கினார். அவர் ஒரு நவீனச் சிந்தனையாளர் என்பதற்கு அதையும் ஒரு குறியீட்டு உதாரணமாகக் காட்டலாம். காரணம், அவர் தலைமுறை சார்ந்த, அரசியலில் மிஞ்சியிருக்கும் அரசியல்வாதிகள் எவரும் அதைச் செய்யவில்லை. அவர்களுக்கு சமூக வலைத்தளங்கள் மக்களுடன் உரையாடும் ஊடகம் என்ற புரிதல் இல்லை. அடுத்து அவர்களுக்கு கணிப்பொறி, செல்பேசிகள் சம்பந்தமான தம் அறியாமை குறித்த ஓர் அச்சமும் அதன் நீட்சியான ஒவ்வாமையும் அவர்களுக்கு இருந்து வந்திருக்கிறது. ஒரு முதல்வருக்கு எவ்வளவு சொல்லிக் கொடுத்தும் அடிப்படையாய்க் கணிப்பொறியைப் பயன்படுத்தத் தெரியவில்லை என்று ஓர் அதிகாரி சொன்னதை இதோடு இணைத்துப் பார்க்கலாம். ஆனால் கலைஞர் ஓர் இளைஞனைப் போல் ஆர்வமாய் எல்லாவற்றையும் கற்றார். போலவே அவரே அவற்றில் பெரும்பாலும் எழுதினார். எதையாவது எழுதி விட்டு அட்மின் செய்த பிழை என்று ஓடி ஒளியும் பேடித்தனத்தைச் செய்தாரில்லை.

***

தமிழகத்தில் கலைஞரால் நிறைவேற்றப்பட்ட பல திட்டங்களைப் பிற மாநிலங்கள் பின்பற்றியுள்ளன. சிலவற்றை மத்திய அரசுமே பின்பற்றியிருக்கிறது. கலைஞர் ஒரு முன்னோடி. அந்த முன்னோடித்தன்மை ஒரு நவீனச் சிந்தனையாளனின் சாயல்.

காமராஜரும், அண்ணாவும் தமிழகத்தின் வளர்ச்சியைக் கனவு கண்டார்கள் என்பது உண்மையே. ஆனால் அதைத் தன் நிர்வாகத் திறன் மூலம் நடைமுறைப்படுத்தியவர் கலைஞர். சந்தேகமே இல்லாமல் நவீனத் தமிழகத்தின் சிற்பி கலைஞர்தான்!

c.saravanakarthikeyan@gmail.com

# சகாப்தம் படைத்த கலைஞர் கருணாநிதி!

*பாரதி மணி*



தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் ராஜாஜியை 'சாணக்கியன்' என்று அழைக்கிறார்கள். அரைநூற்றாண்டுக்கும் மேலாக கரடுமுரடான அரசியல் வாழ்க்கை வாழ்ந்த கருணாநிதி தான் இந்தப் பட்டத்துக்கு அருகதையானவர் என்று அவர் வாழ்க்கையை ஆராய்ந்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள். 1967இல் தி.மு.க.வின் முதல் மந்திரிசபையில் பொதுப்பணித்துறையைக் கேட்டுவாங்கியது, அண்ணா இறந்தபிறகு,

தி.மு.க.வின் முப்பெரும் தலைவர்களைத் தன் குடையின்கீழ் கொண்டுவந்தது போன்ற பல செயல்கள் இவரது சாணக்கியத்தனத்துக்குச் சான்றுகள்!

அவர்மேல் பலரும் வைத்த இன்னொரு குற்றச்சாட்டு, குடும்ப அரசியல். இருக்கட்டுமே... தனக்குப்போகத்தானே தானம்? வடக்கே ஷேக் அப்துல்லா குடும்பத்தில்  தொடங்கி, நேரு-காந்தி, லாலுபிரசாத், சரத் பவார், பிஜு பட்நாயக், Y.S.R., T.S.R. வரை எங்கேதான் இல்லை குடும்ப அரசியல்? இதில் மாதவராவ் சிந்தியா, ராஜேஷ் பைலட் குடும்பங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். எல்லாக் குடும்பங்களிலும் சதையாடுகிறது. தமிழ்நாடு மட்டும் விதிவிலக்கா என்ன? சரி... அவர்களென்ன பட்டாபிஷேகமா செய்துவைத்தார்கள்? அவர்கள் சந்ததிகளும் மக்களைச் சந்தித்து, ஓட்டு வாங்கித்தானே பதவிக்கு வருகிறார்கள்?

எனக்கு தி..க. வரலாறு தெரியாத இளம்பிராயம். காரணம், என் இளம்வயதில் நான் திருவனந்தபுரத்தில் படித்துக்கொண்டிருந்தேன். 1949 வாக்கில் என் பள்ளி நண்பனொருவன் அன்று மாலை ஒரு தமிழ்க்கூட்டம் இருப்பதாகச்சொன்னான். மலையாளக் கூட்டங்களையே கேட்டுப்பழகியிருந்த என்னை அந்த மாலைக் கூட்டத்துக்கு அழைத்துப்போனான். பழவங்காடி பிள்ளையார்கோவில் பக்கத்திலிருந்த மைதானத்தில் கூட்டம். சின்னதாக ஒரு மேடை போட்டு மைக் வைத்திருந்தார்கள். கூட்டத்தில் பேசியவர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், நாஞ்சில் மனோகரன் மற்றும் கருணாநிதி

(பெயரெல்லாம் பின்னர்தான் தெரியவந்தது). பக்கத்திலிருந்த பிள்ளையார் கோவில் பிரசித்திபெற்றது. கேட்டதெல்லாம் அருளும் கடவுள். ஒரு நாளைக்கு மூவாயிரம் சிதறு தேங்காய்கள் உடைபடும் என்றால் ஊகித்துக்கொள்ளலாம். அதைக் குத்தகைக்கு எடுத்துப் பணக்காரரர்களானவர்கள் பலபேர் இருந்தனர். பேச்சாளர்கள் தீந்தமிழில் பேசியது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மூன்றாமவர் பேசிக்கொண்டிருந்தபோது, திடீரென கூச்சல்... குழப்பம். "நிரீஸ்வரவாதி... திரிச்சுப் போடா!" (கடவுள் நம்பிக்கையில்லாதவனே, திருப்பிப்போ!) என்று கூச்சல்போட்டு சரமாரியாக கற்களெறிந்தனர். பேச்சாளர்களெல்லாம் கல்லடிக்குப் பயந்து மேடைக்கடியில் பதுங்கிக்கொண்டனர். வட்டமுகம் கொண்ட, நெற்றியில் வெட்டுத்தழும்பு இருந்த மதியழகனுக்கு லேசாகக்காயம். கூட்டம் பாதியிலேயே கலைந்து போனது. இது எனது 12 வயதில் ஏற்பட்ட அனுபவம்!

கலைஞரை இன்னொருமுறை தில்லியில் பார்த்திருக்கிறேன். 1968ஆம் ஆண்டு. சக அமைச்சர்களான கருணாநிதி, மாதவன், சாதிக் பாட்ஷாவுடன் முதல்வர் அண்ணா மத்திய அமைச்சர்களைப் பார்க்க தில்லி வந்திருந்தார். அவர்கள் தில்லி வந்திருந்த நாளில் எனது நாடகக்குழு DBNS 'தூயவன்' எழுதிய 'தீர்ப்பு' நாடகம் அரங்கேற இருந்தது. அண்ணா தில்லியில் எம்.பி.யாக இருந்தபோது எங்கள் நாடகங்களைப் பார்க்கத் தவறாது வருவார். அவர் முதலமைச்சரானபிறகு பழைய நட்பை

மறந்திருப்பாரோ என்ற சந்தேகம் எனக்கிருந்தது. ஏதோவொரு அசட்டுத் தைரியத்தில் அவரைப்பார்த்து நாடகத்துக்கு வருமாறு அழைக்கப்போனேன். மலர்ந்த முகத்துடன் பழைய ஞாபகங்களை நினைவுகூர்ந்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார். தன் செயலருக்கு என்னை அறிமுகப்படுத்திவைத்தார். மாலை நாடகத்துக்கும் வருவதாகச் சொன்னார். எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் சொன்னபடியே தன் மூன்று சக அமைச்சர்களுடன் மாலை AIFACS தியேட்டருக்கு வந்தார். நாடக இடைவேளையில் மேடையேறி, நாடகத்தை உயர்வாகப் பாராட்டி நடிகர்களை வாழ்த்தினார். நாடகம் ஒரு கோவில் குருக்களைச்சுற்றி நடப்பது.. குருக்கள் மகளை ஒருதலையாகக் காதலித்து, அது கிடைக்காது என்று தெரிந்ததும் மனமுடைந்து உயிர்விடும் அப்பாவி ‘ராமு’ பாத்திரம் எனக்கு. அது இந்துமதத்தின் பெருமைகளை விவரிக்கும் நாடகம். எழுதியது ஒரு முஸ்லிம் எழுத்தாளர் ‘தூயவன்’. நாடகத்தைப் பாராட்டிப் பேசியதோ தி.மு.க. முதலமைச்சர். ஆனால் எங்கும் எந்த நெருடலும் இல்லை. அதுதான் அண்ணா! நடிகர்களுடன் போட்டோவும் எடுத்துக்கொண்டார் முதல்வர். நான் கலைஞர் காலடியில் தரையில் உட்கார்ந்து எடுத்த போட்டோ என் தில்லி வீட்டில் இன்னும் இருக்கிறது. அப்போதும் அவருக்கு வணக்கம் சொன்னதோடு சரி! நான் தில்லியை விட்டு சென்னைக்கு வந்து 18 வருடங்கள் ஆகின்றன. கலைஞர் கலந்துகொண்ட ஒரு கூட்டத்துக்கும் போனதில்லை. அவரை நேரில் சந்தித்ததுமில்லை. கூடாது என்பதல்ல... அப்படிச் சூழல் நேரவில்லை!

காலை ஐந்துமணிக்கே எழுந்து தன் வேலைகளைத் தொடங்கும் அவரது சுறுசுறுப்பு என்னை வியக்கவைக்கிறது. தொடக்க காலத்தில் அவரது நாவன்மை மிக்க சட்டசபை வாதங்கள் எதிர்க்கட்சியினரை வாயடைக்க வைத்தது.

அவரது பரந்துபட்ட வாசிப்பு என்னைப் பிரமிக்க வைக்கிறது. ஒரு சின்ன உதாரணம். அப்போது நான் 'உயிர்மை'யில் தொடராக எழுதிக்கொண்டிருந்த காலம். ஒருநாள் என் நண்பரொருவர் எனக்கு போன் பண்ணி, 'மணிசார், ஒரு சந்தோஷமான சமாசாரம். என் சினேகிதர் வக்கீலா இருக்காரு. (பெயர் கே.எஸ். ராதாகிருஷ்ணனாகவும் இருக்கலாம்... அல்லது வேறு யாரோ... நினைவில்லை) கலைஞர் வீட்டு நண்பர். இன்னிக்குக் காலையிலே கோபாலபுரம் போனாராம். அவர் கையிலே இன்னிக்கு வந்த உயிர்மை இதழ் இருந்தது. தயாளு அம்மாளுக்கு உடம்பு சரியில்லேனு பாக்கப்போயிருக்கார். பெரியவர் இவரைப்பார்த்து, 'வாய்யா! கையிலே என்ன?... உயிர்மையா? அதை என்னிடம் குடுத்திட்டு உள்ளே போ. என் காப்பி இன்னிக்குத்தான் வரும். நீ வர்றதுக்குள்ளே மனுஷ்ய புத்திரன் தலையங்கமும், பாரதி மணின்னு ஒரு பையன் எழுதறான்... அவன் கட்டுரையும் படிச்சிட்டுத் தரேன்!' என்றாராம். அதுக்கு நண்பர், 'தலைவரே! பாரதி மணி சின்னப்பையன் இல்லை. எழுபத்தஞ்சுக்கு மேலே இருக்கும். ஆனா இப்போதான் எழுதறாரு' என்று பதிலளித்தாராம். ஒரு ரெண்டணா எழுத்தாளனுக்கு வேறென்ன கொடுப்பினை வேண்டும்! அப்போது மனுஷ்ய புத்திரன்

தி.மு.க.வில் சேருவோமென்று, அவரேகூடக் கனவு கண்டிருக்கமாட்டார்!

கலைஞருக்குப் பாராட்டுக்கள் மிகவும் பிடிக்கும். அவரது கடைசி முதல்வர் பதவிக்காலத்தில் நிறையப் பாராட்டு விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. நிறையப்பேர் அவரை வழிய வழியப் பாராட்டினார்கள். அப்போது அவர் முகத்தில்தான் எவ்வளவு பெருமிதம். நெஞ்சு விம்ம புன்சிரிப்போடு கேட்டுக்கொண்டிருப்பார். அது ஒரு தப்பாய்யா? எனக்கும்தான் பாராட்டுகள் பிடிக்கும். ஆனால் பாராட்ட ஒரு கூட்டம் திரட்ட வேண்டுமே! கடவுளுக்கே பாராட்டுகள் பிடிக்குமாம். ஸ்தோத்திரங்கள், பஜனை எல்லாம் இறைவனுக்கான பாராட்டுகள்தானே?

இதில் சோகம் என்னவென்றால், மாற்றுக்கட்சி ஆட்சிக்கு வந்ததும், பெயர்ப் பலகைகளில் கலைஞர் கருணாநிதி நகர் என்பது கே.கே. நகராகச் சுருங்கிவிடும்... அவர்களது மனங்களைப்போலவே. அவர்மேல் பல எதிர்மறை விமர்சனங்கள் கொண்ட மறைந்த ‘பரீட்சா’ ஞாநி மட்டுமே தன் விலாசத்தைச் சொல்லும்போது வாய்நிறைய, ‘கலைஞர் கருணாநிதி நகர்’ என்று சொல்லக்கேட்டிருக்கிறேன். நாஞ்சில் நாடனும் ‘கலைஞர்’ என்றே விளிப்பார்.

தமிழக அரசியல் வரலாற்றில் கலைஞர் தவிர்க்கமுடியாத ஆளுமை. He can be loved or hated….But he can never be ignored! கலைஞர் மீது எத்தனையோ ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. வீராணத்திலிருந்து, சர்க்காரியா கமிஷன், 2G உட்பட. ஆனால் இதுவரை ஒன்றுகூட

நிரூபிக்கப்பட்டு உச்சநீதிமன்றம் தண்டனை தரவில்லை. அரசியல் விரோதிகள் அவர்மேல் என்ன குற்றம் சாட்டினாலும், நீதிதேவதையின் முன் குற்றமற்றவராகத்தான் அவர் மெரீனா போனார். ஆனால் ஜெயலலிதாவுக்கு அந்த பாக்கியம் கிட்டவில்லை! தண்டிக்கப்பட்ட குற்றவாளியாகத்தானே மெரீனாவில் படுத்துக்கொண்டிருக்கிறார்?

1967இல் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற கருணாநிதி, தான் யாரென்பதைத் தெளிவாக 1952லேயே 'பராசக்தி'யில் சொல்லியிருக்கிறார்.

"கோவிலில் குழப்பம் விளைவித்தேன்... கோவிலே கூடாது என்பதற்காக அல்ல... கோவில் கொடியவர்களின் கூடாரமாக மாறக்கூடாது என்பதற்காக... பூசாரியைத் தாக்கினேன்... அவன் பக்தன் என்பதற்காக அல்ல... பக்தி பகல்வேஷமாய் ஆவதைக் கண்டிப்பதற்காக!. சுயநலம் என்பீர்கள்.. ஆம்... என் சுயநலத்தில் பொதுநலமும் கலந்திருக்கிறது. ஆகாரத்துக்காக அழுக்கைச் சாப்பிட்டு, தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன்... அதைப்போல!"

தமிழ்நாட்டுத் தடாகத்தில் அழுக்கு அதிகமாக இருந்தது... மீனுக்கும் அதிக வேலை இருந்தது!

தமிழ்நாட்டு வரலாற்றில் கலைஞர் கருணாநிதி நிரந்தரமான இடத்தைப் பிடித்துவிட்டார். He was a Jack of all trade. அண்ணாவுக்கு இல்லாத இடம் இவருக்குண்டு. ஒரு சகாப்தமே படைத்திருக்கிறார். பாவம்!...... 94 வருடங்கள் உழைத்து உழைத்துக் களைத்துப்போயிருப்பார்.

## மெரீனாவில் நிம்மதியாக ஓய்வெடுக்கட்டும்!

bharatimani90@gmail.com

# ஈழமும் கலைஞரும்: ஒரு கலை இலக்கிய நோக்கு கலைஞரை அறிந்தேன்

*பேராசிரியர் பாலசுகுமார் (இலங்கை)*



சேனையூர் ஈழத்தின் வரலாறும் பண்பாடும்
தொன்மைத் தமிழர்களின் ஆதிக்

குடியிருப்புகளில் ஒன்று. தமிழ்க் கல்வெட்டுகளும் புராதன வாழ்விடங்களும் சோழர் காலத்து நினைவுச் சின்னங்களும் நிறைந்த கிராமம்.அங்கிருந்தே கலைஞரை அறியத் தொடங்குகிறேன். ஈழத்தின் ஒரு கடைக் கோடி கிராமத்திலும் கலைஞர் அவர் எழுத்துக்களால் அறியப்பட்டார்.

எனக்கு அப்போது பத்து வயது இருக்கலாம். என் அம்மா சின்னமாமா என அழைக்கும் கனசிங்கம் அவர்கள் கல்லம்பாரில் இருந்தவர். அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி போவது வழக்கம். போகும் போதெல்லாம் எனக்கு சில்லறைக் காசு தருவார். அதனால் எனக்கு அவரோடு மிகுந்த விருப்பம். அவர் வீட்டில் இருந்தால் புத்தகமும் கையுமாகவே இருப்பார்.

கைக்கு அடக்கமான கறுப்பு சிகப்பு அட்டையில் அமைந்த புத்தகங்களில் கண்ணில் பட்ட மூவர் பெரியார், அண்ணா, கலைஞர்.

அந்த வயதில் அவற்றை எடுத்து வாசிப்பேன். எதுவும் விளங்காத அந்தப் பருவம் ஆனாலும் என்னுள் பதிந்து போன எழுத்தாய் அவை இருந்தன. அடுக்கு மொழியும் அலங்காரத் தமிழும் அப்போதே என்னுள் செரித்திருக்க வேண்டும். இன்று வரை ஏதோ ஒரு வகையில் அந்த எழுத்தின் தாக்கம் இருக்கிறது என்பதை உணர்கிறேன்.

## வசனங்களால் எனைக் கவர்ந்த கலைஞர்

பாடசாலையில் நாடகம் பழக்கிய என் நாடக ஆசான் கேணிப் பித்தன் அருளானந்தம் அவர்கள்

ஒரு பகுத்தறிவுவாதி. திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர். பராசக்தி வசனங்கள், மனோகரா வசனங்களைப் பேசிக் காட்டி நடிப்பு சொல்லித் தந்தவர். அன்று நான் பேசிய வசனங்கள்:

“பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து கண்ணே முத்தே என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே, ‘வீரனே! என் விழி நிறைந்தவனே!’ என்று யாரைச் சீராட்டி பாராட்டினீர்களோ அவனை அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து, சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டும் என்ற தங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?"

இந்த வசனங்களை நான் மனப்பாடம் செய்த நாட்கள், இதே பாணியில் என் ஆசிரியர் எழுதித் தயாரித்த ‘புரட்சித் துறவி’ நாடகத்தில் ராஜ குருவாக நடித்த அந்த நாடக நினைவுகள் கலைஞருடன் இணைந்து வருவது.

பேச்சுப் போட்டிகளில் நான் மனனம் செய்து பேசிய பல பேச்சுக்கள் கலைஞர் மொழியிலேயே அமைந்தமை என் நாவுக்கு சுவையாய் என்றும். திருக்குறள் பற்றிய என் பேச்சு, தமிழ் ஆசிரியர் கலாபூசணம், திரு செவிபுணசேகரம் அவர்கள் எழுதிய "தித்திக்கும் தேன் சொட்டும் தீந் தமிழ் பெருங்குடி மக்கள் பேசும் வாழ்ந்த வாழ்க்கையின் வரலாறே வள்ளுவன் குறளாகும். திருக்குறள் என்பது சிந்தைக்கு இனியதாய் செவிக்கு இனியதாய் முந்தித் தமிழன் முறையாக வாழ்ந்த நிலை அத்தனையும் குறட் பாவில் முத்துக்களாய்க் கோர்த்து இப்பாருக்கு ஈந்தார் எம் பெருமான்

வள்ளுவனார்.அறமென்றும் பொருளென்றும் அகிலத்தின் இன்பமென்றும் முறையாகத் தொகுத்து முத்துக்களாய் எமக்களித்தார்."

இந்த உரை அப்படியே கலைஞர் பாணியில் அமைந்தது எனக்குப் பரிசுகளையும் பாராட்டையும் பெற்றுத் தந்தமை கலைஞரை என்றும் நினைவு கூரும்.அன்றைய நாட்களில் பலரும் கலைஞரின் எழுத்தில் மயங்கிக் கிடந்தனர்.

என் அப்புச்சி ஒரு தீவிர சிவாஜி ரசிகர்: மூதூர் இம்பீரியல் தியட்டரில் ஓடிய பராசக்தி திரைப்படத்துக்கு அவரே என்னை அழைத்துச் சென்றார்.என்னுடைய பதின்ம வயதில் படிந்த வசனங்கள் இன்றும் நினைவுக் கீறலாய் நெஞ்சில் எப்போதும்.

"கோவிலிலே குழப்பம் விளைவித்தேன். கோவில் கூடாது என்பதற்காக அல்ல. கோவில் கொடியவர்களின் கூடாரமாய் இருக்கக்கூடாது என்பதற்காக. பூசாரியைத் தாக்கினேன். அவன் பக்தன் என்பதற்காக அல்ல. பக்தி பகல் வேஷமாகி விட்டதைக் கண்டிப்பதற்காக.

உனக்கேன் இவ்வளவு அக்கறை, உலகத்தில் யாருக்கும் இல்லாத அக்கறை என்று கேட்பீர்கள். நானே பாதிக்கப்பட்டேன். சுயநிலம் என்பீர்கள். என் சுயநிலத்தில் பொதுநலம் கலந்திருக்கிறது. ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டு தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன் - அதைப் போல."

## நடிப்பு பயிற்சியில் கலைஞர் வசனங்கள்

அப்போதெல்லாம் திரைப்பட வசனங்கள் சிறிய புத்தகங்களாக மலிவு விலையில் வெளிவந்தன. கிராம வசிக சாலைகளில் அவற்றைப் பார்க்கலாம். பலர் நாடகங்கள் எழுதுவதற்கான மூல பாடங்களை இந்த வெளியீடுகளிலிருந்தே பெற்றுக் கொண்டனர்.

என்னுடைய சித்தப்பா கலாபூசணம் வில்லுப்பாட்டு வீரசிங்கம் ஒரு சிறந்த நடிகர். அவர் அடிக்கடி பராசக்தி வசனங்களைப் பேசிக் காட்டி நடிப்பு சொல்லித் தருவார். ராஜா ராணி படத்தில் வரும் கலைஞரின் தீந்தமிழ் நடையை சிவாஜி பேசுவது போலவே அப்படியே மூச்சு விடாமல் பேசி நடிப்பார்.

கலைஞருடைய வசனங்கள் நல்ல நடிகர்களை உருவாக்க காரணமாயும் நடிப்புக்கான பாடமாகவும் இன்று வரை தொடர்வது அவர் தமிழுக்கு, தமிழ் கூறும் நல்லுலகெங்கும் ஒரு பண்பாட்டு படர்ச்சியை சொல்லி நிற்கிறது.

## பேச்சாளர்களை உருவாக்கிய கலைஞர் பாணி

தமிழ்நாட்டு அரசியல் மேடைகளைப் போலவே கலைஞர் பாணியில் ஈழத்து அரசியல் மேடைகள் தமிழரசுக் கட்சியின் பல பேச்சாளர்கள் அந்த பாணியில் பேசுவதை ஓடி ஓடிப் பார்த்திருக்கிறேன். இந்த வரிசையில் மலைமதி சந்திரசேகரம்,ஈழத்து நாதன்,முன்னாள் அமைச்சர் செ.இராசதுரை இன்னும் பலர். இலக்கியப் பேச்சில்

ஈழமேகம் பக்கிர் தம்பி அப்படியே கலைஞரை நினைவுபடுத்தும் பேச்சாளர். இந்த வரிசையில் ஈழமெங்கும் பலர்.

மலையகத்தில் தொடங்கப்பட்ட இலங்கைத் திராவிட முன்னேற்ற கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்கள் பலர் கலைஞரையே பிரதி செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1976ஆம் ஆண்டில் தந்தை செல்வா இறந்தபோது அந்த இறுதி ஊர்வலத்தில் கலைஞர் போலவே அந்த நிகழ்வை ஒலிபெருக்கியில் வர்ணனை செய்தவர் நண்பர் சிவலிங்கராசா அவர்கள். பின்னர் அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியரானார்.

## என்னைக் கவர்ந்த பூ ம் புகார்

கண்ணகி கதை என் வாழ்வோடு மிக நெருக்கமானது. ஈழத்தில் கண்ணகி ஒரு பெண் தெய்வமாகப் போற்றப்படுகிறாள். கிழக்கு மாகாணத்தில் கிராமம்தோறும் அவளுக்குக் கோயில்கள் உள்ளன. வருடம்தோறும் வைகாசி மாதத்தில் ஏழு நாள் சடங்கு நடைபெற்று விழா கொண்டாடப்படுகிறது. எங்கள் குடும்பத்தில் என் பாட்டனார் சேனையூரில் கண்ணகிக்குப் பூசை செய்யும் பூசாரியாய் இருந்தவர். நான் பிறந்ததிலிருந்து கண்ணகி கதை என்னோடு இன்று வரை பயணிக்கிறது.

"ஒருமா பத்தினி வந்தாள்
உலகேழும் தழைத்திட
வந்தாள் வந்தாள்"

எனும் கண்ணகி குளிர்த்தி பாடல் எப்போதும் என் வாழ்வோடு கலந்தது. அந்த நினைவுகளுடனேயே நான் பூம்புகார் படத்தைப் பார்க்கிறேன். தமிழ்மீதான ஈர்ப்பை எனக்கு ஏற்படுத்திய புறக் காரணிகளில் பூம்புகாரும் சிலப்பதிகாரமும் ஈழத்துக் கண்ணகி குளிர்த்தியும் முக்கிய பங்கு வகிக்கிறது.

## மறக்க முடியாத "மறக்க முடியுமா" திரைப்படம்

நான் கண்ணீர் சிந்தி கசிந்த படங்களில் மறக்க முடியுமா படமும் ஒன்று. "காகித ஓடம் கடல் அலை மீது போவது போலே மூவரும் போனோம்" என்ற பாடல் வரிகள் பல்லாயிரம் தமிழ் சினிமா பாடல்களைக் கடந்து மறக்க முடியாத பாடலாய் மனதில் பதிந்துள்ளது.அவர் வசனத்தில் வந்த எல்லாப் படங்களையும் பார்த்திருக்கிறேன். கூர்மையான சமூக விமர்சனக் கண்ணோட்டம் எப்போதும் அவரது பட வசனங்களில் நிறைந்திருக்கும்.

## 1981ஆம் ஆண்டு கலைஞர் கைது

1981 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சிக் கலத்தில் கலைஞர் கைது செய்யப்பட்டார். அப்போது நான் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு கற்கை நெறியில் பயின்று கொண்டிருந்தேன். நாங்கள் கலைஞர் கைதைக் கண்டித்து யாழ்ப்பாணக் கச்சேரி வரை ஒரு மிகப் பெரிய ஊர்வலத்தை நடத்தினோம். கலைஞரை விடுதலை செய்ய வேண்டும் என ஒரு மகஜரை யாழ் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்தோம்.

## கலைஞர் நாடகங்களோடு

தமிழ் நாடக வரலாற்றை எழுதுபவர்கள் கலைஞரது நாடகங்களைக் கடந்து சென்று விட முடியாது. நாடகம் ஒரு சமூக இயக்கமாக மக்கள் மனங்களில் பகுத்தறிவையும் அரசியல் விழிப்புணர்வையும் உருவாக்கும் என்பதற்கு கலைஞரது நாடகங்களே சாட்சி. மேலைத் தேய மரபில் இப்சனின் நாடகங்கள் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தின. கலைஞர் நாடகங்களும் அப்படியே. ஈழத்திலும் கலைஞரது நாடகங்கள் அன்றைய சமகால நாடகச் சூழலில் தர்க்கத்தை உருவாக்கின.

யாழ்ப்பாணம், மலையகம், கிழக்கு மாகாணம் என இயங்கிய நாடக மன்றங்களில் கலைஞரது நாடக வசனங்கள் பேசப்பட்டன. பராசக்தி திரைப்படத்தைப் பலர் நாடகமாக நடித்த கதைகளெல்லாம் உள்ளன. குறிப்பாக "ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடினாள்" என்ற நீண்ட தொடர் வசனத்தை. அதன் தாக்கம் ஈழத்து நடிகர்களிடம் பரவலாக இருந்தமையை மறுத்து விட முடியாது. நானே இந்த வசனங்களைப் பேசி நடித்திருக்கிறேன்.

## ரோமாபுரிப் பாண்டியனும் நானும்

சங்க இலக்கியத்தைப் படித்தபோது அதில் யவனரது வணிகம் பற்றியும் கிரேக்கத் தமிழர் தொடர்பு பற்றியும் அறியக் கிடக்கிற செய்திகள் ரோமாபுரிப் பாண்டியனில் நவீன இலக்கிய மொழியாக வாசகர்களால் பார்க்கப்பட்டது. கல்கியும் அகிலனும் சாண்டில்யனும் எழுதிய

வரலாற்று நாவல் மொழியில் கலைஞர் செம்மொழி சார்ந்து ரோமாபுரிப் பாண்டியனைத் தந்தார். வாசிப்பில் புதிய ரசனையும் அனுபவமும் என்னுள் செரித்தது. அதோடு இணைந்து அவர் எழுதிய பாயும் புலி பண்டாரக வன்னியன் எனும் நாவல் ஈழத்தின் கடைசித் தமிழ் மன்னன் பற்றிப் பேசுகிறது. ஆங்கிலேயரோடு போரிட்டு மடிந்த அவன் ஈழத்தில் கட்டபொம்மனோடு வைத்துப் பேசப்படுகிறான். கற்சிலை மடுவில் அவன் நினைவாக ஓர் நினைவுக் கல்லைப் பிரித்தானியரே நிறுவியமையும் வரலாறு. அந்த நினைவுகளையும் மீட்டும் வரலாற்றுப் புதினமாக பண்டாரக வன்னியன் பேசப்படும்..

## கலைஞர் சிறுகதைகளோடு

கலைஞர் சிறுகதைகள் சுயமரியாதையையும் பகுத்தறிவையும் பேசின. கலைஞர் இருநூறுக்கு மேற்பட்ட சிறுகதைகள எழுதி தமிழ் சிறுகதை வரலாற்றில் தனித்துவமான தடம் பதித்தவர்.

எழுத்தாளர் பிரபஞ்சன் இப்படிக் கூறுவார்:

"ஒரு கருத்து, சிந்தனை, அனுபவத்தைச் சமூகம் சார்ந்து வெளிப்படுத்தவே கலைஞர் சிறுகதை வடிவத்தை எடுக்கிறார் அல்லாமல், கருத்தற்ற சமூக உணர்வற்ற ஒரு சிறுகதையைக் கூட அவர் எழுதியதில்லை. இது ஓர் எழுத்தாளனுக்குப் பெருமை தரும் விசயம்."

வாசிக்க கிடைத்த நளாயினி,கண்ணடக்கம்,நரியூர் நந்தியப்பன்,அணில் குஞ்சு,விஷம் இனிது ஆகிய கதைகள் பகுத்தறிவு பரவிக் கிடந்த கதைகள்.

கலைஞரின் எழுத்து பற்றி பேராசிரியர் சிவத்தம்பி இப்படிக் கூறுவார்:

"தமிழகத்தின் உள்ளூர் வரலாற்று நோக்கில் (local history) இவை முக்கியமானவையாகும். எடுத்துரைப்பின் (Narration) முறை, சம்பவங்களை (தொடர்ந்தும்) புலனுகர்வுக் கவர்ச்சியுடையதாக அமைந்துவிடும். கருணாநிதி அவர்களிடம் கவித்துவம் இருந்தது. அது அவருக்கு தி.மு.க.வின் மற்றைய எழுத்தாளர்களை விட ஒரு வன்மையை வழங்கிற்று. இந்தக் கவித்துவமே இவரது திரைப்பட வசனங்களுக்கும் மெருகு அளித்தது."

## தமிழாராய்ச்சியும் கலைஞரும்

தமிழ் ஆராய்ச்சியின் உலகளாவிய பரவலுக்கு கால் கோளிட்டவர் வண தனிநாயகம் அடிகளார்.முதல் மகாநாடு 1966இல் மலேசியாவில் நடைபெற, இரண்டாவது மகாநாடு 1968இல் சென்னையில் நடைபெறுகிறது. அந்த மகாநாட்டுக்கு முன்னின்று உழைத்தவர் கலைஞர். அந்த மகாநாட்டில் அவரது குரல் வழி சென்னை வானொலி ஒலிபரப்பிய போது அதனைக் கேட்டு மகிழ்ந்தவன் நான். 1968 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கப் படுவதற்கும் கலைஞரின் ஆலோசனைகளே முக்கிய வழிகாட்டியாய் இருந்தன என்பது மனங் கொள்ளத்தக்கது.

செம்மொழி மகாநாடு 2010இல் கலைஞர் தலைமையில் நடைபெற்றபோது நான் அந்த மகாநாட்டில் பங்கு பெற முடியாவிட்டாலும் விழா மலரில் என் கட்டுரை இடம் பெற்றதோடு மகாநாட்டுக்காக ஒரு கட்டுரையும்

அனுமதிக்கப்பட்டது “ஈழத் தமிழரின் ஆடல் வடிவங்கள்” என்ற தலைப்பிலது அமைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்த மகாநாட்டில் நான் கலந்து கொள்ள முடியவில்லை.

## கலைஞர் கைது

2001 ஆம் ஆண்டு நள்ளிரவில் கலைஞர் கைது செய்யப்படுகிறார். சுனாமியில் மரணித்த என் மகள் அனாமிகாவுக்கு அப்போது வயது பதினொன்று. தொலைக்காட்சியில் ஓடிய கலைஞர் கைது காட்சிகளைப் பார்த்து அவள் வெளிப்படுத்திய உணர்வு மொழி இன்னமும் மறக்க முடியாத நினைவு. உலகத் தமிழர்கள் அனைவரையும் உலுக்கிய சம்பவம் அது. நானும் நடுங்கி நின்ற நாள். அண்மையில் 'நள்ளிரவில் கலைஞர் கைது' கே.கே.சுரேஸ்குமார் என்ற நிருபரின் நேரடிச் சாட்சியாக வந்த அந்த நூலை வாசிக்க கிடைத்தது. வரலாற்றை யாரும் மறைத்து விட முடியாது என்பதற்கு இந்த நூல் சாட்சியாக உள்ளது.

## சென்னை சங்கமம்

சென்னை சங்கமம் நிகழ்ச்சி மூலமாக கலைஞர் மகள் கனிமொழியோடு ஒரு இலக்கிய கலைத்துவ அறிமுகம் பேராசிரியர் குணசேகரன் வழி கிடைக்கிறது. இன்று வரை அவருடன் நல்ல நட்பை பேண முடிகிறது. 2008ஆம் என்று நினக்கிறேன், கலைஞர் நாடகங்கள் பற்றிய உரையை நான் நிகழ்த்தியது ஒரு இனிய இலக்கிய அனுபவம். அந்த நிகழ்வை கவிஞர் இளையபாரதி ஏற்படுத்தியிருந்தார். சென்னை சங்கமம்

நிகழ்வில் கலைஞரைப் பார்க்க கிடைத்தது ஒரு மகிழ்ச்சியான நினைவின் நீட்சி.

மீண்டும் அவரை சந்திக்க மனம் நாடி நிற்கிறது.

கலைஞரே, உங்களைப் பார்க்க மெரீனா வருவேன்.

sugubala18@gmail.com

# கடன்பட்டவன் உள்ளம்

*பூவண்ணன் கணபதி*



விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்பது முட்டாள்தனம் என்று இன்றுவரை சொல்லும் கூட்டமே நாடெங்கும் அதிகமாக இருக்க, இதனை

முப்பது ஆண்டுகளுக்கு முன்பே சாத்தியமாக்கியவர் கலைஞர்.

மூன்று மாவட்டத்துக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்பதை பெரும் மாற்றமாக முன்வைக்கும் மதவெறி கூட்டத் தலைவனின் வெட்டி பேச்சுகளுக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே மாவட்டத்துக்கு ஒரு அரசு மருத்துவக் கல்லூரி என்று திட்டமிட்டு அதற்கு அடித்தளமிட்டவர் கலைஞர். இன்றும் அரசு மருத்துவக் கல்லூரி இடங்கள் அதிகம் இருக்கும் மாநிலம் தமிழ்நாடுதான்.

ரூபாய்க்கு மூன்று படி என்று சொல்லி ஆட்சியைப் பிடித்தார்கள். ஆனால் கொடுத்தார்களா என்ற கிண்டலுக்குப் பதிலாக இலவசமாக மாதாமாதம் குடும்பத்துக்குப் பத்து படி கிடைக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கியவர். தமிழ்நாட்டை விட பல மடங்கு வருவாய் உள்ள மத்திய அரசு மற்றும் பிற மாநிலங்கள் யோசிக்கக்கூட தயங்கும் நிலையில் இதனை எளிதாக நிறைவேற்றியவர் கலைஞர்.

திமுகவை அவரின் கடைசித் தேர்தலில் தோற்கடித்தது தமிழகம் அல்ல. கொங்கு பகுதி தான். அங்கு குறிப்பிடத்தக்க சதவீதம் உள்ள கொங்கு வெள்ளாளரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து கல்வி, வேலைவாய்ப்புகளில் குறிப்பிடத்தக்க இடங்களைப் பிடிக்க காரணமாக இருந்தவர் கலைஞர்.

அங்கு குறிப்பிடத்தக்க சதவீதம் உள்ள இன்னொரு சமூகம் அருந்ததியர் சமூகம்.நாடெங்கும் பட்டியல் இனத்தின் உள்ளே முயற்சிக்கப்பட்ட உள் ஒதுக்கீடு நிறைவேற இன்றுவரை ஆயிரம் தடைகள் இருக்க,

அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை எளிமையாக உறுதியோடு நிறைவேற்றி இன்றுவரை வெற்றிகரமாகத் தொடரக் காரணம் கலைஞர்.

மத அடிப்படையில் இட ஒதுக்கீடா, இட ஒதுக்கீடு தவறு. அப்படிக் கொடுத்தாலும் இட ஒதுக்கீடு இந்துக்களுக்கு மட்டுமே என்று கொதிக்கும் இந்துமதவெறிக் கூட்டம் இன்றும் அதிகமாக இருக்கும் சூழலில் கூட இஸ்லாமியருக்கு இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு செய்து அது வெற்றிகரமாகத் தொடரக் காரணம் கலைஞர்.

கலைஞரை அதிகம் திட்டிய சாதி தலைவர்களில் வன்னியர்களுக்கு எளிதாக முதலிடம் கிடைக்கும். வன்னியர்களையும், மீனவர்களையும், சீர்மரபினரையும் தனிப் பிரிவாக்கி இருபது சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு சட்டம் இயற்றி நிறைவேற்றியவர் கலைஞர்.

பழங்குடியினர்/பட்டியல் இனத்தவருக்கான இட ஒதுக்கீட்டை 16 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக 1971 இல் உயர்த்திய அரசு கலைஞரின் அரசு. மீண்டும் 1989இல் பழங்குடியினருக்குத் தனியாக ஒரு சதவீதம் ஒதுக்கி பட்டியல் இனத்தவர் ஒதுக்கீடு தனியாக 18 சதவீதமாக அதிகரிக்க சட்டம் இயற்றியதும் கலைஞரின் திமுக அரசுதான். இதைப்போல வேறு எந்த மாநிலத்திலாவது இட ஒதுக்கீடு அதிகரித்திருக்கிறதா என்பதை அலசினால் கலைஞரின் அரசு இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் காட்டிய உறுதி விளங்கும்.

பட்டதாரி இல்லா குடும்பங்களைச் சார்ந்த மாணவ மாணவிகளுக்கு இதன் அடிப்படையில் முற்பட்டோர் வகுப்பில் வருபவர்கள் உட்பட ஐந்து ஊக்க மதிப்பெண்கள் தந்த அரசு கலைஞரின் அரசு. அதன் அடிப்படையில் இன்றுவரை கட்டண சலுகை, ஸ்காலர்ஷிப் தரும் மாநிலம் தமிழ்நாடு.

மிக எளிதாக, எளிமையாக முற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ-மாணவிகளுக்கும் இடஒதுக்கீட்டுக்கு இணையான திட்டத்தை தந்த அரிய தலைவர் கலைஞர்தான். க்ரீமிலேயர் என்பதை வன்மத்தோடு இடஒதுக்கீட்டுக்கு எதிராகப் பயன்படுத்த முயலும் அதிகார வர்க்கத்தைப் போல அல்லாமல்,யாரும் எதிர்க்க முடியாத வண்ணம் ஊக்க மதிப்பெண் திட்டத்தின் மூலம் கொண்டு வந்தவர் கலைஞர்.

கிராமப்புற மாணவர்களுக்காக கிராமப்புற இட ஒதுக்கீடு கொண்டு வந்த அரசு கலைஞரின் அரசுதான். இதனால் பலனடைந்த மாணவர்களைக் கண்டு வெறுப்புக்கொண்ட நீதிமன்றங்கள் இதனையும் நிராகரிக்க, மனம் தளராத விக்ரமன் போல நுழைவுத் தேர்வு பெண்களுக்கு, கிராமப்புற மாணவ-மாணவிகளுக்குத் தடையாக இருப்பதால் அதனை நீக்கியவர் கலைஞர்தான்.

அற்புத நுழைவுத் தேர்வுகளின் காரணமாக IIT, JEE போன்ற தேர்வுகளில் மாணவிகள் வெறும் எட்டு சதவீத இடங்களைப் பிடிக்கிறார்கள் என்று முதலைக் கண்ணீர் வடித்து அவர்களுக்கு கூடுதல் இடங்களாக 14 சதவீதம் என்று கல்வியில் ஒதுக்க முயற்சிப்பதை முப்பது ஆண்டுகளுக்கு முன்

பணிகளில் சாதித்த அரசு கலைஞரின் தலைமையிலான திமுக அரசு. அரசுப் பணிகளில் பெண்களுக்கு முப்பது சதவீதம் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் உத்தரவிட்ட அரசு கலைஞரின் அரசு.

பள்ளிகளில் பாலியல் குற்றங்கள் குறைய ஐந்தாம் வகுப்பு வரை ஆசிரியைகள் மட்டும்தான் என்று உத்தரவிட்டு நிறைவேற்றிய அரசு கலைஞரின் அரசு. இன்றும் மத்திய அரசுப் பள்ளிகளிலோ, மற்ற மாநிலங்களிலோ இந்த நிலை கிடையாது. தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்களில் நான்கில் மூன்று பங்குக்கு மேலாக ஆசிரியைகள்தான் எனும் சூழலுக்கு வலுவான அடித்தளமிட்ட காரணகர்த்தா கலைஞர்.

13 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த திமுக அரசு, அடுத்த இரு மாதங்களில் நிறைவேற்றிய சட்டம்தான் பெண் வாரிசுகளுக்கு சொத்தில் சம உரிமை தரும் சட்டம்.

விஞ்ஞான வளர்ச்சி, அறிவியல் மாற்றங்களின் துணைகொண்டு சாத்தியமான உறுப்புமாற்று அறுவை சிகிச்சைகளுக்கு ஆதரவாக இருந்த அரசு கலைஞரின் திமுக அரசு. அரசு மருத்துவமனைகளில் இலவசமாகப் பல்லாண்டுகளுக்கு முன்பே ஏழை எளிய மக்களுக்கு உறுப்புமாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் நிலையை உருவாக்கியது கலைஞரின் அரசு.

இன்றும் மத்திய அரசுப் பள்ளிகளில், பல ஆயிரம் கோடிகளை வடமொழிக்கும், இந்திக்கும் ஒதுக்கும் அரசுப் பள்ளிகளில் படிக்க ஆண்டுக்கு சில

ஆயிரம் கட்டணம் உண்டு. ஆனால் அரசு பள்ளிகளில், நகராட்சிப் பள்ளிகளில், அரசு உதவி பெறும் பள்ளிகளில் பள்ளிப் படிப்பு, புத்தகம், சீருடை, உணவு, முட்டை, சைக்கிள் முதல் லேப்டாப் வரை இலவசமாகக் கிடைக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். இதில் பெரும்பாலான தாய் -தந்தை இருவரில் யார் சாதியை வேண்டுமானாலும் சாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் வாரிசுகள் எடுத்துக் கொள்ள மாணவ-மாணவிகள் நலன் சார்ந்த நலத்திட்டங்களுக்கு முக்கிய காரணம் கலைஞர்.

மாணவ-மாணவிகள் பள்ளிகளுக்குச் செல்ல பேருந்தில் இலவச பாஸ் கொடுத்த அரசு கலைஞரின் அரசு.

***

எல்லோரும் பாஸாகி பள்ளிப் படிப்பை முடித்தால், எளிதாக மருத்துவம், பொறியியல், சட்டம், கலைக் கல்லூரிகளில் சேர்ந்து பட்டதாரி ஆனால் கல்விக்கு என்ன மதிப்பு என்று சிந்திக்கும், படிப்பைக் கடினமாக வைத்திருந்த சைக்கோ கூட்டத்தின் பிடியில் இருந்து கல்வியை மீட்டு சமச்சீர் கல்விமுறை கொண்டு வந்து இந்தியாவில் பள்ளிகளில் தேர்ச்சி பெறும் மாணவ-மாணவிகள், கல்லூரிகளில் சேரும் மாணவ-மாணவர்கள் நிணிஸி சதவீதத்தில் முதலிடம் பெற முக்கிய காரணம் கலைஞர் தலைமையிலான திமுக அரசுதான் என்பதை மறுக்க முடியுமா?

கைம்பெண் மறுமணம் உதவித் திட்டம் துவக்கி அதற்கு திராவிட இயக்க தலைவர்களில் ஒருவரான மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் பெயரை

வைத்தவர் கலைஞர். சாதிமறுப்பு திருமண உதவி திட்டம் துவக்கி அதற்குத் தன் தாயின் பெயரான அஞ்சுகம் அம்மையார் பெயரை வைத்தவர் கலைஞர். மனதுக்கு மிக நெருக்கமான, தங்களுக்குப் பிடித்த திட்டங்களுக்குத்தானே தான் மிக விரும்பியவர்கள் பெயர் வைக்கப்படும்.அவர் மனதுக்கு மிக நெருக்கமான திட்டமாக சாதிமறுப்பு திருமண உதவி திட்டம் இருந்தது என்று சொன்னால் மிகை ஆகுமா?

கிருத்துவத்தை மற்றும் வேறு மதங்களைப் பின்பற்றும் பட்டியல் இனத்தவர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அதே பிரிவுகளின்கீழ் இடஒதுக்கீடு பெற வேண்டும் என்ற நிலையில் உறுதியாக இருந்த ஒரே தலைவர் கலைஞர் என்பதை மறுக்க முடியுமா? அதற்காக அவர் எடுத்த பல முயற்சிகளைத் தடுத்தது நீதிமன்றங்கள்தான். சுயவிருப்பத்தின் பேரில் கடவுள், மதம், வாழ்க்கைத்துணை, கல்வி, பணி போன்றவற்றைப் பிறப்பின் அடிப்படையில் திணிக்கப்பட்டவைகளைத் தாண்டி தேர்ந்தெடுக்கும் உரிமைக்காக வாழ்நாள் முழுவதும் போராடிய, சட்டமியற்றிய, உறுதுணையாக இருந்த தலைவர்கள், முதல் அமைச்சர்களில் கலைஞருக்கு இணையாக யாரும் இருக்க முடியாது என்பதை மறுக்க முடியுமா ? 1970 ஆம் ஆண்டு முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக கேரள அரசோடு கலைஞர் தலைமையிலான திமுக அரசு மீன்பிடி உரிமைகளைத் தரும் மற்றும் நில வாடகைக்கான ஆண்டுக் கட்டணங்களை உள்ளடக்கிய ஒப்பந்தங்கள் போட்டது. இதன்

அடிப்படையில்தான் வெள்ளைய அரசுக்கும் திருவாங்கூர் மஹாராராஜாவுக்கும் இடையே போடப்பட்ட பாரபட்சமான ஒப்பந்தம் செல்லாது என்ற கேரள அரசின் வாதம் உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. காவிரி நீர் தொடர்பாக ஒப்பந்தங்களைப் புதுப்பிக்க மறுத்த கர்நாடக அரசை நிர்பந்திக்க இயலாமல் காவிரி நீர் பிரச்சினையில் கோட்டை விட்டவர் என்று புரியாமல் அல்லது புரிந்தும் வன்மத்தோடு இன்றும் எழுதும் கூட்டம், முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக கலைஞர் அரசு எடுத்த நடவடிக்கை பற்றி மூச்சு கூட விடாததில் ஆச்சரியம் இல்லைதான். கலைஞர்மீதான வன்மம் அளவிட முடியாத ஒன்றாயிற்றே.

மத்திய அரசு பல ஆயிரம் கோடி ஒதுக்கும் எய்ம்ஸ் மருத்துவமனையில் இன்றும் பெரும்பான்மை நோயாளிகளுக்கு அனைத்து சேவைகளுக்கும் கட்டணம் உண்டு. இலவசமாக மக்கள் தமிழ்நாடெங்கும் மருத்துவம் பார்த்துக் கொள்ளும் வலுவான கட்டமைப்பை உருவாக்கியதில் கலைஞரின் பங்கு அளப்பரியது

சாதிமறுப்பு திருமணம் செய்து கொண்டோர் வாரிசுகளுக்கு மருத்துவக் கல்லூரிகளில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே இட ஒதுக்கீடு இருந்த மாநிலம் தமிழ்நாடுதான். திருமணம் செய்துகொண்ட இருவரில் ஒருவர் பட்டியலின/ பழங்குடி இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். இதையும் வழக்கம் போல 2002 தீர்ப்பின்மூலம் அழித்தன நீதிமன்றங்கள்.

தமிழுக்குப் போராடியவர்கள், உழைத்தவர்கள் வாரிசுகளுக்கு சிறப்பு இட ஒதுக்கீடு கொண்டு வந்தது திமுக அரசு. இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில், அந்தமானில் வாழும் தமிழர்களுக்கு தமிழ்நாட்டு அரசு மருத்துவக் கல்லூரிகளில் சிறப்பு இட ஒதுக்கீடு உண்டு. அதனையும் 2002 தீர்ப்பின் மூலம் அழித்தது உயர்நீதிமன்றம்.

கருப்பு பணத்தை மீட்டு வங்கிக் கணக்கில் பணம் போடுகிறேன் என்று ஏமாற்றும் கூட்டத்தாரோடு ஒப்பிட்டால் பென்ஷனோடு பொங்கல் பரிசு வாங்கும் ஆசிரியையின் மகனாக, இட ஒதுக்கீடு, ஊக்க மதிப்பெண் மூலம் மருத்துவப் படிப்பு படித்த மருத்துவனாக, இஸ்லாமிய, கிருத்துவ உறவுகளோடு, பல ஆயிரம் நட்பு, சுற்றம் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக அறுவை சிகிச்சை செய்து கொண்டு இலவசமாகப் பள்ளிப் படிப்பு படித்து, ஸ்காலர்ஷிப் மூலம் கல்லூரிப் படிப்பு முடித்து, 69 சதவீத இட ஒதுக்கீடு, அதிகரித்த அரசு-தனியார் வேலைகள், பெண்களுக்கான இட ஒதுக்கீடு, உள் ஒதுக்கீட்டு கோட்டா மூலம் பணி கிடைத்த தமிழ்நாட்டு குடிமகனாக கணக்கிட்டால் என் குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்கில் கலைஞர் தலைமையிலான அரசுகள் போட்டது எளிதாகக் கோடியைத் தாண்டும்.

# காவிரியில் தொடங்கி காவேரியில் நிறைந்த கலைஞர்!

*ஆர்.முத்துக்குமார்*



திமுக தலைவர் கலைஞரின் மறைவு என்கிற வரலாற்றுச் சோகம் நிகழ்ந்திருக்கும் இந்தத் தருணத்தில் கலைஞருடைய பங்களிப்புகள் குறித்துப் பல்வேறு பதிவுகள் அணிவகுத்துக் கொண்டிருக்கின்றன. நாடறிந்த நல்ல அரசியல்வாதியாக, அரைநூற்றாண்டுக்கும் அதிகமாகத் தொண்டர்களை வழிநடத்திய தலைவராக, வீரியமிக்க எதிர்க்கட்சித் தலைவராக, தொலைநோக்குப் பார்வைகொண்ட முதலமைச்சராக என்று கலைஞர் ஆற்றிய பங்களிப்புகள் பற்றிய நினைவலைகள் அச்சு, காட்சி ஊடகங்களில் நிரம்பித் ததும்புகின்றன. இது காலத்தின் கட்டாயம். அதேசமயம், கலைஞர்மீது வைக்கப்படும் முக்கியமான விமரிசனத்துக்குத் தர்க்கரீதியாகவும் தரவு ரீதியாகவும் பதிலளிக்கவேண்டியதும் காலத்தின் கட்டாயம். அந்த வகையில், கலைஞர்மீது வைக்கப்படும் முக்கியமான விமரிசனங்களுள் ஒன்று காவிரி வழக்கைத் திரும்பப்பெற்றார் என்பதுதான்.

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுக்கான ஒப்பந்தம் கையெழுத்தான 1924 ஆம் ஆண்டில் பிறந்து, அந்த ஒப்பந்தத்தை மறுபரீசீலனை செய்யவேண்டிய தருணத்தில் தமிழகத்தின் முதலமைச்சராகி, நடுவர் மன்றம் அமைத்தாக வேண்டிய நெருக்கடியான சூழலில் மத்திய அரசில் இடம்பெற்று, இறுதியாக காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டிருந்த சூழலில் காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உயிர்நீத்த கலைஞரின் காவிரி குறித்த பங்களிப்பைப் பதிவுசெய்கிறது இந்தக் கட்டுரை.

உண்மையில், காவிரி வழக்கு தொடரப்பட்டது ஏன்? காவிரிப் பிரச்சினையை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றது யார்? காவிரிக்காக வழக்குத் தொடர்ந்தது யார்? எந்த கோரிக்கையை முன்வைத்து காவிரி வழக்கு தொடரப்பட்டது? வழக்கு ஏன் தொடர்ந்து நடத்தப்படவில்லை? காவிரி வழக்கை கருணாநிதி வாபஸ் பெற்றது உண்மையா? வழக்கை வாபஸ் பெற்றதற்கு என்ன காரணம்?

சர்க்காரியா கமிஷன் விசாரணைகளுக்குப் பயந்தே காவிரி வழக்கை வாபஸ் பெற்றாரா கருணாநிதி? வழக்கை வாபஸ் பெற்றதில் பிரதமர் இந்திரா காந்தியின் பங்களிப்பு என்ன? வழக்கை வாபஸ் பெற்றபோது எதிர்க்கட்சிகள் எல்லாம் என்ன செய்தன? அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி முடிவெடுத்தாரா கருணாநிதி? எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகளை எல்லாம் மீறித்தான் வழக்கை வாபஸ் பெற்றாரா கருணாநிதி என்பன போன்ற கேள்விகள் காவிரி வழக்கைச் சுற்றிவளைக்கின்றன.

இந்தக் கேள்விகளுக்கு விடைதேடவேண்டும் என்றால் காவிரி வழக்கு விவகாரத்தில் நடந்த அரசியல் வரலாற்று நிகழ்வுகளை காலவரிசைப்படியும் கவனமாகவும் விருப்புவெறுப்பின்றியும் உன்னிப்பாகவும் மறுவாசிப்பு செய்ய வேண்டியிருக்கிறது.

***

காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக அன்றைய மைசூர் சமஸ்தானத்துக்கும் சென்னை ராஜதானிக்கும் இடையே 1892, 1924 ஆம்

ஆண்டுகளில் இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அவற்றில் 1924 ஆம் ஆண்டு கையெழுத்தான ஒப்பந்தத்தை ஐம்பதாண்டுகள் கழித்து புதுப்பித்துக் கொள்ளவேண்டும். இடைப்பட்ட காலங்களில் இரு மாநிலங்களும் அணைகளைக் கட்டிக்கொள்வதற்குத் தெளிவான விதிமுறைகளும் துல்லியமான வழிகாட்டும் நெறிமுறைகளும் ஒப்பந்தத்தில் வரையறை செய்யப்பட்டிருந்தன.

ஆனால் அந்த விதிமுறைகளைத் தாண்டி ஹேமாவதி, ஹேரங்கி உள்ளிட்ட அணைகளைக் கட்டும் முயற்சியில் கர்நாடக அரசு தீவிரமாக இறங்கியது. அதற்குத் தமிழக அரசிடமிருந்து கடுமையான எதிர்ப்புகள் சென்றன. ஆனாலும் அவற்றையெல்லாம் கர்நாடக அரசு பொருட்படுத்தவில்லை. இந்நிலையில், கர்நாடக அரசின் ஒப்பந்த மீறல் விவகாரத்தை மத்திய அரசின் கவனத்துக்குச் செல்லவேண்டிய சூழல் உருவானது.

காவிரி விவகாரம் நெருக்கடிகளை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது தமிழகத்தில் மிகப்பெரிய ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு, திமுக ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருந்தது. தமிழக முதல்வராக அண்ணா பொறுப்பேற்றிருந்தார். இன்னும் பகுத்துச் சொல்லவேண்டும் என்றால், தமிழகம் தேசியக் கட்சியின் பிடியிலிருந்து விலகி, மாநிலக் கட்சியின் ஆளுகைக்குள் வந்திருந்தது. தமிழகத்துக்குத் தலைமை வகித்தவர் மாநில சுயாட்சியையும் மத்திய கூட்டாட்சியையும் கொள்கை முழக்கமாக முன்னெடுத்துவரும்

அண்ணா. கர்நாடகத்திலும் மத்தியிலும் தேசியம் பேசும் காங்கிரஸ் கட்சி.

என்றாலும், பிரச்சினையைத் தீர்க்க அதிகாரத்தில் இருப்போரிடம் பேசவேண்டியதுதானே இயல்பு. அந்த அடிப்படையில், 1968 ஆம் ஆண்டு ஆகஸ்டு 19ஆம் தேதி மத்திய மின்சாரம் மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே.லட்சுமணராவ் என்கிற கே.எல்.ராவ் தலைமையில் தமிழகமும் கர்நாடகமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. கர்நாடகம் சார்பில் மாநில முதலமைச்சர் வீரேந்திர பாட்டீலும் தமிழகம் சார்பில் மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் மு.கருணாநிதியும் சட்ட அமைச்சர் செ.மாதவனும் பங்கேற்றனர்.

காவிரி நீர்ப்பங்கீடு தொடர்பாக 1892, 1924 ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்கள் மைசூர் அரசால் மீறப்படுவதைச் சுட்டிக்காட்டி, அதைத் தடுக்கவேண்டிய கடப்பாடு மத்திய அரசுக்கு இருப்பதைத் தமிழக அமைச்சர்கள் மு.கருணாநிதியும் செ.மாதவனும் வலியுறுத்தினர். ஆனால் கர்நாடகத்தில் கட்டப்படும் அணைகள் எதுவும் விதிமுறைகளை மீறியதல்ல என்றும், காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பான ஒப்பந்தங்கள் தங்களுக்கு வழங்கியிருக்கும் உரிமையின் அடிப்படையிலேயே கட்டப்படுகின்றன என்றும் கர்நாடக முதலமைச்சர் வீரேந்திர பாட்டீல் பேசினார்.

ஆனால் காவிரி நதிநீர்ப் பங்கீட்டு ஒப்பந்த அம்சங்களின் உள்ளடக்கத்தையும் அதை கர்நாடக அரசு மீறுகின்ற முயற்சிகளையும்

தமிழக அமைச்சர்கள் கருணாநிதியும் மாதவனும் ஆதாரத்துடன் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் தமிழகத்தின் வாதங்களைக் கர்நாடக அரசு ஏற்கவில்லை. அதேபோல, தமிழகமும் கர்நாடகத்தின் விளக்கங்களை ஏற்கவில்லை. விளைவு, தமிழகம் - கர்நாடகம் இடையே நடந்த அந்தப் பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இதற்கிடையே தமிழக முதல்வராக இருந்த அண்ணா மரணம் அடைந்துவிடவே, அவருக்குப் பதிலாக அண்ணாவின் அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த கருணாநிதி முதல்வராகப் பொறுப்பேற்றார். முக்கியத்துவம் வாய்ந்த துறை என்பதால் பொதுப்பணித்துறையைத் தம்முடைய பொறுப்பிலேயே வைத்துக்கொண்டார் முதலமைச்சர் கருணாநிதி.

கர்நாடகம் அணைகள் கட்டுவது தொடர்பாகவும் காவிரி நீர்வரத்து தொடர்பாகவும் தமிழகம், கர்நாடகம் இடையே திரும்பத் திரும்பச் சிக்கல் ஏற்பட்டதால் அதுகுறித்து விவாதிக்க 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே.எல்.ராவ் முன்னிலையில் தமிழக முதல்வர் கருணாநிதியும் கர்நாடக முதல்வர் வீரேந்திர பாட்டீலும் டெல்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஆனால் தன்னுடைய நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றத்தையும் செய்துகொள்ளாமல், பிடிவாதம் காட்டியது கர்நாடக அரசு. அதைத் தடுக்கவேண்டிய, தட்டிக்

கேட்கவேண்டிய மத்திய அரசோ தொடர்ந்து பேச்சுவார்த்தையை நடத்த விரும்பியதே தவிர பிரச்சினையைச் சுமுகமாக முடித்துக்கொடுக்கத் தயாராக இல்லை. விளைவு, மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ச் சட்டம் 1956 பிரிவு 3இன்படி இரு மாநில நதிநீர்ச் சிக்கலைத் தீர்க்க தீர்ப்பாயம் என்கிற நடுவர் மன்றத்தை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசிடம் முன்வைத்தார் தமிழக முதலமைச்சர் கருணாநிதி.

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் நடுவர் மன்றம் அமைப்பது மட்டுமே தீர்வுக்கான வழி என்று தமிழக அரசின் சார்பில் அதிகாரபூர்வமாகச் சொல்லப்பட்டது அதுதான் முதன்முறை. ஆனால் அந்தக் கோரிக்கைக்கு மத்திய அரசு செவிமடுக்கவில்லை. ஏன் என்று தமிழக அரசின் சார்பில் விளக்கம் கேட்டபோது, நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையைக் கர்நாடக அரசு ஏற்கவில்லை என்று விளக்கம் கொடுத்தது இந்திரா காந்தி தலைமையிலான மத்திய அரசு.

பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் சம்மதித்தால் மட்டுமே தீர்ப்பாயம் என்கிற நடுவர் மன்றத்தை அமைக்கமுடியும் என்ற சட்டப் பிரிவைச் சுட்டிக்காட்டியது மத்திய அரசு. கர்நாடக அரசு சம்மதித்தால் மட்டுமே நடுவர் மன்றம் அமைக்கவேண்டும், அமைக்கமுடியும் என்றால் எந்தக் காலத்திலும் நடுவர் மன்றம் அமைக்கவே முடியாது என்பதுதான் கள யதார்த்தம். அதனைத் தமிழக முதலவர் கருணாநிதி மத்திய அரசிடம் எடுத்துச்சொன்னார். ஆனால் சட்டவிதிகளைக்

காரணம் காட்டி ஒதுங்கிக் கொண்டது இந்திரா காந்தி தலைமையிலான மத்திய அரசு. சரியாகச் சொல்லவேண்டும் என்றால், காவிரி விவகாரத்தில் கர்நாடகத்தின் பக்கம் நின்று, கர்நாடகத்தின் குரலாகவே ஒலித்தது இந்திரா காந்தி அரசு.

இத்தனைக்கும் கருணாநிதி தலைமையிலான திமுக எம்.பி.க்களின் ஆதரவோடுதான் பிரதமர் இந்திரா காந்தி ஆட்சி செய்துகொண்டிருந்தார். அரசியல் ரீதியாக திமுகவும் இந்திரா காங்கிரஸும் ஒரே கூட்டணியில்தான் அங்கம் வகித்தன. பிரதமர் இந்திரா காந்தி கொண்டுவந்த பல முற்போக்குத் திட்டங்களுக்குத் திமுகவின் ஆதரவு இருந்தது. அதிலும், காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபட்டிருந்த சூழலில், காங்கிரஸ் கட்சியின் பெரிய பெரிய தலைவர்களை எல்லாம் எதிர்த்துக் கட்சியையும் ஆட்சியையும் நடத்திவந்த பிரதமர் இந்திரா காந்திக்குத் திமுக எம்.பி.க்கள் கொடுத்த ஆதரவு மிகமுக்கியமானது. ஆனாலும், தமிழகத்தைவிட கர்நாடகத்தின் மீதுதான் தேசியக் கட்சியான இந்திரா காங்கிரஸுக்குக் கரிசனம் அதிகமாக இருந்தது. அந்தக் கரிசனம் இந்திரா காந்தி தலைமையிலான மத்திய அரசின் செயல்பாடுகள் வழியே வெளிப்படையாகத் தெரிந்தது.

என்றாலும், தனது முயற்சியைக் கைவிடாமல், பேச்சுவார்த்தை நடத்துவதற்குக் கிடைத்த வாய்ப்பை எல்லாம் முதலமைச்சர் கருணாநிதி தொடர்ச்சியாகப் பயன்படுத்திக்கொண்டே இருந்தார். அந்த அடிப்படையில் 17 ஏப்ரல் 1970, 16 மே 1970, 12 அக்டோபர் 1970, 27 அக்டோபர் 1970 என்று அடுத்தடுத்து பல கட்டங்களாகப்

பேச்சுவார்த்தைகள் நடந்தன. அந்தப் பேச்சுவார்த்தைகளின் தொடக்க காலங்களில் தமிழ்நாடு, கர்நாடகம் என்ற இரண்டு மாநிலங்கள் மட்டுமே பங்கேற்றன. பிறகு கேரளாவும் கலந்துகொண்டது. ஆம், காவிரி நீரில் கேரளாவுக்கும் உரிமை உண்டு. அந்த வகையில் 27 அக்டோபர் 1970 அன்று நடைபெற்ற காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தையின்போது கேரளத்தின் சார்பில் மாநில முதல்வர் ஈ.எம்.சங்கரன் என்கிற ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் பங்கேற்றார்.

அந்தப் பேச்சுவார்த்தைகளில் எல்லாம் கபினி, ஹேமாவதி திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டன. காவிரி நீரை எப்படிப் பங்கீடு செய்துகொள்வது என்றெல்லாம் பேசப்பட்டன. அப்போது 1892, 1924 ஒப்பந்தங்களை மீற மாட்டோம் என்றோ, புதிய திட்டங்களை யாருக்கும் பாதிப்பின்றிச் செயல்படுத்துவோம் என்றோ எவ்வித வாக்குறுதியையும் மத்திய அரசுக்கோ, தமிழக அரசுக்கோ, கேரள அரசுக்கோ கர்நாடக அரசு கொடுக்கவில்லை.

மத்திய அரசின் முன்னிலையில் கர்நாடகத்துடன் நடத்திய பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முற்றிலுமாகப் பலன் கொடுக்காத நிலையில், கர்நாடக அரசு கொஞ்சமும் இறங்கிவராத சூழ்நிலையில், 1970 டிசம்பர் மாதம் பிரதமர் இந்திரா காந்திக்குக் கடிதம் ஒன்றை எழுதினார் தமிழக முதலமைச்சர் கருணாநிதி. இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகள் எல்லாமே பலனற்றுப் போய்விட்ட நிலையில், பிரச்சினையைத் தீர்க்க ஏதுவாக மத்திய அரசு தீர்ப்பாயம் என்கிற நடுவர்

மன்றத்தை அமைக்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் பிரதமர் இந்திரா காந்தியைக் கேட்டுக்கொண்டார் முதலமைச்சர் கருணாநிதி.

முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் கடிதத்துக்குப் பதிலளித்த பிரதமர் இந்திரா காந்தி, ‘1971 மார்ச்சில் பொதுத்தேர்தல் வரவிருக்கும் நிலையில் தீர்ப்பாயம் குறித்த எவ்வித முடிவையும் எடுக்க வாய்ப்பில்லை’ என்றார். ஆம், காவிரி விஷயத்திலும் நடுவர் மன்ற விஷயத்திலும் தேர்தலைக் காரணம் காட்டுவது மத்திய அரசுக்கோ, காங்கிரஸ் கட்சிக்கோ புதிய விஷயமே இல்லை. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளிலும் இதுதான் நடந்தது. தற்போதும் இதுதான் நடக்கிறது. அப்போது காங்கிரஸ். இப்போது பாஜக. அப்போது இந்திரா காந்தி. இப்போது நரேந்திர மோடி. மற்றபடி எல்லாம் ஒன்றுதான்.

பிரதமர் இந்திரா காந்தி சொன்னது போலவே 1971 ஆம் ஆண்டுக்கான தேர்தல்கள் நடந்துமுடிந்தன. தமிழ்நாட்டில் திமுகவும் இந்திரா காங்கிரஸும்தான் கூட்டணி அமைத்துத் தேர்தலைச் சந்தித்தன. தேர்தலின் முடிவில் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைத் தக்கவைத்து மீண்டும் பிரதமராகப் பதவியேற்றார் இந்திரா காந்தி. தமிழ்நாட்டிலும் பெரும்பலத்துடன் ஆட்சியைத் தக்கவைத்து மீண்டும் முதல்வரானார் கருணாநிதி.

மத்திய, மாநில அரசுகள் இணக்கமாக இருந்த நிலையில், காவிரி நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி பிரதமர்

இந்திரா காந்திக்கு இரண்டு கடிதங்களை எழுதினார் தமிழக முதலமைச்சர்  கருணாநிதி. ஆனால் அந்தக் கடிதங்களுக்குப் பிரதமர் இந்திரா காந்தியிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை.  அது தமிழக முதலமைச்சர் கருணாநிதியை அதிருப்தியடையச் செய்தது.

எந்தவிதமான பேச்சுவார்த்தைகளுக்கும் மதிப்பு கொடுக்காத கர்நாடக அரசு, நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி எழுதப்படும் கடிதங்களுக்குப் பதில் கொடுக்காத மத்திய அரசு என்ற இருதுருவ எதிர்ப்பிலிருந்து தமிழகத்தையும் காவிரி நதிநீர் மீதான தமிழகத்தின் உரிமையையும் பாதுகாக்க உச்சநீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்கிற முடிவுக்கு வந்தார் தமிழக முதலமைச்சர் கருணாநிதி. அதன் நீட்சியாக, 1971 ஆகஸ்டு மாதம் தமிழக அரசின் சார்பில்  உச்சநீதிமன்றத்தில் வழக்கு  தொடரப்பட்டது. அந்த வழக்கில் இரண்டு கோரிக்கைகள் இடம்பெற்றன.

தமிழகம், கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கு இடையிலான காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஏதுவாக தீர்ப்பாயம் என்கிற நடுவர் மன்றத்தை அமைப்பதற்கான வழிகாட்டுதல்களை மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் கொடுக்க வேண்டும் என்பது தமிழக அரசின் முதல் கோரிக்கை.

கர்நாடக அரசு மேற்கொண்டிருக்கும் கபினி, ஹேமாவதி, ஸ்வர்ணவதி, ஹேரங்கி உள்ளிட்ட புதிய நீர்ப்பாசனத் திட்டப் பணிகளை

நிறுத்திவைக்கவேண்டும் என்பது இரண்டாவது கோரிக்கை.

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற பெரு நோக்கத்துடன் தமிழக அரசால் தொடரப்பட்ட இந்த வழக்கு என்ன மாதிரியான தீர்வுகளைத் தரப்போகிறது என்ற எதிர்பார்ப்புகள் பரவலாக எழுந்த நிலையில், இதே கோரிக்கைகளை வலியுறுத்தி தஞ்சாவூர் விவசாயிகள் சார்பில் திமுகவின் முன்னணிப் பிரமுகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முரசொலி மாறன், திமுக மூத்த தலைவர்களுள் ஒருவரான மன்னை நாராயணசாமி, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் கருப்பையா மூப்பனார் ஆகியோரும்  உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

தமிழகம் மட்டுமல்ல, காவிரி நீருக்கு உரிமையுள்ள கேரள மாநில அரசும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்திருந்தது. காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என்பதுதான் கேரள அரசின் முதன்மையான கோரிக்கை. அதேசமயம், கர்நாடகம் மட்டுமல்ல, தமிழகம் மேற்கொள்ளவிருக்கும் புதிய நீர்ப்பாசனத் திட்டப்பணிகளையும் நிறுத்திவைக்கவேண்டும் என்பது கேரளாவின் கோரிக்கை.

அவரவர்க்கு அவரவர் பிரச்சினை என்றாலும் எல்லோருக்குமான மையப்பிரச்சினை என்பது காவிரி நதிநீர்ப் பங்கீட்டுச் சிக்கலைத் தீர்க்கவேண்டும் என்பதுதான். அதற்காக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் எதுவும்

பலனளிக்காத நிலையில்தான் நீதிமன்றத்தின் வழியே தீர்வைத் தேடும் வகையில் நடுவர் மன்றம் கோரி வழக்கு தொடர்ந்தது கருணாநிதி தலைமையிலான திமுக அரசு.

காவிரி விவகாரத்தைத் தீர்க்க நடுவர் மன்றம் கோரி வழக்கு தொடர்ந்ததை பிரதமர் இந்திரா காந்தியோ, கர்நாடக காங்கிரஸோ கொஞ்சமும் விரும்பவில்லை. ஆகவே, பிரச்சினையை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லாமல், சுமுகமான, நேர்மறையான பேச்சுவார்த்தையின் வழியாகவே நல்லதொரு தீர்வைக் கொண்டுவர முடியும் என்றார் பிரதமர் இந்திரா காந்தி. அப்படிப்பட்ட வெளிப்படையான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார் பிரதமர் இந்திரா காந்தி.

உண்மையில் பிரதமர் இந்திரா காந்தி அப்படிச் சொன்னதற்கு வலுவான அரசியல் பின்னணி இருந்தது. ஆம், காவிரியை முன்வைத்துத் தொடரப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு கிடைப்பதற்குக் காலதாமதமாகும். அதன் எதிரொலி அரசியல் களத்தில் கேட்டால், அது தேர்தல் களத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்குப் பெரிய  பாதிப்பை ஏற்படுத்தும். அந்தப் பாதிப்பு தமிழ்நாட்டில் அல்ல, மைசூரில் என்று கணித்த பிரதமர் இந்திரா காந்தி தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநில முதலமைச்சர்களும் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு மற்றும் பலர் தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், 25 அக்டோபர் 1971 அன்று தீர்ப்பு வழங்கியது. கர்நாடக அரசு கட்டவிருக்கும் புதிய அணைத் திட்டங்களால் தமிழகத்துக்கு எந்த அளவுக்குச் சேதம் ஏற்படும் என்பதை நிரூபிப்பது சாத்தியமில்லை என்பதால், அந்தத் திட்டங்களுக்குத் தடை போட முடியாது என்றது உச்சநீதிமன்றம். அந்தத் தீர்ப்பு தமிழகத்துக்கு மிகப்பெரிய பின்னடைவாக அமைந்தது. அதேசமயம், காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்கிற தமிழக அரசின் கோரிக்கையை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்யவில்லை. மாறாக, அந்தக் கோரிக்கை குறித்த விசாரணையை உச்சநீதிமன்றம் தொடர்ந்தது.

நடுவர் மன்றம் கோரிய தமிழக அரசின் வழக்கு காவிரி விவகாரத்தில் கர்நாடகத்துக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் மத்திய அரசுக்கும் பெரும் சிக்கலாக மாறிவிடுமோ என்ற அச்சம் பிரதமர் இந்திரா காந்தியைக் கவலையில் ஆழ்த்திவிட்டதா அல்லது காவிரி விவகாரத்தில் தமிழகத்துக்கு உச்சநீதிமன்றம் அநீதி இழைத்துவிடுமோ என்று சந்தேகம் கொள்ளவைத்ததா என்று தெரியவில்லை. எப்பாடு பட்டாவது காவிரி விவகாரத்தை நீதிமன்ற வளாகத்திலிருந்து விடுவித்து, பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரத் தயாரானார் பிரதமர் இந்திரா காந்தி.

1972 மே மாத மூன்றாவது வாரத்தில் தமிழகம் வந்த பிரதமர் இந்திரா காந்தி, அந்தப் பயணத்தின்போது

தமிழக முதல்வர் கருணாநிதியை அழைத்துப் பேசினார். அப்போது காவிரியை முன்வைத்துத் தொடரப்பட்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தால், மத்திய அரசின் முன்னிலையில் காவிரி மாநில முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதும், அந்தப் பேச்சுவார்த்தைகளின் நீட்சியாக அடுத்தடுத்த முடிவுகளை எடுப்பதும் சிரமமாகிவிடும். ஆகவே, நடுவர் மன்றம் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழகம் தொடர்ந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதன்பிறகு காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் மத்திய அரசு செய்யும் என்று வாக்குறுதியளித்தார் பிரதமர் இந்திரா.

தமிழக அரசுக்கும் தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கும் பிரதமர் இந்திரா காந்தி கொடுத்த இந்த வாக்குறுதி குறித்து தமிழக அரசின் பொதுப்பணித்துறை அமைச்சர்களாக வெவ்வேறு காலகட்டங்களில் பதவி வகித்த ப.உ.சண்முகம், சாதிக் பாட்ஷா இருவரும் உறுதிசெய்துள்ளனர்.

பிரதமர் இந்திரா காந்தியின் தமிழகப் பயணம், காவிரி பிரச்சினை குறித்த பிரதமர் இந்திரா காந்தி - தமிழக முதல்வர் கருணாநிதி இடையிலான பேச்சுவார்த்தை, காவிரி வழக்கை வாபஸ் பெறுவது குறித்த பிரதமர் இந்திரா காந்தியின் வலியுறுத்தல், அதற்காக அவர் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் பத்திரிகைகளில் வெளியாகின.

அதன் நீட்சியாக, 1972 மே மாத இறுதியில், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாடு டெல்லியில் நடந்தது. அதில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி, கர்நாடக முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ், கேரள முதலமைச்சர் அச்சுதமேனன் ஆகியோர் பங்கேற்றனர். மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே.எல்.ராவ் முன்னிலையில் மூன்று நாள்களுக்கு நடந்த அந்த மாநாட்டில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

காவிரிப் பிரச்சினைக்கான தீர்வைப் பேச்சுவார்த்தைகளின் வழியாகவே காண்பது என்பது அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவு. அதன் நேரடியான பொருள் என்னவென்றால், காவிரி நடுவர் மன்றம் கோரி உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் தேவையில்லை என்பதுதான்.

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக காவிரி உண்மை அறியும் குழுவை என்ற பெயரில் ஒரு குழுவை  உருவாக்கி, தற்போது காவிரியில் செயல்பட்டு வருகின்ற திட்டங்கள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் திட்டங்கள், பயன்படுத்தப்படும் நீரின் அளவு, உபரி நீரின் அளவு ஆகியன குறித்த தகவல்களை விரிவான அளவில் திரட்டவேண்டும் என்று  அந்த மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

அதேசமயம், இந்தக் குழுவின் பணி என்பது தகவல்களைத் திரட்டித் தருவது மட்டும்தானே தவிர, அவற்றின் அடிப்படையில் எவ்விதமான பரிந்துரைகளையும், மத்திய, மாநில அரசுகளுக்கு

வழங்குவது அல்ல என்று தீர்மானமாக முடிவு செய்யப்பட்டது.

உண்மை அறியும் குழு கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில் காவிரி நதிநீர்ச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பது குறித்து சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும் மத்திய அரசும் பேசிக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. அதுவரை எந்தவொரு மாநிலமும் தேவைக்கு அதிகமான நீரைத் தேக்கவும் கூடாது, பயன்படுத்தவும் கூடாது என்று மாநில முதலமைச்சர்கள் கூட்டாக முடிவெடுத்தனர். பிரச்சினையைத் தீர்க்க ஆறுமாத கால அவகாசமும் நிர்ணயிக்கப்பட்டது.

இப்போது தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த காவிரி நடுவர் மன்றம் கோரும் வழக்கு பற்றி முடிவெடுக்க வேண்டிய தருணம் வந்தது. தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினையான காவிரி விவகாரத்தில் முடிவெடுப்பதற்கு முன்னால் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களிடமும் ஆலோசனை கேட்க விரும்பினார் முதலமைச்சர் கருணாநிதி. அதன்படி தமிழகத்தில் உள்ள முக்கியமான அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் காவிரி வழக்கைத் திரும்பப்பெறுவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இறுதியாக, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் காவிரி வழக்கைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தார் முதலமைச்சர் கருணாநிதி. அதேசமயம், மத்திய அரசு ஏற்பாடு செய்கின்ற

பேச்சுவார்த்தைகளின் வழியே காவிரிப் பிரச்சினையில் சுமுகமான முடிவு எட்டப்படாத பட்சத்தில் வழக்கை மீண்டும் தொடுக்கும் உரிமையுடனேயே திரும்பப் பெற்றிருப்பதாகச் சொன்னார் முதலமைச்சர் கருணாநிதி.

காவிரி வழக்கை முதலமைச்சர் கருணாநிதி வாபஸ் பெற்ற விவகாரத்தில் இரண்டு முக்கியமான குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. சர்க்காரியா கமிஷன் விசாரணைக்குப் பயந்தே காவிரி வழக்கை வாபஸ் பெற்றார் கருணாநிதி என்பது முதல் குற்றச்சாட்டு.

உண்மையில், காவிரி வழக்கைத் தமிழக அரசு வாபஸ் பெற்ற சமயத்தில் கருணாநிதிக்கு எதிராக எந்தவொரு விசாரணை கமிஷனும் அமைக்கப்படவில்லை. சர்க்காரியா கமிஷன் என்பது 1976 ஆம் ஆண்டில் இந்தியா முழுக்க எமர்ஜென்சி அமலில் இருந்தபோது, கருணாநிதி தலைமையிலான திமுக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு அமைக்கப்பட்ட விசாரணை கமிஷன். ஆகவே, காவிரி வழக்கு வாபஸ் பெறப்பட்டதற்கும் அதுவரை அமைக்கப்படாத சர்க்காரியா கமிஷனின் விசாரணைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

அடுத்து, கருணாநிதி மீது சர்க்காரியா கமிஷன் அமைக்கப்படவில்லையே தவிர, அது அமைக்கப்படுவதற்குக் காரணமான எம்ஜிஆர் கொடுத்த ஊழல் புகார்ப்பட்டியல் பிரதமர் இந்திரா காந்தியிடம் ஏற் கனவே சென் று சேர்ந்துவிட்டது. அதை அடிப்படையாக வைத்து தன் மீது பிரதமர் இந்திரா காந்தி வழக்கு தொடரக்கூடும் என்று

அஞ்சியே காவிரி வழக்கை வாபஸ் பெற்றார் கருணாநிதி என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது.

உண்மையில், முதலமைச்சர் கருணாநிதி உள்ளிட்டோர் மீது எம்ஜிஆர் தயாரித்த ஊழல் புகார்ப் பட்டியல் 1972 நவம்பர் மாதத்தில்தான் குடியரசுத் தலைவர் வி.வி.கிரியின் வழியாக பிரதமர் இந்திரா காந்தியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் காவிரி வழக்கை வாபஸ் பெறுகின்ற முடிவு ஊழல் புகார்ப்பட்டியல் கொடுப்பதற்குப் பல மாதங்களுக்கு முன்பே எடுக்கப்பட்டது என்பதும் அப்போது எம்ஜிஆர் திமுகவில்தான் என்பதும் வரலாற்றுத் தரவுகள்.

நடுவர் மன்றம் கோரி தமிழக அரசு தொடந்த வழக்கை முதலமைச்சர் கருணாநிதி வாபஸ் பெற்றார் என்பது உண்மைதான். அதற்காக, நடுவர் மன்றம் கோரி எதிர்காலத்தில் யாருமே வழக்கு தொடரக்கூடாது என்பதல்ல. அடுத்து ஆட்சிக்கு வருகின்ற எவர் வேண்டுமானாலும் நடுவர் மன்றம் கோரி வழக்கு தொடர்வதற்கு உரிமை இருந்தது. அந்த உரிமை, அடுத்து ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் எம்ஜிஆருக்கும் நிறையவே இருந்தது.

ஆனாலும், 1977 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பதவியேற்ற எம்ஜிஆர் 1986 ஆம் ஆண்டு வரை சற்றேறக்குறைய பத்தாண்டுகளுக்குக் காவிரி நடுவர் மன்றம் கோரி எந்தவொரு வழக்கையும் தமிழக அரசின் சார்பில் தொடரவில்லை. இறுதியாக, 1983 ஆம் ஆண்டு மன்னார்குடி ரங்கநாதன் உள்ளிட்டோர் தொடர்ந்த

வழக்கில்தான் 1986 ஆம் ஆண்டில் எம்ஜிஆர் தலைமையிலான தமிழக அரசு இணைந்தது. காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வழக்கு தொடர்வதற்கு ஏன் முதலமைச்சர் எம்ஜிஆர் ஆட்சியில் இருந்த பத்தாண்டுகளும் தயங்கினார் என்பதும், மன்னார்குடி ரங்கநாதன் தொடர்ந்த வழக்கில் தமிழக அரசை இணைக்க மூன்றாண்டுகள் கால அவகாசம் எடுத்துக்கொண்டார் எம்ஜிஆர் என்பதும் காவிரி விவகாரத்தில் விருப்பு வெறுப்பின்றி எழுப்பப்படவேண்டிய கேள்விகள்!

writermuthukumar@gmail.com

## வாசகர் பார்வை- 1

# மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையை மாற்றியவர் கலைஞர்

*இன்ஸ்பையரிங் இளங்கோ*

என் பெயர் இளங்கோ. கலைஞர் வைத்த பெயர். இப்போது இன்ஸ்பையரின் இளங்கோ என்று அறியப்படுகிறேன்.

அப்பா, அம்மா, மாமன்கள் என்று குடும்பமே திராவிட இயக்க செயல்பாடுகளில் ஈடுபட்ட பின்னணி .உண்டு.

முற்றிலும் பார்வையற்றவனாகப் பிறக்க நேர்ந்த நான் அதை ஒருபொழுதும் ஒரு சிறிய குறையாகக்கூட மதித்து தனிப்பட்ட முறையில் நினைத்து வருந்தியதில்லை. அதற்குக் காரணம் எனக்குப் பெரும் தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளித்த கலைஞரின் நாத்திகம்தான் என்றால் அது மிகையாகாது.

கோடிக்கணக்கான இறைநம்பிக்கையாளர்கள் நிறைந்த ஒரு மாநிலத்தின் முதல்வர் தன்னை ஒரு இறை மறுப்பாளன் என்று அறிவித்து “மனிதனை நினை” என்றும் மனிதநேயத்தைப் போற்று என்றும் முழங்கும்போது அது ஒரு சிறப்புத்திறனாளிக்கு அளிக்கும்

தன்னம்பிக்கையும் வாழ்வாசையும் மிகப்பெரியதாகும்.

இன்று நான் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்களை சந்தித்து அவர்களுக்குத் தன்னம்பிக்கை அளிக்க அவரும் ஒரு காரணமாவார்.

அவரது எண்ணங்களும் கொள்கைகளும் தொட்டு உயர்த்திய பல கோடி வாழ்க்கைகளில் எனது வாழ்க்கையும் ஒன்று.

சிறுவயதிலிருந்தே கலைஞரைப் பலமுறை சந்தித்துப் பேசும் பெரும்பேறு பெற்றேன். எனது பதினைந்தாவது வயதில் அவரது இல்லத்தில் அவரது நீண்ட கவிதையொன்றைப் பாடிக்காட்டியபோது “நான் உனக்குப் பேரு வெச்சேன். நீ எனக்குப் பேரு கொண்டு வருவே” என்ற பாராட்டைப் பெற்றேன்.

பின்னாளில் லயோலா கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் தங்கப்பதக்கத்தோடு முதுகலை பட்டமும் பல்வேறு உயர் பட்டங்களும் பெற்றேனென்றால் அதற்கு ஊக்கமும் உந்துதலும் கலைஞர் எனும் மனிதநேயரிடமிருந்துதான் பெற்றேன்.

மாற்றுத்திறனாளிகளைப்பற்றிய சமூகத்தின் பார்வை நிறைய மாற வேண்டும் என்ற ஏக்கம் உடையவன் நான்.

இங்குதான் கலைஞரின் தொலைநோக்குப் பார்வையை நன்றியோடு நினைத்துப்பார்க்கிறேன்.

அவர் முதல் முறை ஆட்சிப் பொறுப்பேற்றபொழுதே மக்களின் பார்வைக் குறைபாடுகள் பற்றிய அக்கறை கொண்டவராக, அதை நீக்கும் திட்டங்களில் கவனம் செலுத்துபவராக விளங்கினார்.

இங்கு நான் பயன்படுத்தியிருக்கிற "மாற்றுத்திறனாளிகள்" என்ற சொல் இன்று பலரால் பயன்படுத்தப்பட்டு புரிந்தும்கொள்ளப்படுகிறதென்றால் அதற்கு முதல் காரணம் கலைஞரின் செயல்வேகம்தான்.

ஒரு முறை திரு.சுபவீரபாண்டியன் அவர்களிடம் மாற்றுத்திறனாளிகளுக்கென தனி அரசமைப்பு இல்லையே என்ற என் மனக்குறையை வெளிப்படுத்தினேன். சுபவீ அவர்கள் இதை அவரது கலைஞர் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பேச, அதைக் கேட்ட கலைஞர் உடனே செயலில் இறங்கி மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு என இரண்டு அமைப்புகளை ஏற்படுத்தினார்.

அவர் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தால் சிறப்புத்திறனாளிகளின் வாழ்க்கை எவ்வளவு முன்னேறியிருக்கும் என்று நான் நினைத்துப்பார்க்காத நாளே இல்லை.

inspiringilango@gmail.com

வாசகர் பார்வை- 2

# முதல்குடிமகனே போற்றிய ‘மூத்த’ குடிமகன்!

*செங்குன்றம் திராவிடமணி*

மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் ‘முரசொலி மாறன் அவர்களின் படத்திறப்பு நாடாளுமன்ற வளாகத்தில் திறக்கப்பட்டது இந்நிகழ்வில் கலந்து கொண்ட கலைஞர் அவர்கள். அதன்பிறகு குடிஅரசுத் தலைவரின் இல்லம் சென்று அய்யா அப்துல்கலாம் அவர்களை சந்தித்து விட்டு புறப்படுகிறார். அப்போது அப்துல்கலாம் அவர்களும் கலைஞர் அவர்களை வாசல்வரை வழியனுப்ப வருகிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள். பதற்றத்துடன் கலாம் அவர்களை நோக்கி.. ”நீங்கள் உயர்பொறுப்பு வகிக்கும் முதல்குடிமகன். நீங்கள் என்னுடைய கார் வரை வழியனுப்ப வருவது மரபில்லை” எனக் கூறி கலாம் அவர்களை தடுக்கிறார். ஆனால் கலாம் அவர்களோ பிடிவாதமாய் கலைஞரின் கையை இறுகப் பற்றிக்கொண்டு கார் வரை வந்து வழியனுப்புகிறார்.

அப்போது, அங்கிருந்த பத்திரிக்கையாளர்களைப் பார்த்த அப்துல் கலாம். பின்வருமாறு கூறுகிறார். “என் வாழ்நாளில் இரண்டு பெரியோர்களின் கையைப் பற்றியது எனக்கு மிகவும் மகிழ்வான

தருணமாக கருதுகிறேன். ஒருமுறை தென்னாப்பிரிக்க விடுதலைவீரர். நெல்சன் மண்டேலாவை சந்தித்து கை குலுக்கினேன். இப்போது முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கையைப் பற்றிக் கொண்டிருக்கிறேன். இந்த இரண்டு மாபெரும் மனிதர்களின் கரம் பற்றிய போதுதான் நான் மிகுந்த மனநிறைவும் பெருமையையும் அடைந்தேன்.” எனக் கூறினார்.

முதல்குடிமகன் கலாம் வணங்கிய
முதன்மைக் குடிமகன்
மூத்த குடிமகன் கலைஞர்..
முடிவில்லா வரலாறாய் வாழ்வார்.

## வாசகர் பார்வை- 3

# எனது தமிழாசான் கலைஞர்

*ஜெ.கதிரவன்*

80களின் இறுதியில், பின்தங்கிய தென்னாற்காடு மாவட்டத்தின் கடைக்கோடி கிராமத்தில் பிறந்தவன் நான். திமுக அனுதாபிகள் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு முரசொலி வழியே பால்ய வயதில் கலைஞர் அறிமுகமானார். இன்னும்கூட பேருந்து வசதிகள் அவ்வளவாக இல்லாத, அஞ்சல் அலுவலகம் இல்லாத எங்கள் கிராமத்திற்கு ஒரு வாரத்து முரசொலி இதழ்கள் ஒரே முறையில் வரும். நானும், எனது தாத்தாவும் அதை வரிவிடாமல் படித்து விடுவோம். என்னைப் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத கிராமத்து சிறுவர்களுக்கு தமிழும், அறிவும் ஊட்டிய முதல் ஆசான் கலைஞர். கலைஞரின் கட்டுரைகள் வழியே தமிழ் என்னுள் நுழைந்தது. கலைஞரின் தமிழ் வழியே அரசியல் அறிவும், சமூக நீதி குறித்த அடிப்படைகளையும் அறிந்துகொண்டோம். என்னைப் போன்றவர்களின் தமிழ்ப் பற்றுக்கும், தமிழ் மீது நாங்கள் கொண்ட காதலுக்கும் கலைஞரே முழுமுதற் காரணமாகும். தமிழில் கையொப்பமிட வேண்டும் என்பதை நான் கடைப்பிடிப்பதோடு மட்டுமல்லாமல், இயன்றவரை நண்பர்களையும் கையொப்பமிடுமாறு வேண்டிக்கொண்டிருக்கிறேன். தமிழை நேசித்த

நான் கலைஞரையும் நேசிக்கத் தொடங்கினேன். தமிழும், கலைஞரும் வேறுவேறா?

2006-இல் கலைஞர் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிய போது, வசதி படைத்த/ அறிவுஜீவிகள் பலரும் அதை விமர்சித்தார்கள். கிராமத்து எளிய மனிதர்கள் சிலர், மற்றவர்கள் வீட்டுக்கு தொலைக்காட்சி பார்க்க செல்லும் பொழுது எதிர்கொள்ளும் உதாசீனங்களை நான்  கண்முன் கண்டிருக்கிறேன். எனது நண்பர்கள் சிலர் மனமுடைந்த தருணங்களை எதிர்கொண்டிருக்கிறேன். கலைஞர் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிய பிறகு, அவர்கள் சுயமரியாதையுடன் வாழ்ந்தார்கள். பெண்கள் நாட்டு நடப்புகள் தெரிந்துகொண்டு விழிப்புணர்வு பெற்றார்கள். தமிழர்கள் தன்மானத்துடன் வாழ கலைஞர் எடுத்த முயற்சிகளை இந்தத் தமிழ்ச் சமூகம் என்றும் மறவாது.

பெருநகரங்களில் இருக்கும் மாணவர்கள் மட்டுமே அணுகக்கூடியதாக நுழைவுத்தேர்வு பயிற்சி வகுப்புகள் இருந்தன. கிராமப்புற மாணவர்களான நாங்கள் கடினமான உழைத்துப் படித்து மதிப்பெண் பெற்றாலும், அரசுப் பொறியியல் கல்லூரிகளில் சேர முடியாத நிலை இருந்தது. நுழைவுத்தேர்வு ரத்து என்ற ஒரே சட்டத்தின் மூலம் கிராமப்புற மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் கலைஞர். அதன் பயனாக நான் அரசுப்பொறியியல் கல்லூரியில் படித்து, இன்று உயர்பதவியில் இருக்கிறேன். என்னுடன் படித்த கிராமத்து எளிய மாணவர்கள் பலர், இன்று

மென்பொருள் பொறியாளர்களாகவும், அரசுப் பணியிலும் பணிபுரிகிறார்கள். கைகட்டிக் கொண்டு கிராமத்தில் வாழ்ந்த குடும்பத்து இளைஞர்கள் பலர், இன்று டை கட்டிக்கொண்டு பெருநகரங்களில் சுயமரியாதையோடு வாழ்கிறார்கள். எங்களைப் போன்ற இலட்சக்கணக்கான கிராமத்து எளிய குடும்பங்களின் இதயத்தில் என்றும் வாழ்கிறார் கலைஞர்.

மாமனிதர்கள் என்றும் மரிப்பதில்லை. தமிழும், தமிழினமும் உள்ளவரை கலைஞர் ஐயா அவர்கள் எங்களைப் போன்றவர்களின் உள்ளத்தில் தலைமுறை கடந்தும் வாழ்வார்.

## வாசகர் பார்வை- 4
# கல்விக்கண் திறந்த கலைஞர்

*சித்ரா தேவி*

கலைஞரை யார் என்று போற்றுவேன்? எங்கள் தந்தை கலைஞருடைய பேச்சாற்றலைக் கண்டும் கேட்டும் பதிமூன்று வயது முதலாக கலைஞரைப் போற்றி அவரையே தலைவராக ஏற்றவர். அதன்பின் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் கலைஞரைப் பற்றியும் போதித்தார். என் தந்தை மா.கதிர்வேலு கலைஞர் மேல் வைத்திருந்த அன்பையும் மரியாதையையும் என்னவென்று சொல்வேன். முரசொலி பத்திரிகையைத் தவிர வேறு எதையும் அவர் வாங்கியதும் இல்லை, படித்ததும் இல்லை. ஆதலால்தான் அவர் 67 வயதில் 2011, 2ஆம் தேதி பிப்ரவரியில் இறந்தபோதுகூட எங்கள் தந்தைக்கு மிகவும் பிடித்த முரசொலியில் அஞ்சலி செலுத்தினோம். கலைஞரால் பயன்பெறாதவர் யார்? கல்லூரியில் படிக்கும்போது scholarship சரியாக வந்து சேர்ந்துவிடும். அரசு பேருந்துகளைக் கல்லூரிக்கு என்று ஒதுக்கியவர், மாணவிகள் கஷ்டப்படாமல் பயணம் செய்வதற்கு. அதுமட்டுமின்றி மக்களுக்கான எந்த ஒரு சேவையையும் நிறுத்தியதில்லை. குறைந்த பஸ் கட்டணம் என்றாலும் பேருந்துகள் நல்ல முறையிலேயே சீராக இருக்கும். ரேஷன் கடைகளில் எல்லா அத்தியாவசியமான பொருட்களும்

கிடைக்கப்பெற்றோம். பொங்கலுக்குத் தேவையான திராட்சை, முந்திரி, வெல்லம், பருப்பு வகைகள், கரும்பு, வேட்டி, சேலை எல்லாமே கிடைக்கப்பெற்றன. கலைஞர் இல்லையேல் எப்படி ஒரு பிராமணர் பள்ளியில் எங்களால் படித்திருக்கமுடியும்? கலைஞர் காலமானார் என்பதைக் கேட்கமுடியாமல் என்னை நான் தேற்றிக்கொண்டவிதம்,

"கலைஞர் காலனோடு பேச்சுவார்த்தை நடத்திப் போராடிக்கொண்டிருந்தார். ஆனால் காலனோ கலைஞரின் தமிழ் பேச்சாற்றல் பிடித்துப் போகவே, தன் வசம் ஆக்கிக் கொண்டான். அதனால் அவர் காலமானார் என்று!!”

வாசகர் பார்வை- 5

# கல்வித்துறையில் புரட்சி செய்த

# கலைஞர்

## இளங்கோ.ஜி.எஸ்

தமிழ்நாட்டில், காமராஜருக்குப் பிறகு இரண்டாவது கல்விப் புரட்சி ஏற்பட்டது கலைஞரின் 2006-2011 ஆட்சியில்தான்.

பள்ளிக்கல்வியில் சமச்சீர் கல்வி கொண்டுவந்ததும், உயர்கல்வியில் கல்லூரி நுழைவுத் தேர்வு ரத்தும், முதலாம் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்விக் கட்டணத்தை அரசே வழங்கியதும் இந்த நூற்றாண்டின் ஆகப்பெரிய கல்விச் சீர்த்திருத்தமாகும்.

கல்வி வேலைவாய்ப்பில் அருந்ததியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கினார். கிறிஸ்தவர்களுக்கு தற்போது இடஒதுக்கீடு தேவையில்லை என்றபோது அதை உடனே பரிசீலித்து ரத்தும் செய்தார்.

பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடம் எனச் சட்டம் போட்டுவிட்டு சும்மா இருக்கவில்லை, தமிழ் வழி பயிலும் மாணவர்கள் பொதுத்தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கும் அளித்தார். தமிழில் படித்தோருக்கு அரசுப் பணிகளில் 20 சதவீதம் இடஒதுக்கீட்டையும் ஏற்படுத்திக்கொடுத்தார்.

பள்ளிச் சத்துணவில் வாரத்திற்கு ஐந்து முட்டைகளும், முட்டை உண்ணாத மாணவர்களுக்கு வாழைப்பழங்களும் வழங்கப்பட்டன. முட்டை கொடுப்பதில் எதிர்ப்பு இருந்தபோதிலும் கலைஞர் குழந்தைகள் நலனே முக்கியம் என்று உறுதியாய் இருந்தார்.

சென்னையில் பிரமாண்ட நூலகம் அமைத்ததோடல்லாமல் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்படி கிராமங்களில் உள்ள நூலகங்களுக்குப் புத்தகம் வாங்கவும்,காப்பாளரை நியமிக்கவும் நிதிஉதவி செய்தும் சீர்படுத்தினார்.

தனியார் பள்ளிகளில் அதிக கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க மற்றும் கட்டணத்தை முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் 2009 உருவாக்கப்பட்டது. ஒரு நபர் நீதிபதி தலைமையில் குழுவினை அமைத்து மிகத் தீர்க்கமாக நடைமுறைப்படுத்தினார். பல எதிர்ப்பிற்கும் மத்தியில், மத்திய அரசின் திட்டமான தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடங்களுக்கு ஏழை மாணவர்களுக்கு இடஒதுக்கீடு என்பதை உறுதி செய்தார்.

இந்தச் சட்டங்கள் அவ்வளவு சுலபமாக இயற்றப்படவில்லை ஜாதி வெறியர்களையும், மதவெறியர்களையும், தனியார் தொழில் வெறியர்களையும், அரியாசன வெறியர்களையும், அதிகார வர்க்கத்தினரையும் கடந்துதான் இதை செயல்படுத்த வேண்டியிருந்தது. இன்றும் கலைஞரின் இந்தத் திட்டங்களுக்கு நெருக்கடி

கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் அறம் வெல்லும், அநீதி வீழும் என்ற கலைஞரின் வரிகள்தான் நமக்கு நம்பிக்கை ஊட்டுகிறது.

இவ்வளவு கல்வி வளர்ச்சி திட்டங்களைச் செயல்படுத்தி விட்டுக் கடைசியாக சட்டம் போட்டார், காமராஜர் பிறந்த நாள் “கல்வி வளர்ச்சி நாள்” என்று. அவர்தான் கலைஞர்..!

## வாசகர் பார்வை- 6

# கலைஞர் கருணாநிதியும் பெண்கள்

# சமூக பொருளாதார முன்னேற்றமும்

*அழகிரிசாமி, கோபிநாத்*

*(பொருளாதார ஆய்வு* மாணவர்கள் *)*

அண்ணா வழியில் கலைஞர் சுயமரியாதை திருமணத்தை ஊக்குவித்தார். சாதியைக் கடந்து திருமணம் புரிபவர்களை அன்றைய காலத்தில் குடும்பங்கள் கைவிடும் பட்சத்தில், அவர்களை அணைக்க மற்ற ஒருவர் தேவைப்படுகிறார். குறிப்பாக, ஆண்களை விட பெண்களுக்கு இந்த அணைப்பு கிடைக்காவிட்டால் தொடர்ந்து அவர்கள் குடும்பங்களைத் தாண்டி சாதியைக் கடக்க வாய்ப்பில்லை. அவர்களின் பாதுகாவர்களாக அரசை மாற்றியவர் கலைஞர். சாதியைக் கடந்து திருமணம் செய்பவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை வழங்கி அவர்கள் வாழ்வதற்கு அரசை ஒரு ஆதரவு அமைப்பாக மாற்றியமைத்தார். கைம்பெண்களின் மறுமணத்தை ஊக்குவிக்கும் விதமாகவும் அவருடைய அரசு செயல்பட்டது. கணவர்

இறந்தவுடன் மனைவியை அவருடன் எரிப்பது அல்லது மொட்டை அடித்து குடும்பப் புறக்கணிப்புக்கு ஆளாக்கி, வேறு ஒருவருடன் திருமணம் ஆகாமல் சாதி கலப்பைத் தடுப்பது என்கிற சமூக செயல்பாட்டுக்கு எதிர் நீச்சல் அடித்து, பெண்கள் அக புற வாழ்க்கையைத் தனதுயிர் உள்ளவரை வாழ வித்திட்டவர் கலைஞர் கருணாநிதி.

இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு முன்பு அரசு வேலையில் பணியில் அமர்வோரே கீழ் அடுக்கில் இருந்து உயர் நடுத்தர வர்க்கத்தில் சுலபமாக இணைய முடியும். இது தனியார் மற்றும் உலகமயமாக்கலுக்குப் பின்னும் ஓரளவு உண்மைதான். அரசு வேலை வழியாக நடைபெறும் ஒரு குடும்ப முன்னேற்றம் ஆணின் வழியாக மட்டும் நடந்தால் அது குடும்பத்திலும் சமூகத்திலும் ஆணாதிக்கத்தை மேலும் வலுப்படுத்தும். இதைத் தவிர்க்க, அரசு வேலைவாய்ப்பில் 30 சதவீத இட ஒதுக்கீடு பெண்களுக்கும் வழங்கியவர் கலைஞர் கருணாநிதி. இதன்பால் வேலையில் அமர்ந்த பெண்கள் புரட்சிகரமான மாற்றங்கள் ஏதும் செய்ததாக சமூகம் நினைத்தாலும், அவர்கள் இந்த சமூகத்திலும் குடும்பத்திலும் பல அசைவுகளை ஏற்படுத்தியுள்ளனர். பெண்கள் பணம் ஈட்டும்போது அவர்கள் மனபலம் பெருகுகின்றது. குடும்பங்களில் எடுக்கப்படும் முக்கிய முடிவுகளில் தங்களின் கணவர்களிடம் இருந்து அதிகாரத்தைப் பேரமிட்டுத் தங்கள் ஆளுகைக்கு சிறிது சிறுதாக சமப்படுத்துகின்றனர். கணவர்

இல்லாத வீட்டில் பெண் தலைமை ஏற்கவும் இவ்வொதுக்கீடு வழிசெய்தது.

சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று சட்டப்பூர்வமாக இயற்றி இந்தியாவிற்கு வழிகாட்டினார் கலைஞர் கருணாநிதி. இந்த திட்டம் குடும்ப அமைப்பினுள் சிதறல்கள் ஏற்படுத்தும் என்று தெரிந்தாலும், அரசியல் வாக்குகளைப் பாதிக்கலாம் எனத் தெரிந்தாலும் அதை இயற்றாமல் விடவில்லை. தென் தமிழகத்தை விட, தி.மு.கழகத்தின் கோட்டையான வட தமிழகத்தில் சொத்தைப் பிரிப்பதில் பல குடும்பங்களில் விரிசல்கள் உண்டாகின. அது தி.மு.கழகத்துக்கு அடுத்த தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் பல காரணங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம். ஆனாலும் பெண்கள் வரலாறு நெடுக சுரண்டப்படாமல் இருந்ததில்லை. அவர்களுக்கு ஏற்பட்ட சுரண்டலின் முக்கிய வேறான சொத்துப் பகிர்வுக்குத் தீர்வளித்தது கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.கழகம்.

தி.மு.கழகத்தின் 2006 தேர்தல் அறிக்கையில் இரண்டு முக்கிய திட்டங்கள் பெண்களின் பால் முக்கியமானவை. ஒன்று, இலவச தொலைக்காட்சி அனைவருக்கும் அளிப்பது. தமிழக அரசியலில் இதைவிட சலசலப்பையும் விமர்சனத்தையும் சந்தித்த செயல் திட்டம் அன்று வரை இருந்ததா என்று தெரியவில்லை. இதை விமர்சித்ததில் மிக பெரும்பாலானோர் ஆண்கள். ஆனால், இந்த செயல் திட்டம் பெண்களுக்கானதாக நான் கருதுகிறேன். தொலைக்காட்சி ஆண்களை விடப் பெண்கள் அதிகம் விரும்புகிற பொருள்.

ஆண்களுக்குத் திரைப்படம் தான் கேளிக்கை. திஸிணிகிரிளிழிளிவிமிசிஷி எனும் புத்தகத்தில் இந்தியாவில் பெண்களுக்குத் தொலைக்காட்சி அறிமுகம் ஆன பிறகு அவர்களுக்கு எதிரான குற்றங்கள் குறைந்துள்ளதாகக் கூறுகிறது. பெண்கள் தொலைக்காட்சியின் வாயிலாக பல புது உலகங்களைக் காண்கின்றனர். அதில் அறிமுகப்படுத்தப்படும் கதை நாயகியைப் போல தன் வாழ்விலும் மாற்றங்கள் காண முடியும் என எண்ணுகிறாள். ஆண்களுக்குப் பாலியல் கேளிக்கை தாண்டி வேறு சில கேளிக்கைகள் தொலைக்கட்சியின் வாயிலாக அறிமுகம் ஆனதால் பிறப்பு விகிதமும் குறைந்தது. இவை அனைத்தும் அப்புத்தகம் பட்டியலிடும் காரணங்கள். இதைக் கலைஞர் படித்தாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் தொலைக்காட்சியின் அறிமுகத்திற்குப் பின் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைந்ததை நாம் காண்கிறோம். தமிழகம் பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான மாநிலம் என வட இந்திய ஊடகங்கள் தொடர்ந்து கூறும் இடத்திற்கு நகர்ந்துவிட்டோம்.

பெண்கள் அதிகம் கலைஞர் கருணாநிதிக்கு வாக்கு அளிப்பதில்லை என்று எப்போதும் அரசியல் விமர்சகர்கள் கூறுவதுண்டு. ஆனால், கலைஞர் கருணாநிதி இறுதி ஊர்வலமும் நான் கண்ட பெண்கள் கூட்டமும், சமூக வலைத்தளங்களில் பெண் ஆளுமைகளால் எழுதப்படும் இரங்கல் செய்தி குறிப்புகளும் அதை சந்தேகிக்க வைக்கின்றன. வரும் காலம் பெண்களிடம் மேலும் கலைஞர் கருணாநிதியை

நெருக்கப்படுத்தும். அவர் வகுத்த திட்டங்கள் அதை உறுதிப்படுத்தும்.

வாசகர் பார்வை- 7

# கண்ணியம் காத்த கலைஞர்

*எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்*

1989 ஆம் ஆண்டு நான் சாணக்யன் அரசியல் பத்திரிகை ஆசிரியர் குழுவில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது கலைஞர் தமிழக முதல்வர். ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவர். எங்கள் ஆசிரியர் வசந்தன் பெருமாள்.

அடுத்த தேர்தலுக்கான பிரச்சார ஆயத்தங்கள் அப்போது நடந்து கொண்டிருந்தன. அந்நேரத்தில்தான் எம்.ஜி.ஆரின் சமாதி நினைவிடம் புதுப்பிக்கப்பட்டு கலைஞரால் திறந்து வைக்கப்பட்டது. அப்போது அதிமுகவை விட்டு ஒதுங்கி இருந்த பி.எச்.பாண்டியன் எதிர்பாராமல் அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தபோது கலைஞர் அவருக்குப் பிரத்யேக மரியாதை தந்தார்.

“புதுப்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நினைவிடத்தையும் அதன் திறப்பு விழாவையும் நட்பின் சின்னமாகவே அனைவரும் கருத வேண்டும்” என்று அப்போது கலைஞர் பேசினார்.

அந்நிகழ்ச்சியை, ‘நட்பின் சின்னம் ஓட்டு வாங்கித் தருமா?’ என்று அப்போதைய சாணக்யனில் எழுதினோம்.

எம்.ஜி.ஆர். சமாதியை கலைஞர்தான் முதலில் திறந்து வைத்தார் என்பது பலருக்கும் தெரியாது என்றே நினைக்கிறேன்.

***

நக்கீரன் பத்திரிகைக்கும் கலைஞருக்கும் மிக மிக நெருக்கம் என்றே பலரும் நினைக்கக் கூடும். ஆனால் நக்கீரனில் கலைஞரைப் பற்றிய பல்வேறு விமர்சனங்களும் வந்ததுண்டு. கலைஞரும் நக்கீரன் என்பதற்காக அனாவசிய சலுகை காட்டியதும் இல்லை.

நக்கீரன் ஆசிரியர் குழுவில் (1992 / 93 வாக்கில்) நான் பணிபுரிந்து கொண்டிருந்த போது ஜெயலலிதா முதல்வர். கலைஞர் எதிர்க்கட்சித் தலைவர். அப்போது எம்.ஜி.ஆர். சமாதியை ஜெயலலிதா மேலும் புதுப்பித்து இருந்தார்.அந்த நேரம் பார்த்து நக்கீரனில் “எம்.ஜி.ஆர். சாக ஜெ செய்த யாகம்” என்று கவர் ஸ்டோரி வெளியிட்டோம். அரசு தரப்பில் இருந்து எதிர்பார்த்ததைவிட மிகப் பெரிய எதிர்ப்பு.

அச்சகத்திலேயே நக்கீரன் பிரதிகள் முடக்கப்பட்டன. ஆசிரியருக்கும், பொறுப்பாசிரியருக்கும் பிடிவாரண்டுகள். உதவி ஆசிரியர்கள் மட்டுமே அப்போது செயல்பட முடிந்த இக்கட்டான தருணம்.

நான் அப்போது அவசர அவசரமாக எந்தவித முன் அனுமதியும் இன்றி கோபாலபுரம் சென்று கலைஞரை சந்தித்தேன்.கலைஞரிடம் நக்கீரனுக்கு நேர்ந்த நெருக்கடியைச் சொல்லி கருத்துச் சுதந்திரம் தொடர்பாக ஒரு பேட்டியோ அறிக்கையோ வேண்டும் எனக் கேட்டேன்.

கலைஞர் நிதானமாக, “அந்தம்மா அவங்க தலைவரோட சமாதியைத் திறக்கற நேரம் பார்த்து இப்படி கட்டுரை வெளியிட்டா நியாயமா? கோபம்

வரத்தானே செய்யும். பேட்டி எல்லாம் வேண்டாம்.என்னோட சிம்பதி உங்களுக்கு உண்டு” என்று நாசூக்காய் கூறி மறுத்து விட்டார்.

கலைஞரின் அந்தப் பண்பு எப்போதும் என்னை ஆச்சரியப்பட வைக்கும்.

***

1991 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டபோது அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மயிலாடுதுறையைச் சேர்ந்த சங்கரன் என்கிற தி.மு.க.வைச் சேர்ந்த பிராமண தொண்டர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். அவரது தம்பி நாராயணன் பின்னர் தி.மு.க. தலைமையிடம் உதவி கேட்டும் கிடைக்கவில்லை. தலைவர் கலைஞரையும் சந்திக்க முடியவில்லை.

அதைப்பற்றி நக்கீரனில் நான் ஒரு கட்டுரை எழுதியதும் அது கலைஞரின் கவனத்திற்குப் போய் அதை அவர் படித்திருக்கிறார். உடனே ஆயிரம்விளக்கு உசேன் மற்றும் ஆற்காடு வீராசாமி இருவரிடமும் சொல்லி நாராயணனை சந்திக்க ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறார்.

## வாசகர் பார்வை- 8

# கலைஞர்

# ஒவ்வொரு குடும்பத்திலும் உறவுண்டு

*அதீதன் கார்த்திக்*

கலைஞர் என்ற பெயர் எனக்கு அறிமுகமானபோது நான் மூன்றாவது அல்லது நான்காவது படித்துக் கொண்டிருந்திருக்கலாம். எங்கள் குடும்பத்தில் அப்பாவைத்தவிர மற்ற அனைவரும் எம்.ஜி.ஆர். விசிறிகள் அதன் தொடர்ச்சியாக ஜெயலலிதாவின் விசிறிகள். நான் அப்பாவின் ஆதரவாளன். என்ன ஏது என்று தெரியாமலேயே கலைஞருக்காக அம்மா, சித்தி, சித்தப்பா, ஆத்தா, தாத்தாவென்று எல்லோரிடமும் வாக்குவாதம் செய்வேன்.

பள்ளிப்படிப்பில் பத்தாம் வகுப்பு தாண்டும்வரை தி.மு.க. என்ற பெயரோ அதன் வரலாறோ அறிமுகமாகாத வயதுதான். ஆனால் கலைஞர் என்ற பெயரும் அவருடைய ஆளுமையும் அறிமுகம் மட்டுமல்ல, அதிசயப்படவைத்த ஒன்றாக இருந்தது. அப்பா ஒரு கூலித் தொழிலாளி. அம்மா அங்கன்வாடியில் பணிபுரிந்துகொண்டிருந்தார். அம்மாவிற்கு வேலை கிடைத்ததே எம்.ஜி.ஆரால்தான் என்று அடிக்கடி சொல்லும்போது எனக்குக் காரணமில்லாமல் கோபம்வரும். அப்பா "போடி,

ஒன் வேலைய பாத்துக்கிட்டு. எம்.ஜி.ஆர். வேலை கொடுத்தாருங்குறதுனால கலைஞர் உன்ன வேலையவிட்டு எடுக்கலயே. ஆனா இந்த அம்மா கலைஞர் வேலைகொடுத்தாருங்கிற காரணத்தால சாலைப்பணியாளரையும் மக்கள் நலப்பணியாளரையும் வேலையைவிட்டு எடுத்துச்சே. அதிலேந்து தெரியலையா கலைஞரோட மனசு கஷ்டத்த உணர்ந்தவருடி அவரு" என்று அம்மாவிற்குப் பதிலடி தருவார். அதன் பிறகான என் கல்லூரி நாட்களில் தி.மு.க. திராவிட வரலாறு என்று படிக்கத் துவங்கியவுடன் கலைஞர் என்பது வெறும் பெயரல்ல, நான் கல்லூரியில் முதல்தலைமுறை பட்டதாரியாக உருவெடுத்ததன் காரணகர்த்தாவென்று புரிந்தது. முதல் தலைமுறை பட்டதாரியான எனக்கு அவர் ஆணையால் கல்லூரியில் ஊக்கத்தொகையும் கிடைத்தது. அப்பொழுதான் ஒன்று தெளிவாகத் தெரிந்தது, அப்பா ஏன் அத்தனை உறுதியாக அவரை ஆதரித்தாரென்று. அப்பா நாகை மாவட்டத்தைச் சேர்ந்தவர் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவர். படிப்பில் சுட்டி. ஆனால் குடும்பச் சூழ்நிலை அவரை ஒன்பதாம் வகுப்பைத் தாண்ட அனுமதிக்கவில்லை. அந்நேரங்களில் அவருக்கு உந்துசக்தியாக இருந்தது கலைஞரின் வாழ்க்கைதான். அதன்வழியாகத்தான் அப்பா தன் மகன்களை எப்பாடுபட்டாவது படிக்கவைத்து விடவேண்டுமென்ற உறுதியைக் கைக்கொண்டிருந்தார். அவர்கொண்ட அவ்வுறுதிக்கு பக்க பலமாக இருந்து கிராமப்புற மாணவனான என்னை இன்று ஓர் அரசுப்பள்ளி ஆசிரியராக உயர்த்தியிருப்பதில் அப்பாவிற்கு நிகராக கலைஞரும் இருக்கிறார். இன்று கலைஞர்

என்ற மனிதர் என் குடும்பத்தில் ஒருவராக, அப்பாவோடு சேர்ந்து இன்றும் வாழ்வதாகவே உணர்கிறேன். நான் மட்டுமல்ல, என்னைப்போன்ற கீழ்மத்தியதர வர்க்க குடும்பத்திலிருந்து பட்டதாரியாக உருவெடுத்திருக்கும் ஒவ்வொரு நபரின் குடும்பத்திலும் அவர் ஓர் உறவாக என்றும் வாழ்வார்.

## வாசகர் பார்வை- 9

# கலைஞர் காலமானார் என்ற செய்தி வதந்தியே!

*ஜேசு சுந்தரமாறன்*

பள்ளிப் பருவத்திலிருந்தே யார் காலிலும் விழக்கூடாது என்ற எண்ணம் என்னுள் ஆழமாகப் பதிவதற்குக் காரணமான அந்தத் தலைவன் முதல்வராக என்கண் முன்னே மேடையில் இருக்க, அவர் கையால் பரிசு பெறுவதற்குக் காத்திருக்கும் அந்த வேளையில் என் மனதில் பல விதமான எண்ணங்கள்! மேடையில் ஏறியவுடன் சுற்றியிருப்பவர்கள் நம்மையும் காலில் விழ கட்டாயப்படுத்திவிடுவார்களோ, என்ன நடந்தாலும் விழக்கூடாது என்ற எண்ணப் போராட்டம் என்னை முழுதாக முழுமையாக ஆட்கொண்டிருந்தது. 2000 ஆண்டில், மத நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு பற்றி மாநில  அளவில் நடந்த நாடகப் போட்டிக்கான பரிசு வழங்கும் விழா அது! "முதல் பரிசு லயோலா கல்லூரிக்கு!" என்று அறிவித்தவுடன் நானும் என்னுடன் நடித்த என் தோழர்களும் ஒருவர் பின் ஒருவராக மேடை ஏறக் காத்திருந்தோம். கலைஞரை நெருங்க நெருங்க, பரிசு பெறப்போகும் மகிழ்ச்சியை விட ஒருவித பதட்டம் மற்றும் படபடப்புடன் அருகே சென்று, பெரும் வாளையும் கேடயத்தையும் ஏந்தி தமிழகத்தில் பல போராட்டங்களை வென்ற கரங்கள் என் கைகள் பற்றிக் குலுக்கியபோது அதன் பஞ்சு போன்ற

மென்மை நான் சற்றும் எதிர்பாராதது.  அந்த நொடியில் என்னையும் அறியாமல் அவர் பாதம் தொட முயன்றபோது உடன் இருந்தவர்கள் தடுத்துவிட்டார்கள். அடுத்தநாள் உடன் பயிலும் நண்பனிடமிருந்து வீட்டிற்குத் தொலைபேசி அழைப்பு "உன் புகைப்படம் நாளிதழில் வந்துள்ளது" என்று! செய்தி தெருமுழுக்கப் பரவியது. ஹிந்து மற்றும் தினமணி முதல் பக்கத்தில் பரிசு பெற்ற எங்கள் குழு, முதல்வர் கலைஞருடன்!! அதன் பிறகு கலைஞர் பற்றியும், அவரது அரசியல் பற்றியும் என் தந்தையுடன் நடக்கும் விவாதத்தில் என் குரல் சற்று ஓங்கி இருந்தது.

முதுகலை பட்டப்படிப்பில் நான் ஆராய்ச்சிக்கு (thesis) எடுத்துக் கொண்ட தலைப்பு "சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுமா சமத்துவபுரம்?." அது தொடர்பான தகவல் சேகரிப்பின்போது நான் கற்றது மிக அதிகம். கலைஞரின் எண்ணற்ற திட்டங்களில் என்னைக் கவர்ந்தவை சமதர்ம சமுதாயம் படைக்க உதவும் சமத்துவபுரம், விவசாயம்/விவசாயியின் நலம் பேணும் உழவர் சந்தை.

ஊடகங்கள் ஒரு தலைவன் இறந்ததாக அதிகமுறை  வதந்தி பரப்பியது  உலகத்திலே கலைஞர் ஒருவருக்குத்தான். அப்போதெல்லாம் "இல்லை, நான் நலமாக உழைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று அவரே மறுத்திருக்கிறார். கடந்த ஆகஸ்ட் 7ஆம் தேதி ஊடகங்களில் வந்ததும் வெறும் வதந்தியாகத்தான் இருக்குமென என் மனது நம்புகிறது. இந்த முறை அவர் சொல்லவில்லை,

ஆனால் அவரது பகைவர்கள் வந்து சொல்லிவிட்டார்கள் கலைஞர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று.

## வாசகர் பார்வை- 10

# கலைஞர் எனும் வசீகர வார்த்தை

*மணி ஜெயப்பிரகாஷ்வேல்*

எங்கள் குடும்பத்தின் மிகப்பெரும்பாலான உறுப்பினர்கள் திமுக ஆதரவாளர்கள். அதற்கு ஒரே காரணம், கலைஞர் எனும் வசீகரவார்த்தை என்பதைத் தவிர எனக்கு வேறு எந்தக் காரணமும் தோன்றவில்லை. நான் ஆறாம் வகுப்பு படிக்கும்போது முதல் முறையாக சத்துணவில் முட்டை சேர்த்து வழங்கினார்கள். கலைஞர் பிறந்தநாள் அன்று அது ஆரம்பிக்கப்பட்டது. எனக்குத் தெரிந்து என் நினைவில் நிற்கும் கலைஞர் பற்றிய முதல் நினைவு அது. பேருந்தில் இலவசப்பயணம் பெற கலைஞரின் படம் போட்ட பாஸ் ஒன்றும் அந்த நாட்களில் வழங்கினார்கள். எட்டாம் வகுப்பு படிக்கும் போது முதல் முதலாக கவிதை என்ற பெயரில் ஒன்றை எழுதினேன். தமிழில் வாசிப்புக்கு என்னை ஈர்த்த முதல் இலக்கியப்பிரதி குங்குமம் இதழில் கலைஞர் எழுதிய பொன்னர் சங்கர். கல்லூரிக் காலத்தில் மீண்டும் கலைஞர் ஆட்சி. அப்போது அனைவரும் தமிழில் கையெழுத்திட கலைஞர் கேட்டுக்கொண்டார். அதுநாள் முதல் தமிழில்தான் கையொப்பம் இடுகிறேன். இளநிலைப் படிப்பு முடித்த பிறகு மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை மற்றும்

முனைவர் பட்டம் முடித்தேன். எனக்குக் கிடைத்த வாய்ப்பின் மூலமாக என் இளநிலைக் கல்லூரி வகுப்புத்தோழர்களில் ஐந்து பேர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற உதவ முடிந்தது. இதையெல்லாம் சாத்தியப்படுத்தியது பலரும் இன்று ஒத்துக்கொள்ள மறுக்கும் கலைஞரின் சமூகநீதியின் பயணங்கள். கலைஞர் என்ற வார்த்தை எப்போதும் என்னை வசீகரித்துக்கொண்டு இருப்பதற்கான அடையாளங்களாக வள்ளுவர் கோட்டம், வள்ளுவர் சிலை, சென்னை மாநகரப்பூங்காக்களில் இருக்கும் நாட்டுப்புறக் கலைஞர்களின் சிலைகள், செம்மொழிப்பூங்கா, அண்ணா நூற்றாண்டு நூலகம், குறளோவியம், நெஞ்சுக்கு நீதி, பராசக்தி, பொன்னர் சங்கர் காவியம் என இன்னுமிருக்கின்றன. கலைஞர் எனும் தீவிர அரசியல்வாதியின் இந்த கலை-இலக்கிய முகமே என்னை வசீகரித்து கலை இலக்கியங்களில் நாட்டம் கொள்ள வைத்தது. தொலைக்காட்சி -அச்சிதழ்களில் அரசியல் செய்திகளைக் கேட்பது மற்றும் படிப்பது என்பதைக் கூட மிகவும் விருப்பமாக ஆக்கியது கலைஞரின் வசீகரத்தமிழே. கலைஞர் எனும் கலைஞரின் கலை மனம் தந்த ஒவ்வொரு கொடையையும் பார்க்கும்போதும் ஒப்பீட்டளவில் தமிழகத்தில் இவர் போன்றதொரு ஆளுமை முன்னும் பின்னும் இல்லை என்றே சொல்ல வேண்டும். பல்வேறு அரசர்கள் கலை இலக்கியங்களில் விற்பன்னர்களாக இருந்தார்கள் என்று படித்திருக்கிறோம். ஆனால் ஆட்சியில் இருந்தபோதும், இல்லாதபோதும் கலை இலக்கிய

உலகில் தனக்கென ஒரு அரசாட்சியை அமைத்துக்கொண்ட வகையில், நவீன தமிழகத்தின் வரலாற்றில் என்றும் அழியாப்பெயருடன் இருக்கும் அரசனாகவே நான் கலைஞரைப் பார்க்கிறேன்.

## வாசகர் பார்வை- 11

# கலைஞர் தொழில்நுட்ப புரட்சியாளர்

*பிரவீன்குமார் ராஜேந்திரன்*

கலைஞர் கருணாநிதி அவர்கள் மறைந்து இன்றோடு பத்து நாட்கள் ஆகின்றது. இந்தப் பத்து நாட்களும் அவர் மட்டும்தான் என் நினைவில் வருகிறார். காரணம் எங்கு சென்றாலும் அவர் விட்டுச்சென்ற அடையாளங்கள் அவர் பெயர் சொல்கின்றது. நவீன தமிழ்நாட்டின் பிதாமகன் கலைஞர் என்றால் அது மிகையாகாது. ஒருவர் அவரை எவ்வளவு வேண்டுமானாலும் வெறுக்கலாம். ஆனால் அவரை ஒருபோதும் தவிர்க்க முடியாது. தமிழ்நாட்டின் வரலாற்றை அவர் பெயர் இல்லாமல் எழுத முடியாது. குறிப்பாக, Modern தமிழ்நாட்டின் வரலாற்றில் கலைஞர் அவர்களின் பங்கு மகத்தானது.

நவீன தமிழ்நாடு பெரிதும் நம்பி இருப்பது தகவல் தொழில்நுட்பத்துறைதான். இந்தத் துறைக்கு முதன் முதலில் விதையைப் போட்டவர் கலைஞர் அவர்கள்தான். இந்தியாவிற்கே தகவல் தொழில்நுட்பக் கொள்கை என்ற ஒன்று இல்லாத காலகட்டத்தில், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் (IT Regulations Act) கொள்கையை வடிவமைத்தவர் கலைஞர் அவர்கள்தான். பின்னர் இந்தக்

கொள்கைகளைப் பின்பற்றி நடுவண் அரசு தகவல் தொழில்நுட்பக் கொள்கையை வடிவமைத்தது.

அதன் தொடர்ச்சியாக முதல் இணையதள மாநாட்டை நடத்தினார் கலைஞர். வருங்காலம் சேவைத் துறையில்தான் உள்ளது என்பதை உணர்ந்த கலைஞர் அவர்கள் போட்ட விதைதான் சென்னையில் உள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காவான Tidel Park. அவர் அன்று போட்ட விதைதான் இன்று ராஜிவ் காந்தி சாலை முழுவதும் பரவியுள்ளது. இவை எல்லாம் நடந்தது தமிழ்நாட்டின் பொற்கால ஆட்சியான1996--2001 ஆண்டு.

அவர் போட்ட விதைதான் இன்று பல லட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால் IT துறைவளர்ச்சியின் காரணமாகத்தான் பல நடுத்தரக் குடும்பங்களின் வாழ்க்கை முன்னேற்றம் பெற்றுள்ளது. பல நடுத்தரக் குடும்பங்களின் கனவுகளை நினைவாக்கிய பெருமை கலைஞர் அவர்களைத்தான் போய் சேரும்.

IT துறையில் வேலை பார்க்கும் பல லட்ச இளைஞர்களில் நானும் ஒருவன். எனக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் இந்த வாழ்க்கையை வழங்கிய கலைஞர் அவர்களை ஒருபோதும் மறக்க மாட்டோம். அவர் அன்று அந்த விதையைப் போடவில்லை என்றால் இன்று நாங்கள் எங்கு இருப்போம் என்பது கேள்விக்குறி. எங்களை எல்லாம் மாடு மேய்க்க விட்டுவிடாமல் Software Engineer ஆக்கி அழகு பார்த்த கலைஞர்

அவர்களுக்கு எந்நாளும் நன்றி உள்ளவர்களாக இருப்போம். ஒரு பக்கம் இவ்வாறு இருக்க, மறு பக்கம் வேறு மாதிரி இருக்கின்றது.

இவ்வளவு பெரிய மாற்றத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்ததை சிலர் வேண்டுமென்றே மறைக்கின்றனர். திராவிடத்தால் வீழ்ந்தோம் என்று அபாண்டண்டமாகப் பொய் சொல்லி வருகின்றனர். இதில் ஒரு சிலர் IT துறையை சார்ந்தவர்கள் என்பதில் வருத்தம். போற்றுபவர்கள் அதிகம். அந்த அதிகமான எண்ணிக்கையில் நானும் ஒருவன் என்பதால், என் சார்பாகவும் போற்றுபவர்கள் சார்பாக ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். சென்னையில் உள்ள Tide Park கலைஞர் பூங்கா என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும். இதுவே அவருக்கு எங்கள் துறை செய்யும் நன்றிக்கடனாகும்.